சிவமயம்.

திருவாவடுதுறை
ஈசான தேசிகரருளிச்செய்த

# திருக்கடம்ப நாதபுராணம்.

இது

செய்யாறு தாலுக்கா, பொதியபாளையம், சமரஸ
சன்மார்க்க சங்கக் காரியதரிசி

ஸ்ரீமான், தமிழ்ப் பண்டிதர்
ட. மாசிலாமணி முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

ஷை சங்கத்தலைவர்,

பிரஹ்மஸ்ரீ அருட்கவி
ந. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

இயற்றிய குறிப்புரையுடன்

கஞ்சிதாலுக்கா பென்ஷன் தாசில்தார்

திருவாளர்
கா. ஆறுமுக முதலியாரவர்களின்

முதற் பொருளுதவியால்

பிரஹ்மஸ்ரீ - வெ. குமாரசாமி குருக்கள் அவர்கள்,
ஸ்ரீமத - க. பரசுராம முதலியாரவர்களின்
நன்முயற்சியால்

திருவல்லிக்கேணி
[illegible] அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்ட். 1927 விலை ரூ. 1-4-0. தபாற்செலவுவேறு.

# விஷய ஸூசிகை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| 1. பதிப்புரை | ௧ |
| 2. முகவுரை | ௮ |
| 3. தந்துரை | ௨௧ |
| 4. மெய்யுரை | ௩௨ |
| 5. சிறப்புப்பாயிரம் | ௩௮ |
| நூல். | |
| 6. பாயிரம் | 1 |
| 7. புராண வரலாறு | 16 |
| 8. தலவிசேடம் | 22 |
| 9. தீர்த்த விசேடம் | 30 |
| 10. மூர்த்தி விசேடம் | 34 |
| 11. கந்தராச்சிரம வரலாறு | 41 |
| 12. தசகாமு மகிமை | 45 |
| 13. அத்தி பூத்தது | 51 |
| 14. சூராதிகள் தவம் புரிந்தது | 58 |
| 15. சேவலும் மயிலும் சிவகதி பெற்றது | 68 |
| 16. காசிபமுனி பூசித்தது | 75 |
| 17. மலையன் மாகரன்வதை | 96 |
| 18. திருக்குமாரர் கடவுள் பூசித்தது | 113 |
| 19. உமையம்மை தவம் புரிந்தது | 125 |
| 20. உமையம்மை திருமணம் புரிந்தது | 135 |
| 21. கண்டகவயிரி முத்தி பெற்றது | 146 |
| 22. திருமாகாளீச்சுரர் மகத்துவங் கூறியது | 153 |
| 23. விளம்பரம் | i |
| 24 பிழை திருத்தம். | iii |




சிவமயம்.

# பதிப்புரை.

“திருச்சட்டைநாத புராண”மென்னு மிந்நூலினைத் திருவருட் செயலா லச்சிட்டு வெளியாக்க வெண்ணிய காலந் தொடங்கி யிது முடியும்வரை நிகழ்ந்த நிகழ்வனைத்தும் பதிப்புரையில் கூறுத லான்றோர்வழக்கமாதலின், அவ்வழிபற்றி யடியேனும், ஈண்டு, அவற்றைச் சுருக்கமாய்க் கூறுகின்றேன்.

இப்புராண மடங்கிய ஓரேட்டுப் பிரதி, செல்லரித்துள்ள நிலையில் அடியேனது ஆரம்ப ஆசிரியராய் விளங்கியிருந்த சைவ, ஸ்ரீ சிதம்பரதேசிக ரவர்களால் அவருடைய அந்திய காலத்தில் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்போது அவர் “பரம்பரைச் சைவ வேளாளர் பலர் இத்தலத்திற்கு அபிமானிகளாக விருந்தும் இப்புராணம் அச்சிடப்படாம லிருப்பது அழகன்று” எனக் குறிப்பித்துத் தமது பூத வுடலை விடுத்தருளினர்.

பின்னர் சின்னாள் கழித்துச் சில நண்பர்களின் உதவியைக் கொண்டு ஏட்டிலுள்ளதைக் கடிதத்திலாவது எழுதி வைப்போமென நினைத்து எழுதவாரம்பித்தேன். அதனை யாரம்பிக்கையில் “கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது” என்னும் பழமொழிக்கிணங்க மேற்படி ஏட்டுப் பிரதியில் பலவிடங்களில் செல்லரித்திருப்பதுடன் ஏட்டுப்பிரதி எழு-

தியவர்களின் திறமைக்குறைவால பலவிடங்களில் பல வழுக் களுங் காணப்பட்டன.

ஆதலின் உண்மையை யுணரவும், ஆராய்தற்குச் சாதன மான பல வேட்டுப் பிரதிகளைச் சேகரித்துத் தரவும் எமது மரபிற்குப் பரம்பரைத் தீக்ஷா குருவாயும், மேற்படி ஆலய அர்ச்சகராயுமுள்ள பிரஹ்ம ஸ்ரீ, வெ. குமாரஸ்வாமி குருக்க ளவர்களை யடுத்து எனதெண்ணத்தைத் தெரிவித்துக்கொண் டேன். அதற்கவர் மிகவும் களிப்படைந்து யான் வேண்டிய படி சில ஏட்டுப்பிரதிகளைச் சேகரித்துத் தந்து இச் சிவ புண்ணியத்தி லெனக்குப் பேரூக்கத்தை யூட்டியருளினர். அன்றியும் வெடி புராணத்திற் கேற்பட்டுள்ளதோர் பழைய வுரை மூலத்திற்குப் பெரும்பாலும் பொருத்தமற்றிருக்குங் காரணத்தினுல் அதற்கோர் நலவுரையுங் கண்டு அச்சிடுதல் அதத்யாவசியமென்றும், அங்ஙனம அச்சிடுதற்குத் தேவை யான பொருளினைத்தாந் தாமே சேகரித்துக் கொடுப்பதாகவு முறுதி கூறிச் சற்றும் அருகனாத வென்னை யப்பெருங் காரியத்திற் பிரவேசிக்கச் செய்தனர்.

குருக்களவர்கள் உதவிய சில ஏட்டுப்பிரதிகளும் கறை யானல் கவரப்பட்டிருந்தன. என்னை செய்வது?

"தட்டாரிடத்திற் றங்கப்பணிகள் சமைப்பதையும்
வட்டாடுவாரைத் திருத்தி நன்மார்க்கத்தில் வைப்பதையும்
பட்டாங்கு நாலி யச்சிற்றிநந்திப் பதிப்பதையுந்
தொட்டா மனதைக் கவலையெகாளுந் தொடாததிடுமே"

ஆதலின் இந்நிலையினை விரித்துக் கூறவேண்டுவதனவசியம்.

அங்ஙனமிருந்தும் இறைவனருளினுலும் பெரியார்களின் கூட்டுறவினுலும் அடியேனுக்கேற்பட்ட பல சந்தேகங்களும

இரவியின் முன் பனிபோல் நீங்கின. ஒரு சுவடியில் சிதலை பரித்தபாகம மற்றோர் சுவடியில் நன்கு காணப்பட்டதனால் அவற்றாலாய துன்பமொழிந்தது.

தளரா முயற்சியாலுந் தண்டாதபரிசயத்தினாலுஞ் சில வாண்டு களுக்குப் பின்னர், நூலாசிரியரின் உண்மைத் திருவாக்கிதனை தெள்ளிதாய்ப் புலப்பட்டது. இதன்மேல் சுத்தமான பிரதியொன்று கடிதத்தில் எழுதப்பட்டது.

நிற்க, செய்யாறு தாலூக்கா, பொதியர் பாளையச் சமரஸ சன்மார்க்க சங்கத்தின் மூலமாய்ப்புராணம் வெளிப்படுத்து மாறு கூறி, வேண்டிய பொருளை யுபகரித்துத்தருவதாய் அன்றே ஓர் அறிக்கையைத தயாரிததுச் சென்ற குருக்களவர் கள், தமக்கேற்பட்டிருந்த சில லௌகிக அசௌகரியஙகளால் கவனித்தற்குக் கூடாது "நல்ல காரியத்திற்கு நாலாயிரந தடை"யென வாளாவிருந்துவிட்டனர்.

எடுத்துக்கொண்ட காரியம் முடிப்பான் வேண்டி யடி யேனும் சந்தர்ப்பம் நேர்ந்த காலஙகளில் அத்தலததைச் சூழ்ந் துள்ள பலகிராம சைவாபிமானிகட் கெடுத்துரைத்தேன். பயன்படவில்லை; ஆயினும் "அடுத்து முயன்றாலுமாகுநா ளன்றியெடுக்க கருமங்களாகா" வென்னும் முதுமொழியை யுன்னியுன்னி மனந்தளராது ஆங்காலததை யெதிர்நோக்கி யிருந்தனன்.

பிறகு ஒருகால், விடாமுயற்சியே வெற்றியாக்குமென் னுந் திடத்துடன், மேற்படி சமரச சன்மார்க்க சஙகத்தின தலை வரும், இப்புராண விஷயமாய் நடைபெறும் யாவற்றினையும் நன்கறிந்தவரும், சுத்தப்பிரதி யெடுப்பதில் அடியேனுக்குப் பெரிதும் உபகரித்தவரும், ஸ்ரீநடராஜ தத்துவம், மநீஷாபஞ் சகம், முதலிய பலநூல்களின் ஆசிரியரும, வேதாந்த மஹா

பன்னியாசகரும் எனது நண்பருமாகிய அருட்கவி, பிரஹ்மஸ்ரீ ந. சுப்பிரமணிய அய்யருடன் புராண விஷயமாய்ப்பேச நேர்ந்தது. அப்பொழுதவர் "கடிதத்தில் எழுதிய சுத்தப்பிரதியும்; சின்னாளுக்குப்பின் ஓலைச் சுவடிக்குற்ற கதியையன்றோ வெய்தும்? கன்னுக்கடைச் சிந்துகளும அச்சுவாகனமேறி யுலவுமிக்காலத்தில் அரும்பெருமை வாய்ந்தவிப்புராணத்தின் கதியிங்ஙனமாதல் தகுதியோ? உரையுடன் வெளிப்படுத்தத் திராவியமின்றேல் ஒரு குறிப்புரையுடனாவது இப்புராணத்தையுடனே அச்சிட்டு வெளிப்படுத்துத லின்றியமையாததாகும்" என்று கூறினர். அதற்கு அடியேன்" நமதுசங்கம் தோன்றிய தன் பயனாக நடராஜதத்துவம், திருத்தணிகைப் பிரபந்தத்திரட்டு, திருததில்லை நடராஜதோததிரமஞ்சரி திருததணிகை தியானபஞ்சரி, ஸ்ரீ அகத்தீசர் தோத்திரப்பா, சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை முதலிய பலநூல்கள் வை சங்கத்தினர்களாலியற்றப்பட்டு லோகோபகாரமாய் வெளியிட்டு உதவியிருத்தல்போல விப்புராணத்தையும் வெளிப்படுத்துதல் நம் சங்கத்தின் கடமையாகும். ஆதலின் இப்புராண வெளியீட்டைத் தங்களிடம் ஒப்பித்துள்ளேன்" என்றுகூற, அவரும் என் வேண்டுகோளுக்கிரங்கி சுத்தப்பிரதிகளைக் கைப்பற்றிச் சென்னைக்குச் சென்றனர்.

சென்றவர் வாளாவிராமல், உடனே தம்முடைய மனமிசைந்த நண்பரும், காஞ்சிதாலூக்காவிலப்போதைய தாசில்தாருமான திருவாளர் க. ஆறுமுக முதலியாரிடங் கலந்து, இப்புராணம் அச்சிடுவதற்காக ரூபா 100. அவர் மனமுவந்தளிக்கப்பெற்றனர். இந்த ரூபாயைக்கொண்டு அச்சுவேலையாரம்பிக்கப்பட்டது.

பின்னர், புராணம்முழுமையும் அச்சிடப்பொருளுதவுவதாய் வாக்களித்த பிரஹ்மஸ்ரீ குமாரசாமி குருக்களவர்களும்

ஷெடி சங்க பொக்கிஷதாரரும் எனது நண்பருமாகிய, திரு வூரளர் க. பரசுராமமுதலியாரும், அடியேனும், இத்தலத்தைச் சூழ்ந்துள்ள பல கிராமங்களில் சென்று பொருள வேண்டி னேம். பல சிவபுண்ணியசீலர்கள் பொருளுதவி புரிந்துள ளார். இது "இந்நூலிற்குதவி புரிந்தவர்களின் தொகுப்பு" என்னுந்தலைப்பின் கீழ் காட்டப்பட்டிருக்கின்றது.

பல்லறத்திலும் சிவபுண்ணியஞ் சிறந்ததாம்; அதினும் சிவாலயப்பிரதிட்டை சிறந்ததாம்; அதினும் சிவபுராணப் பிரதிட்டை சிறந்ததாகும். இது சர்வ சாஸ்திர சம்மத மாம். "யான்பெற்றவின்பம் பெறுகவிவ்வையகம்" என்னு முதுரையையநுசரித்து இப்பெரும்புண்ணியத்தில் யாவரை யும் பிரவிர்த்திக்கச்செய்தலே நலமென்றுன்னிப் பலரிடத் துஞ்சென்று பொருளுதவிபெற்று அவர்க்குப் புராணமும் பகிர்ந்து கொடுப்பதாயும் வாக்களித்துள்ளேன்.

இத்துணைப் பெருங்காரியத்திற்கு மூலகாரணராயிருக் கும ஸ்ரீமான், பென்ஷன் தாசீல்தார் க. ஆறுமுக முதலியா ருக்கும், இப்புராண விஷயமாய் அடியேனுடனிருந்து எல்லா வித முயற்சியுஞ் செய்துவரும் பிரஹ்மஸ்ரீ வெ. குமாரசாமி குருக்களுக்கும, ஸ்ரீமத் க. பரசுராம முதலியாருக்கும எனது மனமார்ந்த வந்தனமுளிக்கின்றேன்.

"கேட்டினுமுண்டோருறுதி கிளைஞரை, நீட்டியளப்பதோர் கோல்" என்னும் பொய்யா மொழிக்கிணங்க, விப்புராண விஷயமாய் அவ்வப்போது எனக்கு ஏற்பட்டுவந்த மனத் தளர்ச்சிகளை யெல்லாம் நீக்கி ஊக்கமூட்டியதுமல்லாமல் குறிப் புரையும் எழுதித்தந்து, தமது பல காரியங்களுக்கிடையே யிப்புராண வெளியீட்டினையே முதன்[illegible]ந்தி அச்சு

வேலை முழுமையுந் தாமே வகித்துப் புராணத்தைப் பூர்த்தி செய்துவைத்த பிரஹ்மஸ்ரீ அருட்கவி, ந. சுப்பிரமணிய அய்யரவர்கட்குத தமிழுலகும், தமியேனு மெக்காலுமறவாத நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இஃதன்றி இந்நூலின்கண், தந்துரையிற் குறிப்பித்துள்ள (ஷை தேவஸ்தான) விஷயங்களையும், அதனைப் பரிபாலித்துவரும் சைவ வேளாளர்களின்மரபுத்தன்மைகளையும், எனக்கு ஐயந்திரிபற விளக்கியவரும், வயது, ஒழுக்கம், அறிவு முதலியவற்றிற் சிறந்தவருமாகிய, திருவாளர், பல்லாபுரம் மணியம், சோலையப்ப முதலியார் அவர்களின் நன்றி எக்காலும் மறக்கற்பாலதன்றாம்.

இதுவுமன்றிக் கடந்த கரவருடத்தில் ஷை கடம்பர்கோயில் ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகத்தினை நடத்திப் பெரும புண்ணிய மெய்திய (காலஞ் சென்ற) திருவாளர் வ. முத்துசாமி முதலியாரவர்களின் தமையனார் புதல்வரும். தற்காலத்தில் ஷை யாலய நூதன துஜஸ்தம்பப் பிரதிஷ்டை, வாகன, வாகன மண்டப ஜீர்ணோத்தாரண, மஹா கும்பாபிஷேகம் முதலிய சிவபுண்ணியங்களை நடத்த உத்தேசித்துத் துவக்கிச் செய்துவருபவருமான சென்னை, திருவாளர், வ. மு. நடராஜ முதலியாரவர்கள் ஷை புராணத்தின் பைண்டு செய்யும் காரியத்தைத் தாமே வகிக்க முன்வந்துள்ளார். தாமெடுத்து முயன்றுவரும் பெருங்காரியம் பலவற்றுள் இதனையுமெடுத்துச் செய்வது அவரது உதார குணமாகும். இது மிகவும் பாராட்டற்பாலதன்றோ?

இப்புராண வெளியீட்டில் பெரிதும் ஊக்கங்காட்டி, முன்வந்துதவிய, புத்தளிக் கிராமத் திருவாளர், சோணாசல

முதலியார் அவர்கட்கும் (உதவி லிஸ்டில் கண்டுள்ள) சகல கனதனவான்களுக்கும் நன்றியறிதலுடையவனா யிருக்கின்றேன்.

இத்தகைய சிவபுண்ணியத்தி லென்னை யறியாமலே யீடுபடச் செய்து, என்னையோர் கருவியாக்கி இப்புராணத்தை முடித்துக்கொண்ட எல்லாம் வல்ல அம்பலக் கூத்தனருள் கடம்பேசன், எம்பெரு நிதியாமிறைவனின் னருள் இந்நூலை என்ஞான்றும் நிலவுமாறு புரிவானாக.

பிரமாதாதி தோஷங்களாலேற்பட்டுள்ள பிழைகளை யுலகம் பொறுக்க.

இங்ஙனம்,

பெரியபாளையம்
20—2—1927.

அடியார்க்கடியன்,
பு. ப. மாசிலாமணி.

சிவமயம்.

# முகவுரை.

## 1. புராணப்பெயரும் அத்தியாயத்தொகையும்.

திருக்கடம்பநாத புராணம்.

இதில், பாயிரம் 1, புராணவரலாறு 2, ஸ்தலவிசேஷம் 3, தீர்த்த விசேஷம் 4, மூர்த்தி விசேஷம் 5, கந்தாச்சிரம வரலாறு 6, தசநாமமகிமை 7, அஸ்திபூத்தது 8, சூராதிகள் தவம் புரிந்தது 9, சேவலும் மயிலும் சிவகதிபெற்றது 10, காசிபமுனி பூசித்தது 11, மலையன் மாகரன்வதை 12, குமாரக்கடவுள் பூசித்தது 13, உமையம்மை தவம் புரிந்தது 14, உமையம்மை திருமணம் புரிந்தது 15, கண்டகவயிரி முத்திபெற்றது 16, திருமாகாளீச்சுரர் மகத்துவம் கூறியது 17, ஆக அத்தியாயம் 17-உள்ளன.

## 2. பாக்களின் தொகை.

பாயிரத்தில் 25, புராண வரலாற்றில் 30, ஸ்தலவிசேடத்தில் 38, தீர்த்த விசேஷத்தில் 17, மூர்த்தி விசேஷத்தில் 30, கந்தாச்சிரம வரலாற்றில் 21, தசநாம மகிமையில் 17, அஸ்திபூத்ததில் 25, சூராதிகள் தவம் புரிந்ததில் 31, சேவலும் மயிலும் சிவகதிபெற்றதில் 20, காசிபர் பூசித்ததில் 79, மலையன்மாகரன் வதையில் 79, குமாரக்கடவுள் பூசித்ததில் 55, உமையம்மை தவம்புரிந்ததில் 49, உமையம்மை திருமணம் புரிந்ததில் 58, கண்டகவயிரி முத்திபெற்ற

தில் 34, திருமாகாளீச்சுரர் மகத்துவங் கூறியதில் 31, ஆக திருவிருத்தம் (639,)

### 3. பாயிரம்.

இதில், கடவுள் வாழ்த்து, சமய குரவர்கள் துதி, அடியார்கள் துதி, ஆசிரியர் துதி, அவையடக்கம், ஆக்கியோன் பெயர் முதலியவை கூறப்பட்டிருக்கின்றன.

## 4. புராண வரலாறு.

பூர்வம், முத்திகள் ஏழனுள் ஒன்றாகிய ஸ்ரீகாஞ்சிமா நகரத்தில, தாமரை மலரில் வசிக்கும் பிரமதேவன் தவஞ்செய்த காலத்தில், சௌனகாதி மகரிஷிகள் ஒருங்கே கூடிப் பிரமனையடைந்து "அடியேம் உலகில் தவஞ்செய்தற்கு எவ்வகையினும் மேம்பட்டதொரு தபோவனம் உண்டாக்கித்தரல் வேண்டு"மெனப் பிரார்த்தித்தனர்.

மண் பொதுத் தந்தையும் மனமிரங்கி, தனதருகிலிருந்த ஒரு தருப்பைபபுல்லை யெடுத்துச் சக்ராகாரமாக (உருளையாக) முடிந்து முனிவர்களை நோக்கி "ஹே, முனிவர்களே! இதோ இக்குசத்திகிரியை உருட்டுகிறேன்; இதன்பின் செல்வீராக. அது முடியவிழ்ந்து நின்றவிடமே நீங்கள் கருதியவிடமாய் நிகழு"மென அருளி யதையுருட்டியவளவில், அது கங்கைக் கரையில் விசாலமும் பல வளப்பமும் நிறைந்த ஒரு வனத்தின்கண் அவிழ்ந்துநின்றது. அவ்வனம் நைமிசத்தால் (திகிரியால்) உண்டானமையின் அதற்கு நைமிசாரண்யம் என்னும் பெயருண்டாயது.

அத்தபோவனத்தின் பெருமையைச் சுருங்கக்கூறின், அது ஆன்மகோடிகளின்கன்மாநுபவத்திற் கேதுவாகத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்திரட்சிக்கும்நிமித்தம், படைத்

தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்றுவிப்பவன் இவனேயெனத் திருத்தில்லையின் கண்ணே நின்று ஆநந்ததாண்டவம் புரியும் ஸ்ரீநடராஜப் பெருமானை யொத்திருந்தது; எனின்வேறு கூறவும் வேண்டுமோ?

இறைவன் கொன்றை மாலையையும், மூன்றாம் பிறைச் சந்திரனையும, பாகீரதியையும சிரசிற்றாங்கியும் தமது கரத்தில் மழுப்படையேந்தியும், பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலிய பல முனிவர்சூழ விளங்குவதுபோல, இந்த நைமிசவனமும் தன் கண் அழகிய பூங்கொத்துக்களை யணியணியாகவுடைய கொன்றையாதி பல விருட்சங்களையுடைத்தாய் ஆகாயத்தை யளாவிஉயர்ந்திருப்பதாலது சந்திர மண்டலங்களைத் தன்னுச்சியிற்றரித்திருப்பதுபோல விளங்கிப்பல முனிவர்கள் சதாசூழவும், அவர்களால் இயற்றப்படும் யாகாக்கினியைத் தனதிடமாக்கொண்டு நிலவுதலாலும், வேண்டுவார் வேண்டிய வண்ணம் சகல காரிய சித்திகளையும் தன்னிடத்தருளுதலாலும் இறைவனை யொத்திருந்தது.

மேலுமவ் வடவியில் சார்தூலாதி மிருகஜாலங்களும், கிஞ்சுகமாதி பட்சிக்கூட்டங்களும நிறைந்துலவும நேர்மையுள்ளது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும், காமிகமாதி இருபத்தெட்டாகமங்களையும் அத்தியயனஞ்செய்யுந் துவனியும், அவரவர் இயற்றும் யாக, ஜெப, தபங்களுக்கேற்ப அவைகளிற் கூறப்படும் மந்திரங்களினோசையும், அந்த யாகங்களில் குறைவின்றி யோங்கி எரியும் அழலினரவமும், பிரம்மமாதி பதினெண்புராண பட்டைகளின தொனியும் சதா விளங்கும தன்மையையுடையது நைமிசாரண்யம் என்பர்.

ஒரு காலத்தில் அவ்வனத்திடையேயுள்ள பல முனிவர்கள் ஒருங்கே கூடி ஒரு சத்திரயாக மியற்றுங்கால், ஆங்கெழுந்தருளினார் சூதமுனிவர். அவர் ஒருகோடி சந்திரர்கள் ஒருங்கே உதித்துவருதலைப் போன்று, தமது சிவந்தமேனி யெங்கும் விபூதியை யுத்தூளனமாகத் தரித்துத் தூய அக்ஷமாலிகாபரணராய் பாதத்திற் பாதக்குறடு பூண்டு பாதசாரியாய் அசைந்தசைந்து அழகிய மிதநடையுடன் வந்தனர்.

இதைக்கண்டு சனகன், சனந்தன், துருவாசன், சமதக்னி அநகன், அநந்தன், சோமுதாக்கன், ஆபத்தம்பன், பிருங்கி, உபமன்னியன், அகத்தியன், கோசிகன், வசிட்டன், சங்கன், மதங்கன், மார்க்கண்டன், கோசிகன், கௌதமன், பரத்துவாசன், பிருகு, விபாண்டன், வால்மீகி, நாரதன், போதாயனன், வாமதேவன், சதாநந்தனாதி பல முனிவர்கள் அஞ்சலியஸ்தராய் எதிர்நோக்கிச் சென்று வரவுகூறி சோடசோப சாரமியற்றி ஆசனத்தமர்த்தினர்.

சூதமுனிவர் சந்தோஷ சித்தராய் அவர்களை ஆசீர்வதித்து, "யாதுவேண்டி இந்த சத்திரயாக மியற்றுகின்றீ"ரென முனிவர்கள் "இம்மை மறுமை வீடு என்னும் முப்பேறு மருளுமென் றியற்றுகின்றோ"மென்ன, முனிபுங்கவர் இளநகை புரிந்து நைமிசவாசிகளே! இம்மகம் இம்மை மறுமைப் போகங்களைத் தருமேயன்றி முத்திப்பே றளிக்காதென்றனர். எனினும், முனிவர்கள் திகைத்து, ஐயனே. அதையளிக்கு முபாயம் அருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

கேளீர் சௌனகாதி முனிவர்களே! முத்திப்பேற்றைத் தருமுபாயம் பலவுளவெனினும் அவை யனைத்திலும் சிறந்தது தசவிதமார்க்கமேயாம். அது யாதெனில், 1. சிவதலத்தில் வாசம் செய்தல், 2. தீர்த்த யாத்திரை செய்தல், 3. சிவ

ணடியாரை வணங்கல், 4. அவர்களுக்கு உண்டியுதவல், 5. அவர் பரிகலசேடங் கொள்ளல், 6. திருவெண்ணீறு உருத்ராக்ஷமணிதல், 7. சிவனடியார் வேண்டும் பொருளீதல், 8. சிவபுராணபடனம் செய்தல், 9. சிவபெருமான் ஒருவனையே பரமபதியாக வழிபடல், 10. சிவபெருமானைச் சதா நினைத்தல் முதலியவைகளாம்.

இந்த தசவித மார்க்கத்திலும் சிவதலத்தில வசிப்பதொனறே மற்றச் சாதனங்களையும் அளிக்குமாதல்பற்றி சிவதலவாசமே முத்திப்பேற்றிற்குச் சிறந்த மார்க்கமாமென்று கூற, சௌனகாதியர் வணங்கி அத்தகைய சிறப்புவாய்ந்த சிவதலமொன்றை யருளிச் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, தவ சிகாமணியாகிய சூதமுனிவர் கேளீர் சௌனகாதியரே! வியாசரருளிய பதினெண் புராணங்களிலொன்றாகிய ஸ்ரீ ஸ்காந்தமஹா புராணத்திற்கூறியுள்ளபடி ஸ்ரீ கடம்பர் கோயிலென்னும் ஒரு சிறந்த சிவதலப் புராணம் கூறுகின்றேன் கேட்பீரெனப் புகலத் தொடங்கினார்.

## 5. ஸ்தல விசேஷம் உரைத்த அத்தியாயம்.

இதில் அவந்துவம், காமிகம், மிச்சிரம், தைசதம் என்னும் நான்குவித தெய்விக சிவஸ்தலங்களுள், அறுவகையுட் சமயக்கடவுளர்க்கும் உறைவிடமாகிய தைசத ஸ்தலம் திருக்கடம்பைத்தலமெனவும், மூர்த்திபீடம், பிலபீடம், சத்திபீடம் என மூன்றும் அமையப்பெற்றது அத்தலமெனவும், அதற்குத் தசவித காரணப் பெயர்களுளதெனவும், தலச் சிறப்பு, தொண்டநாட்டுச் சிறப்பு, ஸ்தல வெல்லை முதலியனவும் விளக்கமாய் கூறப்படுகின்றன.

## 6. தீர்த்தவிசேடமுரைத்த அத்தியாயம்.

இதில், இந்திரன், பிரமன், விஷ்ணு இம்மூவர்களும் முறையே கிழக்கு, அக்கினி, தெற்குத் திசைகளிலுண்டாக்

கிய தீர்த்தங்களின் பெருமையும், இத்தலத்தில் உத்தரவாகினியாய் வரும்சேயாநதி, குமாரக் கடவுளால் வரவழைக்கப்பட்டதென்பதும, அதிற்படிவதாலுண்டாகும் பயனும் தெளிவாய் உரைக்கப்பட்டிருக்கின்றன.

7. மூர்த்திவிசேஷம் உரைத்த அத்தியாயம்.

இதில், அத்துவா ஆறினாலாகிய வண்டங்களனைத்தும் ஆக்கியமூலலிங்கம் இத்திருக்கடம்பலிங்கமே என்பதும், கடம்பநாதன் 1. செல்வநாதன் 2. சோதிநாதன் 3. சித்திநாதன் 4. உலகநாதன் 5. அம்மையப்பன் 6. உயிர்த்துணைவன் 7. ஞானதீக்ஷிதன் 8. என்னுமெண்வகைக் காரணப் பெயர்களும் அவை வந்த வரலாறும், விதிப்படி பூசிப்பவர் அடையும் பயனும், இத்தலத்தில் வசித்தல் அல்லது நினைத்தல் முதலியவற்றாலுண்டாம் பெரும்பயனும், திருத்தொண் டியற்றுபவர் அடைபயனும் ஏனையவும் நன்கு விளங்குகின்றன.

8. கந்தராச்சிரம வரலாறுரைத்த அத்தியாயம்.

இதில் பூர்வம், திருக்கயிலையில் பரமசிவன் உமாதேவிக்கு ஆகமங்களைக் கூறிவருங்கால் பிராட்டியார் சிறிது பராமுகமாயிருத்தல்கண்டு செம்படப் பெண்ணாக ஜனிக்கும்படி சபிக்க, அதைக்கண்ட சிவகுமாரர்களிருவரும் கோபித்து அவ்வாகமங்களைக் கடலில் எறிய, அதையங்கனமவர்கள் செய்யவிடுத்த திருநந்திதேவரை மீனாகவும், விநாயகனை விடுத்து குகப்பெருமானை ஊமைப் பிள்ளையாகவும், பரமசிவன் சபிக்க, அவ்வணமவதரித்த தேவியைத் திரும்பவுமதாமே மணந்ததும், ஊமைப்பிள்ளையாகப் பிறந்த வேற்கடவுள் மதுரைச் சங்கத்திற்சென்று அவர்களுள்ளாய சங்கையையகற்றி சுந்தரேசனைப்பணிய அவரருளியபடி இத்தலத்திற்கேகி சிவலிங்கப் பிரதிட்டை செய்ததும், பிறவும் விவரமாய் அறையப்படுகின்றன.

## 9. தசநாமமுரைத்த அத்தியாயம்.

இது, மகதநாட்டில் விஜயநகரத்தில் விப்பிரகுலத்தில் பிரமசேநன் என்பவருக்கு எட்டுப்புத்திரர்கள் உண்டாகி அவர்கள் அஷ்டமாசித்திகளையடைய இச்சித்து, அந்த நகரிலுள்ள விபண்டிதரென்னும் பெரியாரைப் பிரார்த்திக்க, அவர் பதுமபுரத்திலுள்ள தற்புருடனென்பவரைச் சார்ந்து வினவும்படி ஏவ, அநகனுஞ்சென்று வினவியதில் அவர் தவநகரம முத்திபுரம், யோகபுரம், ஞானபுரம், அர்க்கபுரம், வெற்றிபுரம, கலியாணபுரம், கநதராச்சிரமம, கடம்பர்கோயில், சத்திபீடம் எனும் இத்தலத்தின் தசநாம மஹிமைகளையும், அவை வந்த காரணமுங்கூறி, அதைச் சதாசிந்திப்பதாலேயே உங்களிஷ்டம் நிறைவேறுமென்று கூற அங்ஙனம் செய்து அஷ்டமாசித்திகளையடைந்ததுடன் மறுமையில் சிவபதமு மடைந்தனரெனக் கூறுகின்றது.

## 10. அஸ்திபூத்த அத்தியாயம்.

இது, பாண்டிநாட்டில், தருமநகரத்தில் குணசீலனென்னுமந்தணன் தருமவதியெனும் தன் பத்தினியுடன் கூடி, புத்திசேனன் என்னும் புத்திரனைப்பெற்று சிலகாலம் கழித்திறக்க, மகன் தந்தைக்குரிய கருமக்கடன்களை விதிப்படியாற்றி அவர் கட்டளைப்படி அவருடைய எலும்பைக் கங்கையிற்சேர்க்க அவற்றைத் தன் சீடனாலெடுப்பித்து, இக்கடம்பர்கோயில் வழியாக வருகையில், சந்தியாவந்தன போஜனாதிகளாற்றத் தாம் கொண்டுவந்த என்புக்குடத்தைத அங்கு வைத்துக் காலக்கடனை முடித்துக்கொண்டிருந்தசமயத்திற் காற்றாலொரு துளியதில்விழ அவ்வென்புக்குடம புஷ்பவாசனைவீசிற்று. அதையுடன் வந்த சீடன் திறந்து பார்த்தவளவில் அவையாவும் புஷ்பமாயிருக்கக் கண்டான். பிறகு புத்திசேனனுடன் கங்கையை யடைந்துபார்க்குமுன்போலென்பாயிருந்ததைக்கண்டு,

குருவுக்கு நிகழ்ந்ததை அறிவிக்க, புத்திசேனன் திகைத்து அதைச் சோதிப்பான் வேண்டி திரும்பவும் கடம்பைவந்து பார்க்க, மீண்டும் புஷ்பமா யிருத்தலைக்கண்டதிசயித்துத் திகைக்குமளவில, இறைவன் அசரீரியாய் "அன்பனே! காசியினும் கடம்பவனமிக்க மஹிமையுடையதெ" னக்கூற, அவன் அவ்வென்புக்குடத்தை அத்தலத்திலேயேவிட்டுத் தந்தையை முத்தியுலகம் புகச்செய்ததை விரிவாய்க் கூறுகின்றது.

## 11. சூராதிகள் தவம் புரிந்த அத்தியாயம்.

சாசத்தீவை அரசுபுரிந்த பிரபாகரன் என்னுமரசனுக்குச் சூரன், பதுமன், சிங்கன், தாருகன் என நான்கு புத்திரர்கள் இருந்தனரெனபதும், அவர்களில முன்னவரிருவரும் ஒருகால் அகத்தியரிடம்சென்று பிறவித்துன்பம் நீங்குமாறு ஒரு உபாய மருளும்படி வேண்ட, அவர் குகக் கடவுளுக்குச் சேவலு மயிலுமாக விளங்கும்படி தவம் கிடப்பதே தக்க உபாயமென்றும், அதற்குரிய விடம் கந்தராச்சிரமமே என்றும் நவின்றேக, பின்னோர்கால் சிங்கனும தாருகனும், திரணவிந்து மகரிஷிகளின் வரவுகண்டு எங்கள் பிறவித்துயரம் அகலுமார்க்கமருள் செய்கென்ன; அவர் காளிக்கும் ஐயனார்க்கும்வூர்தியாம் சிங்கமும் யாளியுமாகும்படி தவங்கிடப்பதே தக்கஉபாயமென்றும், அதற்குரியவிடம் கந்தராச்சிரமமென்றும் கூற, அங்ஙனமே அந்நால்வரும் அங்குச் சென்று தவஞ்செய்ப இவ்விஷயத்தைக் கயிலைக்குச்சென்று அன்னமும் கருடனும் வேளின் மயிலுக்கும் சேவற்குமறிவிக்க, அவைகளிரண்டும் கந்தாச்சிரமம் வந்து தவங்கிடப்போரைப் பைசாசமாகும்படி சபிக்க அந்த நால்வரும பயந்து பிரார்த்திக்கவும் முடிவில் பூதகணங்களாய்க் கயிலையை யடையும்படி அவையருளிப்போக, அவ்விதமிருக்குங்கால் அவர்கள் உட்பகைகொண்டு மயிலையும் சேவலையும்நோக்கி, அன்னமும் கருடனும் அவைகளை இகழ்ந்ததாகக்

கூற, சேவலும மயிலுங் கோபித்து அன்னம் கருடர்களி ஞவியை மாற்ற அதையுணர்ந்த பிரமனும் விஷ்ணுவும் வேற் படையண்ணலுக் கறிவிக்க அவர் பூதகணங்களை அசுரராகப் பிறக்கும்படி சபித்து இனி யம்மயிலையும் சேவலையும் தீண் டுவதில்லையென வெறுத்ததும், பின் அவை முருகனை யிறைஞ்சி வேண்டியதற்கிணங்கி யவர் "தாமே அவ்வசுர வடி வங்களை நீக்கி நற்கதிதருவோம்" என்றும், சேவலும் மயிலும் நற்கதி பெறக் கந்தராச்சிரமமே தக்க தலமாமென்றும்கூற, அவை கந்தராச்சிரமத்தை யடைந்தனவென்பதும் பிறவும் கூறும்.

## 12. சேவலும் மயிலும் சிவகதிபெற்ற அத்தியாயம்.

காசிபருக்கும் மாயைக்கும் சூரன் பதுமன் இருவரும சேர்ந்து சூரபதுமனுகவும், சிங்கன் தாருகன் தனித் தனியாகவும பிறந்து, அரிய தவத்தால், அழியாவரம் பல பெற்று, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகமர சாண்டு வருகையில், அவர் தேவர்க் கிடுக்கண் செய்ய, இந்திர னத்துயர்தீர சீர்காழிப் பதியையடைந்து நந்தவனமமைத்துப் பரனைப் பூஜிக்க அவரருளால் குமாரக்கடவு ளவதரித்து, சூர னாதியரைச் சம்மரித்து அவரிஷ்டப்படி சேவலும் மயிலும்சிங் கமும் யாளியுமாகச் செய்து அங்கீகரித்ததும், பழைய சேவல் மயில்களுக்குப் பரமபத வாழ்வுதந்து கடம்பர் கோயிலிற்றங் கியதும், பிறவும் இது விரிவாய்க் கூறுகின்றது.

## 13. காசிபமுனிவர் பூசித்த அத்தியாயம்.

இது சூரபதுமன் யுத்தகளத்தில் போருக்காற்றுது மறைந் தோடிப்போன மலையன் மாகரன் எனுமிரண்டசுரரும் திரு மாகாற் கடவுளைப் பூசித்துப் பல வரங்களைப் பெற்று, அத ஞல் பலருக்குத் தீங்கு விளைவித்துழன்றுகொண்டிருப்பதை,

இந்திரன் காசிபருக்கு அறிவிக்க, உலக க்ஷேமத்தினைக் கருதி அம்முனிவர் இந்தலத்தின் கீழ்த்திசையில் ஒருயாகமியற்ற ஆரம்பிக்க, அதை யவ்வசுரர்களழிக்க, அதனால் அவர் கடம்ப வனத்திலேயுள்ள சுயம்புவிலிங்கக் கடம்பேசனை யாகம விதிப் படி பூசிக்க, இறைவன் பிரத்தியக்ஷமாய் வேண்டிய வரங்களைத் தந்து "யாகத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தடையாயிருக்கும் அசுரர்களை யழிக்கத் திருமாகரலில் உள்ள நமது குமாரனுக் குக் கட்டளை யிடுகிறோம்; அஞ்சாதீர்." என அருளியதை விரிவாய்க் கூறுகின்றது.

## 14 மாகரன் மலையன் வதையுரைந்த அதத்தியாயம்.

இதில் கடம்பேசன் காசிபருக் கருளியபடி திருமாகரற்ப தியிலிருக்கும் குமாரனை யழைப்பித்து வாளாயுதம் தந்து அவ் வசுரர்களை யழிக்கவருளியதும், அவர் அங்ஙனே சூரர்களைச் சம்மரித்ததும், இடையில், சூரர்கள் மாயைப்போர் செய்த தால், கடம்பாபுரிக்குக் கீழ்த்திசையில் தமது ஞான வேலா யுதத்தை நாட்டிப் பிரகாசிக்கச் செய்ததும், அஃதே இளையனார் வேலூரென்னும் பதியாய் விளங்குவதென்பதும், விரிவாய் விளங்குகின்றன; மேலும், கடம்பேசன் அவ்வசுரர்களின் போரில் இளைத்த தமது சேனைகளுக்குத்தாமே அடியார் வேடம் பூண்டு அமுதளித்தனரென்பதும், முதலில் மாகர னிறந்ததை யறிந்த மலையான் மறைந்தோடியததறிந்து பின் பற்றிச் சென்று அவனை மாய்த்தவிடமே மலையான் களமென வழங்குகிறதென்பதும், அவன் பாசறையே இரும்புலம் என் பதும், அமராடியவிடமே சேம்புலம் என்பதும, வனையவும் விரிவாயுரைக்கப்படுகின்றன.

## 15. குமாரக்கடவுள் பூசித்த அத்தியாயம்.

இது, மாகரன் மலையர்களைச் சம்மரித்தபின்னர், இலட்சத் தொன்பதுவீரர்களுடன், திருக்கடம்ப வனத்தைத் திரும்பவும

அடைந்து, மயனால் நகர்நிர்மாணம், ஆலய நிர்மாணஞ் செய்வித்துத் தமது ஞான வேலால் சேயாற்றைவரவழைத்து, அதில் விதிப்படி ஸ்நானஜபதபாதிகளை முடித்துப் பங்குனிமாதம், சுக்கிலபக்ஷம், மகநாள் கூடிய பிரதோஷ தினத்தன்று வேதசிவாகம முறைப்படி ஸ்ரீ கடம்பேசனைப்பூசித்துத் துதிக்க, அவர் பிரத்தியக்ஷமாய் விளங்கி, குமாரக்கடவுளைப் புகழ்ந்து, அவரால்காசிபரதுயாகத்தைப்பூர்த்திசெய்வித்து, வேலூன்றிய விடத்தில் (இளையனார் வேலூரில்) சதா வீற்றிருக்கும்படியும், ஆண்டிற்கொருமுறை அத்தினத்தில் தம்மை வந்து பூஜிக்கவும் விடைதந்தருளி அந்தர்த்தானமாயினர் என்பதும், பிறவும் கூறுகின்றது. கடம்பனால் அமைத்துப் பூசித்ததாதலின் கடம்பர் கோயிலெனவும், கடம்பேசன் எனவும் வழங்குவது எனவும் கூறுகிறது.

16 உமையம்மை பூசித்த அத்தியாயம்.

இது திருக்கயிலைச் சிறப்பும், உமாமகேஸ்வரர் திருக்கோலச் சிறப்பும், பிராட்டி பிரியா வரம் கேட்டலும், அதற்கிசைந்த பரன், கந்தாச்சிரமத்தில் தவங்கிடக்கப்பணித்ததும், பணித்தபடி உமாதேவி ஆங்கெழுந்தருளி விதிப்படி தவங்கிடத்தலும், கயிலையைவிட்டு வருங்கால் உமாதேவியார் இடையில் திருக்கேதாரம், ஸ்ரீகாசி, திருவேங்கடம் ஸ்ரீகாளத்தி, திருவாலங்காடு, திருக்கச்சி, திருக்குரங்கணின் முட்டம், திருப்பொதியர்ப்பதி திருமாகரல் முதலிய சிவதலங்களை முறையே வணங்கிக் கடம்பவனமடைந்ததும், இறைவன் தோன்றி உடனே மணமுடித்துப் பிரியா வாழ்வருளுவதாகக் கூறியதும், பிறவும் விரிவாய்க் கூறுகின்றது.

17. உமையம்மையைத் திருமணம்புரிந்த அத்தியாயம்.

இதில் திரிமூர்த்திகளாதி சகல தேவர்கள் புடைசூழத், திருக்கடம்ப வனத்திலேயே விதிப்படி உமாமகேஸ்வரியைப்

பாணிக்கிரஹணம் செய்து, வாத்தியாதி சகல வைபவங்களு டனே நகர்வலமாதிய பல சடங்குகள் நிறைவேறியதும், சதா அவுடைநாயகியுடன் கடம்பாரணியத்தில் அர்த்தனாரீஸ்வர வடிவாய் நின்று பிராட்டிக்கு அபேதவாழ்வருளியதும், அது சம்பந்தமான யாவும் விவரமாய்க் கூறப்படுகின்றன.

18. கண்டகவயிரி முத்திபெற்ற அத்தியாயம்.

இதில் பாண்டிய நாட்டில் பாடலிபுரத்தில், அந்தணர் குலத்தில, சமரசன் பூவை யென்பார்க்கு, கண்டகவயிரி என ஒரு புதல்வனிருந்தானென்பதும், அவன் வருணாச்சிரம தர்மம பிறழ்ந்து தீயவழியிலொழுகி மஹா பாதகனாயிருந்ததும், அவன் ஒரு சமயம் கடம்பவனத்தை யடைந்து கடப்பந்தரு நிழலில் தங்க, அதன் பரிசம் அவன்மேற் பட்ட மாத்திரத திலே, அவன் உடலினின்றும் கருங்காக்கை வடிவம் கொண்டு பாதகமனைத்தும பறந்ததும், அவன், அதனால் நல்லறிவு பெற்றுக் கடைநாளில் தன்னைப் பற்றவந்த எமபடர்களைப பின் வாஙகச்செய்துக் கடம்பேசனை வணங்கிச் சிவபதம அடைந்தானென்பதும், பிறவும் விரிவாய்க் கூறப்படுகின்றது.

19. திருமாகாலீச்சுவர மகத்துவங் கூறிய அத்தியாயம்.

இதில், சோணாட்டில் உறையூரை இராஜதானியாகக்கொ ண்டு அரசாண்ட சூரிய வம்சத்தரசனான இராஜேந்திர சோழ னென்பான் திருமாகாலிலிருந்த பலாவிருக்ஷத்தின் கனியைத் தினந்தோறும் தில்லைக் கனகசபைக்கனுப்பி, அங்கு ஸ்ரீநடரா ஜப்பெருமானுக்கு நிவேதித்து அதைத் தாம் தினந்தோறும பிரசாதமாகக்கொள்ளும் விரதத்தைக் கைகொண்டவனாக ஒழு குங்கால் ஒருநாள், பிரசாதம் வரத்தடைப்பட்டதறிந்து, அத னுண்மையைச் சோதித்தறிய நால்வகைச் சேனையுடன் புறப் பட்டுவருங்கால் உத்தரவாகினிச் சேயாற்றில்படிந்து ஸ்ரீகடம்

பேசனைப் பிரார்த்திக்க, அவர் அசரீரியாய் "அனபனே! இந்த நதியின் நீரைத தெளிப்பாயாகில் பட்டுப்போன அந்தப் பலா தளிர்க்கும்" என்றருள, அரசனங்ஙனேசெய்ய அது தளிர்த்ததும், பின்னர் திருமாகரக் கடவுள் பன்னிருதிருநாமம்பெற்ற வரலாறும் அதன் சம்பந்தமாய ஏனையவும பொய்யாமொழி விநாயகர் கூறியதும் கூறப்படுகின்றன.

இப்படிக்கு,
அடியார்க்கடியன,
பு. ப. மா.

பொதியர்பாளையம்
25—2—1927.

சிவமயம்.

# தந்துரை.

## 1. தலத்தின் தோன்மை.

(i) காஞ்சிப்புராணம் இருபத்தெண்டளிப் படலம். (304-வது பாசுரம்) காஞ்சி மண்டலத்தைச் சூழ்ந்துள்ள இருபது தளிகளுள் குமாரக்கடவுளால் பூஜிக்கப்பட்டதித்திருத் தலமென நன்கறியக் கிடக்கின்றது.

"விடப்பணிதாரத் தொங்கலுங் கடுக்கையும் விரிகதிர் மதிக்கோடும்
அடப்பமாலையுந் துவன்றிய வேணியா ரம்பலத்தினிதாடு
நடப்பதாம்புய நாண்மலர்ப்பூசனை நகைநுதியழல்வேற்கை
கடப்பமாலையா ரியற்றினனத்தலங் கடம்பை யென்றுரை
[யோங்கும்."

மேலும்,

(ii) காஞ்சீ க்ஷேத்திரமஞ்சரி (5-34-ம் பக்கங்கள்) சிவ குமாரர்களுள் முருகக்கடவுளால் பூஜிக்கப்பட்ட இத்தலமெனவும், இது கச்சிபம்பதிக்குத தென்கீழ்த்திசையில் சேயாற்றின் தென்கரையில உள்ளதெனவும, இது காதம்பரேசுவரா அல்லது கடம்பர் கோயிலெனவும் கூறுவதுடன்,

பூர்வம, பரசிவன் தாருகாவனத்தில் பிக்ஷாடனம் செய்த காலததில் வேதங்களைச் சிலம்பாக வணிந்தமை நோக்கி, யவ்வேதங்கள் அக்கருணையை நாடிப் பூசிதத தலமிது வெனவும் கூறுகின்றது.

(iii) இஃதன்றி, சைவத்திருமுறை - 6-ல் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியுள்ள க்ஷேத்திரக்கோவை எனும் திருத்தாண்டகத்தில், 5-வது பாசுரத்தில "கடம்பை யிளங்கோயில் தன்னிலுள்ளுமே கைலாயநாதனையே காண லாமே" எனத் திருவாய் மலர்ந்தருளி யிருத்தலால் இத்தலம் ஓர் அறுதி சிவக்ஷேத்திரம் என்பதில் யாதோரையப்பாடு மின்றாமென்க. (இளங்கோயில் - இளையனார் கோயில்.)

## 2. நதியின்தோன்மை.

காஞ்சிப்புராணம்(404-வது பக்கம், அநதருவேதிப் படலம், 18-வது பாடல்) "பூர்வம் தேவர்கள் குமாரக்கடவுளை தேவசேனாபதியாகச் செய்து மகாமேருவினுச்சியில் வைத்து வாசநீராட்டிய நீர்ப்பெருக்கே சேய்நதியெனவும், அது, திரு வோத்தூரென்னும் சிவதலத்திற்கருகாகச் சென்று, திருக் கடம்பர் கோயில் என்னும் சிவதலத்தை நாடி,உத்தரவாகினி யாய்த் திருமாகரல் என்னும் சிவதலத்தினருகாகக் கிழக்கே யோடித திருமுக்கூடலென்னும் பெயரை யடைகிறது" என்று கூறப்பட்டுள்ளது, அது வருமாறு.

"பூதலமருங்குபோந்து பொலஞ்சடை முககண்மூர்த்தி
சீதவானீழல்வைகித் தேவரை முனிவர்தமமை
யோதுவித் தருளுமோத்தூ ருழைச்சென்று கடம்பர்கோயிற்
காதரத்தோடும் புககுவடமுகமாகிப் பின்னர்."

என்பனவற்றால் ஷை நதியின் தொன்மை விளங்குகின்றது.

## 3. தலத்தேவாரம்

சமயாசாரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தசுவாமி கள் இததலத்தைச் சூழ்ந்துள்ள திருவோத்தூர், திருக்குரங்கணின் முட்டம், திருமாகரல் முதலிய சிவதலங்களுக்கு எழுந்தருளித் தேவாரப் பாடல்கள் அருளியிருப்பதாலும்,

மேற்காட்டியபடி திருநாவுக்கரசு ஸ்வாமிகளும் க்ஷேத்திரக் கோவையிலருளி யிருக்கிறபடியாலும், காஞ்சிப்புராணப்படி இஃதோர் அநாதி சிவதலமாயிருப்பதாலும், இத்தலத்தில் மாடவீதி யுற்சவாதிகள் "சம்பந்தப் பிள்ளையார் கோவில்வரை நடப்பதென" வழங்கி வருவதாலும், (அக்கோயில் தற்போது மண்மேடாய்க் காணப்படினும், சமீபகாலம்வரை இருந்தது பலரும் அறிந்ததாகும்.) சம்பந்த ஸ்வாமிகளவர்களின் தேவாரம் இத்தலத்திற்கு யிருந்தே பின் மறைந்திருத்தல் வேண்டு மென்பது ஆன்றோர் துணிபாகும். இத்துணிபு கச்சபேசம் முத்தீசம், ஸ்ரீகாசி முதலிய தலகைட்குத் தேவாரமிருந்திருக்க வேண்டுமென்று கூறுவது போலாமென்க.

## 4. தலத்தைச் சூழ்ந்த பல சிவதலங்கள்

திருமாகரல், திருப்புலிவனம், பெருந்தண்டலம், காசிபன் தண்டலம், பிரமீசம், மஹாமுனியீசம், வாசீசம, கன்னீசம், விஸ்வேசம், கங்கையீசம், அகத்தீசம், எனப் பலவுள. இவை புராண வரலாறுரைத்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன.

இதில், திருமாகரல் என்பது மலையன் மாகரனாதிபலர் பூசித்து நற்பேறு பெற்ற பிரசித்த ஸ்தலமாகும். திருப்புலிவனமென்பது, வியாக்கிரபாதர் முதலிய பலர் பூசித்து நற்கதிபெற்ற தலமாம். பெருந்தண்டலம் என்பது இளையனார் வேலூருக்குக் கிழக்கேயிருந்த ஒரு தலம். இது தற்போது நத்தப்பாழாக விருக்கின்றது. காசிபன் தண்டலமென்பது காவாந்தண்டலம் என வழங்குவது. இதில் சோளீசம், விஸ்வேசம் எனுமிரண்டு சிவதலங்களுள்ளன. பிரமீசம், கங்கையீசம் என்பன நெய்யாடுபோக்கமாகும். இவற்றில் பிரமீசமென்பதே பிருதிவீசமென வழங்கி வருவதாகத் தெரிகிறது. மஹாமுனியீசம் என்பது புலிவாயென்னும் தலமாகும். கன்னீசம் வாசீசம்

என்பனமுறையேகனனிகுளம், வயலக்காவூர் என்னுந் தலங்களாகும்.

*அகத்தீசமென்பது அகத்தியமுனிவரால் பூசிக்கப்பட்ட திருத்தலமாம். இது தற்போது புதுப்பாளையம் என வழங்குகிறது. புதுப்பாளையம் என்பது பொதியர்பாளையம் என்பதின் மரூஉ.

(முன், குறுமுனிவர் வாதாபி வில்வலர்களைவாட்டிய பாதகந்தீரச்சிவலிங்க பிரதிட்டை செய்து விதிப்படி பூசிக்க, முனிவரது விருப்பத்திற்கிணங்கி இறைவன், தம்மை வழிபடுவோர்களுக்கு எவ்வகைப் பயனையும் எளிதிலருள்வான் வேண்டி, அருள்புரியவசரம் அருட்சத்தியுடன் கூடியாதலின், அச்சத்தியும் "கண்ணிற்கணிகலம் கண்ணோட்டம்" என்ற முதுமொழிப்படி, அருளே, கண்ணை யலங்கரித்தது நிற்றலான அக்குறிப்புத்தோன்ற (இத்தலத்தில்) தேவிக்கு அங்கயற்கண்ணம்மையார் எனவும, சுவாமிக்கு அகத்தீசர் எனவும், தலத்திற்குப் பொதியர்பாளையம் எனவும் வழங்கும்படி அருள்புரிந்தனரென்பதாம்) இது தலவரலாறுரைத்த அத்தியாயம் (12-34), உமையம்மை தவம்புரிந்த அத்தியாயம் 30-வது செய்யுட்களால் அறியக்கிடக்கின்றது.

## 5. புராணம் பாடியவர்.

திருவாவடுதுறைமடத்து வித்துவான் ஸ்ரீலஸ்ரீ "ஈசான தேசிகர்" எனும் பெரியார் எனப் பாயிரத்துள்ள ஆக்கியோன் பெயர் என்ற செய்யுளினால் விளங்குகிறது.

(இவர் சரிதம் ஒன்றும் புலப்படவில்லை.)

## 6. புராணம் பாடி அரங்கேற்றிய காலம்.

இவ்விஷயமாய் ஒருகால வரையறையைத் திட்டமாகக் கூற முடியாவிடினும், திருவாவடுதுறை பண்டாரச் சன்னிதிகளாகவிருந்த ஸ்ரீமாசிலாமணித் தேசிகரென வழங்கும் சுப்பிரமணி

---

* இத்திருத்தலத்திற்கு மொருபழமையான புராணமுண்டு அதுவும் கூடியசீக்கிரத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்

யத் தம்பிரான் அவர்களின் காலமாகுமெனப் பாயிரத்திலுள்ள குரு ஸ்துதியால் விளங்குகிறது.

7. புராண வரலாறு.

ஸ்ரீ வியாஸமுனிவரருளிய பதினெண் புராணங்களி லொன்றாகிய வடமொழி ஸ்ரீஸ்காந்த மஹாபுராணத்திலிருந்து செந்தமிழில் மொழி பெயர்த்ததாகப் பாயிரத்திலுள்ள ஆக்கியோன் பெயரைக்கூறுஞ் செய்யுளால் நன்கு விளங்குகிறது.

8. தருமசாஸனப் பட்டயம்.

மேஷ் தலத்தில் ஆலய அர்ச்சகராதி எல்லாப் பரிசனர் கட்கும், இன்னஇன்ன காலத்தில், இன்னாரின்னார்க்கு இவ் வளவிவ்வளவு கட்டளை புரியவெனவும், அவரவர்கட்கு மிராசு பாத்தியதையுண்டெனவும் மேஷ் தேவஸ்தானப் பட்டிகளி லிருப்பதாகத் தெரிகின்றது.

9. ஆலய பரிபாலனர்.

இத்தலத்தைப் பெரும்பான்மையுஞ் சூழ்ந்துள்ள 27 நத் தத்தவர்கள் என வழங்கும் புதுப்பாளையம், புதனி, காவாந் தண்டலம், வெங்கச்சேரி, ஆதவப்பாக்கம், பல்லவபுரம், காவாம்பயிர், வளத்தோட்டம், கண்ணிகுளம், புன்னை, மண் ணூர், புனைத்தாங்கல், வயிலாத்தூர், ஆசூர், நெம்மலி, புலி வாய், செம்புலம், வங்காரம், ஏழாச்சேரி, சித்தாமூர், நெல் வாய், ஆண்டிததாங்கல், மேல்பாக்கம் உள்ளிட்ட ஏனைய கிராம வேளாளர்களும், தங்களுக்குரிய பொது தேவஸ்தான மாகக் கொண்டு நீண்டகாலமாய்ப் பரிபாலித்து வருகிறார்க ளெனவும், இவர்கள் தங்கள் மரபுவிவாதங்கட்கு இத்தலத்தை நியாயஸ்தலமாகவும் கையாண்டு வந்திருக்கின்றனரெனவும் தெரி கிறது.

இதனை, இந்த தேவஸ்தான மானியங்கள் உற்சவக் கட் டளைகள் முதலியவைகள் பெரும்பான்மையாக இப்பகுதி

யினர்கள் வசிக்குமிடங்களிலேயே அமைந்து நடைபெற்று வருவதை நன்கு விளக்குகின்றன.

மேலும், இத்தலத்திற்கு மேற்கிலுள்ள இம்மரபினரைச் சேர்ந்தவர்களும், 11 நத்தத்தவர் என வழங்கிவருபவருமான வேகாமங்கலம், மாமந்தூர், கொண்டாபுரம், செங்கட்டாங் குளம் உள்ளிட்ட ஏனைய கிராமத்தவர்களும், இத்தலத்தை அபிமானித்தவர்களெனவும் தெரிகிறது.

இவர்கள் காஞ்சீபுரம் மெய்கண்டான் சந்ததி, ஞானப் பிரகாச மடத்தைச் சார்ந்த, 24 கோட்டம், 79 நாடு, 1900 நத்தம், 12000 கோத்திரத்தவருள் ஒருயரிய சம்பிரதாயத் தினராவர்.

இப்பகுதியினர் தொண்டமண்டல, கங்கைகுல, பரம் பரைச் சைவ வேளாளர்களாவர். இவர்கள் சைவாகமத்திற் கூறிய விதிப்படி சைவ தீக்ஷையைப் பெற்றுள்ள எழுவகைச் சைவருள் அநுசைவராவர்; சிவபெருமான் ஒருவரையே பரம பதியாகக் கொண்டு வழிபடுபவர். "ஓதல், வேட்டல், உப காரமன்றியும், வாணிபம், பசுக்காத்த, லுழவுத்தொழிலெனப் புகன்றவையாறும் பூவைசியர் தொழிலே" எனும் சூத்திரப் படி இவர் அறுதொழிலுடையோராவர். இவர்கள் ஆரியத் தில் பூவைசியரெனவும், திராவிடத்தில் வேளாளரெனவும கூறப்படுவர். (இவ்விஷயங்களை விரிவாக யறியவிரும்புபவர் வருணசிந்தாமணி 291 பக்கம் முதல் பார்க்கவும்.)

இவர்கள் மரபுமுதலிய விஷயங்களின் பரிசீலனைக்காக வும், தலயாத்திரை செய்பவர்களுக்காகவும் டை 27 நத்தத்த வர்களால் கட்டப்பட்டுளளதோர் பெரிய சத்திரமும் இத்தலத் தில் இருக்கின்றது. ஆனல் தற்போது அது முன்பக்கம் தவிர மற்றைய பாகங்கள் சிலமாயிருப்பதறிந்தும் டையார்கள் கவனியாதிருப்பது விந்தையேயாகும்.

## சிறப்புவகை.

மேலும், இவர்கள் தொண்டமண்டல கங்கைகுல பரம்பரைச் சைவ வேளாளர்கள் எனவழங்குவதற்கும், முதலியார் எனப் பட்டப்பெயர் பெற்றதற்கும் தக்க காரணம் யாதெனச் சுருங்கக் கூறின்,

இடைச் சங்ககாலத்தில கயிலையிலிருந்து கங்கையினூடு வந்து, உமாதேவியுடன் கச்சியம்பதிக்கு வந்து, அவ்வம்மையார் கொடுத்த இருநாழிநெல் பெற்றுப் பயிரை வளர்த்தருளி அதனால் முப்பானிரண்டறமும் தட்டாது நடாத்தி வருவதில் முதன்மைபெற்று விளங்குவதால் இவர்கள் முதலியார் எனும பட்டப் பெயா பெற்றாரென்பதாகும.

இவ்வறம் வளர்த்தது காஞ்சிபுரம், காஞ்சிமண்டலத் தொண்ட நாடென்ப. அத தொண்ட நாடென்பது காஞ்சி மா நகரைத தலைநகராகக் கொண்டு சுற்றிலும் 250 மைல் அகல நிகளமுள்ளதெனவும், அதில் வசிக்கும வேளாளர்கள் தொண்ட மண்டல வேளாளர்கள் எனவும், இந்த மண்டலத்தை (4203-ம் ஆண்டில்) கரிகால் வளவனால 24 கோட்டம் முதலியவைகளாகப் பிரித்து மேற்படி வேளாளர்களுக்கு, எவர்க்கும் முதன்மையராய் விளங்க இளங்கோக்கள் எனப் பட்டப்பெயர் கொடுதது அவர்களால் ஆட்சி புரிவித்தனரென்பதால் இவர்கள தொண்ட மண்டல கங்கைகுலப் பரமபரைச் சைவ வேளாளர்கள் எனப் படுகிறார்கள்.

## பொதுவகை.

ஈதன்றி, கடல் கொள்வதற்கு முன்னர், நாடாயிருந்த 7000காவதப் பரப்பினையுடைய குமரிக்கண்டமாகிய தமிழகத் துள்ள மருதநில மக்களாகிய வேளாளர்களே ஆதியில் இருந் தார்களென்றும், அவர்களே பெருகிப் பெருகிப் பின் மற்றத திணைகளிலும பரவி அறிவர், அரசர், வணிகர், உழவர், எனப்

பலவாறு பிரிந்தும், பின் பல்வேறு ஜாதியாரப்ப் பாவினர்களென்றும், (அதனால் எவர்க்கும் முதன்மையானவர் எனவும்) அகத்தியம், காக்கை பாடினியம், அவிநயம், புறப்பொருட்பன்னிருபடலம், மாபுராணம், பூதபுராணம், இளந்திரையம், நற்றத்தம், வாய்ப்பியம், வையாப்பியம், செயிற்றியம், சயந்தம், குணநூல்முறுவல், பல்காப்பியம், மயேச்சுரயாப்பு, தொல்காப்பியம், கலைக்கோட்டுத் தண்டு, திவாகரம், கைலாச நிகண்டு, சிலப்பதிகாரம் முதலிய சங்கமருவிய நூல்களினாலும், அநேகக் கல்வெட்டுச்சாசனங்களினாலும் நனகு புலப்படுவதாக அறியப்படுகின்றன. (இதன் விரிவைக் கல்வெட்டாராய்ச்சிப் புலவர், திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் எழுதிய தொண்டமண்டல வரலாற்றுப் பதிப்பின் வெளியீட்டுப் பட்டிகையில் காணலாகும்.

இஃதன்றி "மானங்குலங் கல்வி, வண்மை யறிவுடைமை தானந் தருமந் தழைக்குங்கை" எனவும் "ஆதுலர்க்குச் செம்பொன்னளிக்குங்கை; யாகமங்கள் வேதபுராணங்கள் விரிக்குங்கை" எனவும், கம்பர் வியந்து கூறியுள்ளபடி இவர்கள் உயரிய ஒழுக்கங்களையுடையவராய், சிறு தேவதைகளுக்கு உயிர்ப்பலி யிடுந் தீய வழக்கங்களை யறவே ஒழித்தவராய் விளங்குபவராவர். வேளாளரது நற்குண வொழுக்கப் புலமைகளைத் தமிழ்ப் பெருங்காப்பியமாகிய பாரதம்பாடிய பெருந்தேவனார், பாகவதம் பாடிய அனதாரியப்ப முதலியார், இராமாயணம் செய்த கம்பநாடர், திருமறைக்காட்டுப் புராணம், திருவிளையாடல் புராணமருளிய, பரஞ்சோதி முனிவர், சிவஞானபோதம் செய்த மெய்கண்டார், பெரிய புராண மியற்றிய சேக்கிழார் பெருமான், விநாயகபுராணம், திருவானைக்காப் புரா

ணம் செய்த க்ச்சியப்பமுனிவர், தேவாரமருளிய திருநாவுக்கரசு சுவாமிகள், திருவாய்மொழியருளிய நம்மாழ்வார் முதலியவரும், மற்றும் பலரும் வேளாள மரபிற் றோன்றிய வித்வ சிகாமணிகளாயிருப்பதால் நன்கறியலாம.

மேலும், அறுபான்மும்மை நாயன்மாருள், பதின்மூவர் வேளாள மரபினரென்பதனால் அவரது கடவுட்பக்தியும், திருவெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளலாதி யீகையாளர் பலர் வேளாளரென்பதனால் அவரது கொடைபபெருக்கும நன்கு விளங்குகின்றனவன்றோ?

ஆகவே இததகைய வேளாளமரபினர்களே இச் சிவதல பரிபாலனராவர்.

## 11. விசேஷாம்சங்கள்.

இப்புராணத்திற் குறித்தபடி வருடப் பிரதிவருடமும் தப்பாது இளையனார் வேலூர் எனும் தலத்திலிருந்து, பங்குனிமாத சுக்கிலபக்ஷ மகநாள் பிரதோஷம கூடியதினததில் ஸ்ரீபால சுப்பிரமணியக் கடவுள இங்கு எழுந்தருளி ஸ்ரீகடம்பேசனைப் பூஜிப்பதும, அசுரசம்மாரம நடததுவதும் ஆகிய திருவிழா நடநதேறி வருகிறது.

அந்தத் தினத்தில் இத்தலத்தைய அர்ச்சகராதி யனைவரும் விலகி நிற்க, கோவிற்றிறவுகோல் முதலியவனைத்தையும் தம் வசம் பெற்று, இளையனார் வேலூர் அர்ச்சகராதியோர்களே திருக்கடம்பேச ராலயபூசை முதலியவைகளை நடத்துவதும், அன்றையதினச்சகலசிலவும் இளையனார் வேலூர் தேவஸ்தான க்கணக்கிலேயே ஈடுபடுத்திச் செலவிடுவதும், மிகப் பிரசித்த மாம.

மற்றும், விசேஷ காலங்களில் சேய்நதியின் உத்தரவாகினியாய் விளங்கு மித்தலத்தில் வெகு தூரங்களிலிருந்தும் திரள் திரளாக ஜனங்கள் வந்து ஸ்நான ஜெபதபம் முதலியவைகளை முடிப்பதும், ஸ்ரீகடம்பேசனைத் தரிசித்துப் போவதும் வழக்கமாயிருந்துவருகின்றன.

மேலுமித்தலத்தின் சுற்றுப் பக்கக்கிராமங்களில் "காசியினுமிக்க மஹிமையுடைய திக்கடம்பநதியென" ஒரு முதுமொழி யுலவுவதும், இறந்தவர்களின் எலும்புக் குடங்களை இந்த நதியிற் கொண்டுவந்து விதிப்படி விடுத்தலும், ஸ்ரீகடம்பேசனை அர்ச்சித்துச் செல்லுவதும் இதன் புராணமஹிமையை நன்கு வலியுறுத்திக் காட்டுகின்றன.

பிரதிவருடம் பங்குனிமீ சுக்கிலபட்ச பஞ்சமி திதியில் பிரஹ்மோற்சவம் துவஜாரோகணமாய் அதுமுதல 10 நாளும் வெகு விமரிசையாய் நடைபெறும். இக்காலத்தில பிச்சநாயக முதலியார் மண்டபத்தில், மண்டபப்படி முதலிய விபவங்கள் நடந்தேறிவருகின்றன. அவ்வமயம வெகு தூரத்திலிருந்தும் பலவடியார்கள் கூடுவதும உண்டு.

இத்தலத்திற்குத் தெற்கில் வெகுதூரத்திலுள்ள எண்டத்தூர், முதலிய கிராமவாசிகளான ரெட்டிமார்களும் ஏனையரும் சிரார்த்தாதிகள் முதலிய வைதிக காரியங்களனைத்தையும் இத்தல வுத்தரவாகினி நதியின மேன்மையையொட்டி, இங்கு வந்தே நடத்தி வருதல் நாளதுவரையில் பிரத்தியக்ஷமாய் இருத்தலினாலும் நதியின் மேன்மை நன்குவிளங்கும்.

மேலும் புராணப்படி மூர்த்தி சுயம்புலிங்க மென்றறியக் கிடப்பதோடு, இளையனூர் வேலூரிலுள்ள வேலும், சுயம்பு.

மூர்த்தி என்றே தக்க ஆதாரங்களால் திட்டமாய்த் தெரிகின்றன. இவைகளை விஸ்தரித்தெழுதுவது சாஸ்திர சம்பிரதாயமன்றாதலின இத்துடன நிறுததினேம்.

மேற்கூறிய விஷயங்கள யாவும அந்த அந்த இடங்களிற் சென்று ஆராய்ந்தறிந்தவையே யாகும. இத்தல சம்பந்தமாய் இன்னும் அதிகமாய் அறிந்துள்ள முதியோர்கள் அடியேனுக்குத் தெரிவிக்கின் தக்கவண்ணமாய்ச் சமயம் வாய்த்த போது வெளிப்படுத்தப்படும்.

சிவம்

இங்ஙனம்

அடியார்க்கடியன்,

ப. ப. மா.

திருச்சிற்றம்பலம்.

# மெய்யுரை.

---

"உப்பர்புகழ் திருக்கடம்ப நாதன் மேன்மை

யுண்மையருட் சரிதமிதை யுவந்து கேட்போ

ரிம்பரிடை யிருநிதியுஞ் சுகமு மேவி

யினியதிரு மகட்பெறுவர் பிணிவந் தெய்தார்

வெம்பகைகண் முதலான துயர நீங்கி

மேதினியில் வாழ்ந்துமிக விண்பா லெய்தித்

தம்பெருமா னாகியசங் கரன்றா ணீழற்

சச்சிதா னந்தபரா னந்தி சார்வார்."

திருச்சிற்றம்பலம்.





ஈண்டு மெய்யுரை கூறப்படுகின்றது. அஃதியாதெனின், இத்திருக்கடம்பநாத புராணத்தினைப் பாராயணஞ் செய்பவர் இம்மைச்சுகமும் மறுமை வாழ்வும் பெற்று முடிவில் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய " சச்சிதாநந்த பரமுத்தியை " யும் சார்வார் என்பதாகும்,

"சிவபுராணபடனத்தான் முத்திப் பேறெய்து மென்பது" எங்ஙனம் மெய்யுரையாகும்; எனின், கூறுதும்.

ஸ்ரீஸ்காந்தம், உபதேசகாண்டம்

48-வது அத்தியாயம்.

புராணானு ஶ்ருண்வதாம் புண்யம் ஶிவஸ்ய ஶிவதாயிந:।
ஜயத்யா பரிவேத்த்ருணாமீஶோபி பஹுஸாரா:॥
ஶ்ரோதவ்யஸ்ததம் ஸம்ஸாரது:கவ்யபோஹவ்ருத்திபி:।
ஜ்ஞாத்வா ச ஸததம் த்யேயோ தேவோ ஜ்ஞேஸிதிஶக்ர:॥
புராணஶ்ரவணாத் ந்ரூணாம் ஸோபாஸ்திந ஸாயமூக।
தஸ்மாத்தத் ஸர்வம் புண்யஜ்ஞாஸ்திந ஸ்திஸ்ர தத்ஸ்ர தத்॥
விப்ராஶ்ஶிவபுராணானி யே படந்தி தாந்விதா:।
பலம் தேஷாம் ஹி நிர்திஷ்டம் ஸாங்க்யம் விஜ்ஞாத்ருணாம்॥
ஶ்ருண்வதாமபி பௌஸக்த்யா மூநயோ நாத்ர ஸம்ஶய:।

तस्माच्छिवपुराणानि श्रोतव्यानि निरन्तरम् ॥
विहाय सर्वमप्यन्यत् कृत्यजातं विचक्षणैः ।
श्रोतव्यं पठितव्यं च पुराणं शाम्भवं सदा ॥

(இ-ள்) சிவமாகின்ற மங்களத்தைத் தருபவனான பரம சிவனுடைய புராணங்களைச் சிரவணஞ் செய்வதாலுண்டாகும் புண்ணியம் இவ்வளவவ்வளவென்று அளவிடக்கூடியதன்று; ஆதலின், சிவபுராணங்களைச் சிரவணம் செய்பக்கடவாய்; அவ் வர்த்தத்தை மனனசெய்து நிதித்தியாஸனம செய்யக்கடவாய். சங்கர புராண சிரவணத்தைவிட வேறாய ஈஸ்வர உபாஸனை தகுந்ததன்று. ஆதலால் இப்புண்ணியத்திற்குச் சமமான தொன்று சுருதிஸ்மிருதிகளில் காணப்படவில்லை. ஆதலின் ஹே! மறையோர்களே!! எவனொருவன் சிவபுராணத்தினைப் பக்தி, சிரத்தை, விசுவாசங்களுடன் பாராயணஞ் செய் கிறானோ, அவன் சித்தம் நின்மலமடைந்து நித்தியானந்தப் பெருவாழ்வெய்துவது திண்ணம். இதில் யாதோரையப்பாடு மின்றாம். ஆதலின் ஏனைய கர்மாக்களைச் செய்யாமற் போனு லும், ஸதா சிவபுராண படனம் செய்து அதன் அர்த்தத்தை மனனம் செய்து நிதித்யாஸனம செய்வாயாக.'' என்னும் பிரமாணத்தின்படி முற்கூற்று பொருந்துமென்க.

"சிவம்'' எது? புராணமென்பதியாது? ஆலயம் என் பதன் தத்துவமென்ன? வென்றற் றொடக்கத் தனவாயவினுக் களுக்கு விடையுணரப்படுமேயாயின் சிவபுராண படனத் தான் முத்தியெய்து மென்பதனுண்மை தெள்ளிதாய்ப்புலப் படும்; ஆதலின் அவற்றையீங்காராய்வாம்.

"சிவம,'' (சராசர) ஸர்வ (பிரபஞ்ச)த்தையும் தன் னிடத்தில் ஆகர்ஷித்துக்கொண்டுள்ள மங்கள ஸ்வரூபஸத்தை யாகும. இஃதொன்றே நித்தியம். இது அறிவுவடிவம். இதன்

இலக்கணம் ஆ ந்தமாம். இதற்கு ஒப்பும் உயர்வும் கிடையாது; ஆதலின் ஸஜாதீய விஜாதீய பேதங் கிடையாது. இது நிரவயவி; ஆதலின் ஸ்வகத பேதமுமில்லை. இதனுண்மை வடிவம் இங்ஙனமாயினும், இது அன்பர்க்கருள் புரிவதற்கு அவயவமுடையதோர் சகள வடிவத்தையுங் கொள்ளும் என்பது வேதாகமங்களின் துணிபாம்.

நிஷ்கள சிவம் சகளீகரித்த தேசம், (தலம்) காலம், நிமித்தாதிகளைத்தான் புராணம் கூறுகின்றது.

புராணங்கள அனந்த; இது, "புராண" பதப்பொருளாராய்ச்சியாலேயே ஏற்படுகின்றது. இதில் பக்தர்களின் அன்பும் சிவத்தின் அருளும விரிவாய் நிரூபிக்கப்படும். ஜீவர்களின் (கண்டிதமான, சகள,) அன்பானது கிரமமாய்ப் பெருகி (வியாபகமாயுள்ள) சிவவடிவமாகின்றது. இந்நிலைதான் சிவயோகம், ஸமாதி, ஜீவப்பிரஹ்மைக்கியம் எனப் பலவாருகக் கூறப்படும்.

ஸகுணப்பிரஹ்மத்தின் (சிவத்தின்) அருளை (சக்திபாதத்தை)ப்பெறுதற்குச் சாதனங்கள் சிவபுராணசிரவண, மனன, நிதித்தியாஸனங்களாகும; சகள மூர்த்தி தரிசனம், சிவவருள்வாய்ந்த தீர்த்தஸ்நானம, சிவப்பிரசாதத்தையுட் கொள்ளல், சிவநாம உச்சாரணம், முதலியனவுமாம்.

ஆலயவழிபாட்டில் மேற் கூறிய சாதனங்கள் யாவும் அமைந்திருத்தல் வேண்டும். விபூதி, உருத்திராக்ஷதாரணம, பஞ்சாக்ஷர ஜபங்களின்றிச் செய்யும் ஆலயவழிபாடு நிஷ்பிரயோஜனமாகும்.

ஆலயத்தின் தத்துவமாவது:—

தேஹோ தேவாலய: ப்ரோக்த: ஜீவோ தேவ: ஸநாதந:।
த்யஜேதஜ்ஞாநநிர்மால்யம் ஸோஹம்பாவேந பூஜயேத்॥

(இ-ள்) தேகமே சிவாலயம்; ஜீவனே பரமசிவன்; (அஞ்ஞானமாகிய நிர்மாலிய மிருப்பதால் உண்மையில் சிவமாயுள்ளவன் ஜீவனாய் விளங்குகிறான். ஆதலின்) அஞ்ஞான நிருமாலியத்தை நீக்கி "அவனே நான்" என்று பூஜிப்பாய்.

தேகத்தில் முப்புரங்கள (ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண தேகங்கள்) உள்ளன. இவை ஐந்து கோசங்களென்றும் கூறப்படும். இங்ஙனமே ஆலயங்களிலும் 3 அல்லது 5 பிராகாரங்களுண்டு.

பலி பீடம், துவஜஸ்தம்பம், நந்தி, கர்ப்பக்கிருஹம் முதலியன முறையே மனத்திலுள்ள சகல விஷயவாஸனைகள் ஒழிந்தவிடம், சுத்த மனவொருமை, (நிச்சலத்தன்மை) சிவத்தையே நாடும் மனம், பிரஹ்மாநந்தமய துரீயம் என்பனவாம்.

ஆலய தத்துவ விளக்கச் சுருக்கமாவது:—

ஆலயம் = தேகம்.

பிராகாரங்கள் = ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள், அல்லது அந்நமயாதி கோசங்கள்.

கோபுரம் = சிவம் ஒன்றுண்டென்றறியும் பரோக்ஷஞானம் சுபேச்சை.

வாயில் = சாதனங்கள்.

ஸ்தூபி = ஸகுண பிரஹ்ம ஸாக்ஷாத்காரம்.

பலிபீடம் = மனத்திலுள்ள ஸகல துர்வாஸனைகளு மொழிந்த விடம்.

துவஜஸ்தம்பம் = ஒரு முகப்பட்ட நிச்சல மனம்.

நந்தி = சிவத்தையே நாடும் சுத்த மனம்.

குருக்கள் = சற்குரு.

மூலலிங்கம் = ஸர்வாதிஷ்டான சிவம்.

கற்பூரஜோதி = அகண்டாகார (அபேத) ஞானம்.
எங்ஙனம் ஜோதியில் கற்பூரம் நாசமடைகின்றதோ, வங்ஙனமே அகண்டாகார விருத்தி வடிவ சிற்சோதியில் (நாமரூப வடிவ பிரபஞ்சம்,) காரியசகிதமாயை நாசமடைகின்றது.

விபூதி = ஞானக்கினியில் நாமரூபங்கள் ஒழிய வெஞ்சிய சச்சிதாநந்த வடிவ ஐஸ்வரியம்.

உருத்திராக்ஷம் = ருத் - சமுசார துக்கம், த்ராவயதி - நாசம் செய்வதான, அக்ஷம் - விருத்தி. அதாவது ஸமாதிவிருத்தியென்பது பொருளாகும்.

பஞ்சாக்ஷரம் = மகாவாக்கியம்.

ஆதலின் இங்ஙனம் சிவம், புராணம், ஆலயவழிபாடு (கோபுரம், வாயில், ஸ்தூபி, பலிபீடம், துவஜஸ்தம்பம், நந்தி, குருக்கள் மூலலிங்கம்) விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷராதி சாதனங்கள் முதலியவற்றின் தத்துவங்களை யறிந்து அங்ஙனம் அப்பியசிப்பதனால் மோக்ஷமுண்டாமென்பதில்யாதோரையப்பாடுமின்றாம். எனவே, இதுமெய்யுரையாகும். சிவபுராணபடனத்தால், பெறுதற்கரிய மோக்ஷமே உண்டாகுமென்று நிரூபிக்கப்பட்டதனால் இம்மை மறுமைச் சுகங்களுமுண்டாகுமென்று கூறவும் வேண்டுமோ? சிவம்.

இங்ஙனம், விதேயன்,

ந. சுப்பிரமணிய அய்யர்

# சிறப்புப்பாயிரம்.

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், தலைமைத்
தமிழ்ப் பண்டிதரும், அத்வைத, தார்க்கிக
சிரோமணியுமாகிய, ஆசிரியர்,
சோ. வடிவேலு செட்டியாரவர்கள்
இயற்றிய

## நிலமண்டில வாசிரியப்பா.

ஆரண நான்கிற் கப்பா லாகிய
பூரண னாகிய புண்ணியன் புராதனன்
மாதொரு பாகனு மன்னிய பெருமான்
ஏதமி லடியார்க் கின்னருள் செய்ய
வமர்ந்துள தலங்க ளளவற் றனவா
மவற்றுள்,
மலர்ந்த வளப்பம் மன்னிய தொண்டை
மண்டலந் தன்னில் வயங்குவ தாகி
பண்டைநூற் புலவர் பண்ணுவ தாகியு
முள்ள கடம்பர் கோயிலு மொன்றும்
தெள்ளமு தத்த திருமா காலுக்
கடுதத க்ஷேத்திர மாகி யொளிர்வதாம்
செம்மையர் போறறுஞ் சேயா றெனுநதி
உபமைப் பயன்தர வுதரவா கினியா
ஓடும் பான்மை யொளிர விருப்பதாம்
கற்றோர் போற்றுங் காஞ்சிப் புராணமு
நற்று னம்மென நன்று யுரைப்பதா

மின்ன னன்மை யெய்ந்தெ வருக்கும்
நன்மை பயக்க நண்ணுங் கடம்பர்
கோயிற் சிறப்பைக் குவலய மறிந்து
வாயில்பெற் றுய்ய மாண்பெலா நிறைந்த
திருவா வடுதுறை சிறக்கச் சிவனடி
கருவா ராவகை கண்ணும் புண்ணிய
ஈசான தேசிக ரென்னும் புலவர்
வாசாம கோசர மாதே வன்னருள்
விளங்கும் வகையெலாம் விகசித மாகக்
களங்க மறவே காட்டியோர் புராணந்
தொன்முறை வழாது சுவைபல விளங்க
நன்னூற் றுறையறி நாவவர் புகழப்
பத்தர்க ளேத்தப் பாரதி மதிக்கச்
சொற்றன ரதற்குச் சுப்பிரமணிய
நற்றவ ஞானி நன்கா ராய்ந்து
வேண்டு மளவா விளங்கக் குறிப்புரை
தாண்டவ மாடுஞ் சண்முக னருளால்
வரைந்தனன் மாண்பெலா மன்னுமா றுக
வக்குறிப் புரையுட னப்புரா ணத்தினைச்
செப்புசீர் வாய்ந்து சிறக்கும் பொதியர்
பாளையம் மன்னிய பாவலன் சைவன்
கோளை யறுத்த குணவான் சமரச
சன்மார்க்க சங்கச் சார்பில் வாழ்பவன்
நன்மார்க்க மாசிலா நாவலன் சோதித்
தச்சி லேற்றின னறு முகவனை
வைத்து மனத்தில் மாண்பாப் போற்றும்
ஆறுமுக னென்னு மன்பன் காஞ்சியிற்
சீறுறத் தாசில் செய்துப கார

ஊதியம் பெற்றொளி ருத்தம னரும்பொ(ந்
ளாதர மனத்துட னளித்தன னதற்கே.

---

நவசக்தி பத்திரிகாசிரியர் ஸ்ரீமான்,

## திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,

இயற்றிய

### கொச்சகக்கலிப்பா.

பாலாறு வளஞ்சுரக்கும் பழந்தொண்டைத் திருநாட்டில்
நூலாறு வழியொழுகும் நுதல்விழியான் அடியவர்கள்
மாலாறு கழிவிக்கும் மாகராலுக் கணித்தாக
வேலாறு பரந்தோடி விழைகடம்ப நகரமதே.

அந்நகரின் வரலாறும் அருளாளர் சிவத்தொண்டும்
செந்நெறியே முதலாய சிறப்பெல்லாம் உளமுகந்து
மன்னுலகஞ் செழித்தோங்க மழையாகத் தமிழ்க்கவிதை
எந்நலனும் உறப்பொழிந்தான் ஈசான தேசிகனே.

நலமணக்குந் தமிழ்மழைநீர் நவமுறையும் உயிர்களெனும
புலமணக்க முறைப்படுத்திப் பொறித்தளித்தான் புரைகளைந்து
நிலமணக்க உழும்வழியான் நிறைமாசி லாமணியும்
வலமணக்குப் பிரமணிய மறையாளன் குறிப்புடனே.

---

சைவசித்தாந்த மகா சமாஜப்போஷகரி லொருவராகிய
**பண்டிதரத்னம்-ருகஸ்ரீ, புழலை - திருநாவுக்கரசு முதலியாரவர்கள்**
(மிராசுதார் - செம்பியம், பிரம்பூர்.)

இயற்றிய

### ஆறுசீர் விருத்தம்.

திகளணி மணிமாட நெருங்குதிரு வீதிதொறுந்
திகழ்மெய்ஞ் ஞானம்
பொங்குபவத் தினர்நாளும் பொருந்திமகிழ் வெய்தநிதம்
போற்றுஞ் சைவ

மங்கலவ ழ்த் தொலிபரவ விரிபுனல்பாய் நாற்பாலி
வயபபெ ருக்கால்
துங்கமிகு மணிவயல்சூழ் வள னுலவும பேர்பெரிய
தொண்டை நாட்டில். (க)

மணமவிர்பூஞ் சோலைதொறு மயிலகவுங குயினவினு
மகிழ்மீக் கூற
குணமமர்மெய் யன்பர்பணிக் கிரஙகியருள வியன்குமர
கோட்டமேய
நிணமமர்வேற் குமரனைத்தந் தாண்டவுமை நீளகருணை
நோக்க மிக்க
வணமமர்நற் காஞ்சிநகர்க் கணித்தாகுங் கடம்பநகர்
மகிமைதன்னை. (உ)

பரங்கருணைத் தடங்கடலாய் வளர்திருக்கை லாயபரம்
பரையின் மேலாம்
வரங்குலவு முயர்திருவா வடுதுறையா தீனவித்து
வானென் றோதும்
உரங்குலவுங் கலையனைத்து மொருங்குணர்ந்தஅருமைதவ
முயர்வா னீடு
திரங்குலவும் ஈசான தேசிகநற் சுவாமியெனுஞ்
செமம லன்று. (ந)

கற்கண்டு பால்பழந்தேன் சருக்கரைமுக் கனியனைய
கவின்சேர் வாச
சொற்கொண்டு பன்னயமு நனிசிறக்க மிகவழகாய்த்
துலங்கு மார்வம்
முற்கொண்டு நன்கியற்றித் தந்ததல புராணமதை
முதியோ ரேத்தும்
விற்கொண்ட வேளாளர் குலதிலகமெனுபாப்த
மேன்மை யாளன். (ச)

தமராறா புரங்கலிக்க வருமுருகன் றிருவடிக்கீழ்ச்
சரண்புகுந்த
அமரர்தொழுஞ் செய்யாறு கரையிலமர் புதுப்பாளை
யதனி லோங்கும்
சமரசசன் மார்க்கமுயர் சங்கக்கா ரியதரிசி
தன்னே ரில்லா
விமலனடிக் காட்படுநன் மாசிலா மணிப் பெயர்கொள்
விபுத னுமால். (ரு)

பன்னுபிழை யனைத்துமற வேதிருத்தி யச்சியற்றிப்
பரிவிற் றந்தான்
அன்னசங்கத் தலைவனுய ரருட்கவிசுப் பிரமணிய
வந்த ணாளன்
என்னவுநூல் கற்றுணர்ந்த பெருமுயற்சி யின்பயனு
மிறும்பூ தெய்த
நன்னலஞ்சேர் மெய்புரையுங் குறிப்பதுவம் பொருந்தமுற
நலகி னுலை. (சு)

அன்னதொரு வுயரியநூல் வெளிவருதற் காணபிர
யாசை யன்றோ!
இன்னபடித் தென்னவுரைத் திடவரிய விக்காலத
தியம்பற் கொண்ணு
அன்னிலையின் குறிப்பறிந்து மகிழ்விறெடு பொருளுதவி
யடைவி னீந்தான்
மன்னுபுகழ் துரைத்தனத்து மற்றவர்தஞ் சமூகத்து
மதிமிக் கார்நத. (எ)

சததியததிற் பிறழாத தாசில்தா ரிவரெனவே
சாற்றுந் தனமை
உததமச்சற் குணஙகளம ருயர்கல்வி யறிவடக்க
மொழுக்க மிக்க

சித்தமமா தவஞானம் புகழ்தானந் தருமமுதல்
சிறந் து நிற்கும்
சுத்தசிவ பத்திநிறை யாறுமுகச் செல்வனெனுந்
தோன்ற லாமால். (அ)

---

சென்னை, ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட்

ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி, அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்

ஸ்ரீமான், வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M.A., அவர்கள்

இயற்றிய நிலமண்டிலவாசிரியப்பா.

பொருளுஞ் சித்தியும் போகமும் நிறப்ப
உண்டென விளங்குந் தொண்டை நன்னாட்டின்
திலக மிது வென இலகுறு மாட்சித்
தவ நகர் முதலாத் தசநா மந்திகழ்
கடம்பர் கோயில் இடங்கொ ளிறைவன்
புராணம் பாடினர் புண்ணிய முதல்வர்
ஆசா னவை யொழி ஈசான தேசிகர்;
அவருரை தமிழி னருமை யுணர்ந்த
ஆசிலா மனத்து மாசிலா மணியவர்
அப்பு ராணத்தை எப்படி யாயினும்
அச்சினி லேற்றி யிச்சக மதனுக்
கீதல் நன்றென க் காதல்கொண் டவராய்ச்,
செம்மை நெறியிற் செல்பொருள் செலவிடு
மாசில் வழிச் செலுந் தாசில் தாமர்
ஆறு முகப் பெயர் முதலியா ரவர்கள்
பொருளதந் துதவி புரிந்திட, நூலை
ஆய்ந்துங் குறிப்புரை யாதிய எழுதியும்
புராண நூலின் புதுமை விளங்குற

ஒப்பனை செய்த உயரிய அறிவினர்
சுப்பிர மணிய விப்பிர சிகாமணி
அவர்துணைக் கொண்டும், அவிர்சடையண்ணல்
பூசனை யதனைப் பொருந்தி நாடொறுந்
தவாதுசெய் சீலச் சிவாசா ரியராம்
குமார சுவாமி குருக்க ளவர்தம்
அருட்டுணை கொண்டும், அச்சிட் டுலகுக்
களித்தனர் அடியவர் களித்தின் புறவே.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.



# திருக்கடம்பநாத புராணம்.

## காப்பு.

## சித்தி விநாயகர் துதி.

### விருத்தம்.

பொருளுஞ் சித்தியும் போகமும் யோகமுந
தெருளுஞ் சித்தித் திடமலத தெவ்வினான்
மருளுஞ் சித்திய மானனென் பார்க்கெலா
மருளுஞ் சித்திநல் லானையைப் போற்றுவாம். (1)

(இதன்பொருள்) இயலபிற சிறசொரூபராய்க கற்பிதப்பகையாகிய ஆணவமாதி மும்மலத்தினால மயங்குந்தன்மையராகிய ஜீவர்களுக்கு அருள்புரியத (திருக்கடம்பா கோயிலின் கண் எழுந்தருளியிருககும) சிததி விநாயககடவுளைப் பொருளும், அணிமாதி சித்திகளும், (மறுமைப்) போகமும், தியானாதி யோகமும், (தத்துவ) ஞானமும் பெறவேண்டித் (திரிகாணத் தூய்மையுடன்) துதிசெய்வாம் (என்றவாறு).

## பாயிரம்

### மங்களவாழ்த்து.

ஆனினம் வாழ்க வேத மந்தண ரரசு வாழ்க
வானின்மும் மாரி பெய்க வளர்கநற் றருமஞ் செல்வந்
தேனிறைக் கடம்புந் தேவி யாவுடைத் திருவும் வாழ்க
ஞானநா யகன்க டம்ப னாதனும் வாழ்க மாதோ. (2)

(இ - ள்) காமதேனுவாதி பசுக்குழாங்களும், வேதங்களும், அவற்றை யோதும் அந்தணர்களும், வேந்தரும வாழ்ந்திடுக; மாதமும் மாரி பெய்திடுக; முப்பத்திரண்டறங்களும, செல்வமும், தழைத்தோங்குக; தேன்சொரியும் கடப்பந்தருவும் யாவர்க்கு மிறைவியாகிய ஆவுடைநாயகியும் ஞானத்தலைவனாகிய திருக்கடம்ப நாதனும் நீடூழி வாழ்ந்திடுக. (எ - று).

### நூற்பயன்.

உம்பர்புகழ் திருக்கடம்ப நாத னெங்கோ
னுண்மையருட் சரிதமிதை யுவந்து கேட்போ
ரிம்பரிடை யிருநிதியுஞ் சுகமு மேவி
யினியதிரு மகப்பெறுவர் பிணிவந் தெய்தார்
வெம்பகைகண் முதலான துயர நீங்கி
மேதினியில் வாழ்ந்துமிக வின்பா லெய்தித்
தம்பெருமா னாகியசங் கரன்றா ணீழற்
சச்சிதா நந்தபர முத்தி சார்வார். (3)

(இ - ள்.) தேவரால் புகழப்படும் பெருமை வாய்ந்த திருக்கடம்பவனத்துறையும எமதிறைவன் மெய்ச்சரிதமாகிய விப்புராணத்தைத் திரிகரணத்தூய்மையுடன் விரும்பிச் சிரவணம்செய்பவர்கள் இவ்வுலகத்திலேயே சங்கம், பதுமமாகிய விருநிதிகளும், தேகாரோககியமும் சற்புதிரப்பேறும் பெற்றுப்பிணியாலும் பகைவர்களாலும்வருந்தாதுவெகுகாலம் வாழ்ந்திருந்து மறுமையில் சுவர்க்க போகத்தினைப் பெற்றுப்பின் பரமசிவத்தின் திருவடி நீழலில் இரண்டறக கலத்தலாகிய சாயுச்சிய முத்தியையும் அடைவார்கள். (எ - று).

## முதலாம் அத்தியாயம்.

### கடவுள் வாழ்த்து.

### திருக்கடம்ப நாதர் துதி.

விருத்தம்.

சீர்கொண்ட விருசரணும் வரதமழு மானபயந்
திருக்கை நான்குங்
கார்கொண்ட மணிமிடறுஞ் சின்மயமா மலர்முகமுங்
கருணை நோக்கு
நீர்கொண்ட சடைமுடியு மாவுடைத்தா யொருபாலு
நிறைபூங் கொன்றைத் [ளைச்
தார்கொண்ட வுருக்கொண்ட கடம்பவனத் தனிப்பொரு
சார்ந்து வாழ்வாம். (1)

(இ - ள்.) மேன்மை தங்கிய உபய பதாம்புயமும், மான், மழு, வரத, அபயங்கள் தங்கிய நான்கு திருக்கரங்களும், அழகிய நீலகண்டமும், ஞானமயமாகிய தாமரை மலர்போன்ற திருமுகமும், அருட்பார்வையும், கங்கையைத்தரித்த சடைமுடியும், கொன்றைப் பூமாலையும் பெற்று வாமபாகத்தில ஆவுடை நாயகியார் சூழத் திருக்கடம்ப வனத்தில் இனிது வீற்றிருக்கும் ஒப்பற்ற வஸ்துவாகிய ஸ்ரீ கடம்பநாதரின் அடிமலரைத்துதித்து வாழ்வோம. ()

### ஆவுடை நாயகியார் துதி.

பூங்கமல மலர்ப்பதமும் புனைமணிமே கலையுடையும்
பொருவி னன்கு
தேங்கமல மலர்க்கரமுஞ் சிற்றிடையுந் திருநயனச்
சிறப்புஞ் செம்பொற்
கோங்குமலர் முகையனைய கனதனமுங் குளிர்ந்தமதி
முகமுங் கொண்டென்
பாங்கமலன் றன்னொடுவா ழாவுடைநா யகியிருதாள்
பற்றி வாழ்வாம். (2)

(இ - ள்) அழகிய பங்கஜ பாதமும், நவரத்தின சசித மேகலா பரணமும், சாந்த பட்டாடையும், ஒப்பற்றொளிரும நானகு மலாககரங்களுட நுண்ணிடையும், அருள்நிறைந்த அழகு வாய்ந்த திருநயனங் களும், பொன்நிறம் வாய்ந்த கோங்கருமபை யொதத பருத்த தனமும் குளிர்ந்த சந்திர பிமபத்தை நிகாத்த திருமுகமும அமை யப்பெற்று என் இருதய கமலத்தில் திருககடமப நாதருடன்கூடி விளங்கும ஆவுடைநாயகியின் திருவடிகளைத தியானிததுு வாழ் வாம். (எ - று)

## சபாநாயகர் துதி.

(வேறு.)

உறுதி யாகிய சூக்குமந் தூலமென் றுரைக்குங
குறைவின் மூலமந் திரத்தையே திருவுருக் கொண்டு
மறுவி லாமணி மன்றுணின் றிருவா வாழ்த் தெடுப்பப்
பிறவி நோய்கெட நடம்புரி பிரானடி பணிவாம். (3)

(இ - ள்.) (ஸப்தகோடி மஹா மந்திரங்களுள்ளுஞ் சிறந்து விளங்கி மாநதாகத்) உறுதியைததரும ஸ்தூல சூககும பஞ்சாக்ஷர மநதிரத்தையே தன வடிவாய்ப்பெற்றுக குற்றமற்ற இரத்தின சபை யில எழுந்தருளி, பதஞ்சலி, வியாக்கிர பாதர்களால் துதிக்கப் பெறறு (தரிசித்தவாகளின்) பிறவிநோய் நீஙகும்படி ஆநந்த தாண்டவஞ் செய்தருளும சபா நாயகரின் பதாம்புயங்களைத் துதிப்பாம். (எ - று)

## சிவகாமியம்மையார் துதி.

வளைத்த தெண்டிரை யுடுததபா ரிடத்தருண் மகற்கா
வளித்த தாய்முனம் புரிதொழின மீட்டுமாற் றுதல்போற்
றளித்த வாருயிர் பொருட்டரு ணடந்தனிக் காணாத்
திளைத்தெக் காலமுங் கண்டரு டேவிதா டொழுவாம். (4)

(இ - ள்.) கடல் சூழ்ந்த வுலகின் கண் ஈன்ற சேய்க்குத் தாயான வள் அது செய்யவேண்டிய செய்கைகளைத் தானே செய்து காட்டுவது போன்று, தானும், முன் சபேசருடைய திருநடத் தினைத் தரிசித்திருந்தும், ஜீவகோடிகளும் அங்ஙனமே தரிசித் துய்வான வேண்டிச் சதாகாலமும் நடனசபேசரின் ஆநந்த தாண் டவத்தினைத் தரிசனஞ்செய்து கொண்டிருக்கும் சிவகாமியம்மை யாரின் திருவடித் தாமரைகளை வணங்குவாம் (எ - று).

## விக்கினேச்சுரர் துதி.

உந்து கார்கன்னத் துகுசல மிருபுறத் துறலா
லிந்தி ரைக்கிறை யுமைவல மிடம்பெற விருந்த
தந்தை போல்வளர் தந்திதாட் டாமரைத் தமியேன்
சிந்தை கண்சிர மீதினுஞ் சிறந்து சேர்ந் தனவே. (5)

(இ - ள்.) தனது மத்தகத்திலிருந்து கன்னங்களின் வழியே பெருகும் கறுத்தமத ஜலமானது (சிவந்த தன திருமேனியின்) இருபுறத்தி லும் ஒழுகுவதால், திருமகள் கணவனாகிய மகாவிஷ்ணுவைத் தன் வலப்பாகமும், உமாதேவியை யிடப்பாகமும், பெறும்படி யருளியதால (சிவந்த தன திருமேனியின்) இருபுறமுங் கறுத்தி ருந்த தன் தாதை, பரமசிவத்தினைப் போன்று விளங்கும் யானை முகக் கடவுளின் அழகிய மலரடிகள், அடியேனுடைய மனம், கண், சென்னியாகிய இவற்றின்மீது எப்பொழுதும் சார்ந்தி ருக்கும் (எ - று)

## குமாரக் கடவுளின் துதி.

(வேறு)

பொரு பெருஞ் சூரடும் போத கன்றவோ
ரிருவரை யிடந்தவாள் வலங்கை யேந்தலால்
குருபர னிருவினை குமைத்தல் காட்டிய
முருகனைக் குமரனை முன்னு வாமரோ (6)

(இ - ள்.) சற்குருவானவா (சீடாகளுடைய) நல்வினை தீவினைகளைக் கடிய ஞான வாளேந்தி விளங்குதல்போல், முன், சூரபதுமனை வதைத்தபோது அவன் சேனையினின்றுந் தப்பியோடிய மலையன், மாகரன் என்னும் கொடிய வசுரர் இருவரைச் செற்ற வாளாயுததத்தினை வலககரத்திலே யேந்தி விளஙகுங் குமாரக கடவுளை நினைப்பாம. (எ - று)

## இதுவுமது.

(வேறு)

பன்னிரு விழியு மார்புமம பாணியும் பிறைக்கு நேபாம்
பன்னிரு தரைப்பண் டுண்ட படைகளும் பதமுங காணப்
பன்னிரு மலனை யாறு பஙகய முகனை விண்மேற்
பன்னிரு பருக்கும் மேலாம் பதந்தருங் குகனை போற்றி. (7)

(இ - ள்.) வேதாகமஙகளைத் திருவாய் மலர்ந்தருளிய தூயவனே! செநதாமரைமலர் போன்ற ஆறுதிருமுகங்களை யுடையவனே! விசும்பில வாழும பல வேந்தர்களுக்கும் (தேவர்களுககும்) பெறற்கரிய பதவியை யருளுங் குகனே! (அடியேன் உம்முடைய) பன்னிரண்டு கண்களும், (கடப்பந் தாரணிந்த அழகிய) மாாபும், பன்னிரு கரஙகளும, மூன்றாம்பிறைச் சந்திரனைப் யொத்த பற்களையுடைய அசுரர்களின் உயிாகளை யுண்ட வெற்றி வேல் முதலிய ஆயுதங்களும். (கருப்பிணி யொழிக்கும்) இரண்டு திருவடிகளும் கண்ணாக கண்டுய்யும் வண்ணம் வணங்கினேன். ()

## வீரபத்திரர் துதி.

(வேறு)

கோரபத திரனை ருண்கட் கொற்றவை கணவ மேனுட்
சாரபத் திரமெய்ச் சார்ந்தாய் கடம்பமா நகரிற் றஙகுர்
தீரபத் திரண்டுகோடி பிழையினைச் செயினுந் தீர்த்தாள்
வீரபத் திரனே தக்கன் வேள்வியட் டவனை போற்றி.()

(இ - ள்) வளர்ந்த அப்பையொத்த மைதீட்டிய கண்களையுடைய பத்திர காளிகுத் தலைவனே! (முன் நரசிங்கத்தின் இறுமாப்பை யடக்க) சரபாவதார மெடுத்தவனே! தக்கன் வேள்வியைத் தகர்த்தவனே! அடியார்கள் அநந்த பிழை செயினும் பொறுத்தாண்டருளும் தீரனே! திருக்கடம்பர் கோயிலின்கண் வீற்றிருக்கும் வீரபத்திரக் கடவுளே! நும்முடைய திருவடிகளை வணங்கினேன். (எ - று)

## கால வயிரவர் துதி.

(வேறு)

கயிரவ நாண்மலர்க் கவின்க ணார்மயல்
செயிரவ நாடொறு மியற்றி யெதிரி
யுயிரவ ஞெனன வொரூது காததருள்
வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவாம். (9)

(இ - ள்) "அன்றலர்ந்த நீலோற்பலம் போலுமழகிய கண்ணை யுடைய மாதாகளின் மயககிலே சிககி அவதொழில் புரிந்தவன் இவ" னென்று அடியேனைச் (சூலததிறைற் குத்தி) வருத்தாமல் இரட்சித்தருளுங் காலவயிரவக கடவுளை வணங்கிததுதிப்பாம். ()

## நந்திகேஶ்வார் துதி.

(வேறு)

சாத்திரம் படைதத ஞான தற்பர னுரைத்த வேத
சூத்திரம் படைத்த வேள்வித் தோன்றலை யயனை மாலைக்
காத்திரம் படைத்த மோலிக் கதிர்மணிப் பிதிரத் தாக்கும்
வேத்திரம் படைத்த செங்கை விமலனை மேவி வாழ்வாம். ()

(இ - ள்.) ஸகல சாஸ்திரங்களைப்படைத்த பரமசிவனருளிய வேதாகம இரகஸியங்களை நன்குணர்ந்த மகவான் (இந்திரன்) பிரமன், விஷ்ணு முதலிய தேவர்கள் (திருக்கைலாயத்தில் பரமசிவனைத் தரிசிக்க வருங்கால் ஒழுங்காய் நிற்கும்படி) அவர்களின் சிரத்திலணிந்திருககும் முடியிலுள்ள இரத்தினங்கள் உதிரும்படி தாக்

கும் பொற்பிரம்பினையேந்திய சிவந்த கரத்தினையுடைய தூயனு கிய (நந்திகேஸ்வரரின்) பதாம்புயங்களைப் பணிந்து துதிப் பாம். (எ - று)

## திருஞான சம்பந்தர் துதி.

(வேறு.)

பொன்பூத்த கிண்கிணிச்செஞ் சீரடியும் யோகவுடைப்
பொலிவும் வேத
மின்பூத்த முந்நூலும் வெண்ணீறுந் திகழ்மார்பும்
விரிபொற் றாள
முன்பூத்த திருக்கரமு மிணைவிழியுங் குறுநகையு
முதல்வன் பான்மெய்
யன்பூற்றுங் கனிவாயும் பெற்றமழ விளங்களிற்றை
யண்மி வாழ்வாம். (11)

(இ - ள்.) பொற்சதங்கை யணிந்த சிவந்த திருவடியும், அழகிய யோக வேஷ்டியும், வேத வொளிபூத்த எக்ஞோபவீதமும் வெள்ளிய விபூதியும் பிரகாசிக்குந்திருமார்பும், பொற்றாளமேந்திய திருக்கரங் களும், அருள் நோக்குஞ் செய்யும் இரண்டு விழிகளும், இளநகை யார்ந்த திருமுகமும்,பரமசிவன்பா லுள்ள மெய்யன்பினுற் றேவா ரத்தேன் பொழியுங் கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயும் பெற்ற யானைக்கன்றை யொத்த திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளை யடைந்து வாழ்வாம். (எ - று.)

## திருநாவுக்கரசு துதி.

ஞானந்தங் கருணீருண் டமண்பாழ் பிடித்துவினை
கறுத்தெஞ் ஞான்று
மீனந்தங் குலகாசைக் கடுங்கோடை பிரிந்தோட
வெம்மான் சைவத
தானந்தங்கருட்செல்வந்தழைத்தோங்கத்தாண்டகச்சீர்ப்
பதிக மென்னு
மானந்தப் பொழிமுகிலை யகமலரத் தொழுதுவினை
யகன்று வாழ்வாம். (12)

(இ - ள்.) சிவஞானங்கலந்த அருளாகிய நீரைப் பானஞ்செய்து, தீவினைகளைக் காய்வதுபோல் கறுத்து, சமணர்களின் கோயிலை யிடிப்பதுபோல் இடித்து, எப்பொழுதும் இழிவைத்தரும் உலக ஆசை யெனுங்கொடிய வெப்பந்தணிந்து சைவமதமாகிய வயலின் கண் அருட் செல்வமாகிய பயிர்கள் தழைத்தோங்கத் தாண்டகம் பதிக மென்னுஞ் சிவாநந்த மழைபெய்யும திருநாவுக்கரசாகிய மேகத்தின் திருவடிகளைத் தொழுதுவினை நீங்கி வாழ்வாம்.(எ-று)

## சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி.

(வேறு)

பழுதறத் துறந்துளோர்க்கே பரமருள் பரனைப் பாவாற்
றொழுதொரு பரவை தன்பாற் றூதிடைச் செலுத்தித்
மழவினை முதலை வாயின் வரவழைத் தந்த ளுள [தூயோன்
னழுகை தீர்த் தருளு மெங்கோ னடியவர்க் கடிமை செய்வாம.

(இ - ள்.) பற்றற்ற துறவினை யுடையவர்கே முத்தியருளும முழு முதலைத் திருப்பதிகததாற் றுதித்துத் தானிசசித்த பரவை நாச்சி யாரிடத்தில் தூதனனுப்பியவரும், ஓரந்தணன்றன் ஆகுலத்திற் காற்றாது நெடுநாண்முன் முதலையால விழுங்கப் பெறற வத் தூயோன் மகவை யுயிர்த்தெழசசெய்தவரும, எமதிறை வருமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிக்கடிமை பூண்டொழுகும அடியவர்க்கடிமை செய்வாம். (எ - று).

## மாணிக்க வாசகர் துதி.

(வேறு)

திருவாத வூரனைமெய்ப் பெருநதுறைசேர் சிவஞானக்
கடலிற் றோன்றி
யொருவாவென் னிருணீக்கிப் பதிப்பொருளைக் காட்டி யுறு
புததன் றீய
தருவாயம் புயமுட மூகைவா யாமபறழைத்
தலர ஞானப்
பெருவான நிறைமதியைத் தொழப் பெற்றேன் சிவயோகந்
தரப்பெற் றேனே. (14)

(இ - ள்) திருப்பெருந்துறையில தங்கிய ஆநந்தவடிவ சிவஞானக் கடலிலே தோன்றி நீங்காதவென் அஞ்ஞான விருளைப் போக்கிச் சிவமாகிய பதிப்பொருளைத் தெரிவித்துக் குதர்ககஞ் செய் யும புத்தாகளிட வாயாகிய தாமரையை குவியச் செய்து ஊமைப் பெண்ணின் வாயாகிய செவ்வல்லிப் புஷ்பததை மலரச் செய்து பெருமை தங்கிய சிதாகாயத்திலே விளங்கும் பூர்ண சந்திரனாகிய மாணிக்கவாசக ஸ்வாமிகளை யடியேன் வணங்கிய பாககியததால் சிவாநந்தப் பெருவாழ்வினை யடைந்தேன் (எ - று).

## அறுபத்து மூவர் துதி.

இறவாத பேரின்ப முழுவார்க டுணைஞாலத் திருவாறுக
வறாவாண னருளசர சரலிங்க வுருவன்றி யறியாராகி
முறையாகப் பாலாட்டிக் கனியூட்டி வினைவீட்டி முத்திவீடே
பெறுவார்களுடனாக வறுபத்து மூவரையும பேணிவாழ்வாம்.

(இ - ள்) அழிவற்ற பேரின்பமடைய முயல்பவரின் பொருட்டு இவ் வுலகில் தருமசொரூபனாகிய பரமசிவன் சாதனங்களாயருளிய அசர, சரலிங்க வழிபாடன்றி மற்றொரு சாதனம் அறியாதவராய்க் கூறியவற்றில் முறையே (அசரலிங்கத்திற்கு) ஆவின் பாலாட்டி வினையையொழித்த சண்டேச்சுர நாயனாரும் (சரலிங்கமாகிய சிவ னடியாருக்கு) மாங்கனியளித்து முத்திவீடெய்திய காரைக்கா லம்மையாரும் உள்ளடங்கிய அறுபான் மூன்று நாயன்மார்களின் திருவடிகளைத் துதிப்பாம்.(எ - று.)

## சிவநேசத் திருக்கூட்டத்துதி.

(வேறு)

மறந்தேனும் பொறிவழிதன் மனம்புகுத லறியாத
வாழ்க்கை யோராய்
அறஞ்சேருந் திருநீறுஞ் சாதனமும் பொருளாக்கொண்
டாசு தீர்ந்தே

சிறந்தோரகு மஞ்செழுத்து நெஞ்சழுத்திச் சிவாநந்தச்
செல்வ ரேயாய்
நிறைந்தோங்கு திருத்தொண்டர் திருக்கூட்டம் நீடூழி
நிலவ மாதோ. (16)

(இ - ள்.) மறந்தும் ஐயபொறிகளின் வழியே மனஞ்செல்லாத வாழ்க்கையுடையவராய், மேலான புண்ணிய பலனைத்தரும் விபூதி உருத்திராக்ஷம முதலிய சாதனங்களையுமே உறுதிப்பொருள்களாய்க் கொண்டவராய், குற்றமற்றொளிரும் பஞ்சாக்கர மந்திரத்தைப் பாவாசகால ஜபித்து அதன் பயனாகிய சிவாநந்தப் பெருவாழ்வினை யடைந்தவராயப் பேதபாவமற்று விளங்கும் சிவனடியார் திருக்கூட்டம் பலவும் உலகில் நீடூழி வாழ்க (எ - று.)

## நமச்சிவாய குருமூர்த்தி துதி.

(வேறு)

புடவிமிசை யறுசமயப் புறவிருளு மெனைத்தொடருள்
ளிருளு நீங்க
மிடியகல நாற்பதமு மதத்துவிதப் பேரின்பும்
விளங்கித் தோன்றத்
திடமுறுநன் மெய்கண்ட சந்ததியுஞ் சிவஞானத்
திருவுமோங்கத்
தடமலர்ப்பூம் பொழிற்றுறைசை வருநமச்சி வாயகுரு
சரணம் போற்றி. (17)

(இ - ள்.) இவ்வுலகின் கண் நிலவும் ஆறு சமயமாகிய வெளியிருளும் என்னையடுத்த பாசமாகிய உள்ளிருளும் நீங்கவும் அஜ்ஞானமாகிய வறுமை நோய் ஒழியவும் சாலோகாதி நான்கு பதவிகளும், பிறிவற்று நிற்கும் அத்துவிதப்பேரின்ப முத்தியும், (ஜீவகோடிகள்

அடைந்துய்யவும்) அழியாத நன்மையை யுடைய (மெய்கண்ட ஸ்வாமிகளின் சந்ததியும் சிவஞானச் செல்வமும் ஓங்கி வளரவும இவ்வுலகில், விரிந்த மலர்ப்பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவாவடு துறையெனுந் திருத்தலத்தில எழுந்தருளி யடியேனுக்கருளிய நமச்சிவாய குருஸ்வாமிகளின் நளின மலர்ப் பாதங்களைத் துதி செயவாம (எ - று).

(உபதேச குரு)

## சுப்பிரமணிய குரு ஸ்வாமி துதி.

(வேறு.)

அறிவு முதலா வீரைந்து மமையாவிடுத்து முடனாகி
யறிவு முதலா யவையருளி யவற்றுலியற்றுஞ் சிலகருமம
மறிவு முதலா வீரைந்துக் காக்கி யடித்தா மமைசேர்த்தென்
னறிவு தருசுப் பிரமணிய குருமாமணிக ளடிபோற்றி. (18)

(இ - ள்.) விஷய ஞானத்திறகுக காரணமாகிய சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியங்களும தொழிற்குக் காரணமாகிய வாக்காதி ஐந்து காமேந்திரியங்களும என்வசமாகாமல் அவற்றின்வயமாய் யானிருந்த காலத்தும் என்னுடனிருந்து அத்தசேந்திரியங்களை யென்வயப்படுத்தி அவறறுலியற்றப்படும் பார்த்தலாதி ஞானேந் திரிய காரியங்களும நடத்தலாதி கன்மேந்திரிய காரியங்களும அத் தசேந்திரியங்களுககே யுரியன (ஆன்மாவிற்குச சம்பந்த மில்லை) எனத் தெளிவித்துத் திருவடி தீக்ஷைசெய்து என் உண்மை வடிவத்தையருளிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரின் பதமலரை வாழ்த்துவாம்.(எ - று).

குறிப்பு:—சுப்பிரமணிய தேசிகரென்பதற்கு மாசிலாமணித் தேசிகரெனப பழையவுரை யொன்றில காணப்படுகின்றது.

## அவையடக்கம்.

(வேறு.)

ஆத நீர்முகில் வாய்ப்படு முவரியுந் திசைவான்
மேதி னிக்கமு தாதலின் விழுத்தகு சான்றோர்
காதி லாவவை புகுந்தருள் கொழித்திடு கடம்பி
னாத னார்க்கினி தாகுவ நலமிலென் புன்சொல். (19)

(இ - ள்.) கடல்நீரை மேகம் உண்டு பொழிந்த மாத்திரத்திலே அதன் உவர்ப்பு நீங்கி உலகத்தார் உண்ணுதற்குரிய அமுதமாவது போல அடியேன் புன்சொல்லா லியற்றியவித் திருக்கடம்பநாத புராணமும் ஆய்ந்த அறிவுடையோர் சபையின் கண்மேவி விளங்குவதால் கருணை பொழியும் திருக்கடம்ப நாதருக்கு இனியதேயாகும். ()

## புராண மெய்ம்மை.

(வேறு)

திருக் கடம்பமா நகர்ப்புக ழுருளினுற் சிறியேன்
உரைத்த தவ்வரு ளுடையவர்க் கினிதுமா மொழியார்க்
கரத்தி யாவதென் னனைவரும் விரும்பிய வான்பால்
விரித்த பித்துளார் நாவினிற் கைத்திடு மிகைபோல். (20)

(இ - ள்.) திருக்கடம்ப மா நகரத்தின் சரித்திரத்தை அற்ப வறிவினை யுடையயான் ஸ்ரீ கடம்ப நாதேஸ்வரர் கிருபையால் புராணமாகச் செய்தது அவ்விறைவனது அருள் பெற்றவருக்கு விருப்பமாக விருக்கும்; பெறாதார்க்கு இதை யூட்டுவதாலாகும் பயன் என்னை? உலகில் யாவருக்கும் இனிமைதரும் ஆவின்பால் பித்தம் அதிகரித் தவர் வாய்க்குக் கசக்குமன்றோ? (எ - று).

அரதி—விருப்பமின்மை. (எதுகை நோக்கித் தகரமெய் யிரட்டித்தது எனினுமாம்.

## புராணஞ் செய்ததற்குக் காரணம்.

(வேறு)

செவ்வாய்ப் பசுங்கட் கருங்கூந்தற்
றிங்கண் முகத்தார் செறிவீதி
யெவ்வா னவருந் தொழுதேத்து
மெழிலார் கடம்ப நகர்ப்பெருமை
யவ்வான் மதியஞ் சடைக்கணிந்த
வமல னடியார் தருகவென
மெய்வாய் மொழியா லுரைக்கின்றேன்
இறவா வீடு தருமெனவே. (21)

(இ - ள்.) சிவந்தவாயும், பசியநேத்திரமும் கரிய கூந்தலும், மதிமுகமும் உடைய மாதர்கள் நெருங்கி யுலாவும் வீதிகளை யுடைத்தாய்ச் சகல தேவர்களாலும் பணிந்து வணங்கப் பெற்ற மேன்மையை யுடைய திருக்கடம்ப நகரத்தின் பெருமையைச் சிவனடியார் பலர் என்னைப் பாடித்தரவேண்டுமென்று கேட்டபடியால் அவர்களின் திருவாக்கைச் சிரமேற்கொண்டு அங்ஙனஞ் செய்யின் அது அழியா முத்தியைத் தருமென்னும் நிச்சயத்துடன் இயற்றத் தொடங்கினேன். (எ - று).

## புராண வரலாறும் ஆக்கியோன் பெயரும்.

(வேறு)

காந்தநூ லெனும்பாற் கடலைநுண் ணுணர்வா
கவின்றமந் தரத்தினாற் கடைய
வேந்துசீர்க் கடம்ப நகர்ப்புக ழமுத
மெடுத்தற வோர்செவி வாயான்

மாந்தநற் றமிழ்ப்பா வெனும பொலங் கலத்தின்
மாண்புற வமைத்தருத தினுற்
றேறந்துணர் பொழிற்சூ ழாவடு துறையிற்
சிறக்குமீ சானதே சிகனே. (22)

(இ - ள்.) அட்டாதச புராணங்களுள் மிகவும் மேன்மைவாய்ந்த ஸ்காந்தபுராண மென்னும் திருப்பாற்கடலை நுண்ணிய அறிவாகிய மந்தரகிரியினுல் கடைந்து மிக்க சீர்த்திபெற்ற திருக்கடம்பமா நகரின் மான்மியமென்னும் அமிர்தத்தைச் செந்தமிழ்ப் பாவாகிய பொற்பாத்திரத்திலே பெய்து பெரியோர்களின் செவியாகிய வாயினுல் அருந்தச்செய்தவர்,தேன் ததும்பும் மலர்ச்சோலை சூழ்ந்த திருவா வடுதுறையில் சிறந்து விளங்கிய ஈசானதேசிகரெனும் மாதவராம். (எ - று).

ஆக காப்பு உள்பட திருவிருத்தம் (25)

பாயிரம் முற்றிற்று.

## இரண்டாவது

## புராண வரலாறு உரைத்த அத்தியாயம்.

திருச்சிற்றம்பலம்.

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

விருத்தம்.

பாச நீங்கிடப் படைத்தலும் வினைப்பயன் பருகி
யாசு நீங்கிட வளிப்பதும் பிறந்திறந் தலையு
மாசு நீங்கிட வழித்து மற் றுயிர்களை வளர்ததது
நேச நீங்கிடா தருள்கடம் பிறைவனை நினைவாம்.

(இ - ள்.) ஸகல ஜீவர்களையுந் தங்கள் பாச பந்தங்களை நீக்கிக் கொள்ளப் படைத்தும், அவர்கள் முன்செய்த இருவினைப் பயனைப் புசித்துக குற்றத்தினின்றும் நீங்கும்படி ரக்ஷித்தும், அடிக்கடி பிறந் திறந்துழலும் வருத்தம் நீங்கச் சங்கரித்தும், பின்பும் மறைத்து வளர்த்தும், எல்லா உயிர்களுக்கும் தன்னிடத்தில் நேசமுண்டாகும்படி அருளியும் மோக்ஷத்தினைத் தருகின்ற திருக்கடம்ப நாதனைத் தியானஞ் செய்வாம். (எ - று.)

முந்தொர் காலையிற் காஞ்சியின் * முண்டக முதல்வன்
வந்து நோற்புழிச் சவுனக ராதியோர் வணங்கி
யெந்தை யாந்தவ மியற்றவோ ரிடமருள் கென்னப்
புந்தி யாற்குசை † நேமியொன் றியற்றினன் புகல்வான். (2)

உணர்ந்த மாதவத் தவோர்கா ளுருட்டுமித் † திகிரி
யிணங்கு கங்கையந் தடங்கரை யெய்துமவ் விடத்தே
‡ யணங்கு நீங்கருட் டவம்புரி மின்களென் றருளிக்
குணங்கொ ளொன்முக னுருட்டினன் சுருட்டேபூங் குசையே. ()

* தாமரை † சக்கரம். ‡ துன்பம்.

புரையி லாதவெப் பொருள்களுந் தருதவம் புரிவான்
பிரம * னாக்கிய நேமியும் பெருகுவா னதியின்
கரையி னேரிடை யவிழ்ந்ததவ் விருந்தவர் களிப்பத்
தரையி லவ்வன நைமிசா ரணியமாய்த் தழைக்கும். (4)

கொன்றை யார்சிரத் தவிர்மதி குளிர்ந்தவா னதியும்
மூன்று காட்சியின் மகத்தழ லேந்திய தொடர்பின்
வென்ற மாதவ ருடன்வட நீழன்மே வுதலின்
மன்று ளாடிய வரதனும் நைமிச வனமே. (5)

ஆரந் தேக்ககி † ருடிம ‡ மிறலியா ரமுமந்
தாரங் கூவிளம் வெள்ளிலால் சண்பகங் § கன்னி
காரங் கொன்றைதேங் காசினி பாடலங் கமுகு
காரத் தம்முதற் றருவது நைமிசா ரணியம். (6)

அரிய மாதவர் வேள்வியி லவியுண மகவான்
கரிய மாலய னொருங்குவந் திருந்தெனக் கவினு
மருவு லாவிய ¶ தமாலமும் பூவையு மலர்ந்தாங்
குரிய கோங்குநின் றோங்குசீர் நைமிசப் புறவம். (7)

வழுவை கேசரி சிம்புள்புள் ளிறையரா மஞ்ஞை
யுழுவை யானரி யாளியெண் குழைநெடுங் கழுத்தன்
தழுவு தம்மினப் பகையொரீச் சார்தலிற் றவர்போன்
றழகு செய்வது நைமிச மானகாந் தாரம். (8)

மறையி னோதையு மந்திரத் தமரமுஞ் சீடர்
முறையி னூல்பயி லரவமு மாகம முழங்குங்
குறைவில் வேள்வியங் கொழுங்கன லோசையுங் குளிர்வண்
டறையு மார்ப்புமங் கறாதது நைமிசா டவியே. (9)

---

* செலுத்திய † தாதுமாதுளை ‡ மருது. வெள்ளில்-விளா
§ கோங்கு. ஆசினி-பலா ¶ பச்சிலைமரம்.

புண்ட ரஞ்செறி நெற்றியுஞ் சடைமுடிப் பொலிவுந்
தண்டொ டுங்குசை கமண்டலந் தாங்குதிண் கரமும்
வெண்டி ருப்பொடி மேனியும் விழிமணி யணியாக்
கொண்ட மேனியும் படைத்தவ ரிருப்பதக் கொழுங்கான். ()

எழில்கொ ளிவ்வனத் திருந்துவா ழுருந்தவ ரினிதா
மழலை மென்மொழி மலைமகள் கணவனை மனத்தாற்
றழுவி யாகமொன் றியற்றினர் சச்சிதா நந்தம்
விழைய நெஞ்சின ராகிய மெய்புணர் வுடையோர். (11)

சற்ச னங்களைப் புரத்தலிற் * சத்திரம் பூசை
நிச்ச யம்பெற நிகழ்த்தலி னீடறி வனைத்து
மிச்ச கத்தறி வித்தலா * லெச்சமா மிதுவே
யச்சு தன்வடி வதனிறை யைம்முகப் பகவன். (12)

என்றி யாவையு மெடுத்துரைத் திருவினைக் குறும்பு
வென்ற மாதவர் சிவனடி மேவுவான் வேள்வி
யொன்றி யற்றியங் குறைந்திடுங் காலையி லுணர்வாற்
சென்று மேம்படு சூதனவ் வனத்திடைச் சேர்ந்தான். (13)

(வேறு)

† நிலவு நிலவு பலகோடி நிறைந்து சிறந்து நடந்தென்ன
விலகு ‡ மிலகு மாமுதலெண் சித்தி சித்தித் திடத்தருவெண்
குலவு§குலவெண்பொடியணிந்து கோதில் கண்டி கண்டமணிந்
துலக ¶ வுலகர் தொழவாலு முறுவ ரெவரு மெதிருறுவார். ()

—: இது முதன் மூன்றும் குளகம் :—

ஸனகன் ஸனந்தன் துருவாஸன் சமதக்கினிவை சம்பாய, னனக னனந்தன் குழுதாக்க னுபத் தம்பன் பிருங்கியுப, மனிய னகத்யன் சங்கன்ம தங்கன் மார்க்கண் டன்காசி, பனிரை வதன்கண் வன்வசிட்டன் பரத்து வாசன் கௌதமனை. (15)

* வேள்வி. † பிரகாசிக்கும். ‡ இலகுமா.
§ சிறந்த ¶ மேன்மக்கள்.

வேதா ரணியன் மாண்டவியன் பிருகு விபாண்டன் வான்மீகன், சாதா தபன்முற் கலன்கும்ப சாலனிடப யோகி முனி, போதா யனனு ரதன்சுப்ர ருசி கேதன் புதன் கபிலன், மாதே சனக ருசிமுனி வாம தேவன் சதா நந்தன். (16)

என்னு மிவர்சென் றுவகையுட னெய்து முனிவற் காதனமீந், துன்னு முறைப்பாத் தியமாதி யுதவிப் போற்றி யுறுங்காலை, * துன்னு வினைத்தற் போதமுனி சூத முனியுஞ் சிவனடியீர், பன்னு மகமெப் பயன் வேண்டிப் புரிந்தீ ரென்ன வவர்பகர்வார். (17)

இகமும் பரமும் பரசிவன்றா ளிணைக்கண் டேத்திப் பெறும் வீடும், மகமே யுதவு மெனயாகம் வகுத்தே மென்ன வருந்தவர்கோன், மிகுமவ் வேள்வி யிகபரமுங் கொடுக்கும் வீடு விரைந்துதவா, புகனல் வினையான் மனமாசு போக்கும் வீடு பெறலரிதே. (18)

எனவாய் மலர்ந்த பெருந்தவர்கோ னிணையா ரடிகண் முடிசூடி, மனவா சகமுங் கடந்தசிவ னருளால் வந்தீர் மறை நான்கும், கனவா கமமு மூவா†மூ வாறு கதையுங் கரிசிரித் ‡ தோர், முனிவா விரைந்து முத்திபெறு முறைகூறு கெனத் தவன் மொழிவான். (19)

(வேறு)

வீடுபே றெளிதிற் கூடு முபாயநீர் வினவுந் தன்மை
நீடுநீ ருலகிற் கெல்லாம் நிகழ்த்துப கார மேயாந்
தேடுமவ் வுபாயம் பல்லெவ றவற்றுளுஞ் சிறந்து தோன்றும்
வீடுசேர் வழிக ளீரைந் தவற்றையும் பேசக் கேண்மின். (20)

---

* இருவினைகளை யடையச் செய்யும் ஜீவபாவத்தை யறுத்தசூதன்.

† பதினெண் புராணம். ‡ ஓர் = உணர்ந்த,

—: இது முதன் மூன்றும் குளகம் :—

சிவனருட் டலத்தின் மேவல் நீர்த்தநீ ராட லித்தஞ்
சிவனடி யார்கள் சேவை யவர்க்கனந் திருந்த வீதல்
சிவனடி யார்க ளேவல் திருவுளங் களிப்பச் செய்தல்
சிவனடி யார்க ளுண்ட பரிகல சேடங் கொள்ளல். (21)

கண்டிகை திருவெண் ணீறு கலந்தமெய் யடியார் வாரிக்
கொண்டிடத் தனங்க ளீதல் கூற்றுதைத் தவனை யன்பால்
வண்டுசூழ் மலரிற் போற்றன் மழுவிடை யவன்று ளுன்ன
லெண்டரு சைவ நூலி னியல்புமெய் யுணர்ந்து போற்றல். (22)

என்னுமீ ரைந்தி னுள்ளுஞ் சிவதலத் திருக்கும் பேறே, நின்மல வீடு சேர்க்கு மாயினு நிலத்தின் மாக்கள், கன்மபா கத்துக் கீடா யிவைகளிற் கருத்து நேரும், பின்ன, மன் றென்றான் சூதன் பின்னரும் பெரியோர் கேட்பார். (23)

(வேறு)

சைவ தலத்தி லுறைவதுவே வீடு தருமேற் சதுமறையிற் றெய்வ நிறையு மாகமத்துஞ் செப்புந் தருமம் வீண்செயலோ பொய்கொல் லோவெம் புந்திகொளப் புகல்வா யென்ன மாதவர்க,ளையநீங்க வருட்சூதன் வினவு பொருளை யறிவுறுப்பான்.

அறிய வறிவு வெளிப்படுப்ப தாற்ற வினிதே யாகமமு மறையு†மறையும் பலசெயலும் வாய்மை யேமற் றவையாவும் பிறபா லியற்றிற் பரம்பரையாய் வீடு பேறு தரும் பெம்மா னுறையும் பதியி ‡ னுஞற்றுனருக் குதவுஞ் சித்தி யுடன் முத்தி. (25)

இவ்வா றவ்வா னவர்மேலு ளிறவா முத்தி யெளிதுறுவான், தவ்வா வொளிசேர் திருக்கயிலை சார்ந்து நாதன் றனைக் கேழ்ப்பத், *தெவ்வானவரு ரெரித்தபிரான் றெரிந்தெம் பதியி லுறைவதுவே, மெய்வாழ் வளிக்கும் விரைந்தென்னத் திருவாய் மலர்ந்து விரித்துரைத்தான். (26)

* சத்துருககளின் முப்புரங்கள். † கூறுகின்ற ‡ செய்பவருக்கு

அதனு லவனி தலமீதி லரனுர் பதியி லுறைவதுவே மதமா றிரண்டுக் கப்புறமாய் வளரும் வீடு பேறுதவும் * கதமா றியநற் றவமுனிவீ ரென்று கருணைத் திருக்காந் தத், திதமார் கடம்ப நகர்ப்பெருமை யெல்லாஞ் சிவன்று ணிவினைந்துரைப்பான். (27)

பதிகம்.

—: இதுமுதல் மூன்றும் குளகம்:—

அழகார் கடம்ப நகர்த்தீர்த்த மூர்த்தி கந்த ராச்சிரம மொழியீ ரைந்து பெயருடனென் பலராங் கதையு முன்னுல் வர், தொழுதாங் கடைந்து நோற்றமையுந் துரிசு தீர்த்தங் கிருபறவை, யெழிலார் வீடு பெற்றமையு † மியல்கா சிபர்பூ சித்தமையும், (28)

இருதா னவரைக் குகன்படுத்த வியல்பு மரனை யவன் பூசை, புரிநீர் மையுஞ்சங் கரித்தவஞ்செய் ‡ பொற்பு மவனை யிறைமணஞ்செய், தொருவா வின்பந் தந்ததுவு மொருவே தியன்சேர் கன்னியுடன், திருவா ரருள்வீ டெய்தியதுந் திருமா காலீச் சுரன்சிறப்பும். (29)

(கவிக்கூற்று.)

அன்னுட் சூத மாதவர்கோ னறவோர்க் குரைத்தான் வடமொழியில், § நன்னு வலர்கோன் றமிழ்க்கிரங்கி நயன மளித்த நாதனருண், மன்னு டுறுமா வளர்கடம்ப வாத னருளா லதைத்தமிழா, லின்னு ளென்னுப் பெற்றபய னெயத் தெரிந்த வாறுரைப்பாம். (30)

இரண்டாவது

புராண வரலாறுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். (55)

---

* கோபந்தணிந்த † நல்லொழுக்கமுள்ள

‡ அழகு. § சுந்தர மூர்த்திகள்.

## மூன்றாவது
## தலவமைசடமுரைத்த அத்தியாயம்.

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

நிலமாதி யாறாறுக் கப்பா லாகி நிர்க்குணமா யேகமாய் நித்த மாகி, மலமாதி யகன்றவரு ளறிவா நந்த வாரிதியா யாருயிராய்ப் பேரா வின்ப, நலமாகி யாவுடைநா யகிடா லாகி நண்ணியரு ளண்ணல்புவி விண்ணு மேற்றாந், தலமாகத் திருக்கடம்பிற் றங்கி வாழுந் தனிமுதலைத் தொழுது தலப்பெருமை சொல்வாம். (1)

இ - ள்.) பிருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அதீதமாய் எண்குணங்களுங் கடந்ததாய், ஒன்றாய், அழிவிலாததாய், மலம் முதலியன நீங்கியுள்ள அருளாநந்த சமுத்திரமாய், ஆன்மவடிவாய், நீங்காத பேரின்ப ஸ்வரூபமாய், ஆவுடை நாயகியார் வாமபாகத்தில் அமர்ந்துள்ள புகழாளனாய், மண்ணவரும், விண்ணவருந் தரிசிக்கும்படி திருக்கடம்ப வனத்தில் கடப்ப விருக்ஷ நீழலில் அமர்ந்தருளுந் திருக்கடம்ப நாதனைத் துதித்துத் தலத்தின் பெருமையைக் கூறுவாம் (எ-று)

(வேறு)

அருட்கயிலை கோகரணந் திருவளர்கே தாரம்
அவந்திதிருப் பருப்பதமு மந்தரமே மாயா
திருதில்லை வடமுல்லை மதுரை*குட மூக்குச்
† சேரைதிரு வையாறு கலியாணச் சிகர
முரைத்ததிருக் காளத்தி யருணகிரி ‡ முதுகுன்
றுயர்காசி காஞ்சிதிருக் கடம்பவன மென்றைப்
பொருத்தமுறு நாலைந்து திருப்பதியு முத்தி
பொருந்தினவர்க் கருளுமிது § மந்தணமெய் பொருட்
[கும். (2)

---

* கும்பகோணம் † திருச்செந்தூர்.

‡ விருத்தாசலம். § இரகசியம்.

சொன்னவையிற் பொன்மன்றங் கயிலாயங் காசி
தூயபுகழ்க் காஞ்சிதிருக் கடம்பவன மைந்து
நின்மலபஞ் சாக்கரமாம் மற்றுமெழு கோடி
நீடுமனுப் பிற*தளிக ளாகினிலை பெறுமாங்
கின்னவையிற் றிருக்காஞ்சி திருக்கடம்ப வனமென்
றிருதலமு மைந்தெழுத்தி னீரெழுத்தே நேரா
யன்னபுரு டற்கிருக ணாகியுயிர்க் கெல்லா
மருவினையால் வருபவநோ யகற்றியரு டருமே. (3)

(வேறு)

எவ்விடமும் பூரணமாய்ச் சிவனிற் பானே
யிப்பதிக ளதிகமென வெண்ணின் †முந்நீ
ரொவ்வொருபா னீரோட்ட மூறுத லேபோன்
றுவந்துசிவ னுறைதலினன் மேலா மன்றித்
தெய்வநகர் நான்குவிதந் துவந்து வஞ்சீர்
சிறக்குமிகு காமிகமிச் சிரத்தி னெடுங்
தவ்வறுதை சதமாக விவற்றி னுள்ளுந்
தைசதமு விருசமய முதற்குந் தானம். (4)

தங்குதிரு மூர்த்திபிலம் பீட மூன்றுந்
தனித்தனியு மூன்றிரண்டும் விரவிச் சார்ந்துந்
தங்குதலிற் றைசதமாந் தலமும் பார்மேற்
றழைத்ததிரு மூவிதமா யிவற்றிற் காசி
தங்குபில மூர்த்தியது காஞ்சி மூன்றுஞ்
சர்தலினு மேலாகுஞ் சுத்தி பீடம்
தங்குதலின் மூன்றுமுடைக் கடம்பர் கோயிற்
சத்திசிவ தலமெனவுஞ் சாற்று நூல்கள். (5)

---

* கோயில். † கடல்.

(வேறு.)

புகழ்ந்த விப்பதி யையிரு பெயருடன் பொருந்தித்
திகழ்ந்த தந்நக ராற்சிறப் பெய்திய நாடும்
பகர்ந்த நாட்டிலத் தலத்தினுக் கெல்லையும் பகர்வே
னுகந்து கேழ்க்கெனச் சூதமா தவனெடுத் துரைப்பான். (6)

பொன்மை நீடுநற் றுகளலாற் பிற*துகள் பொருந்தாத்
தன்மை நீடுநல் லறம்பயில் குடிபல தழைத்து
நன்மை நீடுபொன் மாளிகை நகர்பல வுடைத்தாய்த்
தொன்மை நீடிய வளத்தது தொண்டநன் னாடு. (7)

பிறக்கு நானிலத் துயிர்க்கெலாம் பேரருட் டாயாய்ச்
சிறக்கு மெம்பெரு மாட்டியுந் திருக்கயி லையைவிட்
டறத்தின் மேம்படு மெட்டுநா லறஞ்செயற் கிடமாய்த்
துறக்க நாட்டினுஞ் சிறந்தது தொண்டநன் னாடு. (8)

செழுநல் வித்திடல் படைப்பதாய் வளர்ப்பதே திதியாய்
வழுவி டாதறத் துயர்த்துவ தழிப்பொடு மறைப்பாய்க்
† குழுவி னல்குத லருளெனக் ‡ கூததனைந் தொழில்சே
ருழவ ரானுமிக் குயர்வது தொண்டநன் னாடு. (9)

(வேறு.)

கதிர்நகை முல்லைவாயில் காளத்தி கச்சூர் கொங்கை
புதுவயி ருலங்காடு போர்விழி திருவேற் காடு
மதிமுகங் காஞ்சி சாயன் மயிலைநந் துதல்விற் கோலம்
பதியுயிர் கடம்பர் கோயிற் § பாலிநா டெனுநல் லாட்கே. (10)

சிற்சபை யீரைங் காதந் தென்திசை மேற்கு வேத
நற்றல மீரைங் கன்னல் வடதிசை ஞானக் காஞ்சி
மற்றதோர் காதமாகு மயிலையுங் காதங் கீழ்சா
ருற்றிட நாற்பண் மேவி யுயர்ந்தது கடம்பர்கோயில். (11)

---

* குற்றம்.

† இரப்போர் கூட்டம்.

‡ சபாபதி.

§ பாலியாறபாயும் தொண்டநாடு.

நிருதியி லகத்தி சஞ்சீர் நெடுஞ்*சோணை வாயுக் கோண[ தூர்
† முருகவேண் மணஞ் செய் யோங்கன் ‡முன்னமு தளிததமு
மருவிய வடகீழ்ப் பாலின் வளர்திருப் புலிசை தென்கீழ்ப்
பொருவருந் திசையின் மேவப் பொலிவது கடம்பர் கோயில்.

—: இது முதல் மூன்றுங் குளகம் : —

குருவின் மெய்ஞ் ஞான நல்குங் குருவென மனிதர் தம்மு
ளிருபிறப் பாள ரென்ன முச்சுடர்க் கிரவி யென்னப்
பரவிய நூல்க டம்மிற் பயிலுவே தாக மம்போற்
கரவிலாத் தானந் தம்மிற் கல்விமா தான மென்ன. (13)

தருவிலைந் தருக்க ளென்ன மலரினுட் சலச மென்னக், குருநவ மணியிற் சிந்தா மணியெனக் கொடையின் முன்னைப், பொருளிலான் கொடுத்த லென்னப் பொருப்பினுண் மேரு வென்னப், பெருகுதண் புனல்சூ ழாற்றிற் பிரானணி கங்கை யென்ன. (14)

புருடரிற் றிருமா லென்னத் தேவரிற் புரமூன் றட்ட, வரனெனப் § பொதுவின் ஞான வம்பல மென்ன ¶ வாவிக், குரியவைம் பொறியிற் கண்போன் றுமையொரு பாகன் மேவூர், திருமலி பதிகட் கெல்லாஞ் சிறந்தது கடம்பர் கோயில். (15)

பாசமா மிருளை நீக்கும் பருதியும் * பசுக்கள் வாடு
மாசுறு பிறவிக்கோடை மாற்றருண் மதியு மன்னு
நேசநல் லறிவாம் பைங்கூழ் வளர்க்குநீண் முகிலு நீங்காத்
தேசுறு முத்தி வீட்டின் சிகரமுங் கடம்பர் கோயில். (16)

ஆதலா லவனி மீதே யருவினைத் தொடர்பு நீக்கிப்
போதவா னந்த வாழ்வு பொருந்திட விரும்புகின்றோர்
தீதிலாக் கடம்பர் கோயிற் சேருதல் வேண்டு மற்றைப்
பூதலம் விரும்பல் பொன்னீத் திரும்பினை விரும்பல் போலாம்.()

---

* திருவருணை. † திருத்தணி. ‡ திருக்கச்சூர். § நடனசபை.
¶ உயிர்க்குரிய பஞ்சேந்திரியம். * ஜீவர்கள்.

* மடும்படு பிறவி நோயும் வறுமையுந் துயரு மாற்றுங், கடம்பமா நகரைக் காணிற் கருத்துற நினைக்கிற் கேட்கில், திடம்பெறப் பணியிற் போற்றிற் றிசைமுக னெடியோன் றேடும், படர்ந்தபே ரொளிவாழ்ந் தோங்குங் கயிலையே பதி யாக் கொள்வார். (18)

இத்திருப் பதியி லன்ன மிருநிதி யாடையீதல்
சத்திர மடநீர்ப் பந்தற் றடம்புனற் கூவம்வாவி
முத்திவேட் டுலகநீத்தோர்க் குணவுமுன் னான்கு நல்க
னித்தலுஞ் செய்யப் பெற்றோர் நிருமலா னந்த ராவார். (19)

நெருங்குதண் மலர்ப்பூஞ் சோலை நிறைதிருக் கடம்பர் கோயில், மருங்கொரு தான மோமம் பிதிர்க்கடன் மனுக்க ணீத்தல், அருந்தவத் தியான நிஷ்டை யாதியோ ரணுச்செய் தாலும், பொருந்து பொற் கிரியின் மேலாய்ப் பொரு விலாப் போக நல்கும். (20)

சிவனிராத் திங்கள்வார மாதிரை யாதி செப்புஞ்
சிவவிர தங்க ளேனைச் சிவதலத் தியற்ற லுள்ளுஞ்
† சிவமுறக் கொடுக்கு மிந்தத் திருநக ரிடத்தோ ருச்சி
‡சிவன்மகிழ் பொழுது மேவி யருந்தியங் கிருந்தார் சேர்வார். ()

போகமும் வீடும் போற்று முப்பொரு ளியல்பு ஞான
யோகமுஞ் சிவத்தோ டொன்று முண்மையா னந்த வீடு
நாகமுன் வில்லாக் கொண்ட நாதனி நகரை நண்ணும்
§ பாகமுற் றவர்க்கே நாளுந் தருமெனப் பகரும் வேதம். (22)

இந்திர னயன்மா லேனோ ரெண்டிசைக் கிறைவ னென்பான்
¶ மைந்துறு கிரகமீரு றிராசிவா சுகிகூர் மாண்டர்
நந்துமா தவர்க ளேனோர் நாதனூர் கடம்பர் கோயில்
வந்தருந் தவங்கள் செய்தே மருவினர் மாறாச் செல்வம். (23)

---

* அஞ்ஞானம். † மங்களம்.

‡ பிரதோஷ காலம். § பரிபாகம், புண்ணியம். ¶ வலி.

(வேறு)

புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகிக்
கல்லாகிப் பிறவாகிச் செனித்தாலுங் கதிசேர்வர்
எல்லாரு மணிமாடக் கடம்பநக ரிடத்தென்றே
பல்வேறாய் மலரோனும் படைத்தது*மன் பதையாக்கை.(24)

சீராருங் கடம்பநகர்ச் சிலையெல்லாஞ் சிவலிங்கம், பாரா ரும் புனலெலவையுஞ் சிவகங்கை யாமைம்பொற், றேராருந் திருநகரஞ் சிவபுரமித் திருநகரி, லாராயிற் சராசரமுஞ் சிவ மாக வமர்ந்தோங்கும். (25)

(வேறு)

காந்தெரியி னிடைப்பட்ட வெப்பொருளு மக்கனலாய்ச், சார்ந்திடல்போ லருட்சிவமே தங்குபர வெளியாகிப், போந் துளவித் திருக்கடம்பா புரிதனிலெவ் வுயிர்த்தொகைகள், சேர்ந்திடினும் பூரணன்மெய்த் திருவுருவாய்ச் சிறந்தோங் கும். (26)

ஓதியவிக் கடம்பநகர் தனையன்றி யுமையினொடுஞ், சோதியுறை தலங்கள்சில வுளவவையுந் தொகுத்துரைப்பாம், போதனருச் சனைபுரிந்து போற்றுதிருப் பிரமீசம், தீதிலிறை யாண்டனைபெண் பனையாக்குந் திருவோத்தூர். (27)

அநுமனொடு மணில் காக்கை யகத்தியன்கோ சிகன் பிருங்கி, மனுமுறைசெய் குருகுலத்தோர் † மானிவர்பூ சனை யாற்ற, நனிவாந்தந் தொருசோழ னணுகியா லயமியற்ற, வனிதையொடு மகிழ்பரமன் மருவுகுராங் கணின்முட்டம். ()

கயிலை யினிற் செய்தபிழை சனைக்கழுவக் கவுரியெனும், மயிலணைந்து பூசிப்ப வளைத்தழும்பு முலைத்தழும்பு, மெயி லெரிசெய் யிறைபெற்றே யிருந்தருளே கம்பமுதற், பயினு மறை முதல்வைக்கும் பலதளியார் திருக்காஞ்சி. (29)

---

† இலக்குமி * மக்கள் ஜாதி.

தன்வலியோ டெதிர்பொருவோர் வலிபாதி தனைச்சார,
மன்மகிழ்வின் முனம்வாலி வந்தனைசெய் வாலீசம், பன்னு
திருப் பனங்காட்டூர் பயிலுமறை நூபுரஞ்செசம், பொன்மதில்
சூழ் பரசுரா மீச்சுரநற் புலிவனமே. (30)

தெருணிறையுங் கங்கைநிகர் சேய்நதிப்பாற் செவ
வேடன், கருணையினால் வேள்விபுரி காசிபமா தவன்கண்டு,
வருணிறையுஞ் சோளீச மமர்ந்த விச்சு வேச்சுரமெய்ப், பொரு
ணிறையுஞ் * பிறிதுகங்கை யீச்சுரமும் பொருந்துமால். (31)

என்னிருகண் மணியனைய விமையமயி லொருபாகன்,
பொன்னிடம்பா யொருபுற்றிற் புகுந்தகழ வெளிப்பட்டு,
மன்னுமய னிரதிமுதல் வானோர்க ளருச்சிப்பப், பன்னிருநா
மம்படைத்துப் பயின்றதிரு மாகரலே. (32)

செகத்தோர்போற் றிடும்‡பெருந்தண் டலமுடையார்
தங்குதல, மகத்தார்மா முனியீசம் வாசீசங் கன்னீசம், அகத்
தீச, மெனச்சூழு மலகிலாத் திருத்தலமம், பகத்தாற் கண்
டேத்தினருக் கெப்பேறும் பலித்திடுமே. (33)

(வேறு)

செப்பிடு மகத்தீசத்திற் செந்தமிழ் முனிவன் நீதி,
லொப்புறு வசுரர்ச் செற்ற வுறுபவ மகல வுன்னி, முப்
புர மெரித்த முக்கண் முதல்வனை வழுத்தி யாங்கே, திப்பிய
சித்தி பெற்றான் திருவருண் மாண்பி தென்னே. (34)

நால்வகைச் செய்யு ளெங்கு கடுவன செய்யு ளெங்கும்,
கால்வன முத்தங் கஞ்சங் கயமெலா மலர்ந்தங் கஞ்ச,நீல்வனந்
தவழுங் காரு நிதிநிகே தனமங் காருஞ், சேலன மடவார்
கண்ணுஞ் சிறந்தமெய்த் திருவார் கண்ணும். (35)

---

* நெய்யாடு பாக்கம். ‡ இளையனார் வேலூருக்குக் கிழக்கேயிருந்த ஊரூர்.

அம்பகம்-கண்கள், பவம்-பாவம்.

(இ - ள்.) ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரமென்னும் நாற்கவிகளைப் (புலவர்கள் எங்கும் பிரசங்கிப்பார்கள்.) வயல்களில் (உழவர்கள்) நாற்றுக்களை நடுவார்கள். தாமரை மலர்கள் முத்துக்களைச் சிந்தும். அத்தலத்தில் தடாகங்களில் அன்னப் பக்ஷிகள் தோன்றியுலவும். நீல நிறமான நீருண்டமேகங்கள் தவழும். பொன் மாடங்கள் அங்கு விளங்கும். (அங்குள்ள) ஸ்திரீகளின் கண்கள் சேற்கண்டையைய யொத்தன வாயிருக்கும். சிறந்து நிலைபெற்ற செல்வம் யாவரிடத்தும் நிறைந்திருக்கும் (எ - று).

எங்கணுஞ் செல்வங் கல்வி யெங்கணு மீகை யோகை
மெங்கணுங் * கன்னல் செந்நெ லெங்கணு மாடல் பாடல்,
எங்கணுந் தருமஞ் சீல மெங்கணு $ மாலை மாலை, எங்கணு
† மாதர் மாதர் எங்கணு ‡மன்றல் மன்றல். (36)

§ இருநிறக் கமல மாத ரிருவருங் கணவ ரோடுங், குரு
வளர் கடம்பர் கோயிற் குழகனைப் பூசை செய்து, தருதவ
மிபற்ற லாலே சண்முகன் புரமா மானூர், பிரமனூர் போனு
மன்றிப் பெருந்தவ ருலகு போலும். (37)

¶ சலதியின் முகக்கு நாழித் தன்மைபோற் குமரன்
போற்று, நலதிருப் பதியின் மேன்மை யறிந்தவா நவின்
றேன் ஞானப், புலனருட் கடம்ப நாதன் பூசனைக் கிளை
யோன் றந்த, குலநதி யாதிதீர்த்தத் தன்மையுங் கூற லுற்
றேன்- (38)

3-வது தலவிசேட முரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் (93)

# நான்காவது

## தீர்த்த விசேட முரைத்த அத்தியாயம்.

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

கண்ணினுண் மணியா யுன்னுங் கருத்தினுட் கருத்தாய்ப் பாடும், பண்ணினு ளிசையாய்த் தீங்தெம் பழத்தினுட் சுவையா யாவி, யுண்ணிறை யுணர்வாய் மற்றை யுணர்வினு ளொளியாய் நாயே, னெண்ணிய வரந்தந் தாளுங் கடம்புறை யிறைவா போற்றி. (1)

இ - ள்.) கண்களுக்குள் மணியாய், நினைக்குங் கருத்துக்குங் கருத்தாய்ப் பாடும் பாட்டின் இசையாய், இனிய பழங்களுக்குச் சுவையாய், ஜீவர்களுக்குள்ளே வியாயக அறிவாய், அல்வறிவுக்கும் அறிவாய், விளங்கி, அடியேன் நினைத்த வரங்களை யெல்லாம் அருளிக் கடப்பந்தருவின் நீழலிலமர்ந்துள்ள இறைவனே! நின்சரணமடைந்தேன் (எ - று.)

ஆயிரங் கோடி சேர்ந்த வறுபத்தொ டாறென் றோது
மாயிரும் புவியுண் மன்னுந் தீர்த்தமற் றவைக்கு மேலாய்ச்
சேயருண் ஞான தீர்த்தஞ் சிறக்குமிஃ தன்றி யிந்தத்
தூயமா நகரி னன்கு தீர்த்தமுஞ் சூழ்ந்து தோன்றும். (2)

கீட்டிசை *மகவான் றீர்த்தந் தென்கிழக் கயன்மா றீர்த்தங், † கோட்டகந் தென்க ணின்ன கலியினிற் குலவித் தோன்று, வேட்டகா சிபன்செய் தீர்த்த நிருதியில் விளங்கு மற்றை, நாட்டொற் ‡ றிசையுஞ் செவ்வே வணதியத னியற்கை சொல்வாம். (3)

(வேறு.)

பாகி னேர்செ ற் குறமகள் பாகரா
லேகி நித்தனு மிக்கடம் பாபுரி
யோகி னிற்பவ ருந்தொழ வுத்தர
வாகி னித்திரு வானதிம் மாநதி. (4)

---

‡ மேற்கு, வாயு, வடக்கு, ஈசானம, † கோயில்
* இந்திரன்.

இந்த மாநதி யின்புன றேய்ந்தெழு
* வந்து வந்து வழங்கிட மெங்கணு
நந்து கின்றச ராசர நாடொறும
பந்த வல்வினை நீங்குவ பான்மையால். (5)

முன்ன †மோர்முனி முற்றருந் தெச்சிலாய்ப்
பின்ன ருஞ்செவி வாய்வரு பெண்ணையோ
வென்னை யாள்கும ரேசன ழைத்தவிப்
பொன்ன திக்கினை யென்று புகல்வதே. (6)

முருகன் மாநதி யின்கரை முன்னியோர்
தரும மோமந் தருப்பணந் தென்புலக்
கருமந் தானந் தியானங் கடம்பினுட்
பொருளை யுன்னிப் புரியி லனந்தமாம். (7)

கடம்ப நாதனை நெஞ்சிற் கருதியித்
தடங்கொண் மாநதி யாடினர் தாமயன்
‡படம்ப டிந்தவ னுந்தொழப் பாவையா
ரிடம்பெ றுஞ்சிவன் றன்வடி வெய்துவார். (8)

இனிய தீர்த்த மொருகுட மென்னையா
ளனையொர் பாகற் குதவினு மன்னவர்
வினையி னீங்கியும் மேதினி வேந்தரா
யினிது வாழ்ந்துபின் முத்தியு மெய்துவார். (9)

சேய்ந திப்புனற் றீண்டினுங் காணினும்
வாயி லாசம னமொன்றி யற்றினு
மேய செல்வமுங் கல்வியு மிக்கசீ
ராய சித்திக ளெட்டு மணுகுமே. (10)

---

* காற்று. † ஐந்து மகரிஷி. ‡ திருமால்.

மேவ றம்பொரு ளின்பமும் வீடுமோர்
தாவித் தேகந்த னிற்பெற வெண்ணினோர்
காவ * னீப வனத்திற் கமழ் நதி
மாவி திப்படி யாடினர் மன்னுவார். (11)

† பைகொள் பாம்பிற் திரவிகள் பற்றுநா
‡ ளெய்து நாளய னந்தக ரேறுதேண்
மொய்சு ராதனு மாதமு மூழ்கி னோர்
செய்த பாவந்தி சையகன் றோடுமே. (12)

ஒழுக்க மன்பரு ளீகையு ணர்வுசி
ரிழுக்கில் செல்வந் தவமணி யின்பெழில்
வழுக்கி லாமகப் பேறுமற் றியாவையு
மழுக்கி லிந்நதி யாடினர்க் கெய்துமே. (13)

இன்ன திப்புனல் பாய்வய லின்கதி
ரன்ன முண்ணுமி வர்பிறர் மாதரை
மன்னு பாவம கல்வர் § மறலியூர்
தன்னி லேகலர் சார்வர் சிவபுரம். (14)

நறைகொள் பூம்பொழில் நற்கடம் பின்னிடை
யுறையு மெம்பெரு மானுரு வாகுமித்
துறைந திப்புன லாடத் ¶ துறக்கமே
விறைவ ருந்தவம் வேண்டுவ ரின்னுமே. (15)

வேற்று நாட்டிரு வேதிய ரென்புகொண்
டேற்று நீழலு ழைந்துழி யோர்துளி
காற்றின் மேவிக் கடிமல ராக்குமே
லாற்று மேன்மைய தாரள வாயதே. (16)

---

* கடம்பு. † சந்திர சூரிய கிரகணங்கள். ‡ அமாவாசை.
§ இயமன். ¶ சுவர்க்கம்.

(வேறு)

வருவினை துடைக்குந் திருநகர்ச் சிறப்பும்
வளம்பெறு தீர்த்தமான் மியமுந்
தெரிதர வுரைத்தீர் மூர்த்திமான் மியமுஞ்
செப்புவேன் * றிருந்தவர் கேட்பக்
கரமலர் முகிழ்த்து விருதய மலரக்
கண்கலுழ்ந் தின்பநீர் பொழியப்
பரவிமெய் சிலிர்ப்பக் கடம்பநா யகன் சீர்
பாடுவான் சூதமா தவனே. (17)

தீர்த்த விசேடமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

ஆக திருவிருத்தம். (110)

---

* பெருந்தவமுடைய நைமிசாரண்ய வாசிகள்.

திருச்சிற்றம்பலம்.

# ஐந்தாவது

# மூர்த்தி விசேட முரைத்த அத்தியாயம்.

## ஸ்ரீ கடம்பநாதர் துதி.

சுருதியின் முடியே ஞானச் சோதியே யிருளை நீக்கும்
பருதியி னொளியே காலன் படவுதைத தவனே நாயேன்
கருதிய வரந்தந் தாளுங் கடவுளே கடம்ப நாதா
வருதியா னத்தின் பேறே வள்ளலே போற்றி போற்றி. (1)

(இ - ள்.) வேதங்களின் முடிவே! ஞானப் பிரகாசமே! புறவிருளை நீக்கும் சூரியனுக்குப் பிரகாச மளிப்பவனே ! காலன், தரையில் விழக் காலாலுதைத்தவனே! அடியேன் நினைத்த வரங்களைத்தந்து ஆட்கொள்ளுந் திருக்கடம்பவன நாதனே! தியானத்தின் பயனே! மோக்ஷத்தினை யருளும் வள்ளலே! நின் திருவடிகளுக்கு நமஸ்காரம் (எ - று.)

கொடியணி சிகரமாடக் கோதிலா வளங்க ணீடக், கடிமனை மாதராடக் * காரளி யிசைப்பண் பாடப், படியிரண் டேழு மேத்தும் படிவள ரிவ்வூர்ப் பாங்கர்ப், பொடியணி பரமன் கீர்த்தி போல்வளர் கடம்பொன் றுண்டால். (2)

சாற்றுமக் கடம்பி லென்றுஞ் சச்சிதா நந்த மாகி
வேற்றுமாய் விண்ணு மாகி வித்துமாய் விளைவு மாகிக்
† கோற்றொடி பாகமாகுங் கோதில்செஞ் சோதி தானே
போற்றரு லிங்க மாகித் தோற்றினன் புவன முய்ய. (3)

* கருநிறவண்டுகள். † வளைந்த கங்கணமணிந்த உமையம்மை

செங்கய லுகளும் வாவித் திருநக ருயிராய்ச் செல்வம், பொங்கிய சிகரக் கோயி லுயிரினுட் போத மாகித், தங்கிய கடபபந் தாரு தளர்வின்மெய் யன்பா யின்ப, மங்கள சுகசொ ரூப மிலிங்கமாய் வளர்ந்து தோன்றும். (4)

தவப்பயன் றழைத்து ஞானத் தண்ணருண் மலர்ந்து பாசப், பவத்துய ரகலக் காய்த்துப் பருப்பதக் கொடியாற் றேன்றச, சிவப்பொருண் மணந்தா ரின்பத் தேன்பொழிந் தமுத வாரி, கவர்த்தெழு கடம்பி னுள்ளோர் கருணையாங் கனிவொழ்ந் தோங்கும். (5)

‡அத்துவா விருமூன் றுய வண்டங்க ளெல்லாந் தோற்று
வித்தமூ லத்தி னுலும் விதிமுத லதிப ரெல்லாம்
நித்தம்வந் தேத்த லானும் நிறைதிருக கடம்பின் மேய
சுத்தமா லிங்க மூல லிலிஙகமாய்ச் சிறந்து தோன்றும். (6)

மூவருமாகி யந்த மூவர்க்கும் மூலமாகி, யாவையு மகன்ற ஞான நாயக னுலக மீன்ற, தேவியா வுடைய வம்மை பாக மாய்ச் சிறக்கு மிந்தத், தூவெளியிலிங்கந் தானே § யிருமைக் குந் துணையாய்த தோன்றும். (7)

கந்தன்வந் தேத்த லானுங் கடம்பநா யகனுங் கண் டோர், பந்தவல் லிருளை நீக்கும பரிசினுற் சோதி நாதன், * சிந்தலில் செல்வ நல்குஞ் சிறப்பினுற் செல்வ நாதன், நந்து மெண் சித்தி நல்கு நலத்தினுற் சித்தி நாதன், (8)

சரியைமுன் னுன நான்கு பயன்களுந் தருத லாலே, உரியநல் லுலக நாத னேங்குசீ ரம்மை யப்பன், மருவுபிர்த துணைவ னென்றும் வாழ்த்து சீர்க் குரவ னென்றும், பரவு மிவ் விரண்டு நான்கு திருப்பெயர் படைத்தா னெஙகோன்.()

‡ மந்திரம், வன்னம், பதம், தத்துவம், புவனம், கலை

§ இம்மை, மறுமைகள். * அழிவற்ற.

(வேறு)

† நிராமயநிஷ் களசகள நித்தபரி பூரணமாய் நிமல ஞானப் பராபரமாய்ப் பரவெளியாய்ப் பல்லுயிராய் நல்லறிவின் பயனு மின்பப், புராதனமா யைந்தொழிலும் புரியாது புரிந் தருளும் போதன் றானே, சராசரங்கட் கருள்புரிவான கடம்பநா யகனெனும்பேர் தரித்துத் தோன்றும். (10)

இத்திருமா நகரின்கட் சிவானந்த வடிவாமிவ் விலிங்கங் கண்டோ, ரத்தகைய பேரின்ப வருள்வீடு கண்டுதனை யக லாப் பாசக், கொத்தகல மெய்ஞ்ஞானக் குரைகடலிற் குளித் திரண்டோன் றன்றென் றோதும், ‡ பித்துணர்வு கெடத்தரு மெய்ச் சுத்தசிவ வத்துவிதம் பெற்று வாழ்வார். (11)

வழிச்செலவிற் புகுந்தேனும் பசிக்குணவு வேட்டேனும் வளர்பொன் வேட்டுஞ், செழித்தமலர்க் குழன்மாதர் திறத் தேனு மறந்தேனுங் கரவினேனும், பழிப்பில்புகழ்த் திருக் கடம்ப நாதனையோர் கால்விழியாற் பார்த்து ளோரு, மொழிப் பரிய தாகிமுனம் புரிந்தகொடும் பாவமெலா மொழிந்து வாழ்வார். (12)

கடம்பநா யகவென்று கேட்டவர்கள் சாலோகங் கண்க ளாரக, கடம்பநா யகனுருவங் கண்டவர்கள் சாமீபங் கருத் தொன் றாகிக், கடம்பநா யகனுருவ நினைத்தவர்கள் சாரூபங் காதல் செய்து, கடம்பநா யகன்றன்மை யுணர்ந்தவர்க டிரு வடியிற் கலந்து வாழ்வார். (13)

* புலரியிலிச் சிவலிங்கந் தெரிசித்தோர்க் கிரவுபுரி பவம் போய் நீங்கும், அலர்கதிர்நண் பகற்கண்டு தெரிசித்தோர்க் கிச்சென்மத தழுக்கு மாறும், மலர்தலைமா நிலத்† தேழு பிறவி வினை மாசறுக்கு மாலைக் காட்சி, நலமிகுநள் ளிரவின்கட் டெரிசித்தோ ரின்பநிலை நண்ணி வாழ்வார். (14)

---

† நோயின்மை. ‡ மயக்க அறிவு. * விடியற்காலை.

† தேவர், மக்கள், விலங்கு, புள், நீர் வாழ்வன, தாவரம்.

இந்தவருட் சிவக்குறிகண் டேத்தினோர் செய்தவினை யெல்லாம் வெய்ய, கொந்தழலிற் பஞ்செனக் கோபத்திற் றவமெனப்பெண் ணாசை கூர்ந்தோர், புந்திமிக வழிந்தென்ன ‡வுருமொலியி னரவினுயிர் போவ தென்ன, வந்தமறு நற்குணங்க ளுலோபத்தா லழிந்தென்ன வழியு மன்றே. (15)

இதுமுதல் மூன்றுங் குளகம்.

வற்றாது புனல்பெருகுஞ் சேயாற்றில் வைகறையின் வந்து மூழ்கி, வற்றாது தேன்பொழியு மலர்க்கடம்பர் திருக்கோயில் வலங்கொண் டேகி, வற்றாது மதம்பொழியுஞ் சித்தி மழ களிற்றினடி வணங்கிப் போற்றி, வற்றாத வருட்கடலாந் திருக்கடம்ப நாதமகா லிங்க வாழ்வை. (16)

அன்புமனங் கரைந்துருக வட்டாங்க பஞ்சாங்க மாகத் தாழ்ந்து, பின்புமுழ வலஞ்செய்து சன்னதியின் முன்னின்று பெருகு மன்பாற், பொன்பிறழ்செஞ் சடைமுடியு முக்கண்ணு நாற்றோளும் பாதப்§போது, மின்புருவா மாவுடைய வம்மை யொரு பாகமுங்கொண் டிருப்ப தாக. (17)

பொறிவழியிற் சுழலுமன மொருவழிக்கொண் டிடக் கண்டு போற்றப் பெற்றோர், அறிவுதரு கலைமகளுந் திருமகளும் பணிகேழ்ப்ப வவனி மீதே, வறுமை யற வாழ்வரவர் மனமறிந்து புரிந்தபிழை நூறு மற்றும், இறைவனருட் கடம்பநா யகனீக்கிப் பேரின்ப மெய்தச் செய்வான். (18)

கடம்படியின் முளைத்தெழுந்த கருணைபொழி யாரமுதைக் கருத்தொன் றாகிக், குடங்கையாள வாகியநீ ராட்டி யொரு மலரேனுங் குளிரச் சாத்தி, யொடுங்கரிய வுயிர்ப் போத மொடுங்கவொரு பலமேனு முதவி யெங்கோ, னிடந் தெரிய வொருபளித விளக்கேனு மிடுமவரே யிமையோ ராவர். (19)

‡ இடிமுழக்கம். § மலர்.

கருவாரைத் துடைத்தருளி யருள்கொடுக்குந் திருக் கடம்ப நாதர்க் கன்பாற், றிருவாரு மணிக்கலசங் குடமாதி * யடுகலன்கள் செய்விப் போருங், † குருவாரும் பரிவட்ட மாபரணங் கொடுப்போருங் குளிர்பூ மாலை, மருவாரத் தொடுப்போரும் வானுலகிற் ‡ சசியிருந்தோண் மணந்து வாழ்வார். (20)

அச்சுதனு மலரோனு மறிவரிய வருட்கடம்ப நாதன் ஞானப், பச்சைமலைக் கொடிபாகன் திருக்கோயி லலகிட்டுப் பாணியாரப், §பொச்சமறத் திருமெழுகிட் டேத்தினோர் நாரி யராய்ப் பிறவார் பூமே, லெச்சமிலெண் ணிரண்டான முகமற்ற பெறுபயனு மியம்பக் கேண்மின். (21)

சாற்றியவா வாகனத்தாற் பூரணத்தை யாசனத்தாற் சகலா தாரம், போற்றியபாத் தியமுதலா மூன்றானு மல மகன்ற புனித மாத, லாற்றுமபி டேகத்தா னிருமலரா மொற்றுடை யகிலந் தன்னுள், வேற்றுமையற் றிருத்தல் வரைக் கலையா ¶னிருலேபம் விளங்கித்தோன்றும். (22)

அணியணியி னெப்பொருளுஞ் சமமாதன் முந்நூல்பற் றற்று வாழ்தன், மணமலரின் வாசனைகண் மூன்றகலும் வளர் தூப தீபங் காட்டி, *லுணருருதன் னொளிதோன்று நிவேத னத்தா லுறுநித்த திருத்தி சோதித், துணருறுநீ ராசனத் தாற் றுனைத றுதிமுதலத் துவிதந் தோன்றும். (23)

---

* சமையற்பாத்திரம். † பெருமை. ‡ இந்திராணி.

§ குற்றம். ¶ அஸங்கம். * ஞானசொரூபம்.

வேறு

முதுமறை நான்கு மிந்த முகமறு நான்கு முத்தி
யுதவுமென் றுரைக்கு மன்றி யுயர்திருக் கடம்ப நாதன்
பதமலர் தொழுவார் வேற்றுப் பதியினுள் ளவரை நெஞ்சத்
திதமுற நினைவுற் றூரே யிருங்கதி யவர்க்கு மெய்தும். (24)

இன்னகர்க் கிறைவ னேயா மென்னையாள் கடம்ப நாதன்
பொன்னடிக்‡கார மாரம் பொருந்துதேன் றயில மாதி
நன்னிதி யாடை பூண்பொற் பாத்திர நடத்து மூர்தி
மன்னருட் பணிசெய் வோரு மலரயன் போற்ற வாழ்வார். ()

சீரணி கடம்ப நாதன் திருவுளங் களிப்ப பூமி
காரணி குழலா ராடற் கினிய விழாச்செய் விப்போர்
வாரணி †யியங்கள் செய்வோர் வாவிகூ வங்கள் செய்வோர்
§நாரணி கேள்வன் போலு ஞாலமே லோங்கி வாழ்வார். (26)

ஆவுடை யம்மைபாக னருட்செய லறிவி லாவோர்
நாவுடை யெளிய ரேனு நவிற்றுவன் வேத நான்கும்
பாவுடை மொழியா லின்னும் பகருதற் கடங்கா தென்றால்
சேவுடைக் கொடியோ னல்லா லியாவரே தெரிக்கற் பாலார்.

புண்ணிய கடம்பர் மூதூர் போலொரு தலமு மில்லை
புண்ணிய சேயா றென்னப் புவியிலோர் தீர்த்த மில்லை
புண்ணிய கடம்பநாதன் போலொரு மூர்த்தி யில்லை
புண்ணியம் வேட்டோ ரங்கட் பொருந்திவாழ்ந் திருத்தல்
[வேண்டும். (28)

---

† வாத்தியம். ‡ சந்தனக்காப்பு. § திருமால்.

தவம்பெறு கடம்பர் கோயிற் றலந்தீர்த்த மூர்த்தி யோதுஞ்
சிவம்பெறு செய்யுள் கேட்போர் படிப்பவரெழுதிச் சேர்ப்போர்
*நவம்பெறு பவர்க்கே தேனு முதவுவோர் ஞால மீதிற்
பவம்பெறு துயர நீங்கிக் கயிலையம் பதியை நீங்கார். (29)

சூதமா தவர்கோன் மேனாட் டேமா முனிவர் கேட்பக்
கீதமார் நகரந் தீர்த்த மூர்த்திசீர் கிளந்த வாறே
போதமார் புலமை கூரப் புகன்றனம் புகழ்ச்சி மேவுஞ்
சீதமார் பொழில்சூழ் கந்தாச் சிரமத்தின் சீர்மை சொல்வாம்.

மூர்த்தி விசேடமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

ஆக திருவிருத்தம் (140).

திருச்சிற்றம்பலம்.

# ஆருவது கந்தராச்சிரம வரலாறு உரைத்த அத்தியாயம்.

## ஸ்ரீ கடம்பநாதர் துதி.

அந்தராச் சிரம தாய்வே றமரர்பா லணுகி யானின்
பந்தராச் சிரம மேவாப் பதமருள் பரனே போற்றி
யிந்தராச் சிரம மேவத் தரித்தரு ளிறைவா போற்றிக்
கந்தராச் சிரம மேவுங் கடம்பநா யகனே போற்றி. (1)

(இ-ள்.) கந்தராச்சிரமமென்னும் பெயர் பொருந்திய திருக்கடம்பவன நாதனே! மூன்றாம்பிறைச் சந்திரனையும், ஸர்ப்பத்தையும் சிரத்தில் தரித்தருளும இறைவனே! (நின்னையன்றி) அழகிய பாரின்கண் தலைமையென எண்ணப்படும் மற்ற தெய்வங்களைப் போற்றி,யான், ஆநந்தவடிவ மோக்ஷத்தைத் தராத துன்பநிலையை யடையாமல், ஒரு நந்நிலையினை யருளும் பரனே! நுமக்கு நமஸ்காரம். (எ-று).

(வேறு.)

பொறிக ளைந்தும வித்துயர் புண்ணியத்
துறவின் மேம்படு தூயவ னேசொலுங்
குறைவில் சீர்க்கடம் பாரணி யங்குகன்
மறுவி லாச்சிர மப்பெயர் வாய்ந்ததென்? (2)

அருளு கென்ன வனைத்துமு ணர்ந்தருள்
பெருகு சூதப்பெ ருந்தவன் பேசுவான்
சுருதி நாதன் சுடர்க்கயி லாயமே
லருளி யுற்றன னுகம மன்னைபால். (3)

உரைத்த காலையி னுத்தமி வேறொரு
கருத்த ளாகக் கடவுள்ச பித்தலால்
விரித்த வாகம முற்றும் விநாயகன்
முரித்து வார்கடல் வீசினன் மூழ்கவே. (4)

வேலெ டுத்த விசாகன் வெகுண்டிறை
பா*லெ டுத்த பதிபசு பாசநன்
னூலெ டுத்துவி ரிகட னூக்கினன்
ஆல டுத்தரு ளாதிய மூன்றனன். (5)

சமய மின்மைய றிந்திலை தானிவர்
நமைய டுப்பவி டுத்தலின் நந்திநீ
†துமியு மீனுரு வாகெனச் சொல்லியே
குமர வூமையிற் றோன்றெனச் செப்பினான் (6)

கூறுங் காலைக் குமரன்வ ணங்கிவெள்
ளேறு கந்தவி றைவனை வேண்டலு
மாறு சூடும மலன றைகுவான்
தேறு கூடற்ப தியினிற் சென்மித்தே. (7)

சங்க மேவுந் தமிழ்வலர் சங்கைநீ
யங்க கற்றி யருட்கடம் பாபுரி
தங்கி நற்றவஞ் செய்திடிற் சண்டவேற்
செங்கை யாயருள் செய்துமென் றோதினான். (8)

உன்னு வேழமு கத்தனை யோதினற்
றன்னை மேவவிற் சாபமு ரைத்திலான்
கன்னி பாண்டிநன் னாட்டின்க டற்கரை
மன்னு மீனவர் பான்மக வாயினாள். (9)

---

† அறக்கப்படும்.   * பொருந்திய.

நந்தி யாகமம் வாய்கொடு நற்கட
லுந்து மீனென வுற்றனன் கூடலிற்
குந்த மேந்துங் குமரன் வணிகர்பால்
வந்து மூகை மகவெனத் தோன்றினன். (10)

வலைகொண் டாகமம் வாய்கொண்ட மீன்படுத்
திலைகொள் சூலத்தி றைவனி றைவியை
யலைவி னன்மண மாற்றி யவரொடுங்
கலையுங் கொண்டு கயிலையி னெய்தினன். (11)

ஊம னாகுங்கு டானவ் வூரின்*வாழ்
வாம மார்சங்கத் தாரைய மாற்றியே
காம னைகம்பொ டிசெய்க டவுளாஞ்
சோம சேகரன் பாதந்து திசெய்தே. (12)

மூகை யாமிம் † முடையுரு நீங்கவு
மாக மப்பொரு டோவு மையமீ
யோகை யோடரு ளென்னவு மையொரு
பாக மான பரமன் பகருவான். (13)

(வேறு.)

இதுமுதல் மூன்றுங்குளகம்

மழலை மென்மொழிக் குமரகேள் வருமலப் பகையா
யழகி னுக்கெலா மணியதாய் நமதரு ளதுவா
யெழில்கொ ளெவ்வகை ‡யூழியு மழிவுறா வியல்பாய்ப்
பழுதி லாதமெய்ஞ் ஞானமே யளித்திடும் பதமாய். (14)

சித்தி யாவையுந் தருவதாய்த் தென்றமிழ்ச் சிறப்பாய்
முத்தி யாவையும் பலிப்பதாய்§ முக்குறும் பகற்றிப்
பத்தி யாவையுந் தருவதாய்ப் பலவள முடைத்தாய்ப்
புத்தி யாவையுந் தருவதாய்ப் பொருவிலா ததுவாய். (15)

* வாழ்வு-ஆம்-அம்-ஆர்-சங்கத்தார். † இழி பிறப்பு
‡ பிரளயம் § ஆணவம், மாயை, கன்மம்.

சிறந்த காஞ்சிமா நகரினுந திருச்சிற்றம் பலத்துஞ்
சிறந்த வாலவாய் கயிலேயா தியதிருத தலத்துஞ்
சிறந்த மந்திரப் பொருளினு மந்தணத் திருவாய்ச்
சிறந்து நான்முறைந் திருப்பது திருக்கடம் பேசம். (16)

பீடுசேர் திருக் காஞ்சியில் வித்தியா பீட
நீடுநாம் புகல் நீபமா வனமிது நிறைசீர்
கூடும் யோகபீ டங்குல விடுமது குறித்தாங்
கீடிலாத் தவ மியற்றுகென் றருளின னெங்கோன். (17)

எந்தை யோதிய வாசகங் கேட்டிலே வேற்கை
கந்தர் காஞ்சியின் றென்றிசைக் கடம்படா நகரின்
வந்து மாதிடப் பாகனைக் கண்டுள மகிழ்ந்தார்
தந்தை தாயரை நோக்குறி லுவகையார் சாரார். (18)

அன்பி னுன்விதிப் படியவன் றனையருச் சித்துப்
பின்பு யோகபீ டத்தினில் வேற்கரப பெருமா
னின்பி னேற்றலு மியம்புதற் கருஞ்சிவ ஞான
முன்பு தோன்றிநின் றருளினன் கடம்பில்வாழ் முதல்வன். ()

ஆத லாற்றிருக் கடம்பமா நகரினை யறிந்தோ
ரோது சீர்த்திருக் கந்தராச் சிரமமென் றுரைப்பா
ரீது கேட்டுளேன் வியாதனுங் குருபா னிடத்தே
மாத வத்தினீ ரென்றனன் வார்சடைச்சூதன். (20)

கலப மஞ்ஞையுங் * கலுழும் மதப்பெருங் களிறுங்
குலவு மேடமு மூர்ந்தருள் குமரவேட் கருளா
னலமெய்ஞ் ஞானமெங் கோனருள் புரிந்தமை நவின்று
மிலகு மத்தலத் தசப்பெயர் மகிமையு மிசைப்பாம். (21)

கந்தராச்சிரம வரலாறு உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

ஆக திருவிருத்தம். (161)

---

* பொழியும்.

திருச்சிற்றம்பலம்.

## ஏழாவது தசநாம மகிமை யுரைதத அத்தியாயம்

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

உருக்கடயப வனமருந்து முரகமுலே யல்குலா
வுடையாள் கேள்வ
னருக்கடம்ப வனமலரு மணிந்தசெஞ் சடாமகுட
னரனே டொன்னார் [குத்
தருக்கடம்ப வனக்கணியா னுகங்கொண் டருள்சேய்க்
தனிவா டந்த
திருக்கடம்ப வனநாதன் சாரு விந்தமலர்
சென்னி சேர்ப்பாம். (1)

(இ - ள்) அழகிய குடத்தையும், காற்றினையருந்தும் சாப்பத்தின் படத்தையும் முறையே நிகர்த்த ஸ்தனங்களையும் அல்குலையு முடைய ஆவுடை நாயகியாருககுத் தலைவனையும், வெள்ளெருக்கு அடம்பு என்னுமிவற்றின் அழகிய மலாகளைச் சிவந்த ஜடாமகுடத்திற் றரித்தவனையும், மும்மதில்களையுடைய திரிபுரங்களுடன் அங்குள்ள அசுரர்களின் அகங்காரத்தை யழித்தவனையும, வனமாலையை யணிந்த திருமாலை அமபாய்க்கொண்டவனையும், குமாரக்கடவுளுக்கு ஒப்பற்றவாளை யருளிச்செய்தவருமான திருக கடம்பநாதருடைய சாணாரவிந்தங்களைச் சிந்தை செய்வாம. (எ-று)

மண்ணேந்துஞ் செஞ்சூட்டுப் பணியரசும் புகழரிய
மகத நாட்டில்
விண்ணேந்துங் கடவுளரும் வியப்பெய்து மொருநகரம்
விஜய மென்னத்
தண்ணேந்து மலர்ப்பொழில்சூ ழந்நகரத் தொருமறை
தவத்தின் மிக்கோன் [யோன்
பெண்ணேந்து மொருபாகன் பூசைபுரி வோனவன்பேர்
பிரம நேசன். (2)

அன்னவருக் கரும்புதல்வ ரெண்மரவர் பெயர்சோம
னனகன் வேதன்
பன்னகபூ ஷணன்விபுலன் பவுததிரனஞ் சன்னிருத்த
பாத னென்ன
வின்னவர்நான் மறைமுதல வெல்லாநூல் களுந்தெரிந்தா
ரினைய நாளின்
மன்னுமுல கினிற்பெரிதா யுரைத்திடுமெண் சித்திபெற
மனம்வைத் தாரால். (3)

வைத்தவரந் நகர்க்கண்ணே யருமறையு மாகமும்
வடித்த நாவான்
சித்தமய லற்றவிபண் டிதனென்றோ ரருமறையோன்
சிறப்பின் வாழ்வா
*னத்தவனை யடுத்தேத்தி யட்டமா சித்தியும்யா
மணுக வேட்டே [கேட்
மித்தரையிற் பெறவருளென் றிசைத்தனரப் பெரியோன்
டியம்பு கின்றான். (4)

பூசுரர்தங் குலத்தின்வரு புத்திரர்கா ளெம்பானீர்
புகுந்த வேட்கைத்
தேசுதரத் தந்திடவல் லேமல்லே மாயினுமச்
சித்தி யெட்டும்
வீசுபுகழ் பெறக்கிடைக்கும் விதம்புகல்வாம் பதுமபுர
மென்ன மேலோர்
பேசுநகர் தனிலுள்ளான் றற்புருட னெனுமறையோன்
பெருமை மிக்கான். (5)

---

* அர்த்தத்தவசியை.

வேதமெழு நான்கென்ன விளங்குமா கமமுதனூல்
விரிவி னுய்ந்தான்
சூதமுனி யெனநாளுஞ் சிவகதைக ளுரைசெய்வான்
றொடர்ந்தங் கெய்தி
யாதரவிற் கேட்டுலகில் *அலகிலோ ரவனருளா
லனுட்டித் துள்ளங்
காதலித்த தடைந்திருந்தார் நீவிருமம் மாதவனைக்
கடிதிற் சேர்ந்தே. (6)

இட்டமுரைத் தரன்கதைகேட் டவனருளா லெய்துவீ
ரென்னக் கூறி
விட்டனனம் மறைச்சிறுவர் தற்புருட மேலோனை
விரைவி னெய்திக்
கட்டமக லப்பணிந்தா ரன்னவனு முகமனொடு
கருணை நல்கிக்
கிட்டுசுதர் காள்நீவிர் யாரெனத்தம் மூரொடுபேர்
கிளந்தா ரன்றே. (7)

என்னவிழைந் தெம்பாணீ ரெய்தினீ ரெனவேட்ட
திசைத்தார் மைந்த
ரன்னவரைப் பார்த்திப்போ தருட்கடம்பநகர்ப்பெருமை
†யடுத்த வாற்று
‡மின்னவைகேட் டனுட்டிப்பினெய்துவீரெனப்புகன்று
னிருந்து மைந்தர்
மன்னுமுடன் மயிர்ப்பொடிப்ப விருகணீ ராரமன
மகிழ்ந்து கேட்பார். (8)

---

* எண்ணிறந்தவர். † பிரசிங்கிக்க நேர்ந்த காரணத்தினுல்.

‡ தசநாமங்களின் பெருமையை.

தவநகரம் முத்திபுரம் யோகபுரம் ஞானபுரம்
சாற்றுஞ் சீர்சால்
சிவனருளு மன்னபுரம் வெற்றிபுரங் கலியாணச்
செல்வ மூதூர்
புவிபுகழுந் திருக்கந்த ராச்சிரமந் திருக்கடம்பர்
கோயில் பூமேற்
பவமகலுந் திருச்சத்தி பீடமெனப் பெயர்பத்தும்
படைத்த தவ்வூர். (9)

ஆதியினிற் சாகமெனுந் தீவதனைப் புரந்திடுநா
லரசர் மேவித
தீதிறவ மாற்றுதலிற் றவநகரங் *குறளைபிறர்
செய்யக் கேட்டே
கோதிறவங் கொன்றபிழை தீர்ந்துசிவ கதியிருவர்
கூட லாலே
மூதறிவீ ரந்நகர முத்திநக ராகுமென
மொழியும் வேதம். (10)

திருவால வாயிலர னருண்மேவிச் சிவகுமரன்
சேர்த லாலே
யொருவாத யோகபுரஞ் சிவஞான மவர்க்கெங்கோ
னுதவ லாலே
யருளாரு ஞானபுரஞ் சிவகுமரன் படைஞர்முத
லானோர்க் கெல்லாம்
†பெருகார்வங் கெடவன்னஞ் சிவனருளி யன்னபுர
மாமப் பேரூர். (11)

* கோள் சொல்லுங் குற்றம்.

† பசியாற்றோன்றிய உணவு விருப்பம்.

கற்றவன்செய் வேள்விதனை யட்டவரை யடக்கடம்ப
நாதன் முன்னங்
கொற்றநெடு வாளருளும் பெற்றிமையின் வெற்றிபுரங்
கோதின் மன்றல்
*பெற்றமுயர்த் தவன்புரியக் கலியாணப் பெரும்பதியாம்
பேணிச் செவ்வே
யேற்றுநெடுந் தவம்புரியக் கந்தராச் சிரமமென
வோங்கு மவ்வூர். (12)

வெம்பகைவென் ருறுமுக வேந்தர்புரி வித்தமையாற்
கடம்பர் கோயி
†லம்புதும வாசனமுற் றம்பைதவ மாற்றுதலிற்
சத்தி பீடஞ்
செம்பொனெடு மணிமாடத் திருநகரிப் பெயர்பத்துஞ்
சிறந்து தோன்றி
யம்புவியிற் புகன்றவர்தம் பிறவிநோ யகற்றுமருந்
தாய தன்றே. (13)

என்றுமறை யோனுரைப்பக் கேட்டுமன மகிழ்மைந்த
ரெழுந்து போற்றி
துன்றுமிவை யனுட்டிக்கு முறையுமெமக் கருள்செயெ
தூயோ னென்னோர்க் [னத்
கன்றதுவு மருள்செய்யப் பெற்றனர்தம் மிடத்தடைந்தவ்
வாறு நோற்றார்
நன்றுலகங் களிப்பெய்தச் சின்னாளிற் சித்தியெலா
நணுகி வாழ்ந்தார். (14)

---

* இடபம். † ஆசனவகைகளி லொன்றான கமலாஸனம்.

அட்டமா சித்தியென்ப தணுவினுமை யுருக்கொள்ள
‡லளற்றிற் ரேய்ந்து
பட்டிடா துறன்மலையிற் பருத்தல்வேண் டியவெல்லாம்
பலித்து வாழ்தல்
இட்டமா யாயிரமா தரைக்கூடல் வலியினரு
மேத்தல் யாரு
மட்டிலா விழைவுறுதல் வலியினருந் தடுப்பரிதாய்
வாழ்த லாமே. (15)

உரைத்திடுமிச் சித்தியெலாம் பெற்றுநெடுங் காலநிலத்
துறைந்து பின்ன
ரிரைத்தநதி முடியிறைவ னெழிற்கயிலை மலையடைந்தா
ரதனு லென்றுந்
தரைத்தலையார் கடம்பநகர் பெயர்பத்து முரைத்தவர்கள்
சாற்றக் கேட்டோர்
*வரைத்துமனத் தெண்ணினரிம் மூவர்களு மலர்மாதர்
மருவ வாழ்வார். (16)

கந்தர்தம தாச்சிரமத் தீரைந்து திருப்பெயருங்
கணித்தெண் சித்தி
முந்துமறைச் சிறுவர்பெறு முறைமைதனை விரிவுபெற
மொழிந்தா மும்மைச்
செந்தமிழும் வடகலையுந் தெரிந்தவர்க்குக் கற்பகம்போற்
சிறந்து நல்குஞ்
சுந்தரர்வா ழத்தலத்தி னத்திபூத் தமையுமினிச்
சொல்லு வாமால். (17)

தசநாம மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். (178)

‡ சேறு. * விரும்பி.

திருச்சிற்றம்பலம்.

# எட்டாவது அத்திபூத்த அத்தியாயம்.

## ஸ்ரீ கடம்பநாதர் துதி.

பொங்கார மூரற் புகழாவுடை யம்மை வாம
பங்கார மேவும் பதியைக்கதிர் வேலர் வேண்டச்
சங்கார வாளொன் றருளெந்தையைத் தாம மேற்றுஞ்
சிங்கார மாடக் கடம்பேசனைச் சிந்தை செய்வாம். (1)

(இ - ள்.) பிரகாசிக்கும் முத்துக்களைப்போன்ற தந்தவரிசைகளை யுடைய ஆவுடை நாயகியார் இடது பாகத்திலே அமைத்தருளும் கர்த்தாவை, கதிர்வேலையுடைய குமாரக்கடவுள் (மலைய மாகரர் களை ஜெயிப்பதற்கு ஓர் ஆயுதம் வேண்டுமென்று) வேண்டச் சங்கார வாளை யருளிச்செய்த எமது ஐயனை, முத்துமாலைகள், புஷ்பமாலைகள் எற்றியுள்ள அழகிய மாடமாளிகைகள் நிறைந்த திருக்கடம்பமா நகரத்திலுறையும் ஈசனைத் தியானிப்பாம் (எ - று).

திருவுற்ற செல்வத் தமிழாய்ந்தறி சீர்த்தி மேவிக்
கருவுற்ற கண்ட னருட்சைவமெய்க் காட்சி காட்டித்
தருவுற்ற ஞானப் புனல்சூழ்ந்தது தக்க மேலோர்
மருவுற்ற தொன்மைப் புகழ்பூண்டது வையை நாடு. (2)

கல்விப் பொருளாய்ந் தவர்வந்து களித்துமேவச்
செல்வப் பொருளீந் துயர்சீர்க்குடி சேர்ந்து வாழ
நல்வித் தகமிக் கவிந்நாட்டினந் *நாக நாடு
†மொல்கித் தொழுஞ்சீர் வளமேவி யுயர்ந்த தோரூர். (3)

---

* சுவர்க்கம். † தாழ்ந்து.

வேறு.

அப்பொற் பதிதான் றருமநக
ராகு மென்ப ரறிவுடையோர்
செப்பத் தகுமத் திருநகர்வாழ்
செல்வ மறையோர் குலதிலகன்
மெய்ப்பற் றுடையான் பொய்ப்பற்றை
வெறுத்தா னறிவான் மேதினிமே
லொப்பற் றுயர்ந்தா னருளுடையா
னோங்கு மவன்பேர் குணசீலன். (4)

ஞாலம் பரவு மவன்மனையா
ளாமக் தரும வதியென்பாள்
கோலம் பரவு திருவனையாள்
குறித்த பொறையிற் புவியனையாள்
சீலம் பரவு மருந்ததிபோற்
சிறந்தா ளிவட்கோர் திருமைந்த
னலம் பரவு கருமிடற்று
னருள்போற் பிறந்து வளர்ந்திருந்தான். (5)

*திங்கள் விரவும் பெயர்தரித்தான்
சிறந்த புதல்வற் கிருவகையாந்
துங்க மணமுந் தொகையறியாத்
தூய கலையும் பெருமறையுஞ்
† சிங்க லின்றிப் புரிந்தளித்தான்
சிந்தை மகிழுங் குணசீல
னங்கப் புதல்வன் றனையொருநாட்
டனியே யழைத்தொன் றருள்புரிவான். (6)

---

* புத்திசேனன். † குறைவின்றி.

தந்தை மொழிகேட் டியல்பவனை
தக்க புதல்வ னாதலினா
னந்த முறுநா ளிறுகடனீங்
காற்றி யேனைக் கடனெனவையுந்
இந்தை மகிழ்வார் காசிதனிற்
செய்தென் னெலும்பும் பகிரதியிற்
பந்த மறவீழ்த் திடுதியெனப்
பகர்ந்தான் மறைதேர் குணசீலன். (7)

பின்பு சிலநாட் கழிந்திறந்தான்
பெற்ற மறையோ னுரைத்தபடி
யென்பு தனையோர் குடத்திலமைத்
தினிய சீடன் கரத்தளித்தே
யன்பு தருநன் மதிசேன
னன்றேகாசி யணைபவன் போல்
முன்பு சீடன் விரைந்தேக
முயன்று நடந்தான் வினைகடந்தான். (8)

கானு மலையும் பெருநதியுங்
கடுங்கற் * சுரமுங் கடந்துபெரு
வானும் பரும்வர் தினிதேத்த
வளருந் தொண்டைத் திருநாட்டின்
ஞானந் தருதண் டகவனத்தி
னல்ல கந்த ராச்சிரமத்
தானு முயிருங் கரைந்துருகு
முச்சிப் பொழுதங் குறவணைந்தான். (9)

* பாலைநிலம்.

அடைந்து கந்த ராச்சிரமத்
தருளுத் தாவா இனியாற்றிற்
குடைந்து சந்தி புரியுங்காற்
* கூல மிருந்த மாணவகன்
† மிடைந்த சுமையிற் புதுமணமொன்
றெய்தக் கண்டு வியந்துவிரைந்
திடைந்த வெலும்பார் கடமதனை
யவிழ்ப்ப மலரா யிருந்ததுவே. (10)

கண்டா சிரியன் றனக்குரையான்
முன்னைப் படியே கடமதனைக்
கொண்டா னடிசி லமைத்ததற்பின்
குலவி யருந்திக் குரவோனும்
வண்டார் பொழிற்க ணன்றிருந்து
காசி யணைந்து வரன்முறையால்
விண்டாழ் நதியி லிடவெடுத்தான்
வெள்ளை யெலும்பா யிடப்புகல்வான். (11)

‡செற்ற மறுசீர்க் குருபரனே
சிறியேன் வியப்பொன் றறிவேன்மு
னுற்ற துரைத்தா லற்றதுவந்
தொன்று மென்னும் பழமொழியான்
மற்ற துரைப்பேன் முனமஞ்சி
வழங்கா திருந்தேன் சேயாற்றிற்
குற்ற மறமுற் பலமலராய்க்
குலவிற் றிதுவே குடத்தகத்தே. (12)

* ஆற்றங்கரை. † இறக்கின. ‡ கோபம்.

எனமா ணுக்க னியம்புரைகேட்
* டிறும்பூ தெய்தி வரும்பெரியோன்
சினமால் விடையோன் செயலெவரே
தெளியத் தருவார் காசியினு
மூனமா மலராங் திருத்தலந்தான்
பெரிதோ முழுது மிவன்மொழியை
† வனமாங் கெய்தி யறிந்தவ்வாற்
றமைத்தல் வேண்டு மற்றிதுவே. (3)

அவ்வா றமைக்கத் தாதையுரை
யன்றே யின்று ராசிரியன்
செவ்வாய் மொழியை மறுத்தவரே
தீவாய் நரகிற் சேர்வரிதை
யெவ்வா றிடுவே னெனப்புத்தி
சேன னெண்ணி யிடருழந்து
தெவ்வா னவரு ரெரித்தவனே சிவனே
தெளிவொன் றறிந்திலனே. (14)

எந்தா யிறைவா வடியவற்கோ
‡ ரெய்ப்பினிடத்தின் வைப்பேயென்
சிந்தா மணியே தெள்ளமுதே
திரள்கானரியைப் பரியாக்கித்
தந்தா யிதழி நறுந்தாராய்
தமியேனிடர்தீர்த் திடவிங்கே
வந்தாண் டருளென் றிடச்சிவனோர்
வானமொழியா லருள்புரிவான். (15)

---

* ஆச்சரியம் † திருக்கடம்பவனமாகிய அத்தலத்திற்குச் சென்று வறுமை.

சிறந்த காசி யிதினுமிகச்
சிறந்ததலமின் றாயினுமிங்
கிறந்த பொழுதாம் பதமுத்தி
யியம்புங் கடம்பர் கோயிலின்வந்
துறைந்த பொழுதே பாமுத்தி
யுதவு மதனாற் காசியினு
நிறைந்த பெருமை யுடையதுநா
னீங்கா துறையும் பதியதுவே. (16)

அலர்சூழ் கங்கா நதியினுமுன்
னைய னுரையுந் தவறாதே
சிலவென் பமைத்துப் பலகொடுபோய்ச்
சேயாற் றிடுகென் றானருளான்
மலர்வான் மொழிகேட் டருமறையோன்
மகிழ்ந்தவ் வணமே விட்டெழுந்து
குலமா மலர்சூழ் திருக்கடம்பர்
கோயில் புகுந்தான் குறைதீர்ந்தான். (17)

(வேறு.)

மன்னுங் கந்தராச் சிரமம்வந் திடுதலு மவரும்
பொன்னுந் தெண்டிரை வீசிடும் புகழ்க்குக நதியிற்
றுன்னுங் காற்றுநீர்த் துளிதனைத் தூவவெள் ளெலும்பு
மின்னு மாமல ராயிடக் கண்டனன் வியந்தான். (18)

உரைத்த சீடனைத் தழுவினன் புகழ்ந்தன னுனைப்போற்
றரைக்கு ளாரெனக் குயிர்த்துணை யாவர்நின் சார்பாற்
பாத்தை யேகுறித் திருந்தநந் தாதையும் * பவம்போய்த்
† திரத்தை மேவிய வீட்டினைச் சேர்ந்தன னென்றான். (19)

---

* ஜனன மரண மற்று.

† அகண்ட பாவனையை.

திகழு முத்தர வாகினிச் சேய்நதி யாற்று
மகிமை யோதிருக் கந்தராச் சிரமஞ்செய் மாண்போ
புகழு மிக்கடம் பேசனு ரருள்புரி பொற்போ
பகரு மென்பிவண் பூத்ததென் ருடினன் பரவி. (20)

சீட ணேடுமக் கங்கையிற் சிறந்த சேயாற்றி
ளூடி நான்மறைப் படிபிதுர்க் கடனுமங் காற்றி
யேடு நீடுமவ் வென்பல ரிணைதனை யீன்ரோன்
வீடு சேர்கவென் றந்நதிப் புனலிடை விடுத்தான். (21)

புத்தி சேனனென் றுரைபெறும் பூசுரன் புனன்மீ
தத்தி பூத்ததை யமைத்தலு மனையவன் றாதை
முத்தி சேர்ந்தன னுதலின் முருகன்மா நதியிற்
சித்த மன்பிலா ரென்புவீ ழினுஞ்சிவ கதியே. (22)

பத்தி யாற்புக லிக்கிறை யென்பையோர் பாவான்
முத்த வாணகை யாக்கிய பதியுமப்போது
நித்த மூன்றலர் தருந்திருத் தணிகையு நிகழ்த்தி
னத்தி பூத்தவித் தலத்தினுக் கிணையென லாமோ. (23)

சிறந்த வித்தலப் பெருமைகண் டாயிடைச் சின்னு
ளறந்த வாதுசே யாற்றினிற் படிந்தருட் கடம்பி
னிறங்கொள் செஞ்சடை நின்மலக் கொழுந்தினை யேத்தித்
துறந்து ளோர்க்குமங் கரியவீ டடைந்தனர் தூயோர். (24)

இன்பு சேர்கந்த ராச்சிர மத்திரு நதியி
னென்பு செங்கழு நீர்மல ரானதை யிசைத்தா
மன்பர் சூழுமத் தலத்திடை யமலனை யேத்தி
முன்பு நால்வர்வந் தருந்தவம் புரிந்தமை மொழிவாம். (25)

எட்டாவது அஸ்திபூத்த அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆக திருவிருத்தம். (203)

திருச்சிற்றம்பலம்.

# ஒன்பதாவது * சூராதிகள் தவம்புரிந்த அத்தியாயம்.

## ஸ்ரீ கடம்பநாதர் துதி.

தேடு மாலயற் கரியது திருவருட் சிறப்பாற்
கூடு மாதவ ருளத்தது குளிர்ந்தவம் பலக்கூத்
தாடு மாகமப் பொருளதென் னகவிரு ளகற்றி
நீடு சீர்த்திருக் கடம்பர்கோ யினிறிக மொளியே. (1)

(இ - ள்) - (வெளியே கண்டறிய வேண்டுமென்று) தேடும் பிரம்மா விஷ்ணுக்களுக்குக் காண வரிதாயும் சிற்சத்தியின் திருவருளால் ஸோஹம்பாவனை செய்யும் ஞானிகளின் ஹிருதய கமலத்தில் விளங்குவதாயும், உபசாந்த சிற்சபையில் ஆநந்த நிர்த்தனஞ் செய்யும் வேதாகமங்களின் பொருளாயும் உள்ளது அடியேனது மனவிருளை நீக்கித்திருக்கடம்பர் கோயிலின் கண் வீற்றிருக்கும் ஜோதி ஸ்வரூபமேயாகும் - (எ - று).

(வேறு.)

செப்ப ரும்புகழ் பொதிதருஞ் சாகத்
தீவ கத்தினைச் செய்யகோ னடத்துந்
தப்பில் சீர்ப்பிர பாகர வேந்தன்
றனையர் நால்வர்கள் சூரனெ பதும
னொப்பில் சிங்கனே தாரக னென்ன
விவரிற் சூரனுக் கணிமுடி சூட்டி
வைப்ப ளித்திடுஞ் சுணிமயொழித் தன்றோன்
மீனயொ டுந்தவ வனம்புகுந் தனனால். (2)

---

* குறிப்பு :— சுப்பிரமண்ணிய பராக்கிரமம் "87 - வது பதங்காப வர்க்க மூர்த்தி" பராக்கிரமம் பார்க்க.

தந்தை போயபின் சூரனுந் தனைநேர்
தம்பி மாரொடுஞ் சார்ந்துவாழ் நாளிற்
* சந்த ஞசல முனிவனங் கடுப்பச்
சயங்கொள் சூரனும் பதுமனும் போற்றி
யெந்தை யாம்பவப் பிணிதவிர்ந் துய்வான்
இயம்பு வாயொரு பொருளென வவனும்
புந்தி யாலொரு கணப்பொழு தெண்ணிப்
புகலு வானவ ரகமலர் களிப்ப. (3)

கரண மியாவையுங் கடந்தது நிறைந்த
கருணை யங்கட லானது சனன
மரண நீப்பது தனைநிக ராகி
வாச கங்கடந் ததுமனக் குகையிற்
கிரண பானுவி னொளிர்வது வேதங்
கிளக்கு மாகம முதற்கலை தோன்றும்
பிரண வப்பொரு ளானது பரவும்
பெட்பி னோர்க்கருள் வடிவுகொண் டதுவே. (4)

பொங்கு பேருணர் மூவிரு முகமும்
பொருந்து மாறிரு †நோக்கமுங் கமலச்
செங்கை வேலுடன் பன்னிரு படையுஞ்
செய்ய கிண்கிணிப் பாதமுங் கொண்டே
மங்க ளம்பெறு கடம்பணி புயத்தன்
வடிவ மேதின மனந்தனி லினைத்தே
யங்க வன்மயில் வாகனந் துவச
மாயி னுங்களுக் கழிவிலை யென்றான். (5)

---

* அகத்தியா. † நயனம்.

என்று கூறிய முனிவனைப் பின்னு
மேத்தி மன்னவ ரியம்புவர் தவத்தோய்
நன்று சொற்றனை யிவற்றினை யாங்க
ணணுகு மார்க்கமு நவிலென விரப்பத்
தென்ற லார்பொழி லுவலந் தீவிற்
றிரைகொ ளுத்தர வாகினிச் சேயா
ரொன்று கந்தராச் சிரமத்திற் றவநீ
ருளுற்றி டிற்சில வாண்டினி லுறுவீர். (6)

விரத ராகியங் கருந்தவம் புரிந்து
வேட்ட வாறடைந் தார்களெண் ணிலராஞ்
* சரத மென்றுதென் மலைமுனி யகன்றான்
சிங்கன் றாரகன் றமதிடத் தொருகாற்
றிரண விந்துவந் தடுதிறற் காளி
செலுத்து மூர்த்தியா யையன்வா கனமாய்ப்
பரவி யாமினென் றவர்க்குமத் தலமே
பன்னி யேகின னன்னமா தவனே. (7)

செந்த மிழ்க்கிறை செவியறி வுறுத்தத்
தெளிந்த சூரனும் பதுமனுந் திரண
விந்து மாதவ ரருளிய துணர்ந்த
வெற்றிச் சிங்கனுந் தாரகன் றானுங்
கந்த மூர்த்தியுந் துவசமும் வலிசேர்
காளி யூர்தியுங் கண்ணுதல் திருமான்
மைந்த னூர்தியு மாவதே கருதி
வரம்பெ றத்தவம் புரிந்திட நினைவார். (8)

* நிச்சயம்.

பொகுட்டுத் தாமரைப் புண்ணியன் றருமேழ்
புணரி சூழுமிப் புவியிரே ராறாய்
வகுத்த தீவெலாம் போகமே வழங்கு
மற்றை நாவலந் தீவெனி லெவர்க்குந்
தொகுத்த போகமு மோக்கமுங் கொடுக்குந்
தோகை பாகன்வா ழிடம்பல வாகி
* மிகுத்த தென்றற வோர்சொலுந் தலத்தே
மேவி நோற்றியாம் விழைந்தவா றடைவாம். (9)

இதனை யன்றிவே றிருங்கதி வருமா
றில்லை யென்னநான் மன்னரு மியைந்தே
† கதனை சிந்தைய ராயொருப் படுங்காற்
கருதி முன்னவ னரசியற் கையிற்றன்
சுதனை வைத்துடன் மேருவின் றென்பாற்
றொண்ட நாடெனுந் தோகைகண் மணியா
மதனை வென்றகட் கடம்பநா யகன்வாழ்
வனப்பு மிக்குயர் தலத்தின்வந் தடைந்தார். (10)

அடைந்த நால்வரு முத்தர முகச்சே
யாற்றி னுடிநன் னியமமு மாற்றி
‡ மிடைந்த செம்மணிக் கோயிலை வலமாய்
மேவி யாவலிற் கடம்பநா யகனைக்
கடைந்தி டாவழு தினைத்தொழு துருகிக்
கரைந்த வன்பின ராயரி தகன்று
குடைந்து வண்டிமிர் மலர்ப்பொழி லிடைமுன்
குறித்த வாறிருந் தருந்தவம் புரிவார். (11)

---

* சிறந்தது.

† கதம் + நை.

‡ நெருக்கமாய் மணிகளையிழைத்த

ஐந்து தீயிடை யமர்ந்துநீ ரிலைகா
யருந்தி யும்பல பகலுண வகன்றுங்
கொந்த முற்படு வேனிலின் வெயிலிற்
குளிரு முன்பனி பின்பனிப் புனலின்
*மைந்து கொண்டுநின் றைம்பொறி யடக்கி
மன்னர் நால்வரு முன்னிய பெறுவா
னிந்த மாதவ மன்றியும் பலநோன்
பியற்றுங் காலையி னடந்ததை யிசைப்பாம். (12)

இன்ன வாறிவ ரருந்தவஞ் செய்ங்கா
லெள்ளி லாதுயர் வெள்ளியங் குவட்டிற்
றன்னை யேநிக ருமையொரு பாகத்
தம்பி ரானருட் டிருனடந் தொழவே
பின்னை நாயக னாதிய வானோர்
† பெயரு மூர்தியைத் தாழ்வரை நிறுத்தி
முன்னி மீச்செலக் கலுழனோ டனமு
முருக னூர்தியை யடுத்திது மொழியும். (13)

வைய கந்தொழுஞ் சாகத் தீவகத்தின்
மன்னர் நின்பதம் வாரணம் பெருமை
‡ யையை யூரரி சாத்தன தழகா
ரானை யாம்பெரு வாழ்வும்வந் தடையப்
பொய்யில் வான்றவ மனமுதன் மூன்றும்
பொருந்த மெய்திபல் லாண்டுகள் புரிந்தா
ரைய நம்பெரு வாழ்விது கணமோ
வருக ணங்கொலோ வகலுவ தறியேம். (14)

---

* திடம். † செலுத்தும் ‡ பத்திரகாளி

கடிம லர்ப்பொழிற் கடம்பமா நகரின்
        கண்ணி யற்றிடிற் றவம்பிழை வாரா
முடித லுண்மைய தெனநினைந் தெமையாள்
        முதன்மை யெய்தினீ ராதலின் மொழிந்தேம்
அடிகளேவெள்ளம் வந்திடு முன்ன
        மகனுங் வான்கரை புரிவ ரென்றகலப்
படிவ மஞ்ஞையுஞ் சேவலு முடன்போய்ப்
        பாரினற்றவம் புரிபவர்க் குரைக்கும். (15)

நீவிர் நால்வர் நெடுங்கன லிடையே
        நின்ற ருந்தவஞ் செய்தலென் பெறவென்
றூவி யாக்கையு மெடுத்தருந் திடல்போல்
        திரத்தெ திர்ந்துநின் றுரைத்தலு நடுங்கி
நாவு லர்ந்துதா னயந்தவை யுரைத்தார்
        நம்ப தம்பெற விழைதலிற் பேயா
யாவி ரென்னலும் பணிந்துநந் தவங்க
        ளவம தாயின வோவென வழுதார். (16)

வெள்ளி யங்கிரிப் பூதரிற் பூத
        கணங்க ளாகிநீர் மேவுவீ ரென்று
வுள்ள மன்புற வுரைத்தது கேட்டே
        வுற்ற நால்வரு முயரண்டா வரணர்
தெள்ளு சீர்க்கணத் தொடுமிருந் தயன்மால்
        செலுத்து மூர்திநஞ் செய்தவஞ் சிதையக்
கொள்ளி வைத்தன வேயென வெண்ணிக்
        கூடு காலம்பார்த் திருந்தனர் கொதித்தே. (17)

(வேறு.)

மற்றோர் * வைகலில் வெள்ளியங் கிரிதனின்
வள்ளலார் தமை யேத்த
வுற்ற வானவர் வாகனந் தாழ்வரை
யொருவியங் குறு காலைச்
செற்ற மேவுமிப் பூதர்க ணல்வருஞ்
செய்யவேற் குமரேசன்
வெற்றி யூர்தியா மயிலினைச் சேவலை
யடுத்திது வினவுவரால். (18)

நுங்க ளாற்றலெம் முரையகத் தடங்குமோ
ரோற்பர்மா லயனுந் தாட்
பங்க யந்தொழற் கென்றிடி லிவ்விரு
பறவைகள் செருக் காலே
இங்க னுங்களை யிகழ்ந்தன யன்னமுங்
கலுழனு மிவை மாள
மங்கு போர்த்தொழில் புரிந்திடி லியாங்களும்
வருவமென் றுரைசெய் தார். (19)

என்னக் கூறலுங் கொதித்துமா மஞ்ஞையுஞ்
சேவலு மெதிர்ந் தேகி
யன்னப் புள்ளுடன் புள்ளர சுடனம
ராற்றிய வது காலைக்
கொன்னற் பூதரும் பொருதன ரன்னமுங்
கருடனுங் குறைந் தேதம்
மன்னர்க் கோதிடத் தருணமின் றுதலான்
மறைந்தொளித் தன வன்றே. (20)

---

* நாள்

தொடர்ந்து சென்றுகண் டனத்தினைக் கலுழனைத்
துணைப்படு மிமை யோரைத்
தடிந்து பூதரு மஞ்ஞையுஞ் சேவலுந்
தணந்தன ரது காலை
யடைந்த வானவ ரிரங்கின ராயிடை
யமலன்வெள் விடை யேறு
மடந்தை பாகன தருள்கொடு மீண்டனர்
மறையவன் முதல்வா னோர். (21)

ஏகு மவ்விடை யிமையவ ரனைவரு
மிருந்துய ரெடுத் தோதக்
கோகு லம்புரை மேனியன் விதியொடு
குமரவே ளடி போற்றி
* யாகு லங்களை யெடுத்துரைத் திரந்திட
வறுமுகன் வன மேவு
மாக ணங்களுட் சூரனு தியர்தமை
வருந்துறச் சபிக்கின் றான். (22)

நீவிர் வானவர்க் கிடர்செயு நீர்மையி
னிருதரிற் பிறந் தின்னும்
தேவர் தெவ்விராய்த் திரிகநம் வேலுமைச்
செகுக்குமென் றருள் செய்தே
சேவ லோடுமச் † சிகண்டியை வெகுண்டுமைத்
தீண்டிலே மினி யென்றான்
றுவு பூதர்முன் றவம்புரி பயனருள்
சண்முக வெனத் தாழ்ந்தார். (23)

* துன்பம். † மயில்.

என்றி ரத்தலுங் கந்தராச் சிரமத்திற்
புரிதவ மிட செய்தா
தொன்று நற்பய ளுதலா லசுரரா
யுதித்தபின் னாமூ ரும்
வென்றி மஞ்ஞைவா ரணங்கரி யரியென
மேவுவிர் நீரென் று
நன்று கூறியன் றவரழித் தவையெலா
மெழுப்பின * னவைதீர்ப் பான். (24)

† பொருவின் மஞ்ஞையுங் குக்குடத் துவசமும்
புகழ்புனை குமரேச
னொருவ னுங்கருத் துளைத்தடி யேம்பிழை
யொப்பிலாய் பொருத் தாள்கென்
றருவி யின்விழிப் புனலுகுத் தலுங்குக
னறைகுவ னிப் பூதர்
திருவின் மிக்குயர் கடம்பமா நகரின்முற்
செய்தவஞ் சிதைத்தீ ரால். (25)

(வேறு)

தரும மாவது பிறர்க்கிதஞ் செய்தலத் தருமம்
புரித ராமையே பாவமிப் பொருளினு மிகையா
யொருவி டாததீங் குறுத்தனீ ருய்யுமா றுளதோ
கருதி லிவ்வழுக் காறுதீ ‡ நிரயமே காட்டும். (26)

ஆவ தாயினும் போழுற் கிரமின் றதனு
ஞவி ஞனுணர்த் தருஞ்சிவ ஞானமுன் னமக்கே
சேவு யர்த்தபெம் மானருள் செய்தவத் தலமே
மேவு வார்வினை யனைத்தையும் வீட்டிவீ டளிக்கும். (27)

---

* நவை—குற்றம். † உவமை ‡ நரகம்.

நறும லர்ப்பொழிற் காஞ்சிமா நகரினுக் கணித்தாய்
மறுவி லாதவக் கந்தராச் சிரமத்தின் மருங்கே
யுறுத வஞ்செயி லின்பவீ டுதவுது மென்னாக்
குறுமு னிக்கருள் குருபரக் குரிசில்கூ றினனால். (28)

இலைகொள் வேற்படை யேந்துமெம் மானிவை யியம்பக்
கலவு மஞ்ஞையுஞ் சேவலுங் கயிலையை யகன்றே
தொலைவில் வெம்பவந் தொலைத்திடத் * துறுமலர்ப் பொழில்சூ
ழலகில் சீர்த்திருக் கடம்பமா நகரின்வந் தணைந்த. (29)

திறங்கொள் சூரன்முன் னால்வரு மாயைபாற் செனித்தார்
† கறங்கு வண்டிமிர் காந்தளங் கண்ணியான் பூவை
நிறங்கொண் மான்முதற் றேவரைப் போக்குபு நெடுங்கா
றுறங்கு பைம்பொழிற் கந்தமா தனக்கிரி யுற்றான். (30)

அந்த ராச்சிர மத்தினிற் கடுந்தவ னால்வர்
வந்தி யற்றிய துரைத்தன மலைமகட் கினிய
மைந்த னீக்கிய பூத்தலைக் சேவலும் மயிலு
முந்து சேர்ந்தவண் முத்திபெற் றமையினி மொழிவாம். (31)

சூராதிகள் தவம்புரிந்த அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆக அத்தியாயம் 9-க்குத் திருவிருத்தம். (234)

---

* நெருங்கிய     † ஒலிக்கும்.

திருச்சிற்றம்பலம்.

# பத்தாவது சேவலும் மயிலும் சிவகதிபெற்ற அத்தியாயம்.

## ஸ்ரீ கடம்பநாதர் துதி.

எங்கு மாகி யுயிர்க்குயிரா
　　யிருமூன் றெழுத்தி னுரைப்பொருளாஞ்
செங்கை வேலோன் கொடியூர்தி
　　செய்த பிழைதீர்த் தருள்வீட்டிற்
றங்க வருளுங் கடம்பவனந்
　　தனிலு மடியார் தமதகத்தும்
நங்கை யுடன்வாழ் திருக்கடம்ப
　　நாதன் திருத்தாள் சிரத்தணிவாம். (1)

(இ - ள்.) எங்கும் வியாபித்துச் சகல ஜீவர்களிடத்தும் அந்தர்யாமியாய் விளங்கி, "சரவணபவ" வென்னுஞ் சடாக்ஷரமநுவின் லக்ஷியார்த்தமாய் விளங்கும் அறுமுகப் பெருமானது வாகனமும் கொடியுமாகிய மயிலும் சேவலும் செய்த பிழையைப் பொறுத்தருளிய மகிமை வாய்ந்த திருக்கடம்ப வனத்திலும் அடியார்களது உள்ளத்திலும், ஆவுடை நாயகியுடன் வாழாநின்ற திருக்கடம்ப நாதரின் திருவடித் தாமரைகளைச் சென்னிமேற் சூடுவாம். (எ - று).

அறஞ்சேர் தவத்துக் காசிபரை
　　யணைந்த மாயை யிடத்துதித்த
மறஞ்சேர் சூரன் முதன்மூவர்
　　வருத்துங் கொடுமையாற் சுரர்வான்

றுறந்தார் சிலர்கள் சிறைப்பட்டார்
துறக்க வேந்தன் காழியினிற்
சிறந்தே தவஞ்செய் தனன்றீங்கி
னீங்க நினைந்தக் காலத்தே. (2)

* இழுமென் னருவித் திருக்கயிலை
யிறைவ னருளா லுமையவளும்
பழுதி லிமவான் மகளாகிப்
பரிந்து தவஞ்செய் தனள்பரனுந்
தொழுத சனகா தியர்க்கருளி
யோகத் திருப்பத் தொல்லுலகந்
தழுவின் பகல மகபதியுந்
தளர்ந்து மதனை வேண்டிடவே. (3)

மறைந்தே நின்று மலர்ப் † பகழி
தூவுமதனை மாய்த் துமையாள்
அறந்தா ளேக்கி மணஞ்செய்து
காமற் கருவ முருவளித்தங்
குறைந்தோங் கலின்வந் தமரர்தொழ
வுதித்த முகத்தோ டாறுமுக
நிறந்தாங் கியகட் பொறியளித்தான்
நினையா ரகந்துக் கொளித்தானே. (4)

ஆறு பொறியும் பரந்தருளா
லடங்கி யனல்கா லுடனிமையோ
ராறு மருவிச் சரவணஞ்சேர்ந்
தாறு மகவா ‡ யாரன்முலை

---

* நீர்பாய் சப்தம். † அம்பு ‡ கார்த்திகை மாதர்.

யாறு வழிபா லருந்திவினை
யாடி வருங்கால் விபுதரிட
ராறும் வகையா விலக்கத்தொன்
பதுவீ ரர்களு மவதரித்தார். (5)

ஈச னுமையுன் மதலையென
வெடுத்தா றுருவு மொன்றுகி
தேச மொடும்பா லளித்தளிக்க
நிமலன் மகவை மார்பிணைத்
தாசில் கயிலை யணையவினை
யாடி முருக னசமேறிப்
பேசும் விதியைச் சிறைசேர்த்திப்
பெருமாற் கருளி விடுத்திட்டான். (6)

எந்தை யுடனங் குமையவளு
மிமையோர் கூறு முறைக்கிரங்கிக்
கந்தன் றனையோர் நாளழைத்துக்
கதிர்வேன் முதலாம் படையருளி
மைந்த வசுரர் தமைவென்று
வாவென் றருளப் படைகளுடன்
முந்திப் புவிமேற் * கரிமுகனை
முடித்தா † னசலம் பொடித்தானே. (7)

அன்று தேவ கிரியிலமர்ந்
தருட்கே தார முந்தறபதிகள்
சென்று கண்டு திருச்சேய்நல்
லூரிற் சிவன்றன் படைபெற்றுத்

* தாரகன். † கிரௌஞ்சன்.

துன்று சுரர்நீர்த் தருட்செந்தூர்
சூழ்ந்தங் கசுரர் திறங்களெலாங்
குன்ற லின்றிக் கேட்டருளக்
குறித்தா னுடுவிற் றெரித்தானே. (8)

சூர பன்ம னரிமுகவன்
றம்பி முகன்*மை முகிப்பிறப்பும்
வீர யாகத் திவர்க்கெங்கோ
னளித்த வியப்பும் திசைவென்றே
கோர முடிபெற் றெழின்மணஞ்செய்
தரசாள் கொடுங்கோன்மையும் பிறவும்
கீர னுரைப்பாற் குருமொழியக்
கேட்டான் றணிகை நட்டானே. (9)

ஏற்ற குமரன் றாதேவ
† விருங்குன் றகன்றே கடல்பாய்ந்தங்
காற்றல் வீர சிங்கனொடு
மிலங்கை வீழ்த்தி யதிவேகன்
றேற்று யானை முகற்கொன்று
நகரிற் றுயர்கூர் சயந்தனையுந்
தேற்றி யவைசென் றரியணைமேற்
சிறந்தான் ‡ சிலம்பிற் பிறந்தானே. (10)

தகுதி யொழிந்து சதமுகனைக்
காவ லாளர் தமைநகரைப்
புகுதைஞ் ஞூற்று முகத்தினரைப்
பொருவச் சிரவா குவையாளி

---

* அசமுகி. † கந்தமாதனகிரி. ‡ வீரவாகு.

முகனை யழிவு புரிந்தந்தி
மூந்த வந்து சூர்*நினைவைக்
குகனை வணங்கி யுரைத்திட்டான்
கொற்ற வீர வாகுவே. (11)

அவுணர் குலவே ரறுப்பனெனக்
குகன்பா சறைவந் தமர்ந்திடலுந்
தவறில் போர்செய் கெனச்சூரன்
பானுகோபன் றனை விடுத்தான்
கவர்போர் புரிகென் றிளையோனைக்
கடிது விடுத்துக் காரவுணன்
புவிமீ தோடத் † துரந்தான்முன்
பொறியா றுகிப் பரந்தானே. (12)

எண்ணிக் குமரன் வருசூரோ
டெதிர்ந்து பெரும்போர் புரிந்தவனை
வண்ணக் கிரீட பங்கமுற
வருத்திச் சூரன் மகன்மாயைத்
திண்ணப் படையால் வீரர்களைச்
சேனை யுடனீள் கடலின்மய
லுண்ணச் செயக்கண் டதைவேலா
லொழித்தான் கருணை கொழித்தானே (13)

மைய லகலச் சூரசுகர்
மாய்த்துக் கனகன் மீளுகக்
‡ கொய்தி முகன்மூ வாயிரமாங்
குமா ரமைச்ச ருடன்கொன்றே

* எண்ணம். † துரத்தினன். ‡ அக்கினி முகன். (கொய × தீ)

கூறும் வலிசேர் காளியொடு
கொற்ற னைய னூர்தியதாம்
பேறு தந்தோ மெனவவர்பாற்
பெரிதும் மகிழ்வா லமர்ந்தனவே. (17)

அமரர் சிறைதீர்த் தெழிற்செந்தூ
ரமர்ந்து பரங்குன் றினை யணுகி
யமரர் வேந்தன் மகளைமணந்
தமர ருலகங் குடியேற்றி
யமர ரமுதொப் பாம்வள்ளி
யம்மை மணந்து தணித்தணிகை
யமரர் தொழவுற் றருட்கடம்பா
புரியை யடுத்தா னறுமுகவன். (18)

(வேறு)

ஆவலிற் றவஞ்செய் தங்க ணமர்தரு மயிலுஞ் சூட்டுச்
சேவலும் போற்றக் கந்தாச் சிரமத்திற் றவநீர் செய்து
மேவலின் முன்னஞ் செய்தீ வினையொழிந் துய்தி றென்றுப்
பூவலர் கடப்ப மாலைப் புண்ணியன் வீடு தந்தான். (19)

கட்கமழ் கடப்ப மோலிக் கடவுளா லொறுக்கப் பட்ட
புட்களும் வீடு சேர்ந்த தறிந்தவா புகன்றா மேவி
யுட்கவ லொழிப்பான் வேண்டிக் காசிப னுணர்வான் மிக்கோன்
றட்பநீ ராடிப் போற்றுந் தன்மைமே லெடுத்துச் சொல்வாம்.

சேவலும் மயிலுஞ் சிவகதியடைந்த பத்தாம்
அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆக அத்தியாயம் 10-க்குத் திருவிருத்தம் (254)

வெய்ய பானு கோபனுயிர்
வீட்டி யணைந்த வீரபுய
ளையன் மலர்த்தாள் பணிந்தேயன்
பருளென் றிரப்ப வருள்புரிந்தான். (14)

முடியா யிரஞ்சே ரரிமுகனை
முன்னோன் விடுப்ப வச்சிரத்தாற்
கடியோ னுயிர்கொன் றயிரத்தெட்
டண்டச் சேனை களைமுழுதும்
பொடியாய்ப் பொடித்திந் திரஜால
மெல்லாம் போக்கிப் பொருசூரன்
மடியா மாயை யுருப்பலவு
மடித்தான் வடிவேற் பிடித்தானே. (15)

உலக முழுதுந் தானுமோ
ருருவங் காட்டி யொருமாவாய்
நிலவு சூரன் றனைவேலா
னீற்றி யிருவே றுருவாக்கக்
* கலகச் சேவன் மயிலாகக்
கண்டு கோழிக் கொடியாக
வலகின் மயில்வா கனமாகென்
றமைத்தா னவர்முன் னளித்தானே. (16)

சீறு மமரிற் றுணிறந்த
சிங்க முகனுந் தாரகனும்
வீறு மரியுங் கரியதுவாய்
வேலோ னருளால் வந்தேத்தக்

* முன்கலகஞ் செய்த.

திருச்சிற்றம்பலம்.

## பதினோராவது காசிபமுனி பூசித்த அத்தியாயம்.

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

படம்படு பாய லானும் பங்கயத் தவனுந் தேட, மடம்படு பிறவி நோய்க்கோர் மருந்தென விரிந்து தோன்றித், திடம்படு மன்பர் நெஞ்சிற் சிறந்துதித் திக்கு ஞானக், கடம்படி முளைத்த முக்கட் கரும்பினை விரும்பி வாழ்வாம். (1)

(இ - ள்.) படத்தினையுடைய புஜக சயனத்திலிருக்கும் மஹாவிஷ்ணுவும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் முறையே அடிமுடிகளைத் தேடும்படியாயும், ஜனனமரணமாகிய அஞ்ஞான நோய்க்கு ஒப்பற்ற மருந்தாயும் இருந்து திடஞானிகளின் ஹிருதயத்தில் (சச்சிதாநந்தமாய்) விளங்கி ஞானஸ்வரூபமாய்க் கடம்பவிருக்ஷத்தினடியில் முளைத்துள்ள மூன்றுகண்களையுடைய இன்பவடிவ கரும்பாகியகடம்பநாதரின் சரணங்களை நினைந்துவாழ்வாம்.

பாட்டளி முரலுங் காந்தள் பரித்தருள் குமரன் பண்டு, வாட்டிறற் சூர பன்மன் கிளையெலாம் மாய்க்குங் காலைக், கோட்டுவில் வீர தீரர் குடைந்துவென் கொடுத்துச் சென்றார், சேட்படு சேனை காப்போர் மலையன்மா கரனுந் தீயோர். (2)

பொருந்தினு ரிடுக்கண் டீர்க்கும் பொருவில்சீர் தொண்டநாட்டி, லருந்தவர் தம்மைப் போற்றி யவரருள் செய்தவாறே, பெருந்திருக் கடம்பர் கோயிற் பீடுறு வடகீழ்ப் பாங்க, ரிருந்தவன் மீகநாத னிணையடி யருச்சித் திட்டார். (3)

வழிபடு மிவரைக் காப்பான் மங்கலங் கிரத்த கோமா, னழிவில்வா ளுளுஞ் சீரும் ஆற்றலு மொன்று ரஞ்சுங்

கொழுவுட னெழுவுந் தானே கொடும்பமா கான்றன் னாமம்,
வழுவிலந் நகருக் காக்கி வலியரில் வலிய னானான். (4)

பின்வலி படைத்த தீயோ ரிருவரும் பெருநீர் வைப்பும், பொன்பெறு முலகஞ் சூழுந் திசைகளும் பொருது முன்னே, பின்பெறு வேலன் போரி லுடைந்தவர் வெற்றி பெற்றார், இன்பமாஞ் சிவன்றாள் சேர்ந்தார்க் கரியதே தியம்பும் காலே. (5)

செய்தவஞ் சிதைத்தும் வேள்வித் தீங்கன லவித்தும் பொல்லாக், கைதவங் கரந்து செய்துங் கண்டிகை நீறுங் கண்டால், † வைதவம் புகன்றுந் தீங்கே விளைத்தனர் மறவர் தீயோர்க், கெய்திடிற் செல்வந் தீங்கே யிழைப்பரென் பதும்பொய் யாமோ. (6)

கற்பெலாம் பழித்துந் தர்ம சாலையிற் கனலிட் டார்தமும் வற்பினு றலைத்துந் தீயோர் சேனைகள் வருத்த லாலே, நற்பெரும் புவியுள் ளாருஞ் சுரர்களும் நலிவு கூர்ந்தார், மைப்புயன் மறந்து மண்மேற் சராசரம் வாடிற் றன்றே. (7)

(வேறு)

வெறுத்தவிக் காலையின் விபுதர்க் கிண்டையாஞ்
சிறப்பொடு பூசைசெல் லாது வான்மழை
மறத்தலின் மகபதி மருவு காசிபத்
திறத்தவன் றனையடைந் தினைய செப்புவான். (8)

தீதறு மாதவச் செல்வ னேபுவி
மீதிரு தானவர் வலியின் மேலராய்க்
கோதறு வேள்விகள் குயிற்று வார்க்கெலா
மாதுயர் விளைத்தலான் மழைம றுத்ததே. (9)

† வைது + அவம்புகன்று.

ஆதலிற் பசிமிகுந் தேவர்க்கு மாருயிர்
போதருந் துயர்தனைப் போக்கி யாவிக
ணீதரு வாயென நினைந்து வந்தன
னுதனை வேள்வியா னல்க வேண்டுமே. (10)

தவம்பிற ரியற்றினுற் * றருவர் தாங்கெடுத்
தவம்புரிந் திடுவரே யாத லாலவர்
பவங்கடி நின்குலத் துதித்த பான் மையாற்
சிவம்புரி நீமகஞ் செய்தல் வேண்டுமால். (11)

என்னநின் றிந்திர னிரப்ப மாதவன்
பன்னுதன் மேவினன் பரந்து தம்மையார்
துன்னினும் அவரிடர் தொலைத்துக் காப்பதே
யுன்னுமிப் பிறப்பினு லுறுதி யாவதே. (12)

இங்குநீ யியம்பிய தேவர்க்கு மின்பமாம்
மங்கள மாதலாற் குடிகள் வாய்மையே
பொங்குசீர்த் தொண்டைநன் னுட்டிற் போதுமே
தங்குமோர் தலத்தியாஞ் சார்ந்தி யற்றுவாம். (13)

என்றுவா சவனெடு மெழுந்து காசிபன்
கன்றுமான் கரத்தினுன் கடம்பர் கோயிலி
னன்றுசேர் வடகிழக் கதனை நண்ணியே
வென்றியா மிடமென வேள்வி யாற்றுவான். (14)

ஆயிடை யருமகச் சாலை யொன்றமைத்
தேயுற வேண்டுவ யாவுங் கற்பகந்
தூயவற் குதவிடத் தூண்டி யிந்திரன்
போயின னவனடி யிணைகள் போற்றியே. (15)

---

* அசுரர்.

மாசறு மாதவன் பின்பு மாமறை
பேசிய விதியெலாம் பெருக வோர்மகந்
தேசுற வியற்றினு னனைய திண்புவி
காசிபன் தண்டல மென்னுங் காசினி. (16)

(வேறு)

ஒற்றினு லொற்றித் தந்த பொருளையு மற்ரோ ரொற்
ரும், பெற்றியா லறிந்து காக்கும் வேந்தர்போற் பெரியோன்
வேள்வி, யுற்றதை யறிந்து தீயோர் * தீவினை யுஞற்ற
லென்று, வெற்றிமா முரச மார்த்தார் பின்னரும் விளைததல்
கண்டே. (17)

சேனையிற் சிதைத்தும் வேள்விச் சாலைசெங் கனலவிக்
கிந்தும், ஆனையிற் றீங்கு செய்து மடுபுலியாதி யான, கானவல்
விலங்கிற் றீது காட்டியும் வாட்டஞ் செய்தார், ஈனர்க ளளித்
தோர்க் குந்தீ தியற்றலை யறிவித் தாரே. (18)

கொடுத்திசை பெருக்கு மாந்தர் குணமு மோர் கணவர்
போற்றும், வடுப்படா மாதர் கற்பும் வசுந்தரை பொறுக்கும்
பண்பு, மடுத்தெவ ரழித்தா ரேனுங் காசிபன் மறைநூ
லாற்ருற், றொடுத்தகல் வேள்வி தீய வசுரராற் றொலைவு
ருதே. (19)

காலனு ருயிருண் டோங்குங் காலனு ரளித்த † ஞானப்
பாலரு வாயன் மேனுட் சமணரைப் பகர்ந்து வெல்வா, ஞல
வா யணைந்த வாபோ லருந்தவன் கடம்ப நாதன், கோலமாங்
கேத்தச் செல்வான் குளிர்வனப் பெருமை கண்டான். (20)

---

* தீ + வினை = வேள்வி. † திருஞானசம்பந்தர்.

ளெளி * யராக் குருளை யோர்சார் டுவெயிற் குழன்ற தென்னுக், களிமயில் சிறகா னீழல் கவித்தன புரப்ப வோர் சார், துளிமது மழையிற் றேனு துய நுழந் தனவென் றேங்கி † யளியினுற் ‡ றரக்குக் கையாற் றுடைத் தளிப் பனவுங்கண் டான். (21)

ஆறுகா லினங்க ளெல்லா மமலனர்ச் சனைகட் கேய, நாறுமா மலரின் செல்லா நறுமல ருகுத்து ஞாலத், தூறுதே னருந்திச் செல்லு முணர்வைப் புரக மாதி, தேறிடா தீண் டிணுலும் விடமுறாச் செயலுங் கண்டான். (22)

வானவ ரியக்கர் சித்தர் மாதவர் முனிவர் யோகர், கானவின் னையர்க ளுதர் கருடர்கந் தருவர் மிக்கா, ரானவ ரெவரு மேவி யருள்திருக் கடம்ப லிங்கம், பான்மையாற் பரவுஞ் சீரும் பருவிழி குளிரப் பார்த்தான். (23)

பார்த்திவை பிறவு நெஞ்சிற் பரமவா நந்த னாகிச், சீர்த்திசேர் தருமிக் கானந் தீபரா லழிக்கொ ணுதா, லாற் றினுங் கருணை செய்யு மாற்றிப மகமு முற்று, மேத்திநல் வரமுங் கொள்வே னித்திரு விலிங்க வாழ்வை. (24)

என்னநன் றெண்ணி யாங்கே யிருந்தவர் கோமான் மாமான், றன்னையேந் தியகோன் றென்மேற் சாரொரு தீர்த் தங் கண்டு., முன்னவன் கடம்பநாதன் முளரித்தா ணினைந்து மூழ்கி, மின்னுபூந் துகில்வெண் பூதி சாதனம் விளங்கப் பூண்டு. (25)

மும்மொழி யாகி மூவெட் டெழுத்தினு ன் முதற்றொன் றுமோர், செம்மொழி மனுவாற் செப்புந் தெய்வநீர்க் கடன்

---

* பாம்புக்குட்டி † அன்பு ‡ புலி.

முன் ஞற்றி, மெய்ம்மொழி யாக மத்தின் விதித்தமா மனுக்க ளாலும், வெம்மொழித் திடோ சந்தி விருப்புடன் விளங்கச் செய்வான். (26)

ஐங்கரன் குருவைப் போற்றி யட்டசம் ஸ்கார மாற்றிப், பொங்குமா சமனமாதி புரிந்துநீ றிடக்கை யேந்தித்; தூங்கமா மனுக்க ளோதித் தோயத்தாற் குழைத்து நாஞன், கங்கமும் பிரம மைந்தாற் புண்டர மணிதல் செய்வான். (27)

(நாஞன்கங்கமாவன:—கலாமந்திரம் ஐந்து, சங்கிதா மந்திரம் பதினொன்று) ஆக பதினாறு.

முச்சுடர் மூன்று தேவர் முக்குண மூன்று கால
முச்சக மூன்று வன்னி மூன்றெழுத் துருவ மாக
வைச்சபுண் டரங்கள் சாத்தி யாசம ஞதி யங்கை
மெச்சுசீ யாத மங்க நியாதமும் விதியாற் செய்து. (28)

பூரக மாதி மூன்றும் பிராணவா யுவிற் புரிந்து
சீருறு தியான மாதி தர்ப்பணம் பிறவுஞ் செய்தங்
கேருறு தபனர்க் கீந்து சிவமனு நூற்றெட் டெண்ணி
யூர்விடை யுயர்த்த கோமா னுபயபா தங்கள் போற்றி. (29)

தடங்கரை யேறிக் கேடில் சதுமறை யுருவாய் நீண்ட, கடம்பினை வலமாய்ப் போந்து காசிப முனிமுன் செய்த, திடம்பெறு தவத்தின் பேற்ருற் றிகழ்சிவ லிங்கத் தேவை, *நுடங்கிடை யொருபா லாக † நோக்கிஞ ேனாக்கி ஞனே.(30)

கண்டனன் பணிந்து நெஞ்சங் கரைந்திரு கரமுஞ் சென்னி, கொண்டுகண் கலுழ்ந்தா நந்த வாரியிற் குளித்து

* நுண்ணிய இடையையுடைய உமை † நோகுக்—கண்.

நின்று, தொண்டனே னுய்ந்தே னுய்ந்தேன் றுரிசுறு
பவநோ யின்னே விண்டனன் றவத்தின் பேறும்பிரவினன்
கரவு தீர்ந்தேன். (31)

என்னமெய் யன்பா லேத்தி யிளமதிக் கலையொன் றேந்தும்
பொன்னவிர் சடிலத் தெங்கோன் பூசனை புரிதற் கூறு
மன்னிடர் தவிர்த்துக் காப்பான் வல்லபைகொழுன னொரு
முன்னவ னிருதாண் முன்னி முன்னிரும்பூசை யாற்றி. (32)

இனியசிற் றுண்டி யாதி யிளம்பயிற்றொடிய லேனைக்
கனிகடோங் காயைஞ் ஞாறுங் கைவினை *வலத்தாற் செய்யோ
தனவகை யடைக்கா யாவுந் தந்திமா முகற்குப் போற்றுந்
தொனிதரு நல்லகாயத் திரிமனுச் சொல்லி யீந்தான். (33)

புகையொளி விளக்க மாதி பொருந்துவ புரிந்து வேதச்
சிகையினுட் பொருளை யேத்திச் சித்தியா னெய்துங் காறு
மிகையினு லவுண †ரூறு விளைத்திடா தருள்க விந்தத்[கோர்.
தகையினு னினையுஞ் சித்திக் கணேசனேன் றுரைக்கதக்

என்று வேண்டியவை நல்கு மிபமுகன் கருணை பெற்று
நின்றுவிண் ணவர்கள் போற்ற நிரந்தர மிடைந்து நேராய்ச்
சென்றுமெய் யன்பாற் போற்றுந் திருநெடு வாயில் சார்ந்தான்
கன்றுதா யிடைச்சென் றூங்கே கடம்பநா யகன்முற் சென்
[ருன். (35)

பற்பல கலையும் வேதப் பனுவலு மயனு மாலுங்
கற்பமுங் காணற்காகாக் கடம்பநா யகனை யிந்தப்
பொற்புறு வனத்திற் றேன்றும் பூரண வடைவைப் பூசித்
தற்பொருட் டிருவே ருய வுடற்சுத்தி புரியச் சார்ந்தான். (36)

* சாமர்த்தியம். † துன்பம்.

(வேறு.)

பவப்பெருங் கடற்கோர் புணையெனத் தோன்றும்
பருமணிச் சிகரநீத் தொருபா
லுவப்புறு பதுமா சனம்பெற விருந்தாங்
குடலொடு கரஙியா சங்கள்
நிவப்புறு மனுக்க ளியற்றியே நிமல
னந்துணை யடிகளை நினைந்தே
யவப்புலை யுடலீ தூழ்வினை நுகர்வா
னடுத்தகந் தெணியக மறுத்தான். (37)

தன்னிரு சரணப் பெருவிரன் முதலாய்ச்
சாற்றுமூ லத்தள விரண்டாய்
மன்னிய மூலா தாரமே யாதி
யுச்சியின் காறுமோர் வடிவாய்த்
துன்னிய விடைபிங் கலைசுழு முனையாற்
சூழ்ந்தவெண் கஞ்சமோ ரைந்தும்
பின்னிய விதயங் கண்டநாப் புருவம்
பிரமரந் திரத்ததோ முகமாய். (38)

கொழுமுகை யுருவா யுறநினைத் தவற்றைக்
கோதறு சுழுமுனை வழியா
லொழுகிய விந்து சத்தியி னமுதா
னனைத்தபி னுயிர்ப்பையுள் ளடக்கி
வழுவறு வாம தேவமந் திரத்தாற்
பூரக கும்பகம் வயக்கித்
தழுவு*சோ டலைகயாற் றெறித்துமேன் மலர்த்திக
தம்பித வாயுவை விடுத்து. (39)

---

அகம்-பாவம். * ஓர் முத்திரை.

மேலுற விரிவெண் டாமரை யகத்துள்
வானமீ னுருவுபோல் விளங்கி
யேலுமான் மாவை யான்மமந் திரஞ்சங்
காரமுத் திரையி னெடுத்து
நாலுமு விரன்மீ துறைசதா சிவன்பா
லணுகுற விடுத்துநல் லறிவாற்
றாலமா முடலுட் சூக்கும வுடலைச்
சுத்திசெய் திடமின் னினைந்தான். (40)

*ஸூக்ஷ்மதேக சுத்தி.

பரிசமு மொலியும் விதியிடை யிரத
மாலிடை யுருத்திரன் பாலே
யுருவமு மணமும் மகேசனிற் புந்தி
யகந்தையு முயர்சதா சிவன்பால்
விரைவுறு மனமும் விந்துவு மொடுக்கி
விளம்பிய சூக்கும தேகப்
புரையறுத் ததன்பின் றாலதே கத்திற்
பூதசுத் திகளைமுன் புரிவான். (41)

(பிரிதிவிபூத சுத்தி.)

பொன்னிறங் கடினம் "ல"காரநாற் கோணம்
வச்சிர மைங்குணம் பொருந்தித்
தன்னிக ரைந்தா முகமனு நிவர்த்தி
விதியதி தெய்வமார் தரையை
முன்னிமுன் னுரைத்த கலைமனு வைங்கான்
மொழிந்துயிர்ப் பதனைமே ஞேக்கி
யன்னமுற் பூதந் தன்னையு †நான்கா
யடுத்தபூ தங்கொளக் கொடுத்தான். (42)

---

† வாயு. வானமீன்-நக்ஷத்திரம்.

* அகோரசிவாசாரியர் இயற்றிய க்ரியாக்ரம ஜ்யோதி|முதல்பாகம் 70-ம் பக்கம் பார்க்க.

(அப்புபூத சுத்தி.)

வெண்ணிறம் பாதி மதியுரு "வ" கர
நெகிழ்ச்சிமென் கமல நாற் குணங்க
ணண்ணுறு நான்கா முகமனு விரண்டாங்
கலையதி தெய்வமால் குளிர்ச்சி
நண்ணுறு புனலை யுண்ணினேந் துயிர்ப்பைப்
பூரகரும்பகம் நடத்திக்
கண்ணுறு மிரண்டாங் கலைமனு வொருநால்
விதஞ்சொலிக் கனலுணக் கொடுத்தான். (43)

(அக்கினிபூத சுத்தி.)

செம்மைமுக் கோணஞ் சுடுகுணம் "ர"கர முக்குண
முருத்திரன் றெய்வ
மும்மையாங் கலைமூன் றுமுக மனுவா
யுதஞ் சுவத் திகமுற வுடைத்தாய்
வெம்மையா ரனலை நோக்கியவ் வுயிர்ப்பைப்
பூரக கும்பகம் விரித்தாங்
கம்மைசேர் மூன்றாங் கலைமனு முக்கா
லறைந்து நீரருந்திடக் கொடுத்தான். (44)

(வாயுபூத சுத்தி.)

மூவிரு கோண மூவிரு புள்ளி யாயுத
நீனிறஞ் சலன
மேவிய "ய" கர மிருகுண நான்காங் கலைமனு
விளம்புதற் புருடன்

தேவருண் மலேசன் றன்னையு முடைத்தாய்ச்
சிறந்தவா யுவை நினைந் துயிர்ப்பைக்
காவல்செய் திருகா ளுன்கெனுங் கலைமா
மனுச்சொலிக் காசினிக் களித்தான். (45)

(ஆகாசபூத சுத்தி.)

வட்டமாய் நிறைவாய்ப் படிகமாய் "அ" கர
மொருகுண முதன் முக மனுவாய்த்
தட்டறு மைந்தாங் கலையதி தெய்வஞ்
சதாசிவ மாயுத மமுதம்
விட்டவிந் துளதாய் விளங்குவா னினைந்தே
வாயுவை யிருமையும் விளைத்துக்
கட்டறு மைந்தாங் கலைமனு வொருகாற்
கழறிவான் குணமெலாங் களைந்தான். (46

(தேகத்தை வடவிருக்ஷமாகத் தியானித்துச்சுத்தி செய்தல்.)

பிருதிவி விரையாய்ப் பிரமன்மான் முளையாய்ப்
பேசிய விருப்புடன் வெறுப்புத்
தருமறம் பாவ மோகமூ லமதா
மறிவறி யாமைசார் துணையாய்ப்
புரையறுங் கலாதி சாரமாய்த் தன்மாத்
திரைகளும் பொறிகளுஞ் சினையாய்
வருபுலன் றளிரு யுலகொரு மலராய்
மன்னுசங் கற்பமே கனியாய். (47

புருடனும் பறவைக் குண்டியாய்ச் சினைகீழ்ப்
போக்கி வேர் மேக்குறப் பொருந்தும்
*பொரியரை யாலந் தருவென வுடலைப் புந்தி
செய் †தனிலனு லுலர்த்தி

* பொருக்குகளையுடைய அடியோடுகூடிய. † காற்று.

மருவிய வலக்காற் பெருவிரன் மீதாய்
வாய்ந்தகா லாக்கினி யெழுப்பி
யெரிகொளிப் பந்த மியாவையு மிகந்து
சூனியவெளியென நினைந்து, (48)

தேக சிருட்டி.

சுழுமுனை வழிபூ ரகவழி பாகத்
துவாதசாந்தத்தின் வீழமுதம்
பொழிதரநனைந்தாங் கெண்ணுபு குடிலை
புகன்றிடு விந்துநா தத்தின்
வழுவறு மனமா திய வுடைச் சூக்க
வடிவமுந் தூலகா யமும்வந்
தழிவற வமர்ந்தாங் கறிவினிற் றியானித்
தாகமிவ்விரண்டுமுற் றதன்பின், (49)

ஐந்துவான் கலையாம் பிரணவம் பொருந்து
மான்மமந் திரத்தையுச் சரித்து
முந்துவா யுவைப்பூ ரகமுத லியற்றி
முன்புபன் னிருவிர லும்பர்
நந்திபாங் கமைத்த வுயிரையிவ் வுடலி
னண்ணுவித் தருளமு தாட்டி
நிந்தைநீங் குடலைச் சுத்திசெய் ததன்பி
னந்தரி யாகமு நிகழ்த்தும். (50)

(ஹிருதயத்தைத் தாமரை மலராகத் தியானித்தல்)
நிற்றங்கண்மூன் றுடைமுக் கோணநா பியினீ
டசுத்ததத் துவம்விர வறுநான்
குறழ்ந்தநா ளமதாய் மிச்சிரஞ் சுத்த

வித்தைசெயட் டிதழ்களா யும்பர்
பிறந்தவீச் சுரஞ்சா தாக்கியம் பிரியாக்
கேசரஞ் சத்தியின் பொருட்டாய்
அறந்தரு சிவதத் துவம்விரை வடிவா
யமரித யாம்புய மதன்மேல். (51)

இருந்தருள் சோதி யிலிங்கா யகனை
யுச்சிமீ தீரறு விரன்மேற்
பொருந்தவுண் ணினைந்தே காற்றினை முன்போற்
பூரக கும்பகம் புரிந்து
திருந்தவா வாகித் தகத்தினும் புறம்போன்
முகமனைந் தானுமர்ச் சித்து
வரந்தரு கென்று வேண்டிமா மாயை
மாயையால் வளர்ந்தகுண் டத்தில். (52)

ஞானவெங் கனல்வேட் டித்திருப் பூசைப்
பயனுத வடுவுறை விமலன்
பானயந் திவ்வா றருச்சனை புறத்தும்
பரமகொண் டருள்கவென் றிரந்து
மானிடந் தரித்தோன் றன்மனம் வேட்ட
வரங்கொடுத் தளித்தவா மதித்து
மோனனீத் திருவே றுகவும் நிசித்தே
முதல்வனை வழிபட முயன்றான். (53)

(வேறு)

சாந்த னற்றிரு மஞ்சனந் * திருப்பள்ளி தாமம்
பூந்தண் மாலிகை புனைபணி துகில்நறும் புகைசீ

---

* கோயிற் பூமாலை

ரோந்து தூபதீ பங்கண்மற் றேனையும் பிறவுஞ்
சேர்ந்த நால்வகை திருவமு துடன்வளஞ் செழிப்ப. (54)

காம தேனுவொண் கற்பகத் தருவுடன் கலந்தீந
வாம தேவன தருச்சனைக் குவந்துவந் தளிப்பத்
தீமை தேயுறச் செய்தவ ஞயகன் மகவா
ஞம தேயம தெண்ணிஞ னவனுளங் களித்தான். (55)

நங்க ஞதனுங் கடம்பநா யகனருச் சனைகட்
கங்க ஞனிலத் துள்ளவு மந்தரத் தனவுஞ்
செங்க ஞடிடச் சேர்ந்தபின் சீதநீர் தெளித்து
வெங்க ணீங்கவோ ரிடத்திலிங் கவ்வியம் விதித்தான். (56)

பின்பெ ழுந்தருள் வாயில்கா வலரையும் பேணி
யன்பு கொண்டருட் சினகரம் புகுந்தருந் தவர்கோன்
இன்ப மெய்யொளி யாய்முளைத் தெழுந்தரு ளிலிங்க
முன்பு நின்றுசெய் பூசைகொண் டருள்கென மொழிந்தான். ()

அங்கி யின்றிசை தங்குபொற் பாசன மதனிற்
கங்கை யாதிய தீர்த்தமுஞ் * கஞலுறத் தருவித்
தங்க ஞற்றுவ வாற்றியோர் கலசமொண் டமுதம்
பொங்கி வீழ்வதாய்ப் புந்தியுட் கொண்டுபூ ரித்தான். (58)

(வேறு)

உருக்குசெம் பொருளாற் குயிற்றிய வள்ளத்
தொண்புனன் மந்திர முறைத்துத்
தருக்கர வாக்கிச் சந்தன முதலாச்
சாத்திமந் திரத்துயர் சிரமேற்

---

சினகரம் - கெற்பகிரகம். ஒண்மை-ஒளி.
வள்ளம்-வட்டில். * நிறை வுற

பொருட்பெறு பூசைத் தானமேற் பொருண்மேற்
புரோக்கணஞ் செய்துபின் புரமூன்
றெரித்தவன் மனுவா லாசன மூர்த்தி
யியம்புமத் தனையருச் சித்து. (59)

திலகநன் னுதன்மீ திருதய மனுவாற்
றீட்டிடு மூலமந் திரத்தா
லலர்முடி சாத்திச் சங்கிதை யொருகா
லறைந்து * தற் பூசைசெய் ததன்பின்
மலவிரு ளிரிக்குங் கடம்பநன் னிழல்வாழ்
வள்ளலை விதியரி மலைமேற்
றலைவியி னுடனே பீடலிங் கத்துஞ்
சதாசிவ வுருவமாய் நினைந்து. (60)

கலைமனு வருச்சித் தருக்கியங் கொடுப்பான்
கருதுகா யத்திரி சாத்தி
யலர்கழித் திருகா னிசித்தபின் சத்தி
யாதியந் தமுமருச் சித்து
விலகிடா நல்ல சதாசிவ மூர்த்தி
வித்தியா தேகநேத் திரமே
னலமுறு மாவா கனமுத னடத்தி
நிசித்துநா விருமலர் சாத்தி. (61)

கமழ்நறுந் தூப தீபமுங் காட்டி
கவ்விய முறைமையா லாட்டி
விமலநீ ராட்டிக் கருப்புரங் கூட்டி
விரைப்பொரு ளேனவு மூட்டி

---

* ஆத்ம பூஜை

யமலன்மெய்க் கிடுவா னமைத்தநல் லெண்ணெ
யாதியா ரக்குழம் பீறாய்
நமையருள் கடம்ப நாயகன் முடிமே
னயந்தமெய் யன்பினொ லாட்டி. (62)

எண்மலர் சாத்தி யருக்கிய மீந்து
நிவேதன மேனவு மியற்றி
யொண்மலர் மாற்றி நறும்புன லாட்டி
யருக்கியந் தபனநீ ருளவுங்
கண்மலர் மலர மனமலர்ந் தபிஷே
கம்புரிந் * தருவையா லொற்றி
யண்ணன்மெய் யீரம் புலர்த்தி † யா டகத்தா
மாயிழை யாடையொன் றணிந்து. (63)

நலங்கிளர் சந்தந் திருமல ராதி
நவின்றவஞ் செழுத்தினாற் சாத்தி
யிலங்குபொன் னரைஞாண் கோவண மாதி
யெழினவ மணியணி யணியா
லலங்கரித் தாரந் தொடைதொடர் தேனார்ந்
தவிழ்மல ரிண்டையு மணிந்து
மலங்களைந் தருள்வான் றிருவுரு நோக்கி
மகிழ்ந்தன னிகழ்ந்தமெய்த் தவத்தோன். (64)

‡ தத்துவத் திரயஞ் சாத்திய பின்னர்
தகுமில யாங்கபோ காங்க
நித்தனை கமத்தி னிகழ்த்திய விதியா
னிருமலன் றனையருச் சித்துக்

* பரிவட்டம். † பொன்

‡ ஆத்ம, வித்யா, சிவதத்வங்கள்.

கொத்தலர் கூந்தல் சத்தியை யிடப்பாற்
குறித்தருச் சனைபுரிந் ததற்பின்
வைத்திடுந் தூப தீபமுங் கொடுத்து
வருக்கால் லமுதநீ ரூட்டி. (65)

குறைவறத் தீபங் கோட்டுவ கோட்டிக்
கோதறக் காட்டுவ காட்டி
நறைமலர் நிறைத்தாங் கஞ்சலிக் கரத்தா
னுயகன் றிருவடிக் கணிந்தாங்
கிறைதிரு வெழுத்தெண் மலர்வலக் கரமேற்
றிரும்புன லுடன்பல னவையும்
கறைமிடற் றவன்பாற் கொடுத்தருச் சித்தே
கனிதரு மனத்தினாற் றுதிப்பான். (66)

(வேறு)

* விண்ணுடர் நண்ணும் வையத் தியக்க
வடிவாகி மேவி விதிமால்
கண்ணு யிரங்கொளுடலோனு முற்ற
கலகச் செருக்க தறவோர்
மண்ணார் துரும்பி னறவென்று நின்று
வரமன்று நன்ற தருள் செய்
யண்ணு கடம்ப வனநாத வென்னை
யடுமைக்கொளத்த சரணம். (67)

முழவோடு தாளம் விதிமா லெடுப்ப
முனிவோர் துதிப்ப மதியாத்
தொழுதாடி யன்ப ரருள்வாய் மடுப்ப
மலை மன்னு தோகை மகிழப்

* இதன் விளக்கம் "கேனோபநிடத"த்தில் காண்க.

பழமா மலங்க ளறநா டகஞ்செய்
பரதேவதேவ சிவனே
யழகார் கடம்ப வனநாத வென்னை
யடிமைக்கொளத்த சரணம். (68)

இருளாகி யென்று மகலாத பாச
மலமாயை கன்ம மிவை யான்
மருளா யிறந்து மிகவும் பிறந்து
மறுகிக் கிடந்த வுயிரைப்
பொருளா யெடுத்து மலமா சகற்றி
யுடலாதி கொண்டு புரைதீ
ரருளார் கடம்ப வனநாத வென்னை
யடிமைக்கொளத்த சரணம். (69)

இன்பாகி யின்ப நுகர்வோனு மாகி
யருளின்ப நல்கு மிறையாய்
முன்பாகி முன்பி னடுவாகி வித்தின்
விளைவாகிமுற்று நினையார்
வன்பாகி யன்ப ரறமாகி யென்றன்
மனமாகி யென்கண் மணியா
மன்பார் கடம்ப வனநாத வென்னை
யடிமைக் கொளத்த சரணம். (70)

ஒப்பாரு மின்றி மிகையின்றி யென்று
முளதாகி நின்ற வொருவா
வைப்பான செல்வ மணவாள ஞான
வரதா *சிவாய குருவே

* பஞ்சாக்ஷரத்தை யுபதேசிக்குங் குருவே.

துப்பாரும் வேணி முடியாய் முடித்த
வனலாடு சோதி துணைவா
வப்பா கடம்ப வனநாத வென்னை
யடிமைக்கொ ளத்த சரணம். (71)

என்னெஞ்ச மென்ன தறிவாசை செய்கை
யெனதைம் புலன்பொ றிகணீ
யென்னைச் செலுத்து மிறைநீ
யெனக்கோர் செயலில்லை யானுன் னுடைமை
யென்னன்பு நீயென் னறிவா னியன்ற
பிழையும் பொறுத்து னிருதா
ளென்னப்ப வென்றன் முடிமீ திருத்தி
யருளெந்தை யெந்தை சரணம். (72)

(வேறு)

இன்ன வாகிய மொழிமலர் மாலைக
ளிணையடி மலர் சாத்தித்
தன்ன வாவறப் பணிதலு மிறையவன்
றனிவிடை மிசைதோன்றித்
துன்னும் வார்சடை முனிவர விதிப்படி
சோர்விலா வார்வத்தான்
மன்னு பூசனைத் துறைகுறை வின்றியே
வகுத்தலின் மகிழ் கூர்ந்தேம். (73)

சிந்தை வேட்டன வர * மெவை யெனுநீ
செப்புக வருள் வாமென்
றெந்தை நற்கடம் பாபுரி நாயக னினிதருள்
செயத்தாழ்ந்தே

---

* எப்படிப்பட்டவையாயினும்.
துப்பு-செம்மை.

யைந்து வெம்பொறி யடக்கிய காசிப,
 னகமகிழ் வொடுமேத்தி
யுய்ந்து ளேனென விரைந்துநின் றுச்சிமே
 லமைத்தகை யொடுஞ் சொல்வான். (74)

வைய முய்யநின் னருளிறு லொருமகம்
 வகுப்பது மனத்தெண்ணிச்
செய்யும் வேளையி லசுரருற் றேறகொடுந்
 தீவினை புரிகின்று
ரைய வென்றலுங் குமரறு *லிருதிறத்
 தவர்தமை யடுவிப்பாந்
தெய்வ மாதவ வின்னுநீ வேண்டுவ
 செப்புகென் றருள்செய்தான். (75)

திங்கள் வாணுத லிடம்பெற முடிமிசைத்
 திங்கள்வா ணுதல் செய்யத்
திங்க ளாயிரங் கோடிபோன் றெழுந்தருள்
 செய்தலாற் றிருநாளுந்
திங்கள் வாரத்தாற் சோமசுந் தரப்பெயர்
 சிறக்கவு முனைமாசித்
திங்க ளிற்†சிவ நிசிதொறு மீண்டுயான்
 சேர்ந்து போற் றிடும்பேறும். (76

எண்டி சைப்படு முலகினுஞ் சோமசுந்
 தரனெனு நின்னாமங்
கொண்டி சைத்திடு நாவின ராய்மனக்
 குகையினின் றிருமேனி

* மலையன் மாகரனென்னுமிரண்டு அசுரர்கள்.

† மஹாசிவராத்திரி.

கண்டி சைத்தவிவ் விரவினிற் போற்றிடுங்
காதலா ரெவரேனும்
வண்டி சைத்திடு மிதழியந் தொடையராய்
வாழவு மருள்செய்வாய். (77)

என்று வேண்டிய வரங்கொடுத் தாவுடை
நாயகி யிடப்பாக
னின்ற வாறரு ளிலிங்கமே வுற்றன
னிறைதிரு வருணோக்கி
நன்று ளங்களித் தப்பதி யுறைந்தன
னவிற்றுமன் னவன்றீர்த்தத்
தொன்றி யாடியங் கிறைவனைப் பணிபவர்
உம்பர்போற் றிடவாழ்வார். (78)

இருவர் தானவர்க் கஞ்சிய வொருதவர்க்
கிறையவன் றரைமீதே
*மிருக வாதியி னுரியணிந் திருந்தருண்
மேலவன் மிகு†நீபத்
தருவின் மேவிய சோமசுந் தரப்பிரான்
றுடொமு தமைசொற்று
முருக வேள்பொரு தசுரர்க டமைக்கொலு
முறைமையு மறைகிற்பாம். (79)

காசிபமுனி பூசித்த பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

ஆக அத்தியாயம் 11-க்குத் திருவிருத்தம். 333.

---

* புலி. † கடம்பு.

திருச்சிற்றம்பலம்.

## 12-வது அத்தியாயம்.

---

### மலையன் மாகரன் வதை யுரைத்தது.

கடம்பநாதர் துதி.

கந்தனைக் கிம்புரிக் கவின்கொ ளொற்றைமாத்
தந்தனை யருளிநீள் தண்க டம்பிலென்
சிந்தனை யினும்வளர் தேவை யன்றியென்
வந்தனை யாவர்பான் மருவற் பாலதே. (1)

(இ - ள்). கந்தசுவாமியையும் இரத்தினமிழைத்த சுவர்ணப்பூண் கட்டி அழகுபொருந்திய மகத்தாகிய ஒற்றைக்கொம்பினையுடைய விக்கினேஸ்வரரையும் புதல்வராகப்பெற்றருளிக்குளிர்ச்சி பொருந்திய விசாலமாகிய திருக்கடப்பந்தருவின் நீழலிலும் என் ஹிருதய கமலத்திலும் அமைந்துள்ள ஸ்ரீகடம்பநாயகரையன்றி என் வணக்கம் மற்று எவரைச் சாரும்? (எ-று)

காசிப முனிக்கருள் கடம்ப நாயகன்
மாசிலா நந்தியான் மாக ரற்பதி
தேசயி ராவதஞ் செலுத்தும் வேற்காத்
தாசில்கொற் றவன்றனை யழைத்திங் கோதுவான். (2)

கந்தகே ளிம்முனிக் கனன்ம கங்கெடுத்
திந்திரன் முதலினோர்க் கிடுக்க ணாற்றிவாழ்
வெந்திறல் சூரரை வீட்டென் றேறுதியோர்
மந்திர வாட்படை வழங்கி விட்டனன். (3)

கூதள மணிபுயக் குமரன் றீயபாற்
றுதுவிட் டாற்றுதீத் தொழில்விட் டுய்யினென்
றோதவுங் கேட்கிலா தோர்ந்தெ ழுந்தனன்
பூதரும் வீரரும் போற்றிச் சூழவே. (4)

(வேறு)

அந்தவேலை முந்துவேலை யாயிரங்க லித்தல்போ
லுந்துபே ரியங்கலித்த வோசை*யாசை யோங்கவே
வந்துமஞ்ஞை நிற்பவெள்ளை வாரணந்த ணந்ததி
னெந்தையேறி யடுகளத்தி லசுரரஞ்ச வெய்தினான். (5)

ஈதுகண்டு தீதுபண் டியற்றிநின்ற மாகரன்
கோதுகொண்ட நான்குசேனை குழுமிவந்து கழுமுள்வே
லோதுதண்டு குந்தநேமி யோங்குதோம ரங்களே
யாதிகொண் டெதிர்த்துநின்ற மைத்தபோர்ச மைத்துளான். ()

வெண்மைமிக்க வொருகடற்குள் விரவுநீல வேலையேழ்
திண்மைமிக் கெழுந்துசென் றதிர்த்துநின் றடர்த்தல்போ
லொண்மைமிக்க பூதிமேனி யோங்குபூதர் பாங்குபோ
யெண்மைமிக்க வசுரர்சேனை யெற்றெதிர்த்த லாற்றினார். (7)

கரியொலித்த †மாகமோடு காரொலித்த லென்னதேர்
பரியொலித்த மிகவிடுந்த படையொலித்த பாரிடத்
திரளொலித்த வீரர்தஞ் சிரிப்பொலித்த தேறலா
ருரையொலித்த கடலடுத்த வொலியடுத் தொடுங்கவே. (8)

வெற்றிமேவு வீரரோடு வெய்யசூர ரெய்யவும்
கொற்றமேவு பூதரோடு கொடியர்சேனை கடியவுஞ்

* ஆசை-திக்குகள். † ஆகாயத்திலோடும்.

சுற்றுமேவு தேரினோடு துன்னுதேர்கண் மன்னவுஞ்
செற்றமேவு படைகளைச்செ லுத்தியங்க றுத்தனர். (9)

அற்றதாள்க ளற்றதோள்க ளற்றசென்னி யற்றகண்
ணற்றமார்ப மற்றமோலி யற்றகண்ட மற்றகை
யற்றதந்த மற்றவால்க ளற்றநீள்பு ழைக்கையே
யற்றதேர்கள் புரவிவெள்ள மற்றழிந்த மற்றுமே. (10)

பரந்தெழுந்து செப்புநீர் படர்ந்துபார் மறைந்துமே
நிரைந்தெழுந்து விண்மறைத்த நீடுவெம் பிணக்குழாம்
விரிந்தெழுந்து கூளிஞாளி மேலெழுந்து துள்ளுவ
விரைந்தெழுங் கவந்தமங்க ளெண்ணிறந்த வாடுமே. ()

நிருதர்விட்ட படைவிலக்கி நீடுபூத ராடுவார்
பொருதுபூதர் படைவிலக்கி யசுரர்நின்று பொங்குவார்
இருதிறத்த ரின்னவாறு முன்னுபோ ரியற்றுகால்
வருசமர்க்க ணாற்றலின்றி யவுணர்சேனை மாண்டவே. (12)

கண்டுசீறி நாகமீது கருடனண்ணு மாறுபோற்
றண்டமொன்று கொண்டெழுந்து சார்ந்துதீப மாகரன்
*மிண்டுகின்ற பூதசேனை மீதுமோதி மோதியே
மண்டுமட் குடந்தகர்த்த வாறுபோலு நூறினன். (13)

உருமொலிக்க ணரவினுங்க ளுயிரொடுங்க லென்னமா
கரனடுத்து மோதுபோது சதிஙிகர்த்த பூதரும்
திரமடுத்த வீரருஞ் சிதைந்தழிந் தலைந்தனர்
புரமழித்த பரனளித்த புதல்வனீது கண்டனன். (14)

---

* நெருங்கி எதிர்க்கின்ற.

(வேறு)

கண்டு சீற்றமுட் கொண்டுசெவ் வேலொரு
    கார்முக மெடுத்தாங்கே
மண்டு நாணொலி யெழுப்பினன் வெடித்தது
    படித்தல மலைந்தெல்லா
வண்ட கூடமு மதிர்ந்தன மாகர
    னஞ்சினன் வலியற்றே
யண்டர் நாயக னாகிய குமரனை
    நோக்கியொன் றறைகின்றான். (15)

ஆல மாமிடற் றாதிமுன் னருளிய
    வரத்தினா னழிவெய்தேன்
சீல மார்குரு வருளிய மந்திரத்
    திறத்தினுக் கெதிர்காணேன்
நீல மாமயி லாளியென் றெடுபொர
    நினைவது தவிர்கண்டாய்
கோல மார்ந்திடு கருடனுஞ் சிவனணி
    யரவினைக் குறுகாதே. (16)

என்று மாகர னியம்புசொற் கேட்டெதி
    ரியம்புவன் குமரேசன்
பொன்று நாளுனக் கடுத்தது காலனும்
    புகுந்தன னீதோராய்
ஒன்று கேள்சிவ னணிநில வாயினு
    மிரவிமுன் னொளியாமோ
நின்ற பேதையே யுனக்குரை நமதுவாள்
    நிகழ்த்துமென் றுரைசெய்தான். (17)

பின்பு மாகரன் கொடுஞ்சினம் பொருந்தியோர்
பெருங்கொடு வில்லேந்திப்
பொன்பி றங்குமே மூாயிர மம்புகள்
புங்கவர் புகழ்கோமான்
முன்பு தாக்குற விடுத்தனன் விடுத்தவை
யனைத்தையும் முருகேசன்
பின்பி றங்குமோ ரழற்கணை தொடுத்துடன்
வெறுந்துகள் படுத்திட்டான். (18)

மீட்டு மாயிரங் கோடிவெஞ் சரங்களை
விடுத்தனன் றெடுத்தொன்றன்
கோட்டு மாமுகற் கிளையவன் வாளியிற்
குறைத்தன னதுகண்டே
பூட்டு வார்சிலை வலியினு லசுரனும்
பொருகணை பலவேவி
மீட்டு தேவரத் திரங்களு மிடையிடை
யிடியென விடுத்தார்த்தான். (19)

பார் மறைத்தன திசைகளு மறைத்தன
படுதிறைக் கடலோடுங்
கார் மறைத்தன வானமு மறைத்தன
கடியவன் விடுமவாளி
போர் மறைத்தன வனைத்துமோ ரிமைப்பினிற்
பொடித்தன னுயிர்க்கெல்லாஞ்
சீர் மறைத்தபல் வினைத்தொகை யனைத்தையுந்
தீர்ப்பவற் கரிதாமோ. (20)

அந்த மாகரன் சரங்களும் தெய்வதப்
படைகளு மழிந்தேகக்
கந்த வேளாறுத தையிரு கணைகளிற்
கடியவ னெடுஞ்சாபஞ்
சிந்தினுவிரண் டம்பினன் மகுடமுஞ்
சிதைவுசெய் திருகோலா
லுந்து தேரையு மொழித்தனன் விழித்தனை
யுறுதுய ரொழித்தானே. (21)

இலங்கு மோலியுஞ் சாபமு மிரதமு
மிழந்தவ னெதிர்*சாகா
விலங்கு போற்குதித தாயிடைத் தன்குரு
விளம்பிய மனுவோதித்
துலங்கு வேற்படை யாளிமுன் மறைந்தொரு
சூட்சியிற் பலவேறுக்
கலங்கு மாயையால் வடிவெடுத் தறுமுகக்
கடவுளைப் பொரவந்தான். (22)

தீயி னங்களுஞ் செறியிருட் கூட்டமுந்
திகிரியுந் திரைநீரும்
பேயி னங்களு முருமிடிப் பெருக்கமு
மூழியம் பெருங்காற்றும்
நோயி னஙகளு மெரிபடைக் கலங்களு
நாகலருங் கொடுமாயைச்
சேயி னஙகளு மாய்ப்பல வுருவெடுத்
தெதிர்த்தமர் செய்தானே. (23)

---

* சாகாவிலஙகு-குரங்கு

நாத னீதுகண் டின்னவன் மாயையு
　　நவிற்றுமந் திரவீறும்
பூத லத்தினி லழுந்திடத் திருக்கரம்
　　பொருந்தும்வேற் கிதுகூறும்
தீது தீர்த்துநீ கீட்டிசை யுறைகெனச்
　　செப்பிவேல் விடுத்திட்டான்
போதன் விட்டவேல் பொருந்திடந் தனைப்புவி
　　புகலும்வே லூரென்றே. (24)

கோடி சூரிய ருதித்தெனக் கீழ்த்திசைக்
　　கொற்றவே லுறுங்காலை
நாடு* கோகழி யைந்தெழுத் தெங்குரு
　　நாதநல் லருளோக்கால்
வீடு சஞ்சித மென்னவும் விடிந்தபின்
　　விளிந்திடு மிருள்போன்றுங்
கூட லான்புரி மாயையின் வலிகளும்
　　குறைந்தழிந் தானமாதோ. (25)

ஆன காலையின் மாகர ணொருவனே
　　யாகவெண் டிசையாவும்
வான நாடரும் பூதரும் வீரரும்
　　மாணிலத் தருமஞ்சச்
சோலை மாரிபிற் சுடுசரம் பின்னரு்
　　தூண்டியார்த் தெழுந்தெங்கோன்
மேனி மேற்சிவ னருள்கொழுப் படையினுற்
　　றுடைத்திட விதிர்த்துற்றான். (26)

---
* திருவாவடுதுறை.

வஞ்ச ணுண்மையுங் கொழுப்படைப் பெருக்கமு
மானிலத் தவர்வாணோ
ரஞ்சு மாறுநல் லாறிறு தோள்வள
ரண்ணல்கண் டலர்ந்தோங்குங்
கஞ்ச மாமல ரனையதன் கரத்துறுங்
கதிர்நெடு வடிவேலால்
நஞ்ச மாகிய மாகரன் றலையறுத்
துருட்டின* னவைதீர்ப்பான். (27)

(வேறு)

வெய்ய மாகர னிறந்தது முலகெலாம் வேலன்
செய்ய தண்ணரு ளாதரத் தெழுகதிர் வெயிலா
லையன் றுண்மநீங் கவர்படுந் துயரெனப் பசியாற்
றுய்ய வோதனம் வேட்டலைந் தனர்துறந் தவரும். (28)

மரங்கள் வாடின மலைக்குலம் வெடித்தன வருமான்
றரங்க நீரெனக் கானலைப் பருகுவ தடனீ
ரெரிந்தி யாவையும் வரண்டன வெழுந்தநீர் நசையால்
விரைந்து மேற்கடற் படிந்திட நடந்தனன் வெய்யோன்.

நாவு லர்ந்திட செவிகளும் செவிடுற நயனம்
பாவு தீயெழ வுடலயர்ந் துளஞ்சுடப் பதமூர்
தாவு கின்றுழித் தளர்ந்திட வனைவருஞ் சலித்தார்
மேவு கின்றுழிப் பசியினுங் கொடியதுவே றிலையே. (30)

இந்த வேளையோ ரிளம்பொழி லறுந்தட மெழில்சேர்
பந்த †ரோதன மலையுடன் கொடியவர்போல்
வந்து தோன்றினன் கடம்பமா நகரில்வாழ் வாதன்
றந்தை தாயலான் மகப்பசி யறிந்தெவர் தணிப்பார். (31)

* நவை-குற்றம்.

† ஓதனம்-அன்னம்.

வேத சாலமுந் தொடர்வருந திருவடி மிசையே
*பாத சாலமின் னொலிசெயப் பரித்தகச் சரையின்
மீது கோசிகம் விளங்கிடச் சிறந்தவெண் பொடியும்
போத முப்புரி நூலுநீண் மார்பிடைப் பொலிய. (32)

சுந்த ரஞ்செறி கண்டிகை மிடற்றின்மேற் றுலங்க
வுந்து பேரொளிக் குண்டலஞ் செவியினி னொளிரக்
கொந்து கொண்டொளி ரிளநகை திருமுகங் குளிர
விந்து வான்பிறை யனையபுண் டரநுதலிலங்க. (33)

காணு மாந்தர்கள் கண்களும் நெஞ்சமுங் கவரப்
பூணு மேனியும் பொலிதரப் பூசுர வடிவாய்த்
தாணு வாகிய கடம்பநா யகன்வருந் தகைகண்
டேணு லாம்பெரு மகிழ்ச்சிகொண் டனைவரும் வியந்தார்

ஆடி னார்சில ரரும்பசி யகன்றவ ரெனவே
பாடி னார்சிலர் நீழலிற் †பதிகொடு பவநோய்
வீடி யாநந்த மேவினு மெனச்சிலர் வியந்தார்
கூடி னார்க்கெலாங் கடம்பநா யகனனங் கொடுப்பான் (35)

மனிதர் பூதர்கள் வானவர் மாதவர் துறவோர்
புனித ராதியோர்க் கியன்றவா சாரமெய்ப் பொறுத்தே
யினிது வேண்டுவார் வேண்டுமா றின்னமு துடனீர்
தனிமு தற்பிரா னுதவியே பசிப்பிணி தவிர்த்தான். (36)

கருணை யேயுரு வாகிய கடம்பநா யகன்வக்
தருளி னாற்றரு மன்னமு மருந்திநன் னீரும்
பருகி யாவரும் பசிப்பிணி யகன்றனர் பானு
மருவ மாதமறைந் தானவ ரதிசய மடைந்தார். (37)

---

* சிலம்பு. † பதிகொடு-அமர்வுற்று.

இன்ன காலையின் மலர்மழை பொழிந்திட விமையோர்
சின்ன மார்த்திடப் பல்லியந் துவைத்தெழத் திறல்சேர்
மன்ன ராதியர் போற்றிட மரகத மயிலூர்ந்
தென்னை யாள்பவன் பாசறை யெய்திவீற் றிருந்தான். (38)

முனிவர் போற்றிட யோகியர் வாழ்த்தொலி முழங்கப்
புனித மெய்யடி யார்களர்ச் சனைசெயப் பொருவேற்
றனிமு தற்பிரான் சார்ந்தபின் *சாரணர் பலர்போய்
அனைய மாகர னிறந்ததை மலையனுக் கறைந்தார். (39)

ஒற்றர் கூறிய வுரையெனுங் காற்றடுத் துதைப்பச்
சுற்று துன்பெனுங் கடலினுள் ளறிவெனுந் தோணிப்
பற்று வீழ்ந்துழன் றலைபவன் மானமாந் தெப்ப
மெற்ற மேன்மிதந் திடர்ப்படு மலையனேங் குறுவான். (40)

(வேறு)

ஐயனோ வென்னுடைய வாருயிரோ வாவிக்கு
மெய்யனோ வென்னை விடுத்தேகு மேவினையோ
உய்யவோ வேறொன் றறியே னுனைக்கோறல்
செய்யவோ† நீ பச் சிவன்வா ளளித்தானே. (41)

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற சிறியோர்க் கெனும்மாற்ற
முன்னின்ற காசிபரான் முற்றும் அறிந்தேனுன்
கன்னின்ற நெஞ்சே னுனையென்று காண்பேனே. (42)

என்றென் றழுதிரங்கி யேங்கி யிழிமனத்தா
லன்று மலையன் படுந்துயர மாரளப்பா
ரொன்று முணர்வாற் றெளிந்தபினொற் றரைக்கூவித்
தன்றன் படையிரத மெல்லாந் தரப்பணித்தான். (43)

* சாரணர்-ஒற்றர்  † கடம்பநாதன்.

அப்பணியி லன்னா ரகன்றிடலு மம்மலைய
னொப்பிலரி யாசனத்தை யொருவியொரு மந்தணமாம்
வைப்பிற் றனியிருந்து வன்சூரன் றாயென்னுஞ்
செப்பிற் றிரள்கொங்கை மாயைவரச் சிந்தித்தான். (44)

(வேறு)

மருவி ருந்தவ னையல ரோதியாள்
மருவி ருந்தவ னையல ரோதிலே
யொருவ ருந்தணி தம்பமு றுத்தினா
*ளொருவ ருந்தணி தங்குப யோதரி. (45)

(இ-ள்) வாஸனை தங்கிய மலர்கள் முடிக்கப்பெற்ற கூந்தலையுடையவள்; சிவத்தை மருவும் பெருமை பொருந்திய தவத்தினையுடைய காசிபரிஷியைப்பலரும் அறியும்படி நீங்குதற்கரியதும் குளிர்ச்சியைத் தருவதுமான தன்னிதம்பஸ்தானத்தில் அழுந்தச் செய்தவள்; அசமுகிககு அருந்தப்பால கொடுக்கும் அழகிய ஸ்தனங்களையுடையவள். அநதபாயை. (எ-று).

இன்ன மாயை மலைய னிருவிழி
முன்ன ரெய்தி முழுப்பவ மாற்றலாற்
பின்ன வன்கெடப் போதுற லுற்றனை
யுன்னை நோவதென் னூழ்வழி யுற்றதே. (46)

மாயை வார்த்தை வினவி மலையனுந்
தீய னீவந்த தின்னது செப்பவோ
†தாய னுய்பல தேகந்த ரிப்பவோ
தூய மந்திரஞ் சொல்லென வேண்டினன். (47)

மலைய னெண்ணிய வாறொரு மந்திர
நிலைய ளித்தவ ணீங்கலு மாங்கொரு
சிலையுந் தூணியுந் தெய்வத மாப்படைக்
குலமு மேந்தி யனலிற் கொதித்தனன். (48)

---

* ஒருவு-ஆடு. † தாய்போன்றவளே.

கச்ச ணிந்தனன் மார்பிற் கவசமார்த்
துச்சி மேன்மகு டந்தரித் *தொன்னலா
ரச்ச மேவவெ ழூப்படை யங்கைகொண்
டெச்ச மின்றுயர் வாயில்வந் தெய்தினான். (49)

வந்த தீயம லையனீ ராயிரஞ்
†சிந்து ரம்புலி சீபரிபேய்கணத்
துந்து சில்லியத் தேருமோன் றேறினன்
அந்தியாழியி னார்த்தவி யங்களே. (50)

§வைய மெண்ணில வாம்பரி யெண்ணில
கைய மாமலை யெண்ணில காருடல்
வெய்ய ரெண்ணிலர் மிக்குவி ரைவியார்த்
தொய்யெ னக்கொடி யோன்புடை யுற்றனர். (51)

தேரொ லித்தப ரிகள்சி ரித்ததிண்
பேரொ லிக்கய மார்த்தபெ ருந்திறற்
றூரொ லித்த தறுகண்ம லையன்மேற்
காரொ லித்திடி வீழ்தல்க டுப்பவே. (52)

குடையெ ழுந்தகொ டிகளெ ழுந்தபோர்ப்
படையெ ழுந்தப றந்தன பூதிவா
னிடையெ ழுந்தும றைத்தது ஞாயிறை
யுடைய போர்க்களத் தொன்னலை னுற்றனன். (53)

மலையன் வந்தது ணர்ந்துவெம் பூதரு
மலைவு மேவிய வீரரும் வாழ்த்தவே
மலைய மாதவன் றன்னையு மால்செயு
மலையை நீறுசெய் வேலனும் வந்தனன். (54)

கங்கை பெற்றக டவுள்வந் தெய்தலும்
பொங்கு பூதவ டவைக்க னல்போரப்

---

* பகைவர். † யானை. § வையம்-தேர.

பங்க மெய்திய ழிந்தன பற்றலான்
றங்க ணாற்பெருந் தானைத்தொ டுசடல். (55)

(வேறு)

வெற்றி மேவிய மலையனும் வெய்யவன் சேனை
யிற்ற வாறுகண் டிரதம்விட் டிழிந்தனன் சிலைகைப்
பற்று தண்டினான் மூச்சினாற் சிலசில பதத்தாற்
கொற்ற நீடிய பூதர்க ளழிவுறக் கொன்றான். (56)

வீர வாகுவு மதுகண்டு வெஞ்சிலை வளைத்து
மாரி யாமெனக் கணைமழை சொரிதலு மலையன்
றேர தேறியா யிரங்கணை செலுத்திமுன் றடுத்துக்
கோர மேவிய நூறுகோல் விடுத்தனன் கொதித்தே (57)

கந்த னுக்கிளை யானுமச் சரமெலாங் கடிதிற்
சிந்தி யோரிலக் கங்கணை செலுத்தியத் தீய
னூர்ந்து தேரினைப் பொடித்தன னொன்ன லான் நகைத்து
விந்த மன்னதோர் சேமத்தே ரேறினான் வெகுண்டு (58)

விலக்க ரும்பல கணையினால் வீரவா குவினைக்
கலக்கஞ் செய்திடக் கண்டதை யெண்மராய்க் கவின்ற
துலக்க மேவிய வீரரும் வியர்வையிற் றோன்று
மிலக்க வீரருந் தனித்தனி சமர்புரிந் திளைத்தார். (59)

அனைய காலையின் வீரவா குப்பெய ரயினான்
நினைவு வந்துவெங் கணைமழை பொழிந்தவ னெடிதாய்ப்
புனையு மாமுடி வீழ்த்தினன் றேரினைப் பொடித்தான்
இனைய வில்லையு மிறுத்தன னிமையவ ரார்ப்ப. (60)

பங்க மாற்றுமிவ் வீரனைப் படுத்துவா வென்னச்
சங்க ரன்றரு மெழுவினைத் தானவன் விடுத்தா

னங்க தற்கெதி ராய்ச்செல வருச்சனை யாற்றி
துங்க வீரனு மிறையவன் படையினைத் தொடுத்தான்()

தொடுத்த வப்படை யீசனை வேதனைத் துளப
மடுத்த மார்பனைக் காற்றினை யனலினைப் புனலைக்
கடுத்த வேங்கையை யரியினைக் கரியினைப் புகையைத்
தடுத்த மின்னிடி மழையினைத் தந்துடன் பொருதே. ()

எழுவி னூற்றலைத் தொலைத்தலு மாயைமுன் னீந்த
வழுவின் மந்திர மாயையை வேற்படை மாய்க்கக்
கழிவில் தென்றிசை நூறுயோ சனையினிற் கடிதி
னொழிவி லாவிற லுடைந்தவன் போனுமோ டினனே. ()

ஓடல் கண்டிடு மிலக்கத்தொன் பதின்மரு முடனுய்
நாடி யோடினர் மலையனு மாயையா னவிப்பக்
கூடு நித்திரை கொண்டனர் வீரர்பின் குமரன்
வாட வெஞ்சமர் புரிவனென் றெண்ணிமுன் வந்தான்.

கண்டு வேலவன் மயிற்பரி கடிதினிற் றூண்டிக்
கொண்ட வில்வளை தொருகணை யேவவக் கொடுங்கோல்
மிண்டு செய்துபல் லாயிரங் கணைகளாய் விரிந்து
விண்டு போர்புரி மாற்றலான் மெய்யெலாந் துளைத்த(65)

கிளைத்து வண்டினங் கீண்டிய மரமென வண்டு
துளைத்த வாய்வழி குருதிநீர் சொரிதரத் துணுக்குற்
றிளைத்த மெய்யனுப்தேறினனெனைப்பொருவேலோன்
களைத்தி டப்புரி வேனெனக் கார்முகம் வளைத்தான். (66)

தன்ன கத்தெழு நெடுஞ்சினந் தணிவுறு மளவும்
பன்ன கப்பகை மயிலிவர் முருகன்மேற் பாணங்

---

விண்டு-எதிர்தோன்றி. வண்டு-அம்பு.

கன்ன கத்தின்மேற் காரெனச் சொரிதலுந் தடுத்தான்
என்னகத்துறை தருமிளை யாளிளைப் பாறே. (67)

வள்ளல் பின்னரும் வடிக்கணை தூவியம் மலையக்
கள்ள னேறிய கொடுஞ்சியந் தேரினைக் கலைத்தான்
தொள்ளை நெஞ்சினன் சோர்ந்தனன் பின்னுமோர் தேரிற்
றுள்ளி யேறினன் வானவர்ச் சரம்விடத் துணிந்தான். ()

காற்றி னத்திரம் விடுத்தனன் கடியவன் கந்தன்
மாற்றும் வெம்பணிப் படைவிடுத் தழித்தனன் மாற்றான்
சீற்ற மேவுபன் னகப்படை விடுத்தனன் செவ்வே
ளீற்று காருடப் படையினு னீக்கினின் றனனால். (69)

அக்கி னிக்கணை தீயவன் விடுத்தன னறிஞன்
மிக்கவாருணப் படைவிடுத் தழித்தனன் வெய்யோன்
றொக்க நாரசிங் கப்படை விடுத்தனன் றூயோன்
றக்க தாய்ப்பொரு சரபவெம் படையினாற் றடுத்தான்.

அயிலும் வெஞ்சினத் தயன்படை விடுத்தனன் மலையன்
வயிர வன்படை விடுத்தது கெடுத்தனன் வள்ளல்
பயிலு மாற்றலன் விடுத்திடும்படைக்கெலாம் பகையாக்
கயிலை நாயகன் மைந்தனுங் கணைவிடுத் தழித்தான். (71)

மண்ணின் மேவிய திசைகளின் மேவிய வசைதீர்
விண்ணின் மேவிய கடல்களின் மேவிய வெற்பின்
கண்ணின் மேவிய மலையனுங் கனிவுறு மடியா
ரெண்ணின் மேவிய முருகனு மேவிய சரங்கள். (72)

குடையும் வானவர்ப் படைகளுங் குறைந்தன வினியெப்
படையி னாலிவன் றன்னைவெல் லுவதெனப் பரிவாற்

கடையன் வீரர்போ லிவனையுங் கடிதினின் மைய
லடையச் செய்குவ மெனநினைந் தோடின னன்றே (73)

நீப மாலிகை யானது கண்டனன் நீப
மாப ராபர னருளிய வாட்படை செலுத்தித்
தூப மேயெனத் திரிதரு மலையனைத் தரையிற்
றீப மாங்கதி ரிருளினைச் செகுத்தல்போற் செகுத்தான்.

ஞான வத்திர மொன்றுவிட் டானது நடந்து
மான வீரர்த மாயையைக் கடிதலும் வந்தார்
கான மாமலர்க் கடம்பனைப் பணிந்தவ ணிருந்தார்
வான நாடர்கள் பூமழை பொழிந்தனர் மகிழ்ந்தார். (75)

விண்களித்தன திசைகளுங் களித்தன விரிநீர்
மண்க ளித்தன தருமமுங் களித்தன வனசப்
பெண் களித்தனள் பெரியவர் களித்தனர் கண்டோர்
கண்க ளித்தனர் கந்தவேள் படைகளுங் களித்த. (76)

மலையன் மாகரன் குமரவேள் மாய்த்திடு சிறப்பா
லலகி லாதுயர் சுவர்க்கம்வாழ்ந் திருந்தன ரன்னோர்
தலைவன் றன்னெடுஞ் சமர்புரி தலத்தினை யின்றும்
நிலைமை மேவிய செம்புல மென்பரா னிலத்தோர். (77)

வள மிகுந்திடு மலையன்மா யிடத்தினை மலையான்
களமெ னப்புகல் வார்முனங் கடிகொள்பா சறையா
யிளைய வன்புகு மிடத்தினை யிரும்புல மென்பார்
விளையு மன்புளீ ரென்றனன் மெய்ப்புகழ்ச் சூதன். (78)

வள்ளி நாயகன் மலையனை மாகரன றன்னைத்
துள்ளிவீழ்தர வாளினாற் றலைத்தமை யுரைத்தாம்.
கள்ளருமலர்க் கடம்பமா வனத்திலக் கடவுள
பிள்ளைமாமதிச் சடையனைப் பேணிய துறைப்பாம். (79)

பன்னிரண்டாவது மலையன் மாகரன் வதையுரைத்த
அத்தியாயம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

ஆக திருவிருத்தம் 412.

திருச்சிற்றம்பலம்.

# 13-வது திருக்குமாரக் கடவுள் பூசித்த அத்தியாயம்.

## கடம்பநாதர் துதி.

வைகுந்த மெடுத்துமுனை மசுரர்தமை மாய்த்தகுகன் மனத்திற் றீமை, வைகுந்த குவமலைய மாகரனை வாட்படையால் விாட்டிப் பைம்பூ, வைகுந்த மிடைகடம்ப வனத்து வந்து பூசைசெய மகிழ்ந்து தோன்றும், வைகுந்த மாலறியாக் கடம்பநா யகனிருதாள் வணங்கி வாழ்வாம். (1)

(இ - ள்.) கூர்மைபொருந்திய வேலாயுததகினால் முன்னாள் சூரபத்மாதி யசுரர்களைச் சங்கரித்த குகப்பெருமான், மனத்தில் தீமைபொருந்திய மலைய மாகரர்களை வாளாயுதத்தினால் வாட்டிப் பசியகாயா குருந்த விருக்ஷங்கள் நெருங்கியுள்ள கடம்பவனத்திலே வந்து பூசிக்க (அப்பூசைச்கு) மகிழ்ந்து எதிரே பிரஸந்நமாயருளிய ஹரி யயன் காணாக் கடம்பநாதருடைய பதமலரை வணங்குவாம.

விதிமுறைசெய் வேள்விதனை யடுமிருவர் விளியவடல் விளைத்த செவ்வேள், எதிரில்*வய வீரரொடு மிறந்திடுவெம் பூதருமுய்ந் தெழுந்து சூழ, வதிரொலிவி வியங்கலிப்ப வடுகளறீத் தாடனெடுந் தோகை யூர்ந்தே, வதிவடிவே லையுநினைப்ப வரவேந்திக் கடம்பவன மருங்கு வந்தான். (2)

---

* வலிமை பொருந்திய.

(வேறு)

ஞான வேலவ னண்ணித் தலாதி
ஞான மூர்த்தியு நற்பிர தோடமுந்
தான மொன்றினிற் சார்வரி திவ்வருட்
டான மொன்றிற் றழைத்ததென் றெண்ணியே. (3)

மீனத் திங்களும் வெண்மதி பக்கமு
மான நன்மக மன்றியும் மந்திராண்
மேன நற்பிர தோடமு மேவலாற்
கோன ருச்சனை யாற்றக் குறித்தனம். (4)

ஆத லாலெம் மிறைவ னருச்சனைச்
சீத நீரமு தைங்கவ்வி யந்திருக்
* கோதை யாதிகொ ணர்கென வெண்ணிறப்
‡ போத கத்துப் புரந்தரற் கோதினான். (5)

வான வேந்தகன் றானவ்வ னத்திடை
மான வேலவன் வானவர்த் தச்சனைத்
தான மைத்தொர் தடனகர் செய்கென
வான தென்றவ னுக்தொழு தாக்குவான். (6)

ஆழி யென்ன வகழி யணிமதி
லேழி ருந்த நிலையெழிற் கோபுரம்
பாழி சூளிகை மாளிகை பாங்குசேர்
வாழி வீதிசூழ் மாநக ராக்கினான். (7)

(வேறு)

ஓங்குமறை யவர்பயிலு § நியமமனைத் துலகையெலாந்
தீங்ககற்றிக் காத்தருளுஞ் செல்வர்தமா வண்மியற்றித்

* புஷ்பமாலை ‡ யானை. § தெரு.

தேங்குவணி கரின்*மறுகும் செய்திவர்கண் மூவரையுந்
தாங்குபுக ழோர்த்தொழிலார் வீதிகளுஞ் சமைத்தனனால். (8)

ஓதியவிவ்வீதிகளி னொருபுறமா யொளிதிகழச்
சாதிபேதமதாகுஞ் † சங்கரர்தம மனைகள்புரிந்
தேதமிலாக்கடம்பவனத் தெந்தைபணி விடைபுரிந்து
தீதகலும்பரிசனர்தாஞ் செறியும்வீ தியுங் கண்டான். (9)

சரியைமுதனாற்பதமுஞ் சாற்றுமறை வேள்வியுமிக்
குரியவராயருணீபத் துறைசோதி யிலிங்கவரன்
றிருவடிமூவிருபொழுதுந் தீண்டுசிவ வேதியராய்
வருமாதிசைவர்கள்வாழ் மடங்களுமுண் ணகரமைத்தான். ()

ஞானமணி விளக்காகி யருட்கடப்ப நாதனுறை
ஞானமணித் திருக்கோயிற் றிருப்பணிநா டொறும்பரவும்
ஞானமணி ஞானவதி முதற்றீக்கைக் குரியவராய்
ஞானமணி விளக்கிடுவார் மடங்களுநன் குள்ளமைத்தான். ()

(வேறு)

கற்பமு மழிவுறுக் கடிகொண் மாமதிற்
கற்பக மனையபூங் கடம்பி னுள்ளுறக்
‡ கற்பகை யெறிந்தவேற் கடவுள் போற்றவாழ்
கற்பனை கடந்துளான் கோயில் கண்டனன். (12)

இருடறந் தெழுமணி யிலங்கு கோபுர
மிருவர்முன் றேடநீண் டெழுந்த சோதியா
மிருநில மேத்துமிச் சிகரி மேற்கொடி
யிருண்மிடற் றவன்முடி யிருந்த கங்கையே. (13)

* தெரு. † கலப்பு ஜாதியா. ‡ பகைவனுபகிரௌஞ்சன்.

(வேறு)

ஞாலந் தோன்றிய வுயிர்க்கெலா நவிற்றுமிந் நகரே
சீலந் தோன்றுவீ டருடிறந் தெரித்தென விதனு
ளாலந் தோன்றிய மிடற்றிறை யடிகளர்ச் சனைசெய்
காலந் தோன்றநின் றொலி‡யிய மண்டபங் கண்டான். (14)

அம்பு யத்திரு மண்டப மாயிரந் துவர்க்காற்
செம்பபொன் மண்டப நடனமண் டபந்திரு நூற்றுக்
கம்பண்டப மேனைய மண்டபங் கவின்றி
யும்பர் குழுமைந் தாவர ணங்களு முறுத்தான். (15)

கான மாமலர்க் கடம்பநா யகன்றிரு முன்னர்
மேன நந்திவெள் விடைக்கொடி மிக்குயர் கம்ப
மான நற்பலி பீடமும் வகுத்தனன் றென்கீழ்
ஆன பாங்கரி னடுமனை மண்டப மமைத்தார். (16)

இந்தி ரன்றிசை யேறுதென் பாற்குரு சோம
சுந்த ரப்பிரா னிருதியி லேங்கான் றொண்டர்
கந்த ராவுடை நாயகி யுத்தரக் * ககுப
முந்தி வாழிட முந்துமா வரணத்து முயன்றான். (17)

முயன்ற கோயிலுண் மொழிந்தபே ரூழியு மழியா
துயர்ந்த மாமணி விமானம துப்பரும் பரவ
வயங்கொ ளுந்திருக் கடம்பநா யகன்வளர்ந்த ருள்வா
னியைந்து கண்டுவந் திளையவ னிணையடி தொழுதான். (18)

தொழுத கம்மியற் கருள்புரிந் தறுமுகத் தோன்றல்
பழுதில் சீந்திரு நகரமும் பரன்றிருத் தளியும்
பொழிய ருட்டிருக் கண்மலர் சாத்தியே புவன
முழுது மாலதன் றந்தைதாள் வழிபட முயன்றான். (19)

* திசை. ‡ இயம் - வாத்தியம்.

ஆயகாலையின் மகபதி சுரரொடு மமலன்
றாயமேனியி லாட்டுவ சூட்டுவ துவர்வா
யேயவூட்டுவ திருமுனர் கோட்டுவ வெல்லாந்
தூயவைந்தரு நல்கவைத் திறைஞ்சிடத் தொல்லோன். (20)

கடம்படித்தலச் சோதியை யாட்டவுங் கனிவாந்
திடம்படிந்ததின் முழ்கிடிற் றேவமா னிடர்மற்
றிடப்படிந்தவ ரெவருமுய் யுவுமுளத் தெண்ணி
யுடம்பிடிப்படை யூன்றினன் குடகடற் கொருசார். (21)

பிரணவப்பொரு ளரன்பெறப் பேசிய பெரியோன்
வரையிலூனறு வேலூலகெலாந் தணாந்துசார்ந் தண்டப்
புரிசைகீண்டதவ வழியவன் பொருந்தருட் டீர்த்தம்
புரையகற்றுசே யாறெனப் புடவியில் வருமால. (22)

(வேறு)

கரைநிறைதருமர முறிதர கரிவெரு வொடுமிரியத்
திரைபொரு நுரைவிரி கரமவைதிசைவிசை யொடுமெறியா
* முரிதரு மலையுடை மடமக ளுடல்கிழி படமூடகா
‡ விரியர வுணவென வுடைமயி லிறையவ னதிவருமால். (23)

(சேயாற்றினைப் பரமசிவமாக உவமானிக்கின்றார்.)

உழைகொடு மணியனல் கொடுமித ழிகளுறு சடைமுடியா
விழைவொடு மிருமர ரொடுபுலி யதளொடு கரியுரியொண்
டழைகொடு பெணையிட மதுகொடு தடமதி முடிகொடுநீண்
மழவிடை மிசைவரு தவினர னிகர்வதூ வரநதியே. (24)

(பிரமசாரியாக உவமானிக்கின்றார்.)

நீரொடு சிறுகர கமதொடு நெடுமகிழ் கொடுகலையோ
டாரறை மறைபல துறைதொறு மறிதர வெதிர்வழலா

* சூழ்ந்துள்ள. ‡ நீண்ட சர்ப்பம்.

னேரொழு குறுநிலை பலவொடு நிகழ்கிடை கொடுவரலாற்
சீரோடு வருகுக நகியது சிறுமறை யவர்நிகராம். (25)

மகபதி*கனவுல கினினிலை பெறவர மருளியசீர்க்
ககபதி யுயர்கொடி யவனுடை மருமக னதிகடுகா
நகபதி மகளொடு சிவனுறை நகர்நிறை தருநீபச்
சகபதி தொழுதிரு நகர்தனை வலமொடு கடறழுவும். (26)

(வேறு)

குக்குடக் துவசச்சேய்தன் கூர்வேலா லழைத்திடுசே யாறிவ் வாறு, பக்கமுள குளமேரி வாவியெலா நிறைத்தவ னைப் பரவு மன்பர், மிக்குறுபே ரானந்தக் கடலினிடை யடை வதுபோல் வேலை நீரிற், புக்குவிரவியதறுகண் டெல்லோருங் களித்தனரப் பொழுது தன்னில். (27)

மருவுகதிர் வேலவன்கை வாளதனுன் மலையனுமா கரனு மாய, விருவினையாம் பிறப்பிறப்பு மின்றழிந்த தெனவுலகோர் இன்ப மெய்தச், செருமலிந்த வசுரர்குல மின்றொடுவே ரற் றதெனத் தேவர் போற்றப், பருதியுந்தன் ஞாதியென்றே மூழ்கநினைந் தெனக்கடலிற் படிந்தா னன்றே. (28)

(மாலைக்கால வருணனை)

சிவனடிகண் மெய்யன்பிற் றொழுமவர்கள் விழியெனவுஞ் செங்கை போன்றும், §புவனமிசை நலங்கமலங் குவியவளர் செங்குவளை பொலிந்து பூப்பத், தவமுனிசெய் தீவினையைத் தடுத்தவர்தீ வினையினிருள் சாரச் செவ்வே, ளவருயிர்கொன் றிடுவீரப் பிரதாப மெனச்‡செக்கர் விரிந்த தன்றே. (29)

துன்புறுமை வினைப்போகந் தொலைந்துழியங் கிறைவ னடித்துணைக்கண் டாங்கே,யன்புறுமெய் யடியவர்கள் சிவதனி

* பொன்னுலகு. § புவனம் - நீர். ‡ செவ்வானம்.

கள் வேட்டுவிரைந், தணுகு மாபோல், மன்புவியிற் பசும்புனு கர் பசுவினங்கள் சுழக்கன்ற மனத்து ணுடி, யின்புறநன் மனைதோறும் விரைந்துவிரைந் தெய்துவன வாகுமெங்கும்.

(வேறு)

இருந்த வாதன மேட்டொடுங் கைக்கொளீஇப்
பரிந்து வாயிற் குருமொழி பன்னுறத்
தெரிந்து வீடுறச் செல்லு மகாரினம்
பொருந்தி யோகர் வழிக்கொளல் போலுமே. (31)

(இரவை ஸ்திரீயாக உவமானிக்கிருர்)

வான மெல்லிடை வண்மதி யோர்முக
மீன மூண்ணகை மேக நெடுங்குழ
லான செக்க ரணிதில தங்கொடு
மேன * வல்லெனு மெல்லிய ளூன்றினுள். (32)

(சந்திரோதய வருணனை)

மாயம் வல்ல மலையனை மாகரத
தீடனைப் பொரு செய்திரு மேனிமே
லாயகல் லமு தாட்டியுய் வேணெனு
நேயமோ டுறல் போன்றது நீண்மதி. (33)

தக்க பற்பல சமய நடுவணே
மிக்க சைவ சமயம் விளங்கல்போற்
றெக்க ‡ தாரகை சூழவோர் தூமதி
திக்கெலா மொளி செய்து சிறந்ததே. (34)

வண்ண வேலணி வள்ளி மணுளனெம்
மண்ணல் பூசனை யாற்று நிசிப்பொழு

* அல் - இரவு ‡ நக்ஷத்திரம்.

தெண்ணு மென்ற னுரையள வோவினி
புண்ணி யக்கும ரன்செயல் போற்றுவாம். (35)

(வேறு)

சீர்வளர் மணிகொ ழித்துச் சென்றசை யாற்றைச் செவ்வேள்
பார்வளர்ந் தோங்கச் சுத்தி பயிற்றியப் புனலுண் மூழ்கி
யேர்வளர் மேனி யீரம் புலர்த்தின னுயிரை யெல்லாம்
நேர்வள ரருளா னந்த வாரிநீ ராட்டு நேசன். (36)

ஐவகை யாவி யூட்டி யமைத்தகோ சிகத்தை யம்பொன்
மெய்யிசை விளங்கச் சாத்தி வெண்பொடி யுருத்திராக்கம்
சைவவா கமத்தாற் சாத்தி பிரபல தருமமாங்கட்
செய்வன புரிந்தா னையன்தீவினை தீர்க்குந் தூயோன். (37)

வினைத்தளை யறுத்தா னந்த வீடுயிர்க் கெல்லா நல்குந்
தனிப்பொருள் வீதி நீங்கிக் கோயிலை வலமாய்ச் சார்ந்து
முனிக்கணத் தோடு நீப நாயகன் முன்ன ரெய்தி
யினித்ததே மொழிபா லாகியாவுமா மிலிங்க வாழ்வை. (38)

சிவமரு வுருவங் கத்தா கன்மமென் றைந்தாச் செப்பும்
பவமிலைந் தாய சாதாக் கியத்தையும் பரிவி னோடுங்
கவரில்கீழ் மேற்பீ டத்து மிலிங்கத்துங் கண்டு போற்றி
யவமில்கொல் லாமை யாதி யெண்மல ரமைபச் சாத்தி. (39)

---

சிவம், அமூர்த்தம், மூர்த்தம், கர்த்துரு, கன்மமெனச் சாதாக்கியம் ஐந்தாம்.

அஷ்டபுஷ்பமாவன :—கொல்லாமை, இந்திரிய நிக்கிரகம், பொறுமை, தயை-பாவனை-தவம்-சத்தியம்-ஞானம்.

எண்ணெய்மா னெல்லி மஞ்ச ளியம்புமா வினைந்தே யைந்தாய்
நண்ணிய வமுத மின்பா னறுந்ததி நெய்தேன் கன்ன
றண்ணிய கனிதேங் குண்ணீர் கூவிளஞ் சந்தச் சேறு
கண்ணிய முறையா லாட்டிச் சுத்தநீர் கருதி யாட்டி. (40)

* பத்துறழ் நூற்றுத் தாரா பாத்திர † மாமா வின்கோ
டுத்தமவெண் கோட்டா னுமுறுபுன லாட்டிப் பின்னர்
வைததவர்க் கியஞ்சே யாற்றுத் தபனநீர் மகிழ்வாலாட்டி
மெய்த்தவீ ரம்புலர்த்திப் பரிவட்டம விளங்கச் சாத்தி. (41)

வெண்பொடிக் கந்தமக்க மறுகதும் வேறு சாத்திக்
கண்பெறு மகுட மாதி பரிபுர வரையுங் கையா
லெண்பெறு முறைப்புத்தோறுமெழின்மிகுத்திலங்கச்சாத்தித்
தண்பயி ‡ விண்டை மாலை சரமுதற் பலவுஞ் சாத்தி. (42)

சருக்கரைபயிறு பானெய் ததிபுளி மிளகெள் ளெண்ணெய்
விரைக்கொளப் பயிற்று மன்னம் வெற்றனந் துவையல்தீயல்
பருப்புநெய் கறிநற் சாறு கறிவகை பலசிற் றுண்டி
தெரித்தபல் வேறு தெண்ணீ ருடனிவே தித்த பின்னர். (43)

மறைச்சிலம் பலம்பு தோன்றுண் மலாமுக மோலி மீது
முறைப்படப் பாத்தி யாதி மனமுவந் துதவி வாச
நிறைத்தநூ பாதி யீரெண் முகமனு நேர்ந்து சூழ்ந்து
நறைச்செழு மலரைத் தெண்ணிச் சாத்தினன் கேததலுற்றான்.

(வேறு.)

பூத மைந்துமாய்ப் பூத மல்லவாய்ப் பொறிபு லன்களா
யவைக ளல்லவாய்க், கோதி லுட்கர ணங்க ளுன்குமாய்க்

* ஸஹஸ்ரதாரா. † ஆமா: காட்டுப்பசு. ‡ தாமரை.

கூறு நாற்கர ணங்க ளல்லவாய்த,தீதில் *காலமே யாதி யேழு மாய்ச் செப்பு மன்னவை யல்ல வாய்ச்செழுஞ், சோதி யாந் திருக் கடம்ப நீழலுட் டோன்றி வாழ்சுக சொருப போற் றியே. (45)

பிரம மூர்த்தியாய்ப் பிரம மல்லவாய்ப் பேச்சிறந்திட மாகி யெங்குமாய்க், கருது பூரணா கார மூர்த்தியா யகண்ட பூரணாதீத மாயிருந், † தரணி நீரனல் வாயுவான்மதி தபன ருவியாய்த் தழைத்த மேனியாய்ச், சுருதி யந்தமாய்க் கடம்ப நீழலுட் டோன்றி வாழ்சுக சொருப போற்றியே. (46)

உயர்த்த ‡சைவதத் துவங்க ளைந்துமா யோங்கு மன்னவை யல்ல வாய்வளர்,வியத்த மூர்த்தியாய் வியத்த மல்ல வாய் மிக்க வாவியா யாவி யல்லவாய், நயத்த வின்பமா யின்ப தீத மாய் ஞான மாகியஞ் ஞான மல்லவாய்த, துயக்க றுத்தபூங் கடம்ப நீழலுட் டோன்றி வாழ்சுக சொருபபோற்றியே.(47)

செய்ய தாண்மலர் செங்கை மாமலர் சிறந்த கண்மலர் செய்ய வார்சடை, துய்யவங்குலி யானு மந்தகன் றும்பி காமன் விண்ணுறிராவணா, னையநின்றநன் மேனி நம்பனை நம்பு வார்வினை வெம்பு மாறருள, னையனேயருட் கடம்ப நீழல்வா ழமல ஞானசிற் சொருப போற்றியே. (48)

போற்றி போற்றிமும் மலவி ருட்பகை போக்கி வீட ருண் ஞான பானுவே, போற்றி போற்றிபூங் கொன்றைவான் மதி புரிந்த செஞ்சடைக் கணிந்த பூரணா, போற்றிபோற்றி

* காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன் மாயை யென வேழாம். † அஷ்ட மூர்த்தம்.

‡ சுத்த வித்தை, ஈச்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம, எனச் சிவ தத்துவம் ஐந்தாம்.

யென் றேத்து மன்புர்தம் புந்தி வேட்டவை யருளு மெந்தை
யே, போற்றி போற்றிதண் கடம்ப மாநகர் புரக்கு ஞானசிற்
சொருப போற்றியே. (49)

(வேறு)

என்றுநின் றேத்துங் காலை யென்னையாள் கடம்ப நாதன்
மின்றிரு வடிவேற் செங்கை விசாகனுக் கருளிச் செய்வான்
முன்றொழு தேத்து மிந்த முனிவரன் குறைவு தீர
நன்றருள் செய்து வேள்வி நலம்பெறப் பாதுகாத்து. (50)

மைந்தநீ விடுத்த வைவேன் மன்னிய வெலூர்மேவி
யந்தரர் முனிவர் நாகர் மானிட ராதி யானோர்
சிந்தனைப் பேறீந் திந்தத் தினத்தெமை யாண்டுக் கோர்கால்
வந்துவந் தனையி யற்றி வாழியென் றருளிச் செய்தான். (51)

தேவர்கள் முனிவர் யோகர் சித்தர்கந் தருவ ரண்டர்
காவலர் எவரும் போற்றக் கடம்பமா நகர்க்கு நாதன்
தூவருள் புரியப் பெற்றுத் தூரியந் துவைப்ப வீரர்
யாவரும் போற்ற வேள்விச் சாலைவந் தணைந்தா னெங்கோன்.

அங்கணைந் தடிகள் போற்று மருந்தவர்க் கரச ரான
பங்கய மலரோ னீன்ற காசிபன் பரிவு கூரத்
தங்குநன் மகங்காத் தோம்பிச் சயசய முழக்கத் தோடு
மெங்கணு யகனும் வேலூ ரெய்திவாழ்ந் திருந்தா னன்றே. (53)

இளையனூர் வேலூ ரென்றப் பதிப்பெயரியம்ப வும்பூர்,
தளையவிழ் மலர்சூழ் வாவித் தடாகமுஞ் செழித்துச்செந்நெல்,
விளையவும் வசித்தோர் கண்டோர் மேவினோர் வினைகள்யாவுங்,
களையவு மிளையோ னெண்ணிக் கருணைகொண்டினித மர்ந்
தான். (54)

புரந்தரன் வாழ்வின் மிக்கபோகமும் பொருளும்பெற்று
நிரந்தரச் செல்வர் மாட நெருங்கிய வேலூர் மேவி
வரந்தரு குமரன் பூசை செய்தமை வகுத்தா மிப்பாற்
பரந்தருள் புரியு மென்தாய் தவம்புரி பண்புஞ் சொல்வாம். (55)

பதின் மூன்றாவது திருக்குமாரக்கடவுள் பூசித்த

அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

---

ஆக திருவிருத்தம் 467.

திருச்சிற்றம்பலம்.

## 14-வது உமையம்மை தவம்புரிந்த அத்தியாயம்.

### கடம்பநாதர் துதி.

வேத வுள்ளுரை யாவுமாய் விளம்புவிண் முதற்கோ
ராதி யாய்த்தனக் காதியீ றின்மையா யணையோர்
பாதி யாய்ப்புவி முற்றுமாய்ச் சிவாகமம் பகரு
நீதி யாய்த்திருக் கடம்பில்வாழ் நிமலனை நினைவாம். (1)

(இ - ள்.) ஸகல வேதங்களின் லக்ஷியார்த்த ஸ்வரூபமாய், ஆகாசாதி (ஸகல தத்துவங்)களுக்குக காரணமாய், ஆதியந்த மற்றதாய், ஸகல சராசரங்களுக்குத் தாயாகிய ஆவுடை நாயகியார் இடது பாகத்திலமைய, எங்கும வியாபகமாய்ச் சகல சிவாகமங்களின் ஸாரமாய்த் திருக்கடப்பந்தருவின் நீழலில் அமர்ந்தருளும் திருக்கடம்பநாதரைத் துதிப்பாம். (எ - று)

(திருக்கயிலாய வருணனை)

பாச நீங்கிய மன்பதைப் பரப்பெனப் பதிமேற்
பூசு வெண்பொடிப் பொலிவெனப் போர்விடை யுருப்போ
லாசி லங்கெழுத் துணர்ந்தமெய் யடியவர்க் கறம்போற்
றேசு மேவியே திகழ்வது திருக்கயி லாயம். (2)

போழு மாமதி முடிப்பொருண் முடியுறும் பொலிவாற்
சூழு மாரணங் குலவுறு கின்றதோர் தொடர்பால்
வீழு மான்மத நீர்பல துறைபெறும் வியப்பால்
வாழி மாமறை நிகர்த்தது வெள்ளிமால் வரையே. (3)

திருவி ளுயக ளுதியோர் வணங்குறச் செறிகாற்
பொருவி லாதுயர் * புதவுறு கணம்புடை புடைப்ப

* புதவு-கோபுரவாயில்.

வரகராவெனு மோதையுந் தடையகன் றடியார்
பரவு காவிசை நாமமெத் திசைகளும் பரக்கும். (4)

செய்ய மாமணி பருவிவீ ழோசையிற் செறிந்தம்
பெய்யு நீர்மையிற் பிறங்குவெண் மலர்களும் பெரியோர்
மெய்யு லாவலில் விளங்குவெண் பூதியும் வெள்ளித்
துய்ய மால்வரைத் தன்னில்வே றரிதெனத் தோன்றும்.

சத்தி பேதமும் சத்தருந் தவர்களுந் தவமும்
சித்தி பேதமும சித்தருந் தத்துவத திரளு
முத்தி பேதமும் முத்தரும் முத்தமிழ் முதலாம்
வித்தை யீசரும் வேறுவே றுருக்கொடு மிருவார். (6

(வேறு)

அண்ணல மேவிய வததிரு வெற்பின்மீ
தெண்ணில் நற்றவம் செய்தயன் ஏர்பெறப்
பண்ணு மாயிரக் காற்பசும் பொன்மணி
வண்ண மண்டபத் தோர்மணிப் பீடமேல் (7)

மந்த மாருதம் வீச மலரயன்
இந்தி ரன்முத லோர்தொழ வேழிசைக்
கந்த ருவரி சைப்பக்க வுரியோ
டெந்தை யும்மகிழ்வெய்தியி ருந்தனன். (8)

உற்ற காலை யுலகுயிர் யாவையும்
பெற்ற தாயெனும் பேரரு ளாட்டிநீள்
கற்றை வார்சடைத் தன்கண வன்பதம்
பற்றி வந்தனை செய்திது பன்னுவாள். (9)

முன்பு தக்கன் மகளென முற்றினேன்
பின்பி மாசலந தன்னிற் பிறந்தன

னன்ப னுய்த்தவ மாற்றிய பாண்டியன்
றன்பு தல்வி யெனவுருத் தாங்கினேன். (10)

பின்னு நெய்த னிலத்திற் பெருங்குடி
யென்ன நின்ற வலைய ரிடத்தினின்
மன்னு நன்மக வாகி மணந்தன
னுன்னை நின்பிரி வொன்றல வுன்னினே. (11)

ஆத லாற்பிரி வின்றியே யென்றுமுன்
போத வின்பம் பொருந்த வுனைப்புணர்ந்
தேத மின்றி யிருந்திட வெண்ணினேன்
நாத வென்றனள் ஞானப் பிராட்டியே. (12)

வெற்பு வேந்தன் விழுத்தவ மென்கொடி
பொற்பு வேய்ந்து புகன்ற மொழிக்குறிப்
* பெற்பு வேய்ந்த விறைவ னினிதுணர்ந்
தற்பு வேய்ந்தருள் செய்குவ தாயினான். (13)

(வேறு)

முத்தம்பெறு மிளவாணகை முகிழ்மென்முலை யமுதே
சத்தம்பொரு ளருணங்கதிர் தண்பாலுறு சுவைபோல்
நித்தப்பிரி வின்றுன்னொடு நிற்கின்றன மெனினும்
நத்தம்புவி யுய்யும்படி நாடிச்சொல லுற்றாய். (14)

நறுமாமல ரணிவார்குழ னங்காயய னரியோ
டுறுமாயினு மழியாததொ ரெழின்மாநகர் புவிமேற் 114
பெறுமாறிரு தோளுன்புதல் வன்பேணிய பெருஞ்சீ
ருறுமாதலிற் கந்தாச்சிர மப்பேருடை யதுவே. (1

அப்பொற்பதி கச்சிப்பதி தென்கீட்டிசை யதிரு
மொப்பற்றுயர் சிவலிங்கமெய் யுருவுற்றுறை கின்று

* என்பு மாலை.

மிப்*பொற்புட னீசென்றவ ணைம்பூசை யியன்று
னற்பொற்புறு கலியாணமு நாம்வந்துமு டித்தே. (16)

சீர்மேவிய கந்தாச்சிர மப்பேரோடு திருநல்
லேர்மேவுக டம்பாபுரி யெனுமத்திரு நகரிற்
றூர்மேவிய கோதாயுனைத் † தணவாவகை யினிநாம்
பேர்மேவிய வின்பந்தரு வோமென்றனன் பெம்மான். ()

வரிமேவிய மலர்வாள்விழி மலைமாமகண் மதமா
வுரிமேவிய பெருமானரு ளுரைகொண்டுள மகிழ்கொண்
‡ டரிமேவிய கந்தாச்சிர மத்தேதொழு வணிவெண்
கிரிமேவிய கணவாவிடை யருளென்றுகி ளர்ந்தாள. (18)

(வேறு)

மலையரையன் றவப்பயனும் வளருமிளங் குயில்வேண்டக்
கலைமதியஞ் சடைக்கணியெங் கருணைமுகில பிரிவாற்று
நிலையினுற் றமதுருவாய் நிகழ்த்துமிரண் டிருவேதந்
தொலைவிலொரு விதையாகத் தொடுத்தமலை கரத்தளித்தான்()

அளித்துவிடை யளித்தலுமங் கதுகொண்டு திருவுள்ளங்
களிததுலக முழுதீந்த கன்னிகையுங் கருத்தன்பு
தெளிததமறைச் சிலம்பணிதன் வலப்பாதந் தனிற்சேர்த்தி
வெளிக்குள்வெளிப் பொருளைவல மேவியே புறத்தணைந்தாள்

விடைமேவுங் கணவனருள் விடைமேவி விளங்கியமின்
னிடைமேவும் பூரணியங் கெழுந்தருளுங் காலையன
நடைமேவுந் தாரைமுத லறுபத்து நாறகோடி
தொடைமேவுந்துணைவியருப்பிரியாதுதொடர்ந்தணைந்தார்(2!)

ஆயிடைய யிரக்கோடி யருக்கர்நிகர்த தரனருளாற்
சேயிளவெங் கதிர்பறப்புந் திருத்தேரொன் றிடைமேவ

* அழகு. † நீங்காதபடி. ‡ அரி: வண்டுகள

நாயகிமற் றதிலேறிநடந்தனள்பல் லியமார்ப்பத்
தாயருள்பெற்*றிருளையருந் தத்தமதூர் திகள் சார்ந்தார் (22)

வந்தனைசெய் தடியவரு மாதவரும் வாழ்த்திசைத்தா
ரந்தணர்நான் மறைமொழிந்தா ரமரர்கள்பூ மழைபொழிந்தார்
கந்தருவர் முதலானோ ரிசையேழுங் களித்திசைத்தார்
அந்தரியுந் திருக்கயிலை யகன்றுதாழ் வரையணைந்தாள். (24)

அல்லிமலர் திருமாதர் கலைமாதர் அணிதாங்கி, வில்லிடு வெண் கவிகைகளுங் கவரிகளும் வியந்தேந்தச், செலவமலி யரம்பையரு முருப்பசியுந் திலோர்த்தமையு, நல்லவழி னயமுறையா நடஞ்செய்து நடந்தேக. (24)

†நாடகையா ழிசைகூட்டிச்சிலமாதாநணியேத்தப், பாடக மெல் லடியெழுவர் கன்னியர்பல் லாண்டிசைப்பத், தேடகமுந் தெரிவரிய தனித்தேவி திருத்தேர்தென், நாடகமெல் லாஞ் சிறப்ப நடநததுதென றிசைநோக்கி. (25)

(வேறு)

ஆயபொழு துடன்றொடர்நதோர் தமக்குவிடை யளித் தெந்தாய் விசும‡பா றாகத, தூயவன்ன பூரணிபா தியரென் னுந் தோழியர்கள் சூழப் பண்டு, மேயதனை நீக்கிவலம புரி பிருஙகி வியப்பெய்த விழைநது தான்முன், நாயகனைப பூசை புரிந் $திடமபெறுகே தாரமெனு நகரங கண்டாள். (26)

முற்பிறப்பி னினைந்தேறி யுச்சினின்றும வீழ்ந்திறந் தோர் முன்னு மாறே, பிற்பிறப்பு தருமல்லி கார்ச்சுனயா நந் திமலைப் பேணி நீஙகித், தற்பரனை கிறநதவருக் கைநதெ ழுந்தது மருளகாசித் தலமும போற்றி, நற்சிவகங் குலினிரதம் நடத்துகோ கன்னமெனுநகருங கண்டாள். (27)

* தோழிகள். † முறுக்காணி. ‡ வழி. $ இடதுபாகம.

தன்னொடுமுன் சினந்துகுகன் குகைவழியிற் சார்திரு வேங் கடமுந் தாண்டி, மன்னுவசிட் டன்சிலந்தி யானைபணி சிவகோசன் வளர்கண் ணப்பன், பன்னுதமிழ்க் கீரன்மட வார்க்கருளுந் *தென்கயிலைப் பணிந்து நாதன், மின்னிகர்கா ரைக்காலென் தாய்காண நடம்புரி†கான வியந்து கண் டாள். (28)

தான்றழுவக் குழைந்ததிரு வேகம்பங் கச்சபே சஞ்சித தீச, மான்றநெறிக் காரைவன மேற்றளிசார்ந் தார்சயம நேக தங்கா, தான்றுமணி கண்டேசம் புண்ணியகோ டீசமெழிற் சுரக ரீச, மீன்றபுகழ்க் காரோண முதற்பதி யாற்றிகழ் காஞ்சி யெய்தி னளால். (29)

மெய்ப்பூசை கொண்டதிருத் தளிகளெலாம் பணிந்தவ னன் மேவிச் சின்னாள், கைப்பூசு மண்ணலுறை யணிமுட் டம் பொதியர்பதி கண்டு போற்றி, மைப்பூசுங் கண்ணிதிரு மாகரலு மகிழ்ந்தேத்தி மதிவா ரஞ்சேர், தைப்பூசந் தனிற் கடம்ப மாநகர மெய்தினள் தரணி வாழ்க. (30)

(வேறு)

வையார் தோளி மேவுதலும் விண்ணோர் புகழும் மந்ந கரார், தாயார் தமைக்கா ணிளஞ்சிறுவர் தமையொப் பானோர் தடம்பொழிலிற், காயா மரமுங் காய்த்துமிகக் கனிந்த பூவா மரமபூதத, தீயா ருளமுந் தயையான தீய்ந்தமரமுந் தளிர்த் தனவே. (31)

ஆய பொழுதத் திருநகரார் அருளா நந்தந் தமதுளத தின், மேய வதற்குக் காரணமின் றறிந்தோ மென்று வியப் பெய்தித், தூய விமலை யெழுந்தருளுந் தோற்றங் கண்டெண் யங்கலமும், நேய முடன்கொண் டெதிரிறைஞ்ச நிமலையருள் செய் துடன்போந்தாள். (32)

---

* திருக்காளத்தி † திருவாலங்காடு.

உலக முலகத் துறுபொருளு முதவி யுலகுக் கப்புற மாய், நிலவும் பரம காரணிதன் நிரைமென் மலர்த்தா ளினைத் தீண்டிக், குலவு மெனிலிக் கடம்பநகர்ப் பெருமை யெவரே கூறுவர்மற், றிலகி லாத திருத்தொண்ட காடெத் தவந்தா னியற்றியதோ. (33)

பாசப் பகையாம் பரமனருள் பாவி யெழுநது பர மேட்டி, வாசக் குழலா ருடன்கூட மணியும் பொன்னு மருங் குபெற, வீசிப் படருஞ் சேய்நதிநீ ராடிப் பொடியும் விளங் கணியும், பூசித் தரித்து நியதிகளும் புரிந்து திருவீ தியிற் புகுந்தாள். (34)

மருவார் குழலி மருவுதலும் வளர்மா நகரி னுளமாக்க, ளொருமா வுவகை தலைசிறப்ப வோடி யாடிப் பணிகிற்பார், திருவார் வீதி யணியணிவார் செறியுங் கதலி கமுகமைப்பார், குருவார் மணிபொற் கலசமுதற் கொடுவந் தேததிக் களி கூர்வார். (35)

தம்மை யுணர்ந்து தமதுமுதற் றலையு மறிந்த தபோ தனர்தஞ், செம்மை மனமுந் திருவிழியுஞ் சிறந்து காணும் பரமேட்டிக், கொம்மை முலையா ருடன்சூழக் குலவு வீதி பலவுமகன், றிம்மை மறுமை யினுங்காப்பா னிறைவன் றிருக்கோ யிலையணைந்தாள். (36)

தேவர் முனிவர் பணிந்தேத்தச் செல்லுந் திருவாயிலை வணங்கிக், காவல் நந்திக் கருள்புரிந்தே கரங்க ளிரண்டுந் தலைசுமப்ப, மூவல் முடியின் மணித்தழும்பார் மூளரி மலர் மெல் லடிபெயர்த்து, மாவின் மணிமா ளிகைவலமாய் வந்தா ளருட்சிந் தாமணிமுன். (37)

அருவு முருவு மருவுருவுங் கடந்தா நந்தப் பிழம்பாகிப், பெருகு முயிராய்ப் பேருணர் வாய்ப் பிறங்கு மொளியாய்ப் பூரணமாய், உருகு மடியா ருளமாகி யொன்றாய்ப் பலவாய்த் தனதுடனாய், மருவு சிவமாய் முளைத்திடுகண் மணியைக் கண்டு மனமகிழ்ந்தாள். (38)

கண்டு தொழுது விழுந் தெழுந்து கடம்பிற் கருணைக் கடலமுதை, மொண்டு பருகிக் களித்துமன முகிழ்த்த புள கத் துடன்மூழ்கிப், பண்டு பிரிந்த துயரகன்று பரமா நந்தப் பரவசமாய், வண்டு மருவு மலர்க்குழலாள் வழுத்தி யடங்கா மகிழ் கூர்ந்தாள். (39)

எல்லா மாகி யல்லவுமாய் எழிலார் கடம்பர் சினகாம் வாழ், நல்லார் பரவ வருள்கொழிக்கு ஞானக் கடம்ப நாயகனை வில்லார் நுதலார் பணிகேழ்ப்ப விமல மனமெய் மொழி யொன்றாய்ச், சொல்லா கமத்தின் படிபூசைத் துறையு நிறப் பிப் பணிந்தனளாய். (40)

பின்பு முன்பு திருக்கயிலைப் பெம்மா னளித்த விதை யதனை, யின்ப வுருவா யெழுந்தருளவ் விலிங்கத் தொருசா ரிருநிலத்தே, யன்பு பெருகத் திருக்கரத்தா லமைத்தோ*பா லவாலமதின், மன்பு நிதமாந் திருவருணீர் வார்த்தாள் வினை யைத் தீர்த்தாளே. (41)

ஆதி யாகி நடுவாகி யந்தமாகி யமர்ந்த சிவன், பாதி யாகும் பரமேட்டி பரமன் றிருத்தா ளகத்துன்னில், பேதி யாது சிவயோகம் பெருக்கி வருநாட் டிருக்கரத்தால், நீதி யாய்முன் விதைத்ததுவோர் கடப்பந் தருவாய் நிகழ்ந்த துவே. (42)

வியந்த வருட்டா ரகம்வோராய் விரிந்த காயத் திரி கோடாய், உயர்ந்த வேதா கமங்கலைகண் முதனு லுரைத்த

* பூர்த்தி.

வக்கோட்டி, விளைத்த விலைகாய் கனிமலரா யெழுந்து பெரி யோர் தமதுளத்தி, னயந்த கடம்ப நாயகற்கு நறிய நீழல் செயுங்கடம்பு. (43)

சிவமுஞ் சத்தி யதும்வேராய்ச் செறியுங் கருணைச் சதாசிவமே, யவம தகன்ற கிளையா யலர்காய் கனிபூத் தவிரெவையும், பவம தகலீ சனுஞ்சுத்த வித்தை யாகப் பயின்றோங்கிப், புவிக டொழுநன் மதுவின்மழை பொழிந்து வளரும் பூங்கடம்பு. (44)

தாது கமழு மலர்க்கடப்பந் தருவி னொருசார் செழுங்கம லப், போது மருவுந் திருமகளும் கலையின் மாதும் புகழ்ந் தேத்த, வேத மகற்றுந் தனியோக பீடத் திருந்தெல் லாவு யிர்க்கும், தாதையின்பம் பெறவேண்டித் தாயுந் தவஞ்செய் திருந்தனளால். (45

மங்கை பிரிவாற் றுமையினுல் வளருங் கடம்ப நகரீசன், றுங்க மமரர் புடைசூழத் தோன்றுங் கணங்கள் போற் றெடுப்பச், சங்க முழுங்க முரசியம்பத் தாங்கு* மிமில்வெள் விடையேறிப், பொங்கு பருதி பலகோடிப் போந்த தென்ன வெதிர்நின்றான். (46)

நின்ற விறையை முகமலர்ந்து நோக்கி விழியினீர்பாயத், துன்று • வளைக்கைச் சிரமேற வுடலம் பொடிப்பத் தொழுதிடு மான், கன்றை நோக்கி நினதுதவங் கண்டு களித்தோம் காளைமணம், நன்று புரிவோந் தவம் நீங்கென் றுரைசெய் திலிங்க நடுவுற்றான். (47)

ஈச னருளிற் கூறுமுறை யென்னு மமுதஞ் செவிவாயா, னேச முடனுண் டொருபாங்கா னிலவு பொழியும் நவமணி யாற், றேசு தரச்செய் காவணத்திற் சேடி மார்வந் துபசரிப்ப,

---

* திமில்.

வாச மருவு மலர்க் குழலா டவத்தை நீங்கி மகிழ்ந்திருந் தாள். (48)

சித்தி யளித்து மெய்வீடுஞ் சேரக் கொடுக்கும் படி விளங்கும், பத்து திருப்பேர் படைத்த திருக் கடம்ப வனத் திற் பரிந்துமையாண், மெத்து தவஞ்செய் தமைவிரித்தாம் விமல னந்தத் திருநகரின், முத்த நகையை மணம்புரிந்த சிறப்பு மினிப்ப மொழிந்திடுவாம். (49)

பதினான்காவது உமையம்மை தவம்புரிந்த
அத்தியாயம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

ஆக அத்தியாயம் பதினான்குக்குத் திருவிருத்தம், 516.

திருச்சிற்றம்பலம்.

# பதினைந்தாவது,

## உமையம்மை திருமணம் புரிந்த அத்தியாயம்.

### கடம்பநாதர் துதி.

மாவுடையா யிரத்திரட்டி புடைசூழ நடுநின்ற மதிபோற் றெய்வப், பூவுடையா யிழையார்கள் போற்றநடு வீற்றிருந்து புவியோ ருய்யக், காவுடையா நீரிலஞ்சிப் புறஞ்சூழுங் கடம்பர்நக ரத்தில் வாழு, மாவுடையா நந்தவல்லி தனைமணக்கும் பெருமானை யகத்துள் வைப்பாம். (1)

(இ - ள்.) பெருமைபெற்ற ஆகாயத்தில் பல்லாயிரம் நக்ஷத்திரங்கள் புடைசூழ நடுவேபிரகாசிக்கும் பூரண சந்திரனைப்போல் தெய்வ லோகத்தில் இருக்கும் அநேக தேவதாஸ்திரீகள் துதிக்க நடுவே வீற்றிருக்கும் உமாதேவியை, உத்தியானவனங்களையும் ஆலயாகிய காங்களால கரைகளை யுடைக்கும் நீரகழிகளையுமுடைய திருக் கடம்பர் கோயிலில் வாழாநின்ற ஸ்ரீ ஆநந்தவல்லியை, ஆவுடை நாயகியைப் பூலோகத்தார் தரிசித்துக்கடைத்தேறும்படி திருவுளத் தில் எண்ணி திருக்கலியாணஞ்செய்தருளும் திருக்கடம்பநாதனை ஹிருதயகமலத்திலே வைத்துத் தியானஞ்செய்வாம். (எ - று.)

செந்துவர்வாய்க் கௌரி செயுந் தவங்கண்டு திரு வருள்செய் சேதகுஞ் சீதக், கந்தமலர்ப் பொழிற்கயிலைக் கடவுண்மலர்க் கண்ணனைக் கண்ணு ேணாக்கி, நந்து மெழிற் றிருக்கடம்ப நகரதனி லுமைதனக்கும் நமக்கும் நாளை, முந்துமறை விதிப்படியே திருமணஞ்செய் செயலதனின் முயல்வா யென்றான். (2)

ஆதியரு ளுரைமேற்கொண் டரவணையா னுள மகிழ்ந் தந் நகரமேவ, வீதிமுரா சறைவித்து வேண்டுபொருள் கொணர்கவென விண்ணோர் தம்மோ, டோதிவிசும் புனை

இன்ற யவனரைக்கூ விறைவனொடு முடையாண் மேவித், தீதின்மணம் புரியவெழிற் காவணமன் றியற்றென்னச் செய் வாரன்றே. (3)

செம்பவளத் தூணிருவி மரகதப்போ திகைசேர்த்தித் திகழ்நீ லத்தாற், பம்பியவுத் திரம்நீட்டி வச்சிரமேற் பூரப்பி நிலம் பசும்பொன் னாக்கி, யும்பர்*மதிக் காந்தத்தாற் சிகரஞ் செய் தொளிப்பளிங்கிற் †பித்தி யாக்கி, வம்புமலர் மணி பரப்பி விசித்திரமாய்மணஞ்செய்கா வணஞ்செய் தாரால். (4)

குண்டமொடு மண்டலம்வே திகையாற்றி யிறையுமலைக் கொடியு மேவக், கொண்டகவ மணிப்பீட மியற்றிவரும் விண் ணவர்தன் குழுவுஞ்சார்ந்த, தொண்டருமா தவருமுறை யிடங் கள்விதம் விதமாகத் தோன்றச்செய்தே, தண்டலைமும் மலர்ப் பொழிலும் ‡தெற்றிகளும் பிறவுமிகத் தழைப்பக் கண் டார். (5)

இன்னணமங் கவரியற்ற வங்நகர்வாழ் மாந்தரெலா மிமைய மீன்ற, கன்னிமண முரசோதை செவிப்புகவுங் களித் தெறிந்த கந்தமாலைப், பன்னுவிரைச் சந்தனத்தின் குப்பை தனையகற்றிநறும் பனிநீர்வீசி, மன்னியமா ளிகைபுதுக்கி மணிமாலை மலர்மாலை மலியத்தூக்கி. (6)

தூரகமுகக் குலையரம்பை நீள்கமுகு சுவைக்கழைகள தூணிற் சேர்த்தித், திருமனைமுன் பாலிகையும் பூரணகும் பமுமமைத்துத் திகழ்கண் ணாடி, பருதிமணித் தீப நிறைத் திழியுமத கரியினொடு பரிதேர் பூணிற், பெரிதுமொளி பெறப்பூட்டித் தாமமணி யாடையினிற் பிறங்கினரால். (7)

(வேறு)

கடம்ப மாநகர் மாந்தர் களித்திறங் களிப்புட னெழில் செய்ய, விடம்ப யின்றருண் மிடற்றின னநதியை விளிதது

* சந்திரகாந்தக்கல். † சுவர். ‡ சித்திரசபை.

விண் ணோடோடுந், தடம்ப யின்றுள வேலைய வுலகினுந் தங் குழே வரையெல்லா, இடம்ப வின்றுதன் திருமணங் கண்டிட விண்டழைத் திடுகென்றான். (8)

ஆசிலாத்திரு நந்தியவ் வருள்வழி நினைத்தலு மிஃ தோர்ந்தே, மாசில் காலவேந் திப்பெய ருருத்திர் மருவுறு கூர்மிரண்டர், தேசின் மேவிய வாடகே சுரரோடு செண்டணி கரத்தையன், காசி லாவிறல் வீரபத் திரரவர் கணத்தவ ரொடு வந்தார். (9)

வண்ண வம்புய னிந்திர னிமையவர் வசுக்களெண் டிசையாள, ரண்ணன் மாதவர் விஞ்சையர் கதிர்மதி யவிர் தருங் கோளன்கேழ், நண்ணு மாகம மறைமனு மந்திர ஞாலமா தியபூதம், புண்ணிய யத்திரு நதிகளுந் தத்தம துருக் கொடு போந்துற்றார். (10)

சத்த மாதருந் தடமலர் மாதருஞ் சசியெனு மடவாரு, முத்த வாணகை யருந்ததி முதலிய முனிவர்கண் மடவாருஞ், சித்த மார்தரு முருப்பசி முதலிய தெய்வநன் மடவாரும, இத்தி றத்தின ரன்றியு மாதரார் யாவரு மிடைந்துற்றார். 11

பொருந்தி யாவரு மிடைந்துழி யங்கையிற் பொற்பிரம் புடைநந்தி,* திருநத லார்புரஞ் செற்றவன் முன்புறச் செலுத் தின னவரெல்லாம், பரிநது போற்றினர் தத்தம வகையினாற் பரமனு மருளகூர்ந்தே, மருங்க யன்றரு பொற்றிரு வடிமிசை மலரடி வைத்தேகி. (12)

பாஙகி னின்றரும் போதரன் முதுகிலோர் பஙகயத் தானென்றி, யோங்கு மால்விடை யூர்ந்தன னெவர்களுமுவகை யங் கடலாழ்ந்தார், தாங்கு மன்புடைச் சுந்தரர் வெண்பொடி

* புகைவராகிய அசுரர்.

தன்றொடு மலரோத, வீஙகு பொய்யுடன்மேவுகுண் டோத ரன் விளங்குவெண் குடைதாஙக. (13)

இந்திரன் பெருந் துந்துபி யதிர்த்திடத் தாள*மெண் கணரோணந்தப், பங்கமுற்றதன் ேறழுனும் வெற்றிலே பாகடை பரித்தேக, முந்து வாணனி ராயிரங் கரங்களான் முழவுதிர்த் திட மற்றோர், சந்திரன்வரச் சலித்தெழுங் கடலெனத் தூயங் குபல் லியமார்ப்ப. (14)

கவரி கால்செய வட்டமு மரம்பையர் களித்திரு பால் வீசப், பவமில் தும்புரு நாரத ரேழிசை வீணைகள் பயின் றார்ப்ப, நவமு றுந்திருக் கயிலையின் மேவிய ஞானநா யகன் வந்தான், சிவனி ஙோந்தவர்க் கெளியன்வந் தானெனச் சின்ன மார்த திடவன்றே. (15)

பானு சம்பனோர் புடையினிற் சஙகிசை பாப்பவா கன மூர்ந்தே, யானை மாமுகக் கடவுளுங் குமரனு மிருபுற மும் போக, வேனை யோர்களுஞ் சூழ்தர வான்வழி யேகிமா தர்கள்போற்ற, †மேனை தன்மக டவம்புரி கடம்பமா வியன கர்ப் புறஞ்சேர்ந்தார். (16)

திருவி னுயக னடியவர் முதலவர் திகழ்மறை யவரா னோர், பொருவின் மங்கையர் பிறர்களுஞ் சூழ்தரப் பூரண குடமுன்னு, மருவு நாலிரு மங்கலந் தன்றொடும் வளளலை யெதிர்கொண்டா, ருருவ னேக்கிமுன் வணங்கின ரண்ணலு மருள்புரிந் துடன்போந்தார். (17)

பாத லத்தினில் பரவுறு பவர்களும் படுதிரைக் கடல் சூழ்ந்த, பூத லத்தினின் மாந்தருங கற்பகப் பொதுமபரிற் குளிர்தூஙகு, மீத லத்துறை வானவர் கணங்களு மிடைதலா

---

* பிரமன். † இமவான்மனைவி.

னெடுமாட,வீதி யெங்கணு மடிபெயர்த் தேகுற*வெள்ளிடை யரிதாமால். (18)

வீதி யேவிடை வருதலை நோக்கிய விளங்கிழை யாரெல் லாம், ஏதி யாந்தவஞ் செய்தன மிவர்சமைக் கண்டிட வின் றென்பார், மாதர் நாயகி யுமைதவம் புரிதலால் வள்ளல்வந் தனனென்பார், தீது தீர்க்குமிந் நகரமுற் காலையிற் செய்தவப் பேறென்பார். (19)

மருமலர்க்கொடு†மறுகிடை வீசுவர் வாசநீர் தெளித் தார்வர், பருமணிக்குட விளக்கனை யேந்துவர் பகர்நறுந் துகடூர்ப்பர், குருமணித்திரள் பாப்பநீ ராஞ்சனங் கொண் டுகோ தையர் சூழ்வார், பெருகு தூபநற் றீபமிட் டுவகையிற் பிஞ்ஞகன் வரவேற்பார். (20)

நெடிய வீதியி லடியர்செய் பணியெலா நிறைதிருக் கண்சாத்தி, விடையி னின்றிழிந் திறைவனும் பாதுகை மேற் பத மலர்சேர்த்திப், படிய ளந்தமா லயனிரு புறத்தினும் பங்கயக் கரமேந்தக், கடிகொண் மண்டபத் தமர்ந்தன னியம் பல் கடன்முழக் கெனவார்ப்ப. (21)

சுருதி யார்ப்புறச் சுடர்மணித் தவிசினிற் றுலங்குற வினிதேறிப், * பருதி யேத்திய மானமுதற் றேவரைப் பகரு ருத் திரர்தம்மை, மருவு மேனைய மாதவர் குழுவினை வகை வகை புரிந்துற்றத, திருவி னீடிய விருக்கையின் மேவுறத் திருக்கடைக் கண்வைத்தான். (22)

அந்த வேலையி லயனிறை யடிபணிந் தடியருய்ந் திடு மாற்றுற், புந்தி கூர்திரு மணவினுக் கேற்றவா பரணமீ பூண்பாயென், றுந்தி வேண்டலு மீசன்மெய்ப் பணிகளை

*, வெற்றிடம். † தெரு. ‡ சக்ராயுதம்.

யொளிர்தரு பணியாகச், சிந்தை செய்தனை ஞயின வனைத்து
மாச் செல்வனுக் கரிதென்னே. (23)

(வேறு)

துளப மாலிகைத் தூயவன் முமரை வளருங்
களப மாமுலை மாதரை நோக்கினீர் கடிதித்
தளவ வெண்ணகைச் சங்கரி தான்மணக் கோலங்
கொளவி யற்றுமென் றுரைப்பவக் கோதையர் புகுந்தார். (24)

நிலவு தாரகை சூழ்தர நின்றவெண் மதிபோற்
கலப மாமயி லியலினர் நடுவினிற் கவின்ற
விலவி தழ்த்திரு மலைமகட் கிறைத் திறைஞ்சத்
தலைவி யின்புடன் மஞ்சனச் சாலையிற் சார்ந்தாள். (25)

இலங்கு செம்பவ ளத்திருப் பலகையி னிருத்தி
யலங்க லோதியை யவிழ்த்துநெய் யள்ளிமுன் சாத்திப்
பொலங்கொண் மஞ்சளி னெல்லியின் விழுதுமெய்ப் பூசித்
துலங்கு பொற்றசும் பார்நறுந் தூயநீ ராட்டி. (26)

மெய்யி னீரம தொற்றியைத் தருவியந் தளித்த
செய்ய பூந்திருத் தானையுந் திகழ்வுற வணிந்து
துய்ய பாதுகை வைத்திடத் துணையடி சாத்தி
யைய்யை போற்றவந் தணியணி மண்டபத் தமர்ந்தாள். (27)

*கேதை கைப்புனைந் திருசுடர்ப் பிறைமணி குழைநற்
சோதி மூக்கணி திலதநீள் சுட்டிகற் கடகஞ்
சீத நித்தில மாலிகை †மேகலை சிலம்பும்
பாத சாலகஞ் னவமணி யாழிகள் பலவும். (28)

அணியுந் தென்மலைச் சாந்தமு மளியின முறல்பூ
வணியலுங் கதிர் மணியினும் பொன்னினு மமைமற்

---

* தாழம்பூ. † ஒட்டியாணம்.

றணியும் நல்லணி பெறவுமை யவட்கலங் கரித்தா
ரணிதி கழ்ந்தமெய் யரிவையர் பலருமங் குவந்தே. (29)

(வேறு)

இன்னண மணியெ லாஞ்செய் திருளையர் நிற்ப வானப்
பொன்னனார் பலரு மீண்டிப் பூவையின் வனப்பு நோக்கித்
துன்னிய வுவகை பொங்கச் சோபனம் வாழ்த்த பூவின்
கன்னியர் கரங்கள் பற்றிக் கவுரியு மகிழ்ந்து போந்தாள். (30)

கங்கைவெண் டிரையிற் சீர்கொள் கவரிவெண் குடை சாந் தாற்றி, நங்கையர் பிடித்துப் பாங்கா தொழின்முறை நடத்தி மேவப், பொங்குற விரித்த வாடை மீதினின் மெல் லப் போகித, திங்களஞ் சடையன் பாங்கிற் சிறந்து வீற் றிருந்தா ளன்றே. (31)

அண்ணலை யணங்கி னோடு மணிமணித் தவிசிற்கண்ட
விண்ணவர் முதலோர் யாரு மிகத்தொழு துவகை பூத்தார்
கண்ணனு மிறைவன் செய்ய கழன்மலர் விளக்கம் போந்தான்
றிண்ணிய மண்ணும் விண்ணுஞ் செவிடுற வியங்களார்த்த. ()

பொன்னினற் கரகத் தீம்பாற் பூமக ளுவந்து வார்ப்ப
வன்னமா லீசன் செய்ய மலரடி விளக்கி யந்நீர்
சென்னியிற் றெளித்துப் பட்டாற் றிருவடி மெல்ல வொற்றல்
தன்னிரு நாட்ட மேவுந் தகைமைகண் டஞ்சல் போலும். ()

கனியொடு கன்ன னெய்பால் கமழ்மது பருக நல்கிப்
பணிமலர்க் காந்த ளங்கேழ் பங்கய மேற்பூத் தென்னத்
தனியெழிற் கவுரி கையைச் சங்கரன் கரமேற் சேர்த்தி
யினியநல் லுதகம் வார்த்தே யீந்தனன் கமலக் கண்ணன். ()

கலித்தன முழவஞ் சங்கங் கலித்தநுந் துமிகள் சின்னங்
கலித்தன குழல்கள் வீணை கலித்தபல் லியங்க ளெல்லாங்
கலித்தன மறைக ளொன்குங் கலித்தவா கமங்க ளெங்குங்
கலித்தன கலையின் கூட்டங் கலித்தவாழ்த்தொலிக ளன்றே.

கற்பகப் பூவின் மாரி கடவுளர் பொழிந்தா ரேனைப்
பொற்பகத் தவர்க ளானோர் புகழ்ந்தனர் வியந்துபோற்றி
யற்பகத் தடியர் கண்ணு லானந்த வருவி பாய
வெற்பகம் பொடித்தான் றூதை வியன்புகழ் பாடி நின்றார். ()

விருந்தளி யினங்கண் மூசும் வேரியங் கமல மேய
பெருந்தவன் வேத நூலிற் பிறங்கழற் கடன்க ளாற்ற
மருந்தினு மின்சொ லெந்தாய் மங்கல மிடற்றி லீசன்
திருந்துமங் கலநாண் சாத்திச் செங்கரம் பற்றினானே. (37)

கண்பக மமைந்து நின்ற நங்கையுந் தானும் பின்னர்
வெண்பொறி யிறைத்து வேத முனிவரும் பிறருங் கொள்ளப்
பண்பொடுந் தான மல்கிப் படரெரி வலங்கொண் டம்மை
வண்பத மலர்க்கை பற்றி வைத்தன னம்மி மீதே. (38)

அருந்ததி யெங்கென் றண்ண லருளலும் போற்றிநிற்குந்
திருந்திழை தன்னை நோக்கித திருவருட் பார்வை நல்கிப்
பெருகதழற் கடன்கண் முற்றிப் பேணியெல் லோருஞ் சூழப்
பொருந்தொரு மணிப்பீடத்திற் பூரணி யுடன மர்ந்தான். ()

செந்தழ லாவான் றானுந் தீவளர்த் திடுவான் றானு
மூந்துணை வருந்து வானு மொருவனே மூர்த்திவைய
கதலில் போக மூழ்குநங்கையுந் தானு மாகி
வந்திரு மணஞ் செய் தானே லவன்றிற மதிப்பார் யாரே.(40)

பின்னருட் கடம்ப நாத னந்தியை விளித்துப் பேசு,
நன்மணைத் துணைந்தோர்க் கெல்லாம் நல்விருந் தளித்தி

யென்று, னன்னவா றவனுஞ் சிந்தா மணிமுத லவற்றாற செய்தா, னன்னவ பருந்தி யுள்ளங் களித்துவக திறையைத தாழ்ந்தார். (41)

வேத்திர மேந்துஞ் செங்கை விமலனு மாலும் வேத,
சாத்திரத் தயனும் போற்றித் தாழ்குழற் கவுரி யோடுங்,
காத்திர விடையின் மீது நின்னையு மறுகிற் கண்டு, தோத
திரஞ் செய்ய வேட்டோ ரெழுனவருள் சுரந்துட் கொண்டார். ()

அதிர்குரன் முரசஞ் சங்க மலங்கொளி முழவஞ் சின்ன
முதிர்தரு திமிலை தட்டை முருடுசெல் லரித டாரி
பதிதரு தாள மொர்தை பதலைநற் பணவ முன்னாய்ப்
பிதிர்தரு மியங்க ளண்டம் பிளந்தென மருங்கி னார்ப்ப. (43)

வெண்மதிக் கவிகை தாங்கி விரிகதிர் கவரி வீச
வெண்மதிக் கொடிக ளோங்க விலங்குசா ந தாற்றி யேந்தப்
பண்மலி மாத ராடல் பாடல்கள் பயின்று மேவத்
திண்மலி மாட வீதித் திருவுலாப் போதற் கேற்ற. (44)

வெள்ளியங் கிரியென் றுள்ள மயலுற மேவு மேற்றி
லொள்ளிழை கரிய கூந்த லொண்டொடி பவளச் செவ்வா
யள்ளமு கொழுகு மேனி யணங்கொடு மிவர்ந்து நாதன்
றெள்ளிதி னமரர் போற்றித தேமலர் தூவப் போந்தார். (45)

(வேறு)

கண்டு மாலய னிந்திரன் முதலவர் கடனீ
ருண்ட மாமுனி முதலிய மாதவ ரூரகர்
மண்ட லத்தவர் யாவரு மணமகிழ்ந் துருகித்
தொண்டு செய்து நின்றாடினர் பாடினர் தொழுதார். (46)

விருப்பி னோர்செயுஞ் சிறப்பெலாங் கண்டருள் விமலன்
*அருப்பு வாணகை யவளொடும் வீதிகண் டருளிப்

* அருமபு.

பொருப்பு நேர்முலை மடந்தையர் புரிநடங் கண்டு
மருப்பு மால்விடை நீங்கிவண் சினகர மமர்ந்தான். (47)

மாலு நான்முகக் கடவுளும் பின்னரும் வணங்கி
யேல வார்குழ லாளையித் தலத்தினி லின்றே
போல வாண்டுக டோறுநீ புதுமணம் புரியுங்
கோலம் யாநதொழத் திருவருள் கூறெனக் கொடுத்தான்.

இந்த நற்றலத் தம்பிகை யருந்தவ மியற்றிப்
புந்தி யெண்ணிய வெண்ணியாங் கெய்திடும் பொலிவால்
வந்து யார்தவம் புரியினும் வரமெளி தருளென்
றந்து நற்றவர் வேண்டலு முவந்தினி தளித்தான். (49)

வலங்கொள் *தாருகற் காய்ந்தவண் மழைமதர் நெடுங்கட்
புலங்கொ ளேழ்திருக் கன்னியர் நிற்பநற் புகழ்சேர்
நலங்கொள் காலவெந் தீப்பெய ருருத்திரர் †நரலை
யிலங்கொண் மான்முத லெவர்க்குநல் விடையளித் திருந்தான்.

பெய்யு மும்மத வாரண முகத்திறை பிறங்குஞ்
செய்ய வேலிறைச் சினகரத் தெற்கணும வடக்கும்
எய்யின் மேனியர் காளி‡யேழ் மின்னனை யவரோ
டைய னேவலி னநநகர் காவல்கொண் டமர்ந்தாள். (51)

$சிலாத ரன்தரு புதல்வனுஞ் செழுமணிச் சுடர
கலாத வாநெடுங் கோபுர வாய்தலிற் கலந்தான்
குலாவு பூங்கடம் பாபுரி நாதனுங் குளிர்ந்த
நிலாம தித்திரு முகத்தியைப் பார்த்திது நிகழ்த்தும். (52)

(வேறு)

சீர்பெறும் பிரியாச் சுகமிகப் பெறநீ செழுந்தவம் புரிந்த
தோர் செயலா, லேர்பெறு மிந்தத் தலத்தினின் மணஞ்சேர்

* பத்திரகாளி. † திருப்பாற்கடல்.
‡ ஸப்தகன்னிகள். $ நந்தி.

தபேதவாழ் வினிதிவ ணளித்தெம், ஆர்பெறு மிதனு லெமைப் பசு பதியென் றருமறை பகருமத திருப்பேர், கார்பெறு குழலா யுனக்குமா வுடையா ளெனும்படி கருணைசெய் தனமே. (53)

பூவுடை யலரோன் றிருநெடு மாலும் போற்றுமிக் கடம்பமா நகர்வாழ், தேவுடைக் கடம்ப நாதனை மெய்ம்மைச் சிறந்தவத் திருவெழுத் தைந்தா, லாவுடை யமமை யென்னு முன் திருப்பே ரைந்தெழுத் தாலுமன் புடனே, தூவுடை மனத்தா னினைப்பவர் பிறவா நெறியுறு சுகமிகப்பெறுவார்.

இன்பநீ வேண்டி யிந்நற் றலத்திற் றவம்புரி யோகபீ டமுநற, கொன்பெறு காம பீடமென் றொருபேர் குலவுக வித்திருப் பீட, மன்பொடு கண்டு வணங்கினோர் மகிழ்வி னருச்சனை புரிந்துளோர் மேலாந், துன்பகன் றிட்ட சாமிய மெய்திச் சுரர்களும் போற்றவீற் றிருப்பார். (55)

(வேறு)

என்ன வாய்மலர்ந் தருள்புரிந் திலகுநித் திலமே
யன்ன வாணகை யாவுடை யம்மையை யிடப்பான்
மன்னி வாழியென் றருளினு னிறைவியும் வதிந்தாள்
மின்னு லாஞ்சிவ லிங்கமா யிருந்தனன் விமலன். (56)

ஆசி லாத்தவத் துறையுளீ ரருமறைப் பொருளா
மீச னார்திரு மன்றலீ தியம்புவோர் கேட்போர்
பேசு நாவிரு மன்றலின் செல்வமும் பிறந்தே
தேசு லாம்பர மானந்த மன்றலுஞ் சேர்வார். (57)

மேக வார்குழ லாவுடை யம்மையை விமலன்
போக மார்தரப் புதுமணம் புரிந்தமை புகன்று
மேக னுதனுங் கடம்பநா யகன்றனை யிறைஞ்சிச்
சோக நீங்கியோர் வேதிய னுய்ந்தமை சொல்வாம். (58)

பதினைந்தாவது உமையம்மை திருமணம்புரிந்த
அத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 15-க்குத் திருவிருத்தம் 574.

திருச்சிற்றம்பலம்.

## பதினாறுவது
## கண்டகவயிரி முத்திபெற்ற அத்தியாயம்.

### ஸ்ரீ கடம்பநாதர் துதி.

வெள்ள வேணியில் விறகினைச் சுமந்தும் வெள் வளைகள்
மெள்ள மாதர்கை யேற்றியும விழைந்துகல வேழந
கொள்ள வேழம தளித்துமுன கூடலி னூடும
வள்ள லாகிய கடம்பநா யகன்றனை மதிப்பாம். (1)

(இ-ள்) தென் மதுரையில், முன்னால், பாணபத்திரனுக்காகக் கங்கையுறையுஞ் சடாமகுடத்தில் விறகினைச் சுமந்துபோய் அவனுக்கெதிரியாய் வந்த சங்கீத விதவானைச்சயித்தும், செட்டிபபெண்கள் மயங்கும்படி அவர்கள் கையில் வெண்மையான வளையல்களை யேற்றியும், பாண்டியன் அதிசயிக்கும்படி எல்லாம் வல்ல சித்தராய் வந்து கல்லானையானது கரும்பை யருந்தச் செய்தும், இன்னோன்ன அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரியாநின்ற திருககடமபநாதரைச சதா தியானஞ் செய்வாம். எ-று.

திருந்து செந்தமிழ்க் கெல்லையாய்ச் சிறநத*சீர்காழிப்
பொருந்து முததமிழ் விரகராம புனிதர்வந தருளி
வருந்து மீனவன் வெப்பொழித் தமணிருண் மாயப்
பரிந்து தென்றமிழ் பகர்நதது பாண்டிநன் னாடு. (2)

பகரு மததிரு நாட்டிடைப் பரவையின் முகில்கள்
நுகரு நீர்க்குறை யகற்றுகு மியாறெனு நுரையார்ந
தகரு வோடுபன மரங்களு மசழ்க்கலைத் தோதும
†புகரி றந்தசீர்ப் பொருனையென் றொருநதி பொருந்தும். (3)

---

* திருஞானசம்பந்த சுவாமிகள். † குற்றமற்ற.

அந்த மாந்தி யரும்பெறற் றீரத்தி னொருசார்
கந்த மாமலர்ச் சண்பக மாசினிக் கமுகுச்
சந்த மாமகி ழாதிய நிறைந்த* தண் டலையார்
†பாந்த மானது பாடலி புரமெனும் பதியே. (4)

அப்ப தீக்கணன் மறைகளா றங்கமீ மாஞ்சஞ்
செப்பு மாதருக் கம்புரா ணந்தெரி யறநூ
லொப்பி லெண்ணறு கலைகளு முணர்ந்துயர் மனுவாற்
றிப்பி யந்தரு வேள்விசெய் யந்தணர் செறிந்தார். (5)

இனைய தன்மைய ராகிய விருபிறப் பாளர்
மனைக ளாயிர மலிந்தன வவற்றொரு மனையின்
வினையி னீங்கிய விளங்கிய வறிவனும் விமலன்
றனைய லாதுணா ராதவன் சமாச னென்பான். (6)

அன்ன வன்றிரு மனையருந் ததியென நிறையாள்
பொன்னை வென்றசி ரியலுடைப் பூவையங் கவள்பான்
முன்ன மாற்றிய தீவினை முதிர்ந்தொரு வடிவாய்
மன்னி யிந்நிலத் துதித்தனைப் பிறந்தனர் மதலை. (7)

அந்த மைந்தனைத் தந்தைதாய் சாதகன் மாதி
முந்து செய்வினை பருவம்வந் துழியெலா முயன்று
விந்தை யுள்ளவும வேதமும் விதிவழி யறிவித்
துநது நன்மணம் புரிந்துதம் முரிமையின் வளர்த்தார். (8)

அன்ன நாளிடை யின்னவன் றன்னையீன் றளித்த
வன்னை தந்தையு மூழினு லிறந்தன ரவனோன்
னன்னை பாகர்தா ளணுகுறப் பிதிர்க்கட னாற்றி
யன்ன மன்னதன் மனைவியு டன்தனி யயர்ந்தான். (9)

தமியனாகிய வேதியன் றன்மனைத் தனமாஞ்
சிமைய மேவியே வாழுநா ளிளமையின் செருக்கா

---

* நந்தவனம். † அழகு.

லமைவில் காமவெந் துறைபடிந் தருமறைத் துறையும்
விமல மாகிய கல்விகல் வினைகளும் விடுத்தான். (10)

வரைவின் மங்கையர் காமமங் கையர்மண மிழந்தோ
ருரைசெய் நற்குல மிழிகுலத் துதித்தவ ரன்றித்
தரையின் மங்கையென் றோருருக் காணினுஞ் சார்ந்து
திரியு மாதலிற் பொருள்பெறத் தீவினை புரிவான். (11)

(வேறு)

இரவினிற் களவு செய்து மில்லத்தி னுட்பு குந்து
மருவருந தான மேற்றுஞ் சூதுமற் றிழிவு செய்தும்
பொருது கொன்றுறலைத்து மிழிவழக் குரைத்துப் புன்மைப்
*பருவரல் பயிற்றி யென்றும் †பட்டிமை பலப யின்றும். (12)

செங்கைசேர் நிதிய மெல்லாம் சீயுடன் றங்குஞ் செந்நீர்ப், பொங்கிய வரைப்புண் மாட்டே புகுத்தன னவையும் போதா, தங்கண னடியார் தீர்த்த யாத்திரை புரிவா ரங்கைத், துங்கநீ ணிதியுங் கொண்டு தொலைத்தனன் றொலையாப்பாவி.

கண்டக வயிலென் றோதுங் கண்ணியர்க் குருகி யாருங்
கண்டக வயிர மில்லா னெனவிருந் தவர்க்கே காலிற்
கண்டக வயிர மென்னக் கடுமைக ளியற்ற லாலே
கண்டக வயிரி யென்னுங் காரணப் பெயர்பெற் றானே. (14)

பழியொடு பாவ மாற்றிப் பார்ப்பன வொழுக்க மாற்றி
யிழிதக னாகி வாழ்நா ளிவனுரிக் கற்பி னொரு
மொழிவனுக் சருப்ப நோயா லுயிரிழந் தொழிந்தா ளந்நாட்
கழிவறு ‡பீமத தாற்றுங் கடனபுரிந் தணுகி வாழ்நாள். (15)

(வேறு)

$ஓட்கினுஞ் ¶சோகினு மிழ்ந்த பிதகினு
மிக்குறுங் காமநோய் வெதுப்ப வெண்மலர்

---

* துன்பம். † திருட்டுத்தனம். ‡ மயானம். $ கள். ¶ பிசாசம்.

வைக்கொழுவ கணைசுட வருந்தி வையமுந்
திக்கினு முழன்றவன் றிரிகின் றனனோ. (16)

புளினரு மகற்றுமோர் புளினப் பாவையும்
முளிபுதர் வனத்துறக் கண்டு முன்புசென்
*றளியொடு மினிமைசொற் றணைந்த ழிந்தன
னிளமையிற் றனித்துளா ருய்வ தில்லையே. (17)

(வேறு)

நிலத்தியல் பாகி நீர்திரிந் தற்றே நீடுயிர்க் கினத்தியல் பாகிப்* புலப்படு மறிவென் றுரைத்தலிற் †புளினப் பூவை தோள் புணர்ந்தபூ சுரனுந், தலத்திடை மதுவூ னருந்திவேட் டுவூரிற் றடிந்தபல் லுயிரையுந்தானே, விலைப்படுத துறுகாண் மேவிய வவளும் வெம்பிணி யுற்றன ளன்றே. (18)

முன்பிவன் பலரைக் கொன்றவன் பழிகண் முதிர்ந் தொரு பேயுருக் கொடுவந்,தென்பழி தாவென் றெதிர்த்துநின் றெதிர்ந்தே யிடியினுங் கடியவாய் மடித்துப், பின்புமுன் பினு நின் றதிரு ளுறுத்துப் பெயரவொட் டாதுகண் மறைத் துத் துன்பிடை யொறுத்துத் தொடர்ந்திடத் திரிவான்கடம் பமா வனத்திடை சூழ்ந்தான். (19)

இப்பவத் தறமோ முற்பவத் தறமோ வீன்றவ ரியற்று நல் லறமோ, வெப்பவத் தறமோ வறிகிலே னிறையாங் கடம் பநா யகனெழிற் கருணை, வைப்பவற் றினுக்கோ ரிடமெனுங் கடம்ப வனத்திடை யொருதரு நிழலிற், றப்பவண் பெறுவா னிருந்தனன் கடம்பின் தூயகால் படப்பழி தொலைத் தான். (20)

கடிமலர்க் கடம்ப வனத்திடை மேவக் கடும்பழி தொலைந் தபுண் ணியத்தாற், கொடியணி சிகரக் கோபுரங் கண்டான

* காதல். † வேடுவப்பெண்.

கொடும்பவம் பலகோடி வடிவா, யுடலினின் றெழுந்தாங் கொ ழியவுங் கண்டான் நல்லுணர் வுதிக்கவும் பெற்றான், படி மிசை யதனாற் கடம்பநா யகனசீர் பாவினு ளடங்குமோ பகரில். (21)

வெய்யவேட் டுவர்தங் குலததிழி மகளும்
வினையகன் றிருந்தவே தியனே
டெய்யவே பெற்று ளுடற்பிணி யகன்று
ளுணர்வுநன் குற்றன னதனாற்
செய்யவேட் டலர்சூழ் கடம்பநா யகன்றாள்
சேர்ந்துகண் டவர்கதி சிறிதோ
துய்யவேட் டெழுதிப் பிரமன்மால் பலகாற்
சொல்லினு மெல்லைகா ணரிதே. (22)

இங்கிவ ரிவ்வா றுய்திற மறியா
திறுதிவந் துற்றன ரென்னப்
பொங்குதென் புலத்தோ னேவலிற் பொருந்தும்
பொறையறு தூதுவர் கொடும்பா
சங்கொடு பிணிப்பா னணுகலுங் கடம்பிற்
றங்கிவாழ் சோமசுந் தரனு
மங்கணன் றிருக்கோ புரத்தெரி சனத்தால்
அரும்பவ மகன்றவ னறைவான். (23)

வார்புனல் குடைவார் நீர்நசைக் குடையார்
மன்னரைச் சேர்ந்தவர் வருந்தார்
ஊர்புறங் காக்கும் பாடிகா வலரா
லுமையொரு பாகனுற் குரித்தாம
பார்புகழ் கடம்பா ரணியம்வந் தடுத்தேதன்
பாவமும் பழியுமென் பவமுந்
தீர்வுறக் கண்டேன் கடம்பநா யகன்றாள்
சேர்வனீர் போமெனச் செயிர்த்தான். (24)

செயிர்த்தவ னுரைகேட் டஞ்சியாம் போயென்
செப்புவோம் நமைவிடு மேதி
யுயர்த்தவ னெறுப்பான் விடுத்திடிற் கொள்ளின்
உணர்வருள் கடம்பநா யகன்று
*ளயிர்த்திட லறியாச் சிவகணத்தவர்வந்
தாவியு மகற்றுவ ரதனாற்
றுயக்கறு விருத்தி யொழியினு முயிரே
வேண்டுமென் றகன்றனர் தூதர். (25)

தொல்லைவன் றூதர் சென்றவ னடைந்த
செயலெலாஞ் சொல்லலுந் தருமன்
மல்லலங் கடம்ப மாநக ருறையு
மாந்தரை மறந்தும்நீர் வருத்தச்
செல்லலீ ரின்னு ளாதியென் னுளஞ்
செழுந்திருக் கடம்பநா யகனா
நல்லடி யாரை வந்தனை புரியின்
நமக்கும்வாழ் வெய்துமென் றுரைத்தான். (26)

நஞ்சினுங் கொடிய தூதர்கள் நடுங்கி
யகன்றபி னங்கையி னுடனே
யஞ்சன முகிழ்த்த கரஞ்சிர மமைத்தே
யாநந்த நீர்விழி பொழிய
நெஞ்சனெக் குருகி யுத்தர முகமாய்
நீடுவல் வினையெலாந் தொலைக்குஞ்
செஞ்சுடர் வேலோ னழைத்தசே யாற்றில்
திருந்தநீ ராடினன் சிறந்தான். (27)

பிரிந்ததன் கணவற் பொருந்துமங் கையரிற், பேரமு தருந் துவா னவரின், முரிந்திள நகையார் முகிழ்முலை மகிழ்கா, முகரென முன்புதே டியசொற், றரும்பொரு ளுணருங் கவி ஞர்நெஞ் செனவுஞ், சராசர மரிகியும் வேறுய்ப், பொருந் தருட் கடம்பநாயகன் கோயிற்,பொன்மதில்கண்டுபூரித்தான்.

சேண்டொட நிமிருங் கோபுரம் பணிந்து, திருநிலைவாயி லுட்சென்று, பூண்டொடு முலையா ராடலு முழவும், பொருந்

* சந்தேகித்தல ;மறத்தல்.

வைக்கொழுவ கணைசுட வருக்தி வையமுங்
திக்கினு முழன்றவன் திரிகின் றனரோ. (16)

புளினரு மகற்றுமோர் புளினப் பாவையும்
முளிபுதர் வனத்துறக் கண்டு முன்புசென்
*றளியொடு மினிமைசொற் றணைந்த ழிந்தன
ளிளமையிற் றனித்துளா ருய்வ தில்லையே. (17)

(வேறு)

நிலத்தியல் பாகி நீர்திரிந் தற்றே நீடுயிர்க் கினத்தியல் பாகிப் புலப்படு மறிவென் றுரைத்தலிற் †புளினப் பூவை தோள் புணர்ந்தபூ சுரனுந், தலத்திடை மதுவூ னருந்திவேட் டுவரிற் றடிந்தபல் லுயிரையுந்தானே, விலைப்படுத துறுகாண் மேவிய வவளும் வெம்பிணி யுற்றன ளன்றே. (18)

முன்பிவன் பலரைக் கொன்றவன் பழிகண் முதிர்ந் தொரு பேயுருக் கொடுவந்,தென்பழிதாவென் றெதிர்த்துநின் றெதிர்ந்தே யிடியினுங் கடியவாய் மடித்துப், பின்புமுன் பினு நின் றதியிரு ளுறுத்துப் பெயரவொட் டாதுகண் மறைத் துத்ர துன்பிடை யொறுத்துத் தொடர்ந்திடத் திரிவான்கடம் பமா வனத்திடை சூழ்ந்தான். (19)

இப்பவத் தறமோ முற்பவத் தறமோ வீன்றவ ரியற்று நல் லறமோ, வெப்பவத் தறமோ வறிகிலே னிறையாங் கடம் பமா யகனெழிற் கருணை, வைப்பவற் றினுக்கோ ரிடமெனுங் கடம்ப வனத்திடை யொருதரு நிழலிற், றுப்பவண் பெறுவா னிருந்தனன் கடம்பின் றூயகால் பட்டபழி தொலைத் தான். (20)

கடிமலர்க் கடம்ப வனத்திடை மேவக் கடும்பழி தொலைந் தபுண் ணியத்தாற், கொடியணி சிகரக் கோபுரங் கண்டான

* காதல். † வேடுவப்பெண்.

திருச்சிற்றம்பலம்.

# பதினேழாவது

## திருமாகரலீச்சுரர் மகத்துவங்கூறிய அத்தியாயம்.

சமையஞ் சாத்திரஞ் சார்ந்திடுங் கடவுளும் பலவா
யமைதல் கண்டுநான் மெய்த்ததே யென்றன லேந்தி
யிமைய மால்வரைக் கன்னியை யிடப்புறத் திருத்தி
யெமையுங் காத்தருள் கடம்பநா தனையிறைஞ் சிடுவாம்.

(இ - ள்) பலசமையங்களிலும், சாத்திரங்களிலும் (நாமரூபங்களால்) பலதெய்வங்கள் கூறப்படினும், உண்மை நோக்கில் "சிவமாகிய யானே தனிக்கடவுளென" நிரூபிக்குக்கையில் அனலேந்திப் பார்வதீ தேவியை வாமபாகத்திலமைத்தருளி யடியேனையும் காத்தருளுங் கடம்பநாதரை வணங்குவாம். (எ - று).

துன்னு செஞ்சடை முனிவரர் சூதனைப் போற்றி
யன்னமாகர மலையருக் கருள்வரந் தந்தோன்
பொன்னு டும்பெனப் புற்றிடைப் போந்ததும் பிறவும்
இன்னநீ சொலக்கேட்டிட வேட்டன மென்றார். (2)

என்ற மாதவரின்புறப் புற்றிடங் கொண்ட
கொன்றை வார்சடைக் குழகனார்பன் னிருபெயரு
நன்றி சேருமப் பெயரவர் நண்ணியவாறுந்
துன்று மெய்ம்மயிர் சிலிர்த்திடச் சொல்லுவன் சூதன். (3)

(வேறு)

புற்றிடங்கொண் டவன்றடுத்தாட் கொண்டவன்பாரைத் தழும்பன் புரந்த கன்சீர், பற்றுமடைக் கலங்காத்தா னுபத்துக் காத்தான்முன் பரிந்து காத்தான், பெற்றதிரு நிலையிட்டான்மங்கலங்காத் தான்வேள்வி காத்த பெம்மா, னெற்றிரு மாக்ரலீச னகத்தீச னெனப்பெயர்க ளீரா றுமால். (4)

துன்னுபுகழ் சோணாட்டி லுறையூர் வாழ் பரிதிகுலச் சோழன் வாய்மை, மன்னுமிரா ஜேந்திரனும் வள்ளல்புலிக் கொடியிமைய வரையிற் றீட்டி, யிநநிலத்தைப் புரந்திடுநா

ளிருந்ததுவா மாகரலி ளிரும்ப லாவெஈன், றன்னதிலோர்
கனித்தில்லை யாடியபா தற்கு நிவே தனஞ் செய்வாஞல். (5)

நிநதியநி வேதனஞ்செய் வதுதெரியப் பிரசாத நிருபன்
றன்பால், பத்தியோடு வரவழைத்து நியமமுடித் ததற்பி
னெள்ளிற் பாதி யேனும், வைத்திடக்கொண் டமுதருந்
திவருநாளிற் கனியொரு நாள வராத தாகச், சித்திமிகு
தில்லையினும் வந்ததிலை யெனக்கேட்டுத் திடுக்க மெய்தி. (6)

இரதமுத லுற்படையுஞ் சூழ்வெழு மந்திரிக ளொடுந்
தேரேறி, விரதமுனி வார்சூழுந் தில்லையினெல் லையினிழி
ந்து வீதி நோக்கிப், பரவிநிலத் தட்டாங்க பஞ்சாங்க முறத்
தாழ்ந்து பரமன் மன்றில், வரமருள்செய் நடனங்கண் டாநந்
த பரவசனுய் வணங்கி னுஞல். (7)

வணங்கியிறை வனைநோக்கி வருக்கையின்முட் புறக்கனி
தான் வந்த தில்லை, யணங்கரவ மரைக்கசைத்தாய் அடியேன்
செய் பிழையாதோவறியே னென்னக், குணங்கடந்த தனிமு
தலை விடைகொண்டங் கரிதகன்று கொடித்தே ரிற்சென், றிணை
ங்குமணி மதில்சூழ்கந் தாச்சிரமக் கோபுரங்கண் டிழிந்து
தாழ்ந்தான். (8)

தாழ்ந்தவன வருக்கைமரம் பட்டதெனு மாற்ற மங்கு
சாற்றக் கேட்டுச், சூழ்ந்தமனத் துடன்றிரைசூ ழுத்தரவா
கினியாற்றிற் றுதித்து மூழ்கி, வீழ்ந்தவினை யுடையவனுய்க்
கடம்பநா தனைக் கண்டு விழிநீர் சோரப், போழ்ந்திடுவெண்
பிறையணிந்தோய் தீரும்பிறையைக் காய்ந்தவனே போற்றி
யென்ருன். (9)

தீயனேன் யாதுபிழை செய்தனனே வறியகிலேன்
றேம்ப லாவும், போயதுபட் டெனக்கேட்டே னினியுய்யே
னதுதளிர்க்கப் புரிந்தி டாயேல், தாயனையா யெனவுருகுந்

தாரபதிக்குச் சேயாற்றுத் தண்ணீர் கொண்டு, மீயிறைக்கின் மரந்தழைக்கும் வெறுவேலென் றொருமொழியிண் ணெழுந்த தன்றே. (10)

அதுகேட்டு மகிழ்ந்துவிடை பெற்றுநதி கடந்திறைவ னுடல் செய்த, பொத்வான வேதநூ புரம்போற்றி வருக்கை யின்பாற் புகுந்து நோக்கி, யிதுவீழ்ந்த தென்னெனக்கேட் டுந்தெரியா தங்கிங்கு நாற்று மேவந், ததுதேர்ந்து மந்திரியர் தமைநோக்கி யதிசயமீ தறிமி னென்றான். (11)

மந்திரியர் பரிஜனரான் மாமூலஞ் சோதிப்ப
மருச் செய்காயங்
குந்தமிகுந் துறவாசன் கண்ணுற்கண் டாகாவிக்
கருமம் யாரோ
நந்திடச்செய் தவரென்று னங்குசில ரிம்மறையோர்
நாளுந் தில்லை
வந்துகனி சுமந்துதவ மாட்டாது செய்தனரிவ்
வசையை யென்றார். (12)

என்னலுமே யம்மறையோர் தமைவாளா லெறிவனென
வெழுந்த மன்னன்
றன்னையமைத் தந்தணரிற் சிவத்துரோ கஞ்செய்தார்
தமைவெய் யோன்வீ
ழுன்னபொழு தேகொடுபோய் கங்குலெலா நடத்திவிடி
வான வைப்பிற்
புன்னகர்செய் ததில்வைத்தன் மாபென்றார் மந்திரியிற்
பொறுமை மிக்கார். (13)

நீதிறா லிவ்வண்ண நிகழ்த்திடிலென் செய்வதெனா
நினைந்து தீய
வேதியரை யவ்வண்ண மகல்வித்துச் சேயாற்று
விழுநீர் கொண்டு

நாதனரு ணினைநதுமா மேற்றெளித்தான் முன்னையினு
நன்றாய்த் தோன்றிச்
சீதநிழல் பரப்பிநின் றதுகண்டு வியப்படைந்தார்
செகத்தி லுள்ளார். (14)

தன்பினே வருமமைச்சர் தலையங்க ணிலைநிறுத்தித்
தட்டா தென்று
முன்புபோ லக்கனியை யம்பலவற் கெய்துவித்து
முறைசெய் வேந்த
னன்பினாற் கச்சியே கம்பரைத்தான் றொழச்செல்லு
மாற்றின் முன்னர்
வன்புசேர் பொன்னுடும்பொன் றோடியொரு புற்றதனின்
மறையக் கண்டான். (15)

கண்டுமிக வியப்பெய்திப் புற்றதனை யகழ்விக்குங்
காலிற் சென்ற
வெண்டகுபொன் னுடும்பதனைக் காணாய் எழுங்குருதி
முடியோ டம்மா
வண்டர்தொழுஞ் சிவலிங்க முறக்கண்டு நடுநடுங்கி
யவச மெய்தி
மண்டனில்வீழ்ந் தழும்பொழுதோர் மறைச்சிறுவ
னாய்*முன்னோன் வந்து சொல்வான். (16)

ஒழிவில்சிவ தருமஞ்செய் †உரவோனே வெருவேல்யா
மோதும் பொய்யா
மொழிபுகலும் புற்றிடங்கொ ளெந்தைவிளை யாட்டெவரே
முற்றுங் கண்டார்
கழிமகிழ்வி னுனைத்தடுத்தாட் கொளவெண்ணி யிப்பரிசு
கண்டா னென்ன
விழிதருசெங் குருதிமறைந் ததுவேந்த னிறையருள்கண்
டேத்தி நின்றான். (17)

* விநாயகக்கடவுள். † வலியோனே.

கனகவுடும் பாய்ப்புற்றிற் புகுந்திடலாற் புற்றிடங்கொள்
கடவு ளென்றும்
தனையனைய சோழனையாட் கொண்டிடலாற் றடுத்தாட்கொள்
சம்பு வென்றும்
நனியுவன்வெட் டும்பாரைத் தழும்புறலா னற்பாரைத்
தழும்ப ரென்றும்
அனகனுமுப் பெயர்பெற்று னருமறைப்பா லணைப்பின்பவ்
வரசன் போற்றி. (18)

இவ்விறைவன் சரித்திரநீ யெனக்கறிய வியம்பிடுவா யென்ன முன்னோன், செவ்விபெறப் புகன்றிடுவான் திரிபுரத்தார் தமக்குடைந்து தேவர் தம்மோ, டவ்வரச னடைகக லம்யா மெனவந்து பூசைசெய வவர்முன் றோன்றி, நவ்வி விழி யுமைபாகன் அடைக்கலங்காத் தானென்றோர் நாமம பெற்றான். (19)

திரிபுரத்தை யெரித்திடலாற் றிரிபுராந் தகனென் றிங்க ளாசான், பரியுமனை வியைப்புணர வவன்சபிக்க நடுங்கிவந்து பரிந்து காப்பாய், கரியுரியா யெனப்பூசை செய்யவவ னைப் பரிந்து காத்த லாலே, தெரிவரிய விவ்விறைவன் பரிந்துகாத் தோனென்னுந் திருப்பேருற்றான். (20)

சந்திரனைப் புணர்ந்தசெயல் குருவறிந்து சபித்திடலுந்
தாரை யென்பாள்
வந்தழுதென் றுபதைதைக் காத்தருள்வா யெனப்பூசை
வகுப்பக் காத்திட்
டெந்தையுமா பதக்காத் தவனென்றோர் பெயர்பெற்றான்
எழிலார் வேதன்
வந்தனைசெய் துலகுநிலை பெறச்சிருட்டி செயுமனுவை
வழங்கு கென்றான். (21

நிலவுலகு நிலைப்பமனு வருள்செய்து நிலையிட்ட
நாத னென்னக்
குலவுமொரு திருப்பெயர்பெற் றுனெங்கோ னயன்பின்னர்
கோட்டிற் சூழ்ந்த
பலவுதனைப் படைத்துமுப் பழந்தரநித் தமுங்கயிலைப்
பரமற் கொன்றுந்
தலமுறுமிவ் விறைக்கொன்று மம்புலவற் கொன்றுநிவே
தனஞ்செய் தாறல். (22)

என்றாரு மிவ்வண்ண மியற்றுவிப்ப நினைந்துவட
கயிலை மேயப்
பன்னகப் பணியரற்குச் சுரரும்பூ சுரர்தில்லைப்
பதிக்குங் கொண்டு
தன்னாணை யாற்செல்லச் செய்வித்தா னிதுகாறுந்
தவறு துற்ற
தின்னளின் வருமிடறு நினைத்தடுத்தாட் கொளவன்றே
விறைவ வென்றான். (23)

மற்றுமத னெரிந்திடலு மனையிரதி மனம்பதைத்தித்
தலத்தில் வந்து
பற்றலரு ரெரித்தவனைப் பணிந்துசிவ லிங்கமொன்று
பதிட்டை செய்து
துற்றமலர் கொடுபோற்றி முங்கலங்காப் பாயென்னச்
சோதி தோன்றி
யிற்றமத னைத்தந்து மங்கலங்காத் தப்பெயரை
யெய்தி னனே. (24)

அந்த மார்த்தி யரும்பெறற் றீரத்தி னொருசார்
கந்த மாமலர்ச் சண்பக மாசினிக் கமுகுச்
சந்த மாமகி ழாதிய நிறைந்த*தண் டலையா
†பந்த மானது பாடலி புரமெனும் பதியே. (4)

அப்ப திக்கணுன் மறைகளா றங்கமீ மாஞ்சஞ்
செப்பு மாதருக் கம்புரா ணந்தெரி யறநூ
லொப்பி லெண்ணறு கலைகளு முணர்ந்துயர் மனுவாற்
றிப்பி யந்தரு வேள்விசெய் யந்தணர் செறிந்தார். (5)

இனைய தன்மைய ராகிய விருபிறப் பாளர்
மனைக ளாயிர மலிந்தன வவற்றொரு மனையின்
வினையி னீங்கிய விளங்கிய வறிவனும் விமலன்
றனைய லாதுணா ராதவன் சமரச னென்பான். (6)

அன்ன வன்றிரு மனையருந் ததியென நிறையாள்
பொன்னை வென்றசீ ரியலுடைப் பூவையங் கவள்பால்
முன்ன மாற்றிய தீவினை முதிர்ந்தொரு வடிவாய்
மன்னி யிந்நிலத் துதித்தெனப் பிறந்தனோர் மதலை. (7)

அந்த மைந்தனைத் தந்தைதாய் சாதகன் மாதி
முந்து செய்வினை பருவம்வந் துழியெலா முயன்று
விந்தை யுள்ளவும் வேதமும் விதிவழி யறிவித்
துந்து நன்மணம புரிந்துதம் முரிமையின் வளர்த்தார். (8)

அன்ன நாளிடை யின்னவன் றன்னையீன் றளித்த
வன்னை தந்தையு மூழினு லிறந்தன ரவரென்
னன்னை பாகர்தா ளணுகுறப் பிதிர்க்கட னாற்றி
யன்ன மன்னதன் மனைவியு டன்றனி யமர்ந்தான். (9)

தமியனாகிய வேதியன் றன்மனைத் தனமாஞ்
சிமைய மேவியே வாழுநா ளிளமையின் செருக்கா

* நந்தவனம். † அழகு.

லமைவில் காமவெங் துறைபடிந் தருமறைத் துறையும்
விமல மாகிய கல்விகல் வினைகளும் விடுத்தான். (10)

வரைவின் மங்கையர் காமமங் கையர்மண மிழந்தோ
ருரைசெய் நற்குல மிழிகுலத் துதித்தவ ரன்றித்
தரையின் மங்கையென் றோருருக் காணினுஞ் சார்ந்து
திரியு மாதலிற் பொருள்பெறத் தீவினை புரிவான். (11)

(வேறு)

இரவினிற் களவு செய்து மில்லத்தி னுட்பு குந்து
மருவருந தான மேற்றுஞ் சூதுமற் றிழிவு செய்தும்
பொருது கொன்றுறலைத்து மிழிவழக் குரைத்துப் புன்மைப்
*பருவரல் பயிற்றி யென்றும் †பட்டிமை பலப யின்றும். (12)

செங்கைசேர் நிதிய மெல்லாம் சியுடன் றங்குஞ் செங் கீரப், பொங்கிய வரைப்புன் மாட்டே புகுத்தன னவையும் போதா, தஙகண னடியார் தீர்தத யாததிரை புரிவா ரங்கைத், துங்கநீ ணிதியுங் கொணடு தொலைததனன் றொலையாப்பாவி.

கண்டக வயிலென் றோதுங் கண்ணியர்க் குருகி யாருங்
கண்டக வயிர மில்லா னெனவிருந் தவர்க்கே காவிற்
கண்டக வயிர மென்னக் கடுமைக ளியற்ற லாலே
கண்டக வயிரி யென்னுங் காரணப் பெயர்பெற் றானே. (14)

பழியொடு பாவ மாற்றிப் பார்ப்பன வொழுக்க மாற்றி
யிழிதக ளுகி வாழ்நா ளிவனுரிக் கற்பி னொரு
மொழிவனுக் சருப்ப நோயா லுயிரிழுக் தொழிந்தா ளந்நாட்
கழிவறு ‡மீமத தாற்றுங் கடைபுரிந் தணுகி வாழ்நாள். (15)

(வேறு)

$இக்கினுஞ் ¶சோகினு மிழ்ந்த பித்தினு
மிக்குழுங் காமநோய் வெதுப்ப வெண்மலர்

---

* துன்பம். † திருட்டுத்தனம். ‡ மயானம். $ கள். ¶ பிசாசம.

வைக்கொழுந கணைசுட வருந்தி வையமுந்
திக்கினு முழன்றவன் றிரிகின் றனனரோ. (16)

புளினரு மகற்றுமோர் புளினப் பாவையும்
முளிபுதர் வனத்துறக் கண்டு முன்புசென்
*றளியொடு மினிமைசொற் றணைந்த ழிந்தன
னிளமையிற் றனித்துளா ருய்வ தில்லையே. (17)

(வேறு)

நிலத்தியல் பாகி நீர்திரிந் தற்றே நீடுயிர்க் கினத்தியல் பாகிப், புலப்படு மறிவென் றுரைத்தலிற் †புளினப் பூவை தோள் புணர்ந்தபூ சுரனுங், தலத்திடை மதுவூ னருந்திவேட் டுவரிற் றடிந்தபல் லுயிரையுந்தானே, விலைப்படுத் துறுகாண் மேவிய வவளும் வெம்பிணி யுற்றன ளன்றே. (18)

முன்பிவன் பலரைக் கொன்றவன் பழிகண் முதிர்ந் தொரு பேயுருக் கொடுவந்,தென்பழி தாவென் றெதிர்த்துநின் றெதிர்ந்தே யிடியினுங் கடியவாய் மடித்துப், பின்புமுன் பினு நின் றதியிரு ளுறுத்துப் பெயரவொட் டாதுகண் மறைத் துத், துன்பிடை யொறுத்துத் தொடர்ந்திடத் திரிவான்கடம் பமா வனத்திடை சூழ்ந்தான். (19)

இப்பவத் தறமோ முற்பவத் தறமோ வின்றவ ரியற்று நல் லறமோ, வெப்பவத் தறமோ வறிகிலே னிறையாங் கடம் பமா யகனெழிற் கருணை, வைப்பவற் றினுக்கோ ரிடமெனுங் கடம்ப வனத்திடை யொருதரு நிழலிற், றப்பவண் பெறுவா னிருந்தனன் கடம்பின் றூயகால் பட்டப்பழி தொலைத் தான். (20)

கடிமலர்க் கடம்ப வனத்திடை மேவக் கடும்பழி தொலைந் தபுண் ணியத்தாற், கொடியணி சிகரக் கோபுரங் கண்டான

---

* காதல். † வேடுவப்பெண்.

கொடும்பவம் பலகோடி வடிவா, யுடலினின் றெழுந்தாங் கொ ழியவுங் கண்டான் நல்லுணர் வுதிக்கவும் பெற்றான், படி மிசை யதனாற் கடம்பநா யகன்சீர் பாவினு ளடங்குமோ பகரில். (21)

வெய்யவேட் டுவர்தங் குலததிழி மகளும்
வினையகன் றிருந்தவே தியனோ
டுய்யவே பெற்றா ளுடற்பிணி யகன்றா
னுணர்வுநன் குற்றன வதனாற்
செய்யவேட் டலர்சூழ் கடம்பநா யகன்றாள்
சேர்ந்துகண் டவர்கதி சிறிதோ
துய்யவேட் டெழுதிப் பிரமன்மால் பலகாற்
சொல்லினு மெல்லைகா ணரிதே. (22)

இங்கிவ ரிவ்வா றய்திற மறியா
திறுதிவந துற்றன ரென்னப்
பொங்குதென் புலத்தோ னேவலிற் பொருந்தும்
பொறையறு தூதுவர் கொடும்பா
சங்கொடு பிணிப்பா னணுகலுங் கடம்பிற்
றங்கிவாழ் சோமசுந் தரனு
மங்கணன் றிருக்கோ புரத்தெரி சனத்தால்
அரும்பவ மகன்றவ னறைவான். (23)

வார்புனல் குடைவார் நீர்நசைக் குடையார்
மன்னரைச் சேர்நதவர் வருந்தார்
ஊர்புறங் காக்கும் பாடிகா வலரா
லுமையொரு பாகனற் குரித்தாம
பார்புகழ் கடம்பா ரணியம்வந் தடுத்தேன்
பாவமும் பழியுமென் பவமுந்
தீர்வுறக் கண்டேன் கடம்பநா யகன்றாள்
சேர்வனீர் போமெனச் செயிர்த்தான். (24)

செயிர்த்தவ னுரைகேட் டஞ்சியாம் போயென்
செப்புவோம் நமைவிடு மேதி
யுயர்த்தவ னொறுப்பான் விடுத்திடிற் கொள்ளின்
உணர்வருள் கடம்பநா யகன்று
*ளயிர்த்திட லறியாச் சிவகணத்தவர்வந்
தாவியு மகற்றுவ ரதனாற்
றுயக்கறு விருத்தி யொழியினு முயிரே
வேண்டுமென் றகன்றனர் தூதர். (25)

தொல்லைவன் றூதர் சென்றவ ணடைந்த
செயலெலாஞ் சொல்லலுந் தருமன்
மல்லலங் கடம்ப மாநக ருறையு
மாந்தரை மறந்தும்நீர் வருத்தச்
செல்லலீ ரின்னு ளாதியென் றுளஞ்
செழுந்திருக் கடம்பநா யகனா
நல்லடி யாரை வந்தனை புரியின்
நமக்கும்வாழ் வெய்துமென் றுரைத்தான். (26)

நஞ்சினுங் கொடிய தூதர்கள் நடுங்கி
யகன்றபி னநங்கையி னுடனே
யஞ்சன முகிழ்த்த கரஞ்சிர மமைத்தே
யாநந்த நீர்விழி பொழிய
நெஞ்சனெக் குருகி யுத்தர முகமாய்
நீடுவல் வினையெலாந் தொலைக்குஞ்
செஞ்சுடர் வேலோ னழைத்தமே யாற்றில்
திருந்தநீ ராடினன் சிறந்தான். (27)

பிரிந்ததன் கணவற் பொருந்துமங் கையரிற், பேரமு தருந் துவா னவரின், முரிந்திள நகையார் முகிழ்முலை மகிழ்கா, முகரென முன்புதே டியசொற், றரும்பொரு ளுணருங் கவி ஞர்நெஞ் செனவுஞ், சராசர மரியும் வேறுய்ப், பொருந தருட் கடம்பநாயகன் கோயிற்,பொன்மதில்கண்டுபூரித்தான்.

சேண்டொட நிமிருங் கோபுரம் பணிந்து, திருநிலைவாயி லுட்சென்று, பூண்டொடு முலையா ராடலு முழவும், பொருந்

* சந்தேகித்தல ;மறத்தல்.

துசன் னிதியினிற் புகுந்தோர், மீண்டிட் லறியா மாளிகை வலமாய்ச், சித்தியைங் கரன்பதம் விரும்பித், தூண்டருஞ் சுடராங் கடம்பநா யகனுஞ் சோதியைக் கண்டுதோத் தரிப்பான். (29)

வேறு.

அண்ணலே போற்றி போற்றி யமரர்க் டலைவா போற்றி
பண்ணுளா ரிசையே போற்றி பழமறை முடிவே போற்றி
பெண்ணொரு பாகா போற்றி பிஞ்ஞகா போற்றி நாயேன்
கண்ணினுண் மணியே போற்றி கடம்ப நாயகனே போற்றி. ()

படைத்தளித் தழிப்பாய் போற்றி பழமலங் களைவாய் போற்றி, விடைப்பெருங் கொடியாய்போற்றிவெள்ளியங் கிரியாய் போற்றி, நடைப்பெருந் துறவோர் நெஞ்சில் விளையுநல் லமுதே போற்றி, கடைக்கணித் தெனையாட் கொண்ட கடம்ப நாயகனே போற்றி. (31)

ஆற்றருங் கொடுமை தானே யாற்றியவ் வூழிகாறு
மாற்றரு நரகில் வீழ்ந்தே மாண்டிடற் கொருப்பட் டேனைச்
சாற்றருந் துயர்தீர்த் தாண்ட சங்கரா போற்றி போற்றி
காற்றருந் தரவமபூண்ட கடம்பநா யகனே போற்றி. (32)

கண்டக வயிரி யிவ்வாறுளங்களித் தேத்தக் காமாத்
தண்டகநாட்டுக் கெல்லாந் தடங்கணுங் கடம்பர் கோயிற்
றொண்டக மகிழ்ந்து வாழுஞ் சுகப்பொருட் கடம்ப நாதன்
முண்டகமலர்த்தா ணீழற் சேர்த்தருண் முழுதுந் தந்தான்.()

அருமறை யொழுக்க நீத்த வந்தணன் கிராதி யோடுந்
திருமலி கடம்ப நாதன் றருள்பெறு சீர்மை சொற்றும்
பொருவக விதன்வடக்கிற் புற்றிடங்கொண்ட பெமமான்
பெருமைசேர் பெயரீ ராறும் பெற்றவா றியம்ப லுற்றும். ()

பதினொருவது-கண்டக வயிரி முத்திபெற்ற
அத்தியாயம் முற்றிற்று.

---

ஆகஅத்தியாயம் பதினொறக்குத் திருவிருத்தம் 608.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

## பதினேழாவது

### திருமாகரலீச்சுரர் மகத்துவங்கூறிய அத்தியாயம்.

௧

சமையஞ் சாத்திரஞ் சார்ந்திடுங் கடவுளும் பலவா
யமைதல் கண்டுநான் மெய்த்ததே வென்றன லேந்தி
யிமைய மால்வரைக் கன்னியை யிடப்புறத் திருத்தி
யெமையுங் காத்தருள் கடம்பநா தனையிறைஞ் சிடுவாம்.

(இ - ள்) பலசமையங்களிலும், சாத்திரங்களிலும் (நாமரூபங்களால்) பலதெய்வங்கள் கூறப்படினும், உண்மை நோக்கில் "சிவமாகிய யானே தனிக்கடவுளென" நிரூபிக்குங்கையில்அனலேந்திப் பார்வதி தேவியை வாமபாகத்திலமைத்தருளி யடியேனையும் காத்தருளுங் கடம்பநாதரை வணங்குவாம். (எ - று).

துன்னு செஞ்சடை முனிவரர் சூதனைப் போற்றி
யன்னமாகர மலையருக் கருள்வரந் தநதோன்
பொன்னு டும்பெனப் புற்றிடைப் போந்ததும் பிறவும்
இன்னநீ சொலக்கேட்டிட வேட்டன மென்றார். (2)

என்ற மாதவரின்புறப் புற்றிடங் கொண்ட
கொன்றை வார்சடைக் குழகனார்பன் னிருபெயரு
நன்றி சேருமப் பெயரவர் நண்ணியவாறுந்
துன்று மெய்ம்மயிர் சிலிர்த்திடச் சொல்லுவன் சூதன். (3)

(வேறு)

புற்றிடங்கொண் டவன்றடுத்தாட் கொண்டவன்பாரைத் தழும்பன் புராந்த கன்சீர், பற்றுமடைக் கலங்காத்தா னுபத்துக் காத்தான்முன் பரிந்து காத்தான், பெற்றதிரு நிலையிட்டான்மங்கலங்காத் தான்வேள்வி காத்த பெம்மா, னெற்றிரு மாக்ரலீச னகத்தீச னெனப்பெயர்க ளீரா றுமால். (4)

துன்னுபுகழ் சோணாட்டி லுறையூர் வாழ் பரிதிகுலச் சோழன் வாய்மை, மன்னுமிரா ஜேந்திரனும் வள்ளல்புலிக் கொடியிமைய வரையிற் றீட்டி, யிந்நிலத்தைப் புரந்திடுநா

ளிருந்ததுவா மாகரலி ளிரும்ப லாவெளன், றன்னதிலோர் கனித்தில்லை யாடியபா தற்கு நிவே தனஞ் செய்வானல். (5)

நிந்தியநி வேதனஞ்செய் வதுதெரியப் பிரசாத நிருபன் றன்பால், பத்தியோடு வரவழைத்து நியமமுடித் ததற்பி னெள்ளிற் பாதி யேனும், வைத்திடக்கொண் டருதருந் திவருநாளிற் கனியொரு நாள வராத தாகச், சித்திமிகு தில்லையினும் வந்ததிலை யெனக்கேட்டுத் திடுக்க மெய்தி. (6)

இரதமுத ஞற்படையுஞ் சூழ்வெழு மந்திரிக ளொடுந் தே ரேறி, விரதமுனி வரர்சூழுந் தில்லையினெல் லையினிழி ந்து வீதி நோக்கிப், பரவிநிலத் தட்டாங்க பஞ்சாங்க முறத் தாழ்ந்து பரமன் மன்றில், வரமருள்செய் நடனங்கண் டாநந் த பரவசனுய் வணங்கி ஞனல். (7)

வணங்கியிறை வனைநோக்கி வருக்கையின்முட் புறக்கனி தான் வந்த தில்லை, யணங்கரவ மரைக்கசைத்தாய் அடியேன் செய் பிழையாதோவறியே னென்னக், குணங்கடந்த தனிமு தலை விடைகொண்டங் கரிதகன்று கொடித்தே ரிற்சென், றிணங்குமணி மதில்சூழ்கந் தாச்சிரமக் கோபுரங்கண் டிழிந்து தாழ்ந்தான். (8)

தாழ்ந்தவன வருக்கைமரம் பட்டதெனு மாற்ற மங்கு சாற்றக் கேட்டுச், சூழ்ந்தமனத் துடன்றிரைசூ ழுத்தரவா கினியாற்றிற் றுதித்து மூழ்கி, வீழ்ந்தவினை யுடையவனுய்க் கடம்பநா தரைக் கண்டு விழிநீர் சோரப், போழ்ந்திடுவெண் பிறையணிநதோய் திரும்பிறையைக் காய்ந்தவனே போற்றி யென்றுன். (9)

தீயனேன் யாதுபிழை செய்தனனே வறியகிலேன் றேம்ப லாவும், போயதுபட் டெனக்கேட்டே னினியுய்யே னதுதளிர்க்கப் புரிந்தி டாயேல், தாயனையா யெனவுருகுந்

தராபதிக்குச் சேயாற்றுத் தண்ணீர் கொண்டு, மீயிறைக்கின் மரந்தழைக்கும் வெறுவேலென் றொருமொழிவிண் ணெழுந்த தன்றே. (10)

அதுகேட்டு மகிழ்ந்துவிடை பெற்றுநதி கடந்திறைவ னுடன் செய்த, பொத்துவான வேதநூ புரம்போற்றி வருக்கை யின்பாற் புகுந்து நோக்கி, யிதுவீழ்ந்த தென்னெனக்கேட் டுந்தெரியா தங்கிங்கு நாற்கூ மேவந், ததுதேர்ந்து மந்திரியர் தமைநோக்கி யதிசயமீ தறிமி னென்றான். (11)

மந்திரியர் பரிஜனரான் மரமூலஞ் சோதிப்ப
மருச் செய்காயங்
தந்தமிகுந் துறவரசன் கண்ணுற்கண் டரகரவிக்
கருமம் யாரோ
நந்திடச்செய் தவரென்று னங்குசில ரிம்மறையோர்
நாளுந் தில்லை
வந்துகனி சுமந்துதவ மாட்டாது செய்தனரிவ்
வசையை யென்றார். (12)

என்னலுமே யம்மறையோர் தமைவாளா லெறிவனென
வெழுந்த மன்னன்
றன்னையமைத் தந்தணரிற் சிவத்துரோ கஞ்செய்தார்
தமைவெய் யோன்வீ
ழுன்னபொழு தேகொடுபோய் கங்குலெலா நடத்திவிடி
வான வைப்பிற்
புன்னகர்செய் ததில்வைத்தன் மரபென்றார் மந்திரியிற்
பொறுமை மிக்கார். (13)

நீதிநூ லிவ்வண்ண நிகழ்த்திடிலென் செய்வதெனா
நினைந்து தீய
வேதியரை யவ்வண்ண மகல்வித்துச் சேயாற்று
விழுநீர் கொண்டு

நாதனரு ணினைந்துமர மேற்றெளித்தான் முன்னையினு
нன்றாய்த் தோன்றிச்
சீதநிழல் பரப்பிநின் றதுகண்டு வியப்படைந்தார்
செகத்தி லுள்ளார். (14)

தன்பினே வருமமைச்சர் தமையங்க ணிலைநிறுத்தித்
தட்டா தென்று
முன்புபோ லக்கனியை யம்பலவற் கெய்துவித்து
முறைசெய் வேந்த
னன்பினாற் கச்சியே கம்பரைத்தான் றொழச்செல்லு
மாற்றின் முன்னர்
வன்புசேர் பொன்னுடும்பொன் றோடியொரு புற்றதனின்
மறையக் கண்டான். (15)

கண்டுமிக வியப்பெய்திப் புற்றதனை யகழ்விக்குங்
காலிற் சென்ற
வெண்டகுபொன் னுடும்பதனைக் காணாய் எழுங்குருதி
முடியோ டமமா
வண்டர்தொழுஞ் சிவலிஙக முறக்கண்டு நடுநடுங்கி
யவச மெய்தி
மண்டனில்வீழ்ந் தழும்பொழுதோர் மறைச்சிறுவ
னாய்*முன்னோன் வந்து சொல்வான். (16)

ஒழிவில்சிவ தருமஞ்செய் †உரவோனே வெருவேல்யா
மோதும் பொய்யா
மொழிபுகலும் புற்றிடங்கொ ளெந்தைவிளை யாட்டெவரே
முற்றுங கண்டார்
கழிமகிழ்வி னுனைந்தடித்தாட் கொளவெண்ணி யிப்பரிசு
கண்டா னென்ன
விழிதருசெங குருதிமறைந் ததுவேந்த னிறையருள்கண்
டேத்தி நின்றான். (17)

* விநாகயக்கடவுள். † வலியோனே.

கனகவுடும் பாய்ப்புற்றிற் புகுந்திடலாற் புற்றிடங்கொள்
கடவு ளென்றும்
தனையனைய சோழனையாட் கொண்டிடலாற் றடுத்தாட்கொள்
சம்பு வென்றும்
நனியுவன்வெட் டும்பாரைத் தழும்புறலா னற்பாரைத்
தழும்ப ரென்றும்
அனகனுமுப் பெயர்பெற்று னருமறைப்பா லனைப்பின்பவ்
வரசன் போற்றி. (18)

இவ்விறைவன் சரித்திரநீ யெனக்கறிய வியம்பிடுவா யென்ன முன்னோன், செவ்விபெறப் புகன்றிடுவான் திரிபுரத் தார் தமக்குடைந்து தேவர் தம்மோ, டவ்வரச னடைகக லிம்யா மெனவந்து பூசைசெய வவர்முன் றோன்றி, நவ்வி விழி யுமைபாகன் அடைக்கலங்காத் தானென்றோர் நாமம பெற்றான். (19)

திரிபுரத்தை யெரித்திடலாற் றிரிபுராந் தகனென் றிங்க ளாசான், பரியுமனை விழைப்புணர வவன்சபிக்க நடுங்கிவந்து பரிந்து காப்பாய், கரியுரியா யெனப்பூசை செய்யவவ னைப் பரிந்து காத்த லாலே, தெரிவரிய விவ்விறைவன் பரிந்துகாத் தோனென்னுந் திருப்பேருற்றான். (20)

சந்திரனைப் புணர்ந்தசெயல் குருவறிந்து சபித்திடலுந்
தாரை யென்பாள்
வந்தழுதென் னுபத்தைக் காத்தருள்வா யெனப்பூசை
வகுப்பக் காத்திட்
டெந்தையுமா பதுக்காத் தவனென்றோர் பெயர்பெற்றான்
எழிலார் வேதன்
வந்தனைசெய் துலகுநிலை பெறச்சிருட்டி செயுமனுவை
வழங்கு கென்றான். (21

நிலவுலகு நிலைப்பமனு வருள்செய்து நிலையிட்ட
நாத னென்னக்
குலவுமொரு திருப்பெயர்பெற் றுனெங்கோ னயன்பின்னர்
கோட்டிற் சூழ்ந்த
பலவுதனைப் படைத்துமுப் பழந்தரநித் தமுங்கயிலைப்
பரமற் கொன்றுந்
தலமுறுமிவ் விறைக்கொன்று மம்புலவற் கொன்றுநிவே
தனஞ்செய் தானல். (22)

என்றனு மிவ்வண்ண மியற்றுவிப்ப நினைந்துவட
கயிலை மேயப்
பன்னகப் பணியரற்குச் சுரரும்பூ சுரர்தில்லைப்
பதிக்குங் கொண்டு
தன்னனை யாற்செல்லச் செய்வித்தா னிதுகாறுந்
தவறு துற்ற
தின்னளின் வருமிடறு நினைத்தடுத்தாட் கொளவன்றே
யிறைவ வென்றான். (23)

மற்றுமத னெரிந்திடலு மனையிரதி மனம்பதைத்தித்
தலத்தில் வந்து
பற்றலரு ரெரித்தவனைப் பணிந்துசிவ லிங்கமொன்று
பதிட்டை செய்து
துற்றமலர் கொடுபோற்றி முங்கலங்காப் பாயென்னச்
சோதி தோன்றி
யிற்றமத னைத்தந்து மங்கலங்காத் தப்பெயரை
யெய்தி னனே. (24)

தன்மகத்தை யழிக்குமிரு தகுவர்செயல் காசிபனுஞ்
சாற்ற யாமே, முன்வரமீ தலினழித்தல் கூடாது கடம்பைத
னின் முற்றிற் பூசை, யன்னவரை மாலகம்வாழ் கொற்றவனு
லடுவிப்பா மென்றவ் வண்ணம், பின்னியற்றி மகநகாத்து
வேள்விகாத் தானெனும்பேர் பெற்ருனெம்மான். (25)

மாகாளுந் தகுவன்முனம் பூசிப்ப மாகாலீச் சுரனே
யென்றும், வகமொடு கூறுமுனிவன் முத்தமிழை விரிப்ப
தற்கு விழைந்து பூசை, யாகமநூற் படிசெயலா லகத்தீச
னென்னும்பே ரடைநதா னீசன, சேகறுமிப் பெயர்ப்புகல்வார்
செல்வராய் மறுமையினிற் சேர்வர் முத்தி. (26)

என்றுரைத்து நம்பெயர்பொய் யாமொழிவி நாயகனென்
றிசைத்து விண்ணி, லொன்றியதன் னுருக்காட்டி யொருமு
குர்த்தந் தெரிசநந்தந் துடன்ம றைந்தான, வென்றிபெறு
மிறைபணிந்தத் திசைநோக்கித் தொழுதுமலே வில்லி னுற்குக்,
குன்றுறழ்கோ புரமுதலாயாலயஞ்செப் துற்சவமுங் குறித்
துச் செய்தான். (27)

ஆசினியின் கனியீங்குந் தில்லைபோனி வேதனஞ்செய்
தந்நாள் போலப், பூசைநிதம் நடத்திடப்பொன் பூமிவிடுத்
தமைச்சர்கடன் னுணை போற்றப், பேசியுறை யூரணுகித் தன்
சுதற்கு முடிசூட்டிப் பிறவி நீஙகு, மாசகன்ற பேரின்ப மெய்
தினனென் றுனெல்லாம் வல்ல சூதன். (28)

சூதமா தவன்புகலக் கேட்டமுனிவரரெல்லாம் சூழ்ந்து
வந்து, சீதமார் பொழிற்கந்தாசி சிரமஞ்சேர்ந் துத்தரவா
கினிசே யாற்றிற், போதமார் தரமூழ்கிக் கடம்பநா யகன்
றனைப் பூசை செய்துக், கீதமா ரந்நகரிற் பரமுத்தி தனை
வேட்டுக் கிளர்நதி ருநதார். (29)

வேறு.

திருவளர் கடம்பர் மூதூர் செறிபுகழ் புராணந் தன்னை
யருள்வளர் சூதர் கோமா னருந்தவர்க் கமுத மாக
மருவளர் வனத்திற் கூறுங் கதையைவண் டமிழ்ப்பா வாக்கித்
தருவளர் கடம்பர் கோயிற் றனிலறங் கேற்றினேனே. (30)

வாழியென் மனத்தே வாழும் வான்புகழ்க் கடம்ப நாதன்
வாழியா வுடைய வம்மை வாழிநற் சித்தி யானை
வாழிமா முருக னெங்கோன் வாழிநற் கடம்பர் கோயில்
வாழியஞ் செழுத்துச் சைவம் வாழியிவ் வுலக மெல்லாம். ()

பதினேழாவது திருமாகரலீச்சுரர் மகத்துவங் கூறிய
அத்தியாயம் முற்றிற்று.

ஆகவத்தியாயம் 17-க்குத் திருவிருத்தம் 639-

கடம்பநாத புராணம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

PRINTED AT THE NOBLE PRESS, Triplicane, Madras. S E.,

சிவமயம்.

# விளம்பரம்.

ஆஸ்திகோத்தமர்களே !

திருவருளை முன்னிட்டு இந்தத் திருக்கடம்பநாத புராணம் வெளிவர முயன்றதன் முடிவில், தலத்தைச் சூழ்ந்துள்ள சில கிராமத்தவர்களிடம்போய்ப் பொருளுதவி புரியவேண்டி, அங்ஙனம் முன் வருபவர்களின் பெயர்களைப் பிரசுரிப்பதுடன் நிகழும் அக்ஷயவரு, பங்குனி மாதம், இத்தல பிரஹ்மோற்சவகாலத்திலேயே வெளியிட்டு, உதவிக்கேற்பப் புராணத்தை யுபகரிக்கப்படுமெனவும் கூறியதன்மேல், பல நேயர்கள் உதவிபுரிய முன்வந்து கையொப்பமிட்டனர்.

அதை நம்பியே ஷை உற்சவம் சமீபித்திருந்தும், அதற்குள் வெளிவர முயன்று சில முக்கியஸ்தர்களின்விருப்பத்தின்படி சில விஷயங்களைப் புராண முகப்பிற் சேர்க்கத்தயாரித்து தூரததிலுள்ள சில கிராமத்தாரிடம் நேரில் செல்லக் காலமின்மையால் கடிதமூலமாய் அறிவித்து உதவேசப்படி உதவி செய்தவர் விவரப்பட்டியைத் தயாரித்து வருங்கால்,

முதலில் வாக்களித்த நண்பர்களிற் பலர், "ஏறவிட்டேணியை வாங்குத"லொக்கப் பாத்திர விசேஷத்தையும அதன் பயனையுமறியும் ஆற்றலின்றிப் பல பிற்போக்கான செயல்களிற் றலையிட்டனரேனும், அதைச் சிறிதும் பொருட்படுத்தாது முன்னேக்கிச் சென்றும், பட்ட காலிலே படும் என்ற பழமொழிப்படி ஒரு சிக்கலான கலகம தோன்றி எதிர்பாராத சம்பவமாய் நிலைபெற்றது.

அதைப் பரிகரிக்கும் வகைதோன்றாது, அச்சேறிய புராணமும் ஆண்டுகள் கணக்காய் வெளிவரா வியலாவே எனத திகைத்து நிற்கையில், இறைவனே முன்னின்று முடிப்பதொப்ப ஷை ஸ்தல முக்கியஸ்தர்களிற்பலர் ஒருங்கே கூடிக் காட்டிய ஒரு நெறியைக்கடைட்பிடித்து யாவர்க்குமிஷ்டமாய்ப் புராணம் வெளிவரும் நன்னோக்கத்துடன் பொருளுதவி புரிந்தவர்களின் பட்டியைப் பிரசுரிக்காது வெளியிட நேர்ந்ததன்றி,

அடியேன் மனமாரவிட்டதன்றும். இதனை அன்பர்களனை வரும் ஆய்ந்தனுபவத்திலுணருமாறு வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். "ஒன்னற நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்" என்னும் முதுமொழிக்கிலக்காய் முடிந்தனபோலும். இதனால் உத்தேசித்தபடி முடிக்க வியையாத நிலைமையும் வாய்த்தது.

ஆகவே, பொருளுதவி புரிந்து புராணத்தை ஆவலாய் எதிர்பார்க்கும் எல்லாக் கிராம நேயர்களுக்கும் புத்தகமளிப்பதன்றி உதவிக்கேற்ப இறைவன் அருள்புரியுமாறு அவரைச் சிந்தியாநின்றனன்.

மற்று மித்தலத்தைப் பண்டைநாள் தொட்டுப் பரிபாலித்து (ஆதரித்து, உதவிசெய்து, செழிப்பித்து) வரும் 27 நத்த வேளாளர் என வழங்கும் நண்பர்கள் இப்புராணத்தைப் பரிபாலிப்பதினும் பின்வாஙகாது ஒவ்வொருவரும், தத்தமில்லந்தோறும் பெற்றுப் போற்றுவரென்றும், இஙஙனமே, தல அபிமானி (விசுவாசி)களாகிய 11 நத்தத்தவர்கள் என வழங்கும் வேளாளச் செல்வர்களும் ஆதரிப்பாரென்றும், ஏனைய சிவநேயச் செல்வர்களும இநிலபிமானங் காட்டிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்வரென்றும் நம்பியே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே யாவரும் தயைபுரிந்து ஷை புராணத்தைப்பெற்றுப்பொருளுதவுவது வாயிலாகச் சிவபுண்ணியப்பேற்றை விழையுமாறு வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இப்புராணத்தில் மாந்தர்க்குரிய முக்குணவயத்தாலும, சிறியேனது ஆராய்ச்சி யனுபவக் குறைவினாலும் ஏதேனும தவறுளதேனும, அதைக் கண்ணுறுமன்பர்கள் தயைகூர்ந்தறிவிப்பாராயின் வந்தனததுடனேற்றுக் கூடுமேல் மறுபதிப்பில் வெளியிடச் சித்தமா யிருக்கின்றனன்.

இந்தப் புராண விற்பனையில் வரும்பொருள், செலவிற்கு மேமெலஞ்சுமேல், அவ்வூதியத்தை, இதுபோன்ற பொதுக் காரியங்களிலேயே செலவிடப்படும்.

இப்படிக்கு, அடியார்க்கடியன்,

பு. ப. மா.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 15 | பரயிரம் | பாயிரம் |
| 24 | 22 | நுதல் | நுதல் |
| 30 | 11 | வியாயக | வியாபக |
| 54 | 20 | துறை | துரை |
| 96 | 13 | காயகரை | நாயகரை |
| 112 | 5 | உறைப்பாம் | உரைப்பாம் |
| 121 | 18 | மலாமுக | மலர்முக |
| 123 | 10 | வெலூர் | வேலூர் |
| 126 | 11 | றுருக்செரடு | றுருக்கொடு |
| 128 | 26 | பறப்புக் | பரப்புக் |
| 129 | 9 | செலவமலி | செல்வமலி |
| 132 | 23 | ளகத்துன்னில் | ளகத்துன்னிப் |
| 135 | 27 | விசும்புரை | விசும்புறை |
| 136 | 12 | குழவு | குழூவு |
| 137 | 3 | இடம்பவின்று | மிடம்பயின்று |
| 140 | 21 | கேதை | கேத |
| 142 | 21 | மனிப்பீடத்திற் | மணிப்பீடத்திற் |
| 154 | 4 | நிர்திய | நித்திய |
| 160 | 6 | அறங்கேற்றி | அரங்கேற்றி |

சிவமயம்.

செய்யாறு தாலூக்கா பொதியர் பாளையம்

சமரச சன்மார்க்க சங்கத் தலைவர்

# அருட்கவி, பிரஹ்மஸ்ரீ, ந. சுப்பிரமணிய அய்யரவர்களாலியற்றப்பட்ட நூல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீநடராஜ தத்துவம். | 0 | 8 | 0 |
| 2. | ஸ்ரீமநீஷா பஞ்சகம். | 0 | 5 | 0 |
| 3. | திருத்தணிகைப் பிரபந்தத்திரட்டு. | 0 | 4 | 0 |
| 4. | சங்கரவிஜயசார சங்கிரகம். | 0 | 2 | 0 |
| 5. | சச்சிதாநந்த விளக்கம். | 0 | 2 | 0 |
| 6. | கந்தபுராண சாரசங்கிரகமும், நிற்குண ஸுப் பிரஹ்மண்ய அஷ்டோத்தரமும். (கிரந்தம்) தமிழ் | 0 | 1 | 0 |
| 7. | யதியமவியாயோகம். | 0 | 6 | 0 |

ஷை ஆசிரியரால் இனி வெளிவரும் நூல்கள்.

1. திருப்புகழ் ஞானம்.
2. கந்தரநுபூதிப் பிரகாசம்.
3. ஸ்ரீஸுப்பிரஹ்மண்ய தத்துவம்.
4. ஸத்தாத்திரய விவேகம்.
5. வேதாந்த அகராதி.
6. பொதியர் பாளைய ஸ்தலபுராணம்.